மலர் : 49 இதழ் : 10

# தமிழரசு

செய்தி – மக்கள் தொடர்புத்துறையின் வெளியீடு

ஏப்ரல் 2018
விலை ரூ. 20/–



# தமிழரசு

தமிழ்நாடு அரசு
செய்தி-மக்கள் தொடர்புத் துறையின் வெளியீடு

திருவள்ளுவர் ஆண்டு 2049
ஹேவிளம்பி–விளம்பி வருடம் : பங்குனி – சித்திரை
ஏப்ரல் 2018
மலர் : 49 விலை ரூ.20 இதழ் : 10

ஆசிரியர் - வெளியிடுபவர் :
முனைவர் **பொ. சங்கர்** இ.ஆ.ப.,
இயக்குநர், செய்தி-மக்கள் தொடர்பு மற்றும் அலுவலால் அரசு இணைச் செயலாளர்

நிருவாக ஆசிரியர் :
**சி. செல்வராஜ்**
துணை இயக்குநர் (வெளியீடுகள்)

முதன்மைப் பொறுப்பாசிரியர் :
**ஆ. ராஜா**
உதவி இயக்குநர்

பொறுப்பாசிரியர்கள்
செய்தி-மக்கள் தொடர்பு அலுவலர்கள் :
**அ. மகேஸ்வரி**
**சு. கமலா**
**இரா. இளவரசி**

உதவி ஆசிரியர்கள் :
**ச. மஞ்சுளா**
**மு. மோகனவல்லி**
**ப. பேச்சிமுத்து**
**மு. மணிமேகலை**
**அ. மதன்**

கணினி வடிவமைப்பு :
**தி. ஜெய்சங்கர்**
**க.இரா. உமாமகேஸ்வரி**

இதழ் உதவியாளர் :
**நி. ஷீலா**

முதுநிலை அச்சுப்பிழைத் திருத்துபவர் :
**கோ. சந்திரசேகர்**

வடிவமைப்பாளர் :
**கோ. முரளி கிருஷ்ணன்**

தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
தமிழரசு அலுவலகம்,
இராஜீவ் காந்தி சாலை,
கானகம், தரமணி, சென்னை–600 113.
**தொலைபேசி : 22542221 / 22542224**
மின்னஞ்சல் : tamilarasujournal@gmail.com
இணையதளம் : www.tndipr.gov.in

“நான் உத்தரவிட்ட கோப்புகள் ஒன்றும் வெறும் காகிதங்கள் அல்ல. கோப்புகள் ஒவ்வொன்றும் பலருடைய வாழ்க்கையில் விளக்கேற்றும்; பல திட்டங்களுக்கு உயிர் கொடுக்கும் அரசு ஆணைகள்.”

– மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள்

## இந்த இதழில்...

❖ அரசுக்கும், பொதுமக்களுக்கும் இடையே நல்லுறவை ஏற்படுத்தும் வல்லமை பெற்ற ஓர் அங்கம் காவல்துறை! (மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள் 04.04.2018 அன்று, சென்னை, ராஜரத்தினம் விளையாட்டு அரங்கில் தமிழ்நாடு காவல்துறை சார்பில் நடைபெற்ற பயிற்சி நிறைவு அணிவகுப்பு விழா மற்றும் இந்திய குடியரசுத் தலைவர், மத்திய உள்துறை அமைச்சர், தமிழ்நாடு முதலமைச்சர் பதக்கங்கள் வழங்கும் விழாவில் ஆற்றிய உரை) .......... 4

❖ ஏங்கி நிற்கும் மக்களை தாங்கி நிற்கும் அம்மா வழியில் நடக்கும் எங்கள் ஆட்சி! (மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள் 23.03.2018 அன்று, சென்னை, கலைவாணர் அரங்கத்தில் நடைபெற்ற தமிழ்நாடு அரசின் ஓராண்டு சாதனை விழாவில் ஆற்றிய உரை).......... 11

❖ நிதிநிலை அறிக்கை 2018–2019 .......... 22

❖ உச்சநீதிமன்ற தீர்ப்பின்படி காவேரி மேலாண்மை வாரியம் மற்றும் காவேரி நீர் முறைப்படுத்தும் குழுவை மத்திய அரசு உடனடியாக அமைக்க வேண்டும்! (மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள் காவேரி நடுவர் மன்ற இறுதி ஆணையின்படியும், உச்சநீதிமன்றம் 16.02.2018 அன்று வழங்கிய தீர்ப்பின்படியும், காவேரி நடுவர் மன்ற இறுதி ஆணையை திறம்பட செயல்படுத்துவதற்கு, அனைத்து அதிகாரங்களும் கொண்ட காவேரி மேலாண்மை வாரியம் மற்றும் காவேரி நீர் முறைப்படுத்தும் குழு ஆகிய அமைப்புகளை ஆறு வார காலத்திற்குள் மத்திய அரசு அமைத்து, அவற்றை நடைமுறைக்கு கொண்டுவர வேண்டும் என்று வலியுறுத்தி 15.03.2018 அன்று தமிழ்நாடு சட்டமன்ற பேரவையில் அரசினர் தனித் தீர்மானத்தின் மீது ஆற்றிய உரை).......... 59

## முதலாம் பக்க அட்டை

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள் 23.03.2018 அன்று சென்னை, கலைவாணர் அரங்கத்தில் நடைபெற்ற மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் வழியில், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்களின் தலைமையிலான தமிழ்நாடு அரசின் ஓராண்டு சாதனை விழாவில், ஓராண்டு சாதனை சிறப்பு மலரை வெளியிட மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு. **ஓ. பன்னீர்செல்வம்** அவர்கள் பெற்றுக்கொண்டார்கள்.



# அரசுக்கும், பொதுமக்களுக்கும் இடையே நல்லுறவை ஏற்படுத்தும் வல்லமை பெற்ற ஓர் அங்கம் காவல்துறை!

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள்
04.04.2018 அன்று, சென்னை,
ராஜரத்தினம் விளையாட்டு அரங்கில்
தமிழ்நாடு காவல்துறை சார்பில் நடைபெற்ற பயிற்சி
நிறைவு அணிவகுப்பு விழா மற்றும்
இந்திய குடியரசுத் தலைவர்,
மத்திய உள்துறை அமைச்சர்,
தமிழ்நாடு முதலமைச்சர் பதக்கங்கள் வழங்கும்
விழாவில் ஆற்றிய உரை.

**மா**ண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா தெய்வத்தை வணங்கி,

ஒளிபடைத்த கண்களோடும்,
உறுதிகொண்ட நெஞ்சங்களோடும்,
வலிமை கொண்ட மனங்களோடும்,

இங்கே கூடியிருக்கின்ற உங்களையெல்லாம் சந்திப்பதில் மிக்க மகிழ்ச்சியும் பெருமையும் அடைகின்றேன்.

இந்த இனிய விழாவிற்கு வருகை தந்துள்ள மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் பெருமக்களே, மரியாதைக்குரிய நாடாளுமன்ற உறுப்பினர்களே, மரியாதைக்குரிய சட்டமன்ற உறுப்பினர்களே, முன்னாள் அமைச்சர் பெருமக்களே, முன்னாள் நாடாளுமன்ற – சட்டமன்ற உறுப்பினர்களே, மதிப்பிற்கும் மரியாதைக்கும் உரிய தலைமைச் செயலாளர் அவர்களே, மரியாதைக்குரிய உள்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் அவர்களே, மரியாதைக்குரிய காவல் துறை தலைமை இயக்குநர் அவர்களே, சென்னை மாநகர காவல் ஆணையர் அவர்களே, காவல் துறை அதிகாரிகளே, காவலர்களே, பணி ஒய்வு பெற்ற காவலர்களே, பத்திரிகை மற்றும் ஊடகத் துறை நண்பர்களே! இவ்விழாவில் பங்கேற்றுள்ள காவலர் குடும்பத்தைச் சேர்ந்த சகோதர, சகோதரிகளே, உங்கள் அனைவருக்கும் என் வணக்கத்தை தெரிவித்துக் கொள்கிறேன்.

> "பெண்கள் சுதந்திரமாகவும், பாதுகாப்பாகவும், நிம்மதியாகவும் வாழத்தகுந்த மாநிலமாகத் தமிழ்நாடு திகழ்கிறது என்றால், காவலர்களாகிய உங்களின் கடமை உணர்வுதான் அதற்குக் காரணம். மகளிர் காவல் நிலையங்கள் வலிமை பெற்றுள்ளன என்றால் அதற்கு முதற்காரணம் மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள்தான் என்பதில் பெருமை கொள்கிறேன்."

''உறுப்பு அமைந்து ஊறுஅஞ்சா வெல்படைவேந்தன்
வெறுக்கையுள் எல்லாம் தலை''

என்ற திருக்குறளில்

இதன் பொருள் –

இடையூறுகளுக்கு அஞ்சாத படைபலம்தான் அரசனுடைய செல்வங்களுள் சிறந்தது என்பதாகும்.

அக்குறளில் கூறியதற்கு ஏற்ப தமிழ்நாடு காவல் துறை தமிழ்நாட்டின் பலமாக உள்ளது.

நமது காவல் துறையினரின் அர்ப்பணிப்புமிக்க செயல்பாட்டால், இன்று தமிழ்நாடு அமைதிப் பூங்காவாக திகழ்ந்து,

இந்தியாவிலேயே பெண்கள் பாதுகாப்பாக வாழத் தகுந்த இடங்களில் முதன்மையான இடம் என்ற பெருமையை பெற்றுள்ளது.

பெண்கள் சுதந்திரமாகவும், பாதுகாப்பாகவும், நிம்மதியாகவும் வாழத்தகுந்த மாநிலமாகத் தமிழ்நாடு திகழ்கிறது என்றால், காவலர்களாகிய உங்களின் கடமை உணர்வுதான் அதற்குக் காரணம். மகளிர் காவல் நிலையங்கள் வலிமை பெற்றுள்ளன என்றால் அதற்கு முதற்காரணம் மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள்தான் என்பதில் பெருமை கொள்கிறேன்.

பூதமாக வரும் பிரச்சினைகளைக் கூட நம் காவல் துறை எளிதாகக் கையாண்டு அமைதிப்படுத்துகிறது.

மக்கள் இரவு நிம்மதியாக உறங்கி காலை நிம்மதியாக எழுகிறார்கள் என்றால், இரவு முழுவதும் கண்விழித்து காவல் காக்கும் காவலர்களால்தான் அது சாத்தியமாகிறது என்பதை மக்கள் உணர வேண்டும்.

தமிழ்நாடு காவல் துறையில், காவல் துணை கண்காணிப்பாளர்கள் 29 பேர் பயிற்சி முடித்ததையொட்டி நடைபெற்ற அணிவகுப்பு மரியாதையை ஏற்றுக் கொண்டதிலும், காவல் துறை, தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறை, சிறைத் துறை, குடிமைப் பாதுகாப்பு மற்றும் ஊர்க்காவல் படை மற்றும் ஊழல் தடுப்பு கண்காணிப்புத் துறை ஆகிய துறைகளில் தீரச் செயல், தகைசால் பணி, மெச்சத்தக்க பணி, பொது சேவைக்கான சீர்மிகு சிறப்புப் பணி, சிறந்த நற்பணி, சிறந்த புலனாய்வு, சிறந்த பயிற்சி, விரல் ரேகை அறிவியல் சீர்மிகு பணி, தொழில்நுட்ப மற்றும் சிறப்புப் பணி ஆகியவற்றிற்கான இந்திய குடியரசுத் தலைவர், மத்திய உள்துறை அமைச்சர் மற்றும் தமிழ்நாடு முதலமைச்சர் பதக்கங்களை 203 நபர்களுக்கு வழங்கியதிலும் நான் பெரும் மகிழ்ச்சியடைவதோடு, பதக்கங்கள் பெற்ற அனைவருக்கும் எனது வாழ்த்துக்களையும் பாராட்டுதல்களையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

சட்டத்தின் ஆட்சி என்பதும், சட்டத்தின் முன் எல்லோரும் சமமாக நடத்தப்படுவது என்பதும், ஒரு ஜனநாயக நாட்டின் அடித்தளமாகும்.

மாநிலத்தின் ஒட்டுமொத்த வளர்ச்சிக்கும், வளர்ச்சியின் பயன்கள் மக்களைச் சென்றடைவதற்கும், சட்டம் ஒழுங்கு பராமரிப்பு ஒரு முக்கிய காரணி என்பதை உணர்ந்த மாண்புமிகு அம்மாவின் அரசு, சட்டம் ஒழுங்கு பராமரிப்பிற்கு முக்கியத்துவம் கொடுத்து, தமிழ்நாடு காவல் துறையை நவீனமயமாக்கி அதன் செயல்திறனை அதிகப்படுத்த தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் எடுத்து வருகிறது.

பொது அமைதியைப் பராமரிப்பதற்கும், மத நல்லிணக்கத்தைப் பேணி காப்பதற்கும், சட்டத்தின் ஆட்சியை முறையாக செயல்படுத்துவதற்கும், தனி மனித உரிமைகள் மற்றும் பாதுகாப்பிற்கும், பொது மக்களின் பாதுகாப்பை உறுதி செய்வதற்கும், காவல் துறையினருக்கு தேவையானவற்றை வழங்கி வருவதோடு, பாரபட்சமின்றி சுதந்திரமாக அவர்கள் தங்கள் பணிகளை நிறைவேற்றுவதற்கு எந்தவொரு குறுக்கீடும் இல்லாதவாறு மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் வழியில் வரும் அம்மாவின் அரசு பார்த்துக் கொள்கின்றது.






கடந்த ஏழு வருடங்களாக தமிழக காவல் துறையினர், தங்களது சிறப்பான செயல்பாட்டினால் பிரச்சினைகளை முன்கூட்டியே அறிந்து,

தக்க தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டு, மக்கள்பிரச்சினைகளைமனிதநேயத்தோடுபாரபட்சமின்றி அணுகி, மாநிலத்தில் சாதி, சமய பூசல்கள் ஏதுமின்றி பொது அமைதியை பேணிக் காத்து வருகின்றனர்.

“ஒரு தவறு செய்தால், அதை தெரிந்து செய்தால், அவன் தேவன் என்றாலும் விடமாட்டேன்” என்று புரட்சித்தலைவர் பாடியதைப் போல குற்றவாளிகள் யாராக இருந்தாலும் தப்பிக்கக்கூடாது என்பதில் நம் காவல் துறையினர் கண்டிப்பாக இருப்பவர்கள்.

மாநிலம் முழுவதும் குற்றத் தடுப்பு நடவடிக்கைகளில் மிகுந்த கவனம் செலுத்தி, குற்ற நிகழ்வுகளைத் தடுத்து வருவதுடன், குற்ற வழக்குகளில் எதிரிகளைக் கைது செய்து அவர்களை நீதியின்முன் நிறுத்தி தண்டனை பெற்றுத்தந்து வருகின்றனர்.

எல்லை தாண்டிய பயங்கரவாத இயக்கங்களும், இடதுசாரி தீவிரவாத அமைப்புகளும் அவ்வப்போது சட்டவிரோதச் செயல்களில் ஈடுபட்டு, நாட்டின் ஒருமைப்பாட்டிற்கும், வளர்ச்சிக்கும் தடைகளை ஏற்படுத்த முயற்சித்த போது, காவல் துறையினர் அவ்வியக்கங்களின் நடவடிக்கைகளை கூர்ந்து கண்காணித்து தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொண்டு, நமது மாநிலத்தில் அவ்வியக்கங்கள் எந்தவொரு சட்டவிரோதச் செயல்களிலும் ஈடுபடா வண்ணம் பார்த்து வருகின்றனர்.

நீண்ட கடற்கரையை கொண்ட நமது மாநிலத்தில், கடலோர மாவட்டங்களில், கடலோர பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டு, புதியதாக கடலோரக் காவல் நிலையங்கள், புறக்காவல் நிலையங்கள் மற்றும் சோதனைச் சாவடிகள் அமைக்கப்பட்டு, நவீன வாகனங்கள் மற்றும் சாதனங்கள் கடலோரப் படையினருக்கு வழங்கப்பட்டு, கடல் வழியே தீவிரவாதிகள் எவரும் ஊடுருவாமல் கண்காணித்து வருகின்றனர்.

பொருளாதார வளர்ச்சி காரணமாக, அதிகரித்து வரும் வாகனங்களால், சாலைகளில் ஏற்படும் போக்குவரத்து நெரிசலைக் குறைத்து, சாலை விபத்துக்களை குறைக்கவும், போக்குவரத்து சம்பந்தப்பட்ட அனைத்து பிரச்சினைகளையும் விஞ்ஞான ரீதியில் ஆய்வு செய்து தேவையான தடுப்பு நடவடிக்கைகள் எடுத்து வருகின்றனர்.

காவல் துறையினர் பல்வேறு சவால்களை எதிர்கொண்டு பணியாற்றி வருகின்றனர். அவர்களின் சிரமங்களை அறிந்து அவர்களது குறைகளைக் களைந்து,

“அண்மையில் அகில இந்திய அளவில் சிறந்த காவல் நிலையங்களைத் தேர்வு செய்ய நடைபெற்ற போட்டியில் கோயம்புத்தூர் ஆர்.எஸ்.புரம் காவல் நிலையம் முதன்மை காவல் நிலையமாகவும், சென்னை அண்ணா நகர் காவல் நிலையம் ஐந்தாம் காவல் நிலையமாகவும் தேர்வு செய்யப்பட்டுள்ளது. மேலும், தேசிய குற்ற ஆவணக் காப்பகம் தனது அறிக்கையில், இந்தியாவிலேயே பெண்களுக்கு மிகவும் பாதுகாப்பான மெட்ரோ நகரமாக சென்னையையும், மாநகரமாக கோயம்புத்தூரையும் அறிவித்துள்ளது.”

காவல் துறையினர் தங்கள் பணிகளை மேலும் சிறப்பாக செய்ய, நவீன வசதிகளை ஏற்படுத்துவதிலும், குடியிருப்பு, வாகனம் மற்றும் இதர வசதிகளை செய்து கொடுப்பதிலும் மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் வழியில் தொடர்ந்து முனைப்புடன் அரசு செயல்பட்டு வருகிறது.

காவல் துறையை மேம்படுத்துவதற்காக, கடந்த 2010–2011ஆம் ஆண்டு 2 ஆயிரத்து 961 கோடியே 6 இலட்சம் ரூபாயாக இருந்த காவல் துறைக்கான நிதி ஒதுக்கீடு, ஒவ்வொரு ஆண்டும் படிப்படியாக உயர்த்தப்பட்டு, 2017–2018ஆம் ஆண்டிற்கான நிதி நிலை அறிக்கையில் 7 ஆயிரத்து 877 கோடியே 58 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதிலிருந்து காவல் துறைக்கு, இவ்வரசு கொடுத்து வரும் முக்கியத்துவத்தை நீங்கள் அறிந்து கொள்ளலாம்.

இதே போன்று, நவீனமயமாக்கல் திட்டத்தின் கீழ், கடந்த 2011 முதல் 2017 வரை 722 கோடியே 19 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டு நவீன ஆயுதங்கள், உபகரணங்கள், வாகனங்கள், தற்காப்பு கவசங்கள் போன்றவை அளிக்கப்பட்டு, காவல் துறையினரின் திறன் மேம்படுத்தப்பட்டுள்ளது.

காவல் துறையில் ஏற்படும் காலிப் பணியிடங்களை உடனுக்குடன் நிரப்ப நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதோடு, பதவி உயர்வுகளும் வழங்கப்பட்டு வருகிறது.

கடந்த ஏழு ஆண்டுகளில், 24,023 காவலர்களும், 1,034 உதவி ஆய்வாளர்களும், 99 துணை கண்காணிப்பாளர்களும் தேர்ந்தெடுக்கப்பட்டு பணியமர்த்தப்பட்டுள்ளனர்.

இத்துடன், 9,140 நபர்கள் தமிழ்நாடு சிறப்பு காவல் இளைஞர் படையினராக தேர்ந்தெடுக்கப்பட்டு, பின்னர் அவர்களுள் 8 ஆயிரத்து 569 நபர்கள் காவலர்களாக தேர்வு செய்யப்பட்டுள்ளனர்.

மேலும், ஆயிரத்து 480 காவல் உதவி ஆய்வாளர் காலிப் பணியிடங்களை நிரப்புவதற்கும், 5,538 காவலர்களை தேர்ந்தெடுப்பதற்கும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

கடந்த 2011ஆம் ஆண்டு முதல் 2017ஆம் ஆண்டு வரை காவலர் முதல் காவல் துறை இயக்குநர் வரையிலான பல்வேறு பதவிகளில் மொத்தம் 58 ஆயிரத்து 593 நபர்களுக்கு பதவி உயர்வுகள் வழங்கப்பட்டுள்ளன.

காவல் துறையினரின் பணிகள் மேலும் சிறக்கவும், பொதுமக்களுக்கு சிறப்பான சேவையை வழங்க ஏதுவாகவும், குற்றங்கள் மற்றும் குற்றவாளிகளை கண்டுபிடிக்கும் வலைபின்னல் முறை, ஆளில்லா வானூர்தி மூலம் கண்காணிக்கும் வசதி, பெரும் பரப்பு வலையமைப்பு, மின்னஞ்சல் சேவையகம், மென்பொருள் உருவாக்க பிரிவு, காவல்துறை தலைமை அலுவலக தொலைத் தொடர்புகள் ஒளி இழை வடம் மூலம் இணைப்பு போன்ற நவீன வசதிகள் செய்து தரப்பட்டுள்ளன.

குற்றத்தடுப்பு மற்றும் குற்றவாளிகளை அடையாளம் கண்டுபிடிக்கவும், காவல் நிலையப் பணிகளில் வெளிப்படைத் தன்மையை ஏற்படுத்தவும் ஏதுவாக, அனைத்து காவல் நிலையங்கள் மற்றும் பொது இடங்களில் – உட்சுற்று கண்காணிப்பு தொலைக்காட்சி கேமரா (சிசிடிவி) நிறுவ அரசு அறிவுறுத்தியதன் பேரில், மாநிலத்தில், இதுவரையில் 747 காவல் நிலையங்களில் 4,482 கண்காணிப்பு கேமராக்களும், அரசு மற்றும் தனியார் இடங்களில் ஒரு இலட்சத்து 23 ஆயிரத்து 313 கேமராக்களும் பொருத்தப்பட்டுள்ளன.

காவலர்கள் தங்கள் குடும்பத்தினரோடும், சக அதிகாரிகளோடும் நினைத்த நேரத்தில் தொடர்பு கொள்ள வசதியாக அவர்களிடையே ஒரு “சியுஜி” (CUG) திட்டத்தினை மாண்புமிகு அம்மா அவர்கள் அறிமுகப்படுத்தினார்கள். இதனால் காவலர்களின் மன அழுத்தம் குறைய வழி ஏற்பட்டது.

40 வயது முடிவடைந்த காவலர்கள் முதல் காவல் ஆய்வாளர்கள் வரை அரசாங்க மருத்துவமனைகளில் இலவசமாக முழு உடல் பரிசோதனை செய்து கொள்ள அரசு உத்தரவிட்டதுடன், காவலர் மற்றும் காவலர் குடும்பங்கள் மருத்துவ சிகிச்சை பெற்று பயன்பெறும் வகையில் பிரத்யேகமாக செயல்பட்டு வரும் 12 காவலர் மருத்துவமனைகளுடன் கூடுதலாக 26 ஆயுதப்படை தலைமையிடங்களிலும், 10 சிறப்பு காவல்



படை தலைமையிடங்களிலும், புறநோயாளி சிகிச்சை நிலையங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

காவலர்களின் வசதிக்காக கடந்த 7 வருடங்களில் 16 ஆயிரத்து 307 காவல் குடியிருப்புகள் மற்றும் 33 துயில் கூடங்கள் கட்டப்பட்டுள்ளன.

காவலர்களின் சொந்தவீட்டு கனவை நனவாக்கும் வகையில் மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள் காவல்துறை, தீயணைப்புத்துறை மற்றும் சிறைத்துறை பணியாளர்களுக்கு "உங்கள் சொந்த இல்லம்" திட்டத்தினை அறிவித்தார்கள்.

இத்திட்டத்தின் கீழ், முதற்கட்டமாக காஞ்சிபுரம் மாவட்டம், மேலக்கோட்டையூரில் 459 கோடியே 25 இலட்சம் ரூபாய் செலவில் 2 ஆயிரத்து 673 வீடுகள் கட்டி பயனாளிகளுக்கு கொடுக்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின் கீழ், கீழக்கோட்டையூரிலும், பிற மாவட்டங்களிலும் சீருடைப் பணியாளர்களுக்கு வீடுகள் கட்டிக் கொடுக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இதே போன்று, பணியிலுள்ள மற்றும் ஓய்வு பெற்ற சீருடைப் பணியாளர்கள் மற்றும் அவர்கள் குடும்பத்தினரும் பயன்பெறும் வகையில், குறைந்த விலையில் பொருட்களை வழங்க மாநிலத்தில் 48 "பல்பொருள் அங்காடிகள்" திறக்கப்பட்டு, குறைந்த விலையில் பொருட்கள் வழங்கப்பட்டு வருகின்றன.

காவல் ஆளிநர்களுக்கு வழங்கப்பட்டு வந்த சீருடைப்படி, உணவுப்படி, இடர்ப்படி, குளிர்காலப்படி, மலையிட பணிப்படி, தமிழ்நாடு முதலமைச்சரின் காவல் சிறப்புப் பணிப் பதக்கப்படி, காவலர் பதக்கத்திற்கான மாதாந்திர பதக்கப்படி, வீர தீரப்பணிக்கான காவல் பதக்கத்துடனான மாதாந்திர பதக்கப்படி, தொழில்நுட்ப பிரிவிற்கான பதக்கத்திற்கு பணப் பலன் ஆகியவை கணிசமாக உயர்த்தி வழங்கப்பட்டுள்ளன.

கடந்த 2011ஆம் ஆண்டு முதல் இதுவரை முதலமைச்சர் பொது நிவாரண நிதியின் கீழ், 1,404 காவலர் குடும்பங்களுக்கு 118 கோடியே 7 இலட்சம் ரூபாயும், கருணைத் தொகை திட்டத்தின் கீழ், 85 காவல் ஆளிநர்களுக்கு 72.35 இலட்சம் ரூபாயும், தமிழ்நாடு காவலர் காப்பீட்டு திட்டத்தின் கீழ், 59 நபர்களுக்கு 98.8 இலட்சம் ரூபாயும், தமிழ்நாடு காவலர்

மருத்துவ நல நிதி திட்டத்தின் கீழ், 287 நபர்களுக்கு 2.12 கோடி ரூபாயும், தமிழ்நாடு அரசு சிறப்பு உதவித் தொகைத் திட்டத்தின் கீழ், 2,415 காவலர் குழந்தைகளுக்கு 4.66 கோடி ரூபாயும், கல்விப் பரிசுத் திட்டத்தின் கீழ், 5,007 மாணவர்களுக்கு 1.58 கோடி ரூபாயும் வழங்கப்பட்டுள்ளன.

கருணை அடிப்படையில் பணி வழங்கும் திட்டத்தின் கீழ், கடந்த 2011ஆம் வருடம் முதல் இதுவரை மொத்தம் 671 நபர்களுக்கு காவல் மற்றும் பிற துறைகளில் பணி நியமன ஆணைகள் வழங்கப்பட்டுள்ளன.

இப்படி மாண்புமிகு அம்மாவின் அரசு, சவால்கள் நிறைந்த காவல் துறைக்கு, திட்டங்களை அள்ளிக் கொடுத்ததன் பயனாக அண்மையில் அகில இந்திய அளவில் சிறந்த காவல் நிலையங்களைத் தேர்வு செய்ய நடைபெற்ற போட்டியில் கோயம்புத்தூர் ஆர்.எஸ்.புரம் காவல் நிலையம் முதன்மை காவல் நிலையமாகவும், சென்னை அண்ணா நகர் காவல் நிலையம் ஐந்தாம் காவல் நிலையமாகவும் தேர்வு செய்யப்பட்டுள்ளது.

மேலும், தேசிய குற்ற ஆவணக் காப்பகம் தனது அறிக்கையில், இந்தியாவிலேயே பெண்களுக்கு மிகவும் பாதுகாப்பான மெட்ரோ நகரமாக சென்னையையும், மாநகரமாக கோயம்புத்தூரையும் அறிவித்துள்ளது.

இது மட்டுமின்றி, கடந்த பிப்ரவரி மாதம் சென்னையில் நடைபெற்ற 61ஆவது அகில இந்திய காவல் பணித்திறன் போட்டியில் தமிழ்நாடு காவல் துறை 18 தங்கம், 10 வெள்ளி, 5 வெண்கலம் என மொத்தம் 33 பதக்கங்கள் உட்பட 7 கோப்பைகள் மற்றும் ஒட்டுமொத்த சாம்பியன் பட்டத்தை வென்றதிலிருந்தும், தமிழக காவல் துறை அனைத்து விதங்களிலும் எப்போதும் போல தொடர்ந்து நாட்டிலேயே முதலாவதாக இருந்து வருகிறது என்பது தெள்ளத் தெளிவாகிறது.

மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் வழியில் செயல்படும் இந்த அரசு, காவல் துறையினர் மேலும் சிறப்புடன் செயல்பட தேவையான அனைத்து வசதிகளை செய்து கொடுக்கும் என்று இத்தருணத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

காவல் துறையினரின் குறைகளைக் களைவதில் தொடர்ந்து கவனம் செலுத்தி வரும் இவ்வரசு, அண்மையில் தமிழ்நாடு முதலமைச்சரின் காவல் சிறப்புப் பணி அண்ணா பதக்கத்துக்கான பணப்பலனை காவலர் முதல் தலைமைக் காவலருக்கு 4 ஆயிரம் ரூபாயிலிருந்து 5 ஆயிரம் ரூபாய் ஆகவும், உதவி ஆய்வாளர் மற்றும் ஆய்வாளருக்கு 6 ஆயிரம் ரூபாயிலிருந்து 10 ஆயிரம் ரூபாய் ஆகவும், காவல் துணை கண்காணிப்பாளருக்கு 10 ஆயிரம் ரூபாயிலிருந்து 15 ஆயிரம் ரூபாய் ஆகவும், காவலர் பதக்கத்துக்கான மாதாந்திர பதக்கப்படி 200 ரூபாயிலிருந்து 300 ரூபாய் ஆகவும், வீர தீரப்பணி காவல் பதக்கத்துக்கான மாதாந்திர பதக்கப்படி 300 ரூபாயிலிருந்து 900 ரூபாய் ஆகவும் உயர்த்தி உத்தரவிட்டது.

இதே போன்று, 10 ஆண்டுகள் பணி முடித்த காவலர்களுக்கு அளிக்கப்பட்டு வரும் காவலர் பதக்கங்கள் ஆண்டுதோறும் 1,500 என்ற எண்ணிக்கையில் வழக்கப்பட்டு வந்தது.

அதிக எண்ணிக்கையிலான காவலர்கள் விருதுபெறும் வகையில், நிதிநிலை அறிக்கையில், 2018–2019ஆம் ஆண்டு முதல் முதலமைச்சரின் காவலர் விருதுகளின் எண்ணிக்கையை 1,500லிருந்து 3,000 ஆக உயர்த்தப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

உலகமயமாக்கல், தொழில்நுட்ப புரட்சி மற்றும் சமூக ஊடகங்களின் வளர்ச்சி போன்றவை காரணமாக காவல் துறையினர் பல்வேறு சவால்களை அவர்களது அன்றாடப் பணிகளின் போது எதிர்கொண்டு வருகின்றனர்.

இதனை உணர்ந்த இவ்வரசு காவல் துறையினரின் உடல் நலத்தையும், மன வளத்தையும் பேணிக் காக்கும் வகையில் தமிழக காவல் துறையில் பணிபுரியும் காவல் அதிகாரிகளுக்கும், காவலர்களுக்கும் பெங்களூருவில் உள்ள National Institute of Mental Health and Neuro Science நிறுவனத்துடன் இணைந்து பயிற்சி அளிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

மக்கள் நலம் காக்கும் அரசில் சீருடைப் பணியாளரின் பணிகள் மிகவும் இன்றியமையாததும், மகத்தானதும் ஆகும்.

உலக அளவில், சமூக ரீதியாகவும், பொருளாதார மற்றும் தொழில்நுட்ப ரீதியாகவும் ஏற்பட்டு வரும் பல்வேறு மாறுதல்களினால் காவல் பணிகளில் இருந்து வரும் கடும் சவால்களை ஒவ்வொருவரும் உணர்ந்து, அவற்றை எதிர்கொள்ளும் விதத்தில் தங்களை தயார்படுத்திக் கொள்ள வேண்டும்.

"The best way to find yourself is,
to lose yourself in the
service of others" – என்ற

அண்ணல் காந்தியடிகளின் கூற்றின் படி, தன்னலம் கருதாமல், மக்கள் நலன் காக்கும் பணியில் தங்களை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டு, பொதுமக்கள் காவல் நிலையங்களுக்கு வரும் போது, அவர்களை மனித நேயத்தோடு அணுகி, அன்பாக பேசி, அவர்களின் குறைகளைக் கேட்டறிந்து, பாரபட்சமின்றி குற்றவாளிகள் மீது நடவடிக்கை எடுத்து பொதுமக்களுக்கு அரணாகவும், உற்ற நண்பனாகவும் இருக்க வேண்டும் என்று இத்தருணத்தில் உங்கள் அனைவரையும் கேட்டுக் கொள்கிறேன்.

அரசுக்கும், பொதுமக்களுக்கும் இடையே நல்லுறவை ஏற்படுத்தும் வல்லமை பெற்ற ஓர் அங்கம் காவல் துறை ஆகும்.

பல்வேறு சிரமங்களுக்கிடையே, காவல் துறையினர் சிறப்பாக செயல்பட்டு வந்த போதும், ஒரு சிலரது செயல்பாடுகள் அவ்வப்போது சில விமர்சனங்களுக்கு உள்ளாகிறது.

அவற்றை நீங்களும் அறிவீர்கள். காவல் துறையினர், தங்களது சிறப்பான பணியின் மூலம் இது போன்ற விமர்சனங்களை புறந்தள்ளி விட்டு, கடமையைச்

செய்வதே, அனைத்திலும் சிறந்தது என உணர்ந்து, மக்கள் நலன் காக்கும் பணியில் முழுமையாக உங்களை ஈடுபடுத்திக் கொண்டு, பணிகளை தொடர்ந்து செய்து வரவேண்டுமென்று இத்தருணத்தில் உங்கள் அனைவரையும் கேட்டுக் கொள்கிறேன்.

பல்வேறு சவால்களை எதிர்கொண்டு, அல்லும்–பகலும், தங்கள் குடும்பங்களைக்கூட கவனிக்க நேரமின்றி, சமுதாயக் கட்டமைப்பை பாதுகாக்க கடமையாற்றி வரும் காவல் துறையினரின் நற்பணிகளை பொதுமக்கள் பாராட்டி காவலர்கள் மேலும் சிறப்பாக செயல்படும் விதத்தில், அவர்களுக்கு தேவையான ஒத்துழைப்பை நல்க வேண்டும்.

சீருடைப் பணியாளர்களின் தியாகத்தையும், கடமை உணர்வையும் பாராட்டி, கௌரவிக்கும் வகையில் இப்பதக்கங்கள் வழங்கப்படுகின்றன.

இதுபோன்ற நிகழ்ச்சிகள், பதக்கங்களைப் பெறுவோர் மேலும் சிறப்பாக பணிபுரிய ஊக்கமளிப்பதுடன், பிற பணியாளர்களுக்கும் நற்பணியாற்ற வேண்டும் என்ற உத்வேகத்தையும் அளிக்கிறது.

இந்த விழாவில் சிறப்பாக பயிற்சி முடித்து மக்களுக்கு சேவையாற்ற உள்ள இளம் காவல் துணை கண்காணிப்பாளர்கள், தங்கள் பணிக் காலத்தில் சிறப்பாக பணியாற்றி பொது மக்களுக்கு நற்சேவை செய்து, அவர்களின் பாராட்டுதல்களைப் பெற்று, பல்வேறு பதவி உயர்வுகள் பெற எனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும், இந்த விழாவில் பதக்கங்கள் பெற்ற அனைவருக்கும் மீண்டும் ஒரு முறை எனது நல்வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறேன்.

காவல் துறையில் அகில இந்திய அளவில் பணித்திறன் போட்டிகளில் கலந்து கொண்டு முதல் பரிசுகளைப் பெற்று நற்பணியாற்றி வரும் தமிழ்நாடு காவல் துறையினர் அனைவருக்கும் எனது பாராட்டுதல்களை தெரிவித்துக் கொள்வதோடு, வருங்காலத்திலும் இதே போன்று பரிசுகளையும், பதக்கங்களையும் பெற எனது வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் அரசு, உங்கள் அனைவரின் நலன் காப்பதில் எப்போதும் போல தொடர்ந்து அக்கறை காட்டி வருகிறது.

நாட்டின் நலன் காப்பதில் நீங்கள் எப்போதும் விழிப்புடன் இருக்க வேண்டும். அதனை நீங்கள் இலக்காகக் கொள்ள வேண்டும். இலக்கு எனக் கூறும்போது, எனக்கு ஒரு கதை நினைவுக்கு வருகின்றது.

ஒரு குருவின் மூலம் தத்துவங்களை கற்றுவந்த ஒரு சீடரின் நண்பர், ‘உன் குருவின் மூலம் தத்துவங்கள் முழுவதையும் கற்றுக் கொண்டாயா?’ என்று கேட்டார். ‘தத்துவங்களை அவசரப்பட்டு கற்க முடியாது, கொஞ்சம் கொஞ்சமாகத் தான் கற்க முடியும்’ என்றார் சீடர்.

‘உன் குருவுக்கு வயதாகி விட்டது, அவருக்குப் பின் உனக்கு யார் தத்துவங்களை கற்றுத் தருவது?’ என்று நண்பர் கேட்டார்.

நண்பரின் கேள்வி நியாயமானதாகப் படவே, சீடர், அந்த சந்தேகத்தை குருவிடமே கேட்டார்.

‘குருவே, நீங்கள் இல்லாவிட்டால் தத்துவங்களை எனக்கு யார் சொல்லித் தருவார்கள்?’ என்ற கேள்விக்கு,

‘குறிப்பிட்ட இடத்திலிருந்து புறப்படும் நதிகளுக்கு யார் வழிகாட்டி?’ என்று குரு எதிர் கேள்வி கேட்டார்.

‘நீரும், அதன் வேகமும் தான் அதன் போக்கை தீர்மானிக்கிறது’ என்று சீடர் கூறினார்.

‘சரியாகச் சொன்னாய், பாறைகள், காடுகள் என்று எவ்வளவு பெரிய தடைகள் வந்தாலும் நதி திகைத்துப் போய் நின்று விடுகிறதா ?’ என்று குரு கேட்டார்.

‘நிற்பதில்லை குருவே’ என்றார் சீடர்.

‘எப்படி அந்த நதியில் ஓடும் நீர், தன் இலட்சியமான முகத்துவாரத்தை அடைகின்றது என்பதை யோசித்தாயா ?’ என்றார் குரு.

சீடருக்கு குழப்பமாக இருந்தது. ‘பெரும் தடைகள் வந்தால் சிறிய நீரோட்டங்கள் தேங்கி நின்று விடுகின்றன. ஆனால், உறுதியான கொள்கையும், ஆர்வமும் இருந்தால், வெள்ளம் போல தடைகளை வென்று தன் இலக்கை அடையலாம்’ என்று விளக்கம் கொடுத்தார் குரு.

சீடரின் சந்தேகமும், குழப்பமும் தீர்ந்தது.

உண்மை, நேர்மை, நடுநிலைமை, ஒழுக்கம் தவறாமல் ஒரு போர்படை வீரனைப்போல், எல்லையைக் காக்கும் வீரனைப்போல திகழ வேண்டும்.

அதுதான் தாய்நாட்டிற்கும், தாய் மக்களுக்கும் நீங்கள் செய்யும் தலையாய கடமை என்று தெரிவித்துக் கொள்கின்றேன்.

மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ‘அமைதி, வளம், வளர்ச்சி’ என்ற தாரக மந்திரத்தினை மனதில் நிறுத்தி, தமிழ்நாட்டை தொடர்ந்து அமைதிப் பூங்காவாகத் திகழ்ந்திட நீங்கள் உழைத்திட வேண்டும் என கேட்டுக் கொள்கிறேன்.

“வெற்றி மீது வெற்றி வந்து நம்மைச் சேரும்–அதை
வாங்கித்தந்த பெருமையெல்லாம் உம்மைச் சேரும்”

தமிழ்நாட்டின் வெற்றிக்கு தலையாய பங்கு வகிக்கும் உங்களை மீண்டும் ஒருமுறை வாழ்த்துகிறேன்.

வாழ்க அண்ணா நாமம்!

வளர்க புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். புகழ்!

தொடர்க.. அம்மா அவர்களின் ஆட்சி!

நன்றி!

வணக்கம்!!

❖ ❖ ❖

# ஏங்கி நிற்கும் மக்களை தாங்கி நிற்கும் அம்மா வழியில் நடக்கும் எங்கள் ஆட்சி !









ஒன்றரை கோடி தொண்டர்களின் உயிர் மூச்சாக விளங்கி, ஏழரை கோடி தமிழ் மக்களின் நெஞ்சங்களில் நீக்கமற நிறைந்திருக்கின்ற, இன்றும் என்றும் என்றென்றும் மக்களின் மனதை விட்டு நீங்காத மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா என்னும் தெய்வம் வாழும் திசை நோக்கி வணங்குகிறேன்.

மகத்தில் பிறந்து, மக்கள் வெள்ளத்தோடு வாழ்ந்து, இந்த ஜகத்தையே வென்று, 'என் இல்லமும், உள்ளமும் தமிழ்நாடு, என் மக்களோடு எப்போதும் நானிருப்பேன்' என்று வங்கக் கடலோரம் சந்தனப்பேழையில், எப்போதும் நிகழ்காலமாய் வாழும் தெய்வசக்தி; திட்டங்களால் மக்களைக் கவர்ந்தும் சட்டங்களால் மக்களைக் காத்தும், வாழ்ந்த ஒவ்வொரு நாளும் வரலாறாய் பதிவு பெற்று மானுடத்தில் தோன்றி மக்களைப் பேணி தெய்வமாய் மாறி வானளவுப் புகழ்பெற்ற சந்தியா பெற்றெடுத்த சரித்திர நாயகி, சாதனைத்தாய், எங்கள் அம்மா அவர்களின் ஆசியோடும், அருளோடும் மாண்புமிகு அம்மா வழியில் நாங்கள் ஆட்சிப் பொறுப்பேற்று ஒரு வருடம் நிறைவு பெற்றதை கொண்டாடும் விதமாக, இந்த இனிய விழா இன்று நடைபெற்றுக்கொண்டிருக்கிறது.

மாண்புமிகு
தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள்
23.03.2018 அன்று,
சென்னை, கலைவாணர் அரங்கத்தில்
நடைபெற்ற தமிழ்நாடு அரசின்
ஓராண்டு சாதனை விழாவில்
ஆற்றிய உரை.

இந்தச் சிறப்புமிக்க விழாவில் முன்னிலை உரையாற்றிய மாண்புமிகு துணை முதலமைச்சர் அண்ணன் திரு.ஓ.பன்னீர்செல்வம் அவர்களே!

இந்த நிகழ்ச்சியிலே தலைமை உரையாற்றிய மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் திரு.ப.தனபால் அவர்களே!

வாழ்த்துரை வழங்குவதற்கு இருந்தாலும் காலம் கருதி எங்களுக்கு வழிவிட்டு அமர்ந்திருக்கின்ற மாண்புமிகு மீன்வளம், பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத்துறை அமைச்சர் திரு.டி.ஜெயக்குமார் அவர்களே! மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத்துறை அமைச்சர் திரு. கடம்பூர் ராஜு அவர்களே!

வருகை தந்துள்ள மாண்புமிகு அமைச்சர் பெருமக்களே!

வருகை தந்து சிறப்பித்துக்கொண்டிருக்கின்ற நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களே!

தலைமைக் கழகத்தினுடைய நிருவாகிகள், துணை ஒருங்கிணைப்பாளர் முன்னாள் அமைச்சர் திரு.கே.பி.முனுசாமி அவர்களே, முன்னாள் அமைச்சர் கழக அமைப்புச் செயலாளர் திரு.பொன்னையன் அவர்களே மற்றும் வருகை தந்து சிறப்பித்துக்கொண்டிருக்கிற தலைமைக் கழகத்தினுடைய நிருவாகிகளே, முன்னாள் அமைச்சர் பெருமக்களே, முன்னாள் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களே,

வரவேற்புரை ஆற்றிய தலைமைச் செயலாளர் முனைவர் மரியாதைக்குரிய கிரிஜா வைத்தியநாதன் அவர்களே! மற்றும் நன்றியுரை ஆற்றவுள்ள தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அரசுச் செயலாளர் திரு. இரா.வெங்கடேசன் அவர்களே!

இந்த இனிய நிகழ்ச்சியிலே கலந்துகொண்டு பல்வேறு அரங்குகளை சிறப்பான முறையிலே அமைத்த அனைத்து அரசு செயலாளர்களே, அரசு உயர் அலுவலர்களே! பணியாளர்களே! கழகத்தினுடைய முன்னோர்களே, கழக உடன்பிறப்புகளே, பெரியோர்களே! தாய்மார்களே! பத்திரிகை மற்றும் ஊடகத்துறை நண்பர்களே! உங்கள் அனைவருக்கும் என் வணக்கத்தை தெரிவித்துக் கொள்கிறேன்.

‘சொல்லுதல் யார்க்கும் எளிய – அரியவாம்
சொல்லிய வண்ணம் செயல்’ என்பார் வள்ளுவர்

மாண்புமிகு அம்மா அவர்கள் யாராலும் செயல்படுத்த முடியாத பல திட்டங்களை தமிழ்நாட்டு மக்களுக்காக செயல்படுத்தி காட்டியவர்கள். சொன்னதையும் செய்தார்கள்; சொல்லாததையும் செய்தார்கள் மாண்புமிகு அம்மா அவர்கள்.

மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள் சரித்திர சாதனையாக 6ஆவது முறையாக தமிழ்நாட்டின் முதல்வராகப் பொறுப்பேற்று, அயராது உழைத்து எண்ணற்ற திட்டங்களை மக்களுக்கு வழங்கினார்கள். அதனால்தான், 32 ஆண்டுகளுக்குப் பிறகு ஆளுங்கட்சியே தொடர்ந்து ஆட்சியைப் பிடிக்கும் சாதனையையும் மாண்புமிகு அம்மா அவர்கள் நிகழ்த்திக் காட்டினார்கள்.

மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள் நான்காம் முறையாக ஆட்சிப் பொறுப்பேற்று, முதலாம் ஆண்டை நிறைவு செய்தபோது, பொதுமக்களும், பத்திரிகைகளும், ஊடகங்களும் ‘நூறாண்டு பேசும் ஓராண்டு சாதனை’ என்று பாராட்டினர். மாண்புமிகு அம்மா அவர்களுக்கு கிடைத்த அந்தப் பாராட்டுதல்களை தக்கவைத்துக்கொள்ளும் விதமாக, மாண்புமிகு அம்மா அவர்கள் விட்டுச்சென்ற மக்கள் பணிகளை தொடர்ந்து ஆற்றி வருகின்றோம்.

நாங்கள் ஆட்சிப் பொறுப்பேற்ற ஒரு வருடத்தில் 17 ஆயிரத்து 619 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 38 ஆயிரத்து 339 பணிகளை தொடங்கி வைத்தும், 14 ஆயிரத்து 476 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 7 ஆயிரத்து 408 பணிகளுக்கு அடிக்கல் நாட்டியும் வைத்துள்ளோம். ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம் என்ற பழமொழிக்கேற்ப எங்களின் பல சாதனைகளுக்கு, இந்த சாதனை ஒரு எடுத்துக்காட்டாகும்.

‘அம்மா வழியில் நல்லாட்சி – அதற்கு ஓராண்டு சாதனையே சாட்சி’ என்கிற வகையில் இந்த ஓராண்டில் நாங்கள் செய்த சாதனைகள் பலப்பல. அவை எண்ணில் அடங்காது. அவற்றையெல்லாம் சொல்ல நேரமும் போதாது. எனவே, அவற்றில் ஒரு சிலவற்றை மட்டும் இங்கே குறிப்பிட விரும்புகின்றேன்.

ஏனென்று சொன்னால், இன்றைக்கு எதிர்க் கட்சிக்காரர்களும் புதிதாக முளைத்திருக்கின்ற கட்சிகளும், அந்தக் கட்சியைச் சேர்ந்த தலைவர்களும் மாண்புமிகு அம்மா அவர்கள் மறைவிற்குப் பிறகு, இந்த ஆட்சியில் என்ன திட்டங்களைக் கொண்டு வந்தார்கள்? அந்தத் திட்டத்தினால் நாட்டு மக்களுக்கு என்ன நன்மை கிடைத்திருக்கின்றது என்றெல்லாம் பேசிக்கொண்டிருக்கின்றார்கள். அவர்களுக்கு புள்ளி விவரத்தோடு நாங்கள் தெரிவிக்கின்றோம். ஓர் ஆண்டில் இதயதெய்வம் மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் அரசு எந்தளவிற்கு சாதனை படைத்திருக்கின்றது, திட்டங்களை மக்களுக்கு கொண்டுபோய் சேர்த்திருக்கின்றது என்பதை புள்ளி விவரத்தோடு இந்த நேரத்திலே சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

நான் அம்மா என்கிற பாசறையில் அரசியல் பயின்று, நிருவாகம் கற்றவன். உணர்வுப்பூர்வமாக, உண்மையாக உழைப்பதற்குப் பழகியவன் என்பதால்தான் கடந்த ஆண்டு பிப்ரவரி 16ஆம் நாளிலிருந்து இன்றைய



தேதி வரை 5 ஆயிரத்து 746 கோப்புகளில் உத்தரவிட்டுள்ளேன்.

நான் உத்தரவிட்ட கோப்புகள் ஒன்றும் வெறும் காகிதங்கள் அல்ல. கோப்புகள் ஒவ்வொன்றும் பலருடைய வாழ்க்கையில் விளக்கேற்றும்; பல திட்டங்களுக்கு உயிர் கொடுக்கும் அரசு ஆணைகள்.

இதைக்கொண்டே மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் அரசு எப்படி செயல்படுகிறது என்பதை நீங்கள் தெரிந்துகொள்ளலாம்.

ஒரு சாதாரண விவசாயக் குடும்பத்தில் பிறந்த நான், மக்கள் பணியாற்ற என்னை இணைத்துக்கொண்ட இயக்கம், அ.இ.அ.தி.மு.க. என்னும் பேரியக்கமாகும். மாண்புமிகு புரட்சித்தலைவர் அவர்கள் தலைமையையும், அவர்களுக்குப் பிறகு மாண்புமிகு அம்மா அவர்களின் தலைமையையும் ஏற்று கடுமையாக உழைத்து படிப்படியாக உயர்ந்து, இன்று தமிழ்நாட்டினுடைய முதலமைச்சர் என்ற நிலையை அடைந்துள்ளேன். விசுவாசமும், உழைப்புக்கு முன்னுரிமையும் வெகுமதியும் அளிக்கக்கூடிய ஒரே இயக்கம் அ.இ.அ.தி.மு.க.தான் என்பதற்கு இந்த இயக்கத்தில் உள்ள நான் உள்பட அனைவரும் உதாரணமாக இருக்கின்றோம்.

மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆசி எங்களுக்கு இருப்பதால்தான் மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆன்மா எங்கள் ஆட்சிக்கு உற்ற துணையாக இருந்து எங்களை வழிநடத்துவதால், மாண்புமிகு அம்மா அவர்களின் விருப்பப்படி மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களின் நூற்றாண்டு விழாவை 30 மாவட்டங்களில் கொண்டாடும் அரிய வாய்ப்பு எங்களுக்குக் கிடைத்தது. ஒவ்வொரு மாவட்டத்திற்கும் நான் உட்பட அமைச்சர் பெருமக்கள் அனைவரும் நேரில் சென்று, இலட்சோப இலட்ச மக்களை நேரில் சந்தித்து அவர்களின் தேவைகளை நிறைவு செய்திருக்கின்றோம். ஏங்கி நிற்கும் மக்களை தாங்கி நிற்கும் அம்மா அவர்களின் வழியில் நடக்கும் எங்கள் ஆட்சியில், ஏழைகளுக்கும் விவசாய குடிமக்களுக்கும் பல்வேறு நலன் பயக்கும் திட்டங்களை செயல்படுத்தி வருகின்றோம்.

தமிழ்நாட்டின் முதுகெலும்பாக திகழ்வது விவசாயம். அந்த விவசாயம் வளமையாக இருந்தால்தான் தமிழ்நாடு வலிமையாக இருக்கும் என்பதை மாண்புமிகு அம்மா அவர்கள் நன்கு உணர்ந்திருந்தார்கள். மாண்புமிகு அம்மா வழியில் செயல்படும் இந்த அரசும் அதையே பின்பற்றி விவசாயத்திற்காக பலகோடி ரூபாய் நிதியை ஒதுக்கீடு செய்து வருகிறது.

கடவுள் என்னும் முதலாளி கண்டெடுத்த தொழிலாளி விவசாயி என்று மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களால் மதிக்கப்பட்ட விவசாயிகளின் வாழ்வாதாரத்தை உயர்த்த மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு முனைப்புடன் செயல்பட்டு வருகிறது.

கடந்த ஓர் ஆண்டில் மட்டும் ...

கடுமையான வறட்சி. கிட்டத்தட்ட 142 ஆண்டுகாலம் இல்லாத வறட்சி. அந்த வறட்சியால் விவசாயிகள் கடுமையாக பாதிக்கபட்டார்கள். ஆகவே, பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு வறட்சி நிதியாக,

❖ வறட்சி நிவாரணமாக 2,247 கோடி ரூபாய் வழங்கப்பட்டுள்ளது. எதையுமே செய்யவில்லை என்று கேட்கின்றார்கள், எதிர்க்காட்சிக்காரர்களும், பல்வேறு அரசியல் கட்சிக்காரர்களும். வறட்சிக்காக நிவாரணம் வழங்கிய ஒரே அரசு அம்மாவினுடைய அரசு என்பதை தெரிவித்துக்கொள்கிறேன். அதேபோல, இன்றைக்கு விவசாயிகள் கடும் வறட்சியால் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள்.

❖ பயிர் காப்பீட்டுத் திட்டத்தின்கீழ், 9 இலட்சத்திற்கு மேற்பட்ட விவசாயிகளுக்கு இழப்பீட்டுத் தொகையாக 3,020 கோடி ரூபாய் ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது.

❖ தென்னையிலிருந்து 'நீரா பானம்' உற்பத்தி செய்ய அனுமதி வேண்டுமென்று விவசாயிகள் கோரிக்கை வைத்தார்கள். அந்த கோரிக்கையையும் நிறைவேற்றிய அரசு அம்மாவினுடைய அரசு.

❖ 802 கோடியே 90 இலட்சம் ரூபாய் செலவில், மானாவாரி விவசாயிகளின் வருமானத்தை உயர்த்த 'நீடித்த மானாவாரி விவசாயத்திற்கான இயக்கம்' என்ற சிறப்புத் திட்டம் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

❖ 100 கோடி ரூபாயில் 2 இலட்சம் சிறு, குறு விவசாயிகளை ஒருங்கிணைத்து உருவாக்கப்பட்டுள்ள 2 ஆயிரம் உழவர் உற்பத்தியாளர் குழுவிற்கு தலா 5 இலட்சம் ரூபாய் நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது.

❖ 1,158 பண்ணைக் குட்டைகள் உருவாக்கப்பட்டுள்ளன.

❖ 3,846 தடுப்பணைகள் உருவாக்கப்பட்டுள்ளன.

❖ இதைத்தவிர, 98 கோடியே 7 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீட்டில் டெல்டா விவசாயிகளின் நலனுக்காக "குறுவை மற்றும் சம்பா தொகுப்புத் திட்டம்" செயல்படுத்தப்பட்டது.

❖ மாண்புமிகு அம்மா அவர்கள் வகுத்த பாதையில் வறுமை ஒழிப்புத் திட்டத்திற்கு நாங்கள் முன்னுரிமை வழங்குகிறோம்.

❖ ஏழை குடும்பங்கள் பொருளாதாரத்தில் தன்னிறைவு பெறும் வகையில் 1 இலட்சத்து 86 ஆயிரத்து 756 சுய உதவி குழுக்களுக்கு 5 ஆயிரத்து 759 கோடியே 86 இலட்சம் ரூபாய் வங்கிக் கடன் வழங்கப்பட்டு அவர்கள் சுயமாக தொழில் தொடங்குவதற்கு அம்மாவினுடைய அரசு உதவி செய்தது என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

❖ விலையில்லா கறவைப் பசுக்கள் வழங்கும் திட்டத்தின்கீழ், 49 கோடியே 83 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 8,417 பயனாளிகளுக்கு கறவைப் பசுக்கள் வழங்கப்பட்டுள்ளன.

❖ விலையில்லா வெள்ளாடுகள் வழங்கும் திட்டத்தின் கீழ், 198 கோடியே 75 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 97 ஆயிரத்து 473 பயனாளிகளுக்கு 3 இலட்சத்து 89 ஆயிரத்து 892 வெள்ளாடுகள் மற்றும் செம்மறியாடுகள் வழங்கப்பட்டுள்ளன.

போதுமான வருமானம் இல்லாமல் தவித்துக் கொண்டிருந்த பல கிராமத்துப் பெண்களுக்கு இந்தத் திட்டங்கள் ஒரு வரப்பிரசாதமாக அமைந்து, அவர்களின் வாழ்க்கையில் விளக்கேற்றியிருக்கின்றது.

தரைமேல் பிறக்க வைத்தான் எங்களை தண்ணீரில் தவிக்க வைத்தான் என்று உயிரைப் பணயம் வைத்து கடலில் பிழைப்பு நடத்தும் மீனவர்களின் நலனில் மாண்புமிகு அம்மா அவர்களின் வழியில் செயல்படும் இந்த அரசும் அதிக அக்கறை எடுத்துக் கொண்டுள்ளது. மீன்பிடி தொழிலுக்கு பல திட்டங்களை செயல்படுத்தி வருகின்றது. அதன்படி,

❖ தமிழ் நாட்டைச் சேர்ந்த 442 மீனவர்கள் இலங்கை சிறையிலிருந்தும், 40 மீனவர்கள் ஈரான் சிறையிலிருந்தும் விடுவிக்கப்பட்டு தமிழ்நாட்டிற்கு அழைத்து வரப்பட்டுள்ளனர்.

❖ ஒகி புயலில் சிக்கி மரணமடைந்த 42 மீனவர் குடும்பங்களுக்கு தலா 20 இலட்சம் ரூபாய் நிவாரணம் வழங்கப்பட்டுள்ளது. அதுமட்டுமல்லாமல், 177 காணாமல் போன மீனவ குடும்பங்களுக்கு 35.40 கோடி ரூபாய் நிவாரணமாக வழங்கப்பட்டுள்ளது.

❖ 68 கோடியே 17 இலட்சம் ரூபாய் செலவில் தலைஞாயிறில் புதிய மீன்வள கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலைய வகுப்புகள் துவக்கப்பட்டுள்ளது.

❖ மேலும், சிங்கப்பூரில் அன்று ஆவின் டெட்ரா பால் விற்பனை அறிமுகம் செய்யப்பட்டுள்ளது.

**நடுத்தர வகுப்பினர் பயன் பெறும் வகையில்**

❖ அங்கீகாரமற்ற மனைப்பிரிவுகள் மற்றும் மனைகள் வரன்முறைப்படுத்த விதிகள் உருவாக்கப் பட்டுள்ளன.

❖ தமிழ்நாடு கட்டட, மனை விற்பனை ஒழுங்குமுறை குழுமம் உருவாக்கப்பட்டுள்ளது.

"நல்ல நல்ல பிள்ளைகளை நம்பி இந்த நாடே இருக்குது தம்பி" என்ற மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் குறிப்பிட்டதுபோல் நல்ல பிள்ளைகளை



உருவாக்க நல்ல கல்வியால்தான் முடியும். கல்வியில் சிறந்த நாட்டை உருவாக்க முடியும் என்ற அடிப்படையில் மாண்புமிகு அம்மாவின் அரசு கல்வித்துறைக்கு அதிக முக்கியத்துவம் கொடுத்து வருகிறது.

மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் வழியில் செயல்படும் இந்த அரசின் தொலைநோக்குத் திட்டங்களால், ஓராண்டில் தொடக்கக்கல்வி மற்றும் நடுநிலைப்பள்ளிகளில் சேர்க்கை விகிதம் உயர்ந்துள்ளதை கல்வித் துறையின் புரட்சி என்றே கூறலாம். இந்த சேர்க்கை விகிதம்தான் எதிர்காலத்தில் தமிழ்நாடு 100 விழுக்காடு கல்வியறிவு பெற்ற மாநிலம் என்ற இலக்கைத் தொடுவதற்கு தொடக்கப் புள்ளியாக இருக்கும் என்றும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**நாங்கள் ஆட்சிப் பொறுப்பேற்ற ஓராண்டில்**

❖ கல்வித் தரத்தை மேம்படுத்தும் வகையில் புதிய பாடத்திட்டம் உருவாக்கப்பட்டுள்ளது.

❖ 2 ஆயிரத்து 612 ஆசிரியர்கள் மற்றும் 4 ஆயிரத்து 362 ஆசிரியர் அல்லாதோர் பணி நியமனம் செய்யப்பட்டுள்ளனர்.

❖ மாணவர்களின் மன அழுத்தங்களை போக்க, 10 மற்றும் 12ஆம் வகுப்பு பொதுத் தேர்வில் முதல் மூன்று இடங்களை அறிவிக்கும் நடைமுறை ரத்து செய்யப்பட்டுள்ளது.

❖ 11ஆம் வகுப்புக்கு நடப்பாண்டு முதல் அரசு பொதுத் தேர்வு அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

❖ போட்டித் தேர்வுகளில் தமிழ்நாடு மாணவர்கள் வெற்றி பெறும் வகையில் 412 பயிற்சி மையங்கள் துவக்கப்பட்டுள்ளன.

❖ 10 மற்றும் 12ஆம் வகுப்பு பொதுத் தேர்வு முடிவுகள் மாணவர்களின் கைப்பேசி எண்ணிற்கு குறுஞ்செய்தி மூலம் அறிவிக்கப்படுகிறது.

❖ மாணாக்கர்களுக்கு 5 இலட்சத்து 11 ஆயிரத்து 74 மடிக்கணினிகள் வழங்கப்பட்டுள்ளன.

**உயர்கல்வித்துறையில் ஓராண்டில்**

❖ 11 புதிய கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் மற்றும் 1 அரசு பல்வகை தொழில் நுட்பக் கல்லூரி துவங்கப்பட்டுள்ளன.

❖ விழுப்புரம், தருமபுரி மற்றும் இராமநாதபுரம் மாவட்டங்களில் புதிய அரசு சட்டக் கல்லூரிகள் அமைக்கப்பட்டுள்ளன.

❖ இந்தியாவிலேயே இன்றைக்கு உயர் கல்வி கற்பவர்களின் எண்ணிக்கை தமிழ்நாட்டில்தான் அதிகமாக இருக்கிறது. உயர்கல்வி படிப்பதற்கான சூழ்நிலையை அம்மா அவர்கள் உருவாக்கித் தந்துள்ள காரணத்தினால் தமிழ்நாடு 46.90 சதவிகித மொத்த சேர்க்கை விகிதத்தை எட்டி, இன்றைக்கு உயர்கல்வி பயில்வதில் இந்தியாவிலேயே முதன்மை மாநிலமாகத் தமிழ்நாடு விளங்குகிறது.

❖ அமெரிக்காவில் உள்ள ஹார்வர்டு பல்கலைக் கழகத்தில் தமிழ் இருக்கை ஏற்படுத்துவதற்காக தமிழ்நாடு அரசு 10 கோடி ரூபாய் வழங்கியுள்ளது.

மாண்புமிகு அம்மா அவர்களின் வழியில் செயல்படும் அரசின் இந்த ஓராண்டு ஆட்சியில் ஏற்பட்டுள்ள கல்வி புரட்சியால்.. 'கல்வி சிறந்த தமிழ்நாடு' என்ற மகாகவி பாரதியின் பாடலுக்கு நாங்கள் உயிர் கொடுத்துள்ளோம்.

மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள் மக்கள் நலனில் அதிக அக்கறை எடுத்துக் கொண்டு பல்வேறு சுகாதாரத் திட்டங்களை கொண்டு வந்தார்கள். குறிப்பாக, கிராம மக்களின் சுகாதாரத்திற்கு மிகவும் முக்கியத்துவம் கொடுத்தார்கள். மாண்புமிகு அம்மா அவர்களின் வழியையே பின்பற்றி நாங்களும் இந்த ஓராண்டில் மட்டும் 4,468 மருத்துவர்கள் உட்பட 6,438 பணியாளர்களை பணியமர்த்தி மருத்துவச்சேவை தங்கு தடையின்றி கொடுக்க வழிவகை செய்துள்ளோம்.

கடந்த ஆண்டு புதுக்கோட்டையில் மருத்துவமனையுடன் கூடிய மருத்துவக் கல்லூரி தொடங்கப்பட்டது. மாற்று உறுப்பு அறுவை சிகிச்சை மூலம் 1,056 இறந்த கொடையாளிகளிடமிருந்து 5,933 முக்கிய உறுப்புகள் தானமாகப் பெறப்பட்டன. இதன்மூலம் ஆயிரக்கணக்கானவர்களுக்கு மறுபிறவி கிடைத்தது. அவர்கள் இப்போது மகிழ்ச்சியுடன் வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள். அதுமட்டுமல்ல, இன்றைக்கு இந்தியாவிலேயே அரசு மருத்துவமனையில் இரண்டு கைகளையும் இழந்த ஒருவருக்கு, இறந்தவர் உடலிலிருந்து இரண்டு கைகளையும் பொருத்தி சாதனை படைத்தது தமிழ்நாடு அரசு, நம்முடைய தமிழ்நாடு அரசு மருத்துவர்கள். இந்தியாவிலேயே எந்த அரசு மருத்துவமனையிலும் இப்படிப்பட்ட அறுவை சிகிச்சை செய்யப்படவில்லை. நம்முடைய அரசு மருத்துவமனையில் இருக்கின்ற அரசு மருத்துவர்கள் இந்த சாதனையை படைத்திருக்கிறார்கள். அதுமட்டுமல்ல, இருதய மாற்று அறுவை சிகிச்சை; சிறுநீரக மாற்று அறுவை சிகிச்சை; இன்றைக்கு மருத்துவத் துறை தமிழகத்திலே முதலிடம் வகிக்கிறது என்ற பெருமையை இன்றைக்கு அம்மாவினுடைய அரசு ஏற்படுத்தியிருக்கிறது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

- 930 கோடியே 76 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 'முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தில்' 6 இலட்சத்து 51 ஆயிரம் நபர்களுக்கு சிகிச்சையளிக்கப்பட்டுள்ளது.
- டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி நினைவு மகப்பேறு நிதி உதவி 18 ஆயிரம் ரூபாயாக உயர்த்தப்பட்டு, 5 இலட்சத்து 64 ஆயிரம் கர்ப்பிணிப் பெண்களுக்கு 513 கோடியே 64 இலட்சம் ரூபாய் நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது.

"அழகு மகன் மழலை மொழி
தென்பொதிகை செந்தமிழோ
இளநகைதான் சிறுகதையோ
இதயமதை எழுதியதோ
முத்துமுகம் முழுநிலவோ
முப்பது நாள் வரும் நிலவோ"

என்ற மாண்புமிகு புரட்சித்தலைவர் அவர்களின் பாடல் வரிகளுக்கு ஏற்ப பிறக்கும் குழந்தைகளை தாய்மார்கள் கொஞ்சி மகிழ்ந்திடும் வகையில் நல்ல ஆரோக்கியமான வாரிசு பிறந்திட, மாண்புமிகு அம்மாவின் அரசு, கர்ப்பிணிப் பெண்களுக்கு ஏற்படும் இரத்த சோகையை போக்கவும், பிறக்கும் குழந்தைகளின் எடையை உயர்த்தவும், இரும்புச்சத்து டானிக் மற்றும் ஊட்டச்சத்து பொருட்கள் அடங்கிய 'அம்மா தாய்சேய் நல ஊட்டச் சத்து பெட்டகம்' வழங்கப்பட உள்ளது.

மருத்துவத்துறை எப்போதும் விழிப்புடனும், தியாக உணர்வுடனும் செயல்படுவதால்தான் தமிழ்நாட்டை அச்சுறுத்திய 'டெங்கு' போன்ற நோய்களை விரைந்து ஒழிக்க முடிந்தது.

இன்றைக்கு அரசு மருத்துவமனைகள் எல்லாம் தனியார் மருத்துவமனைகளுக்கு நிகராக சேவை ஆற்றி வருகின்றன. மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள்தான் அரசு மருத்துவமனைகளை உலகத்தரத்திற்கு உயர்த்தி சிறந்த மருத்துவர்களை நியமனம் செய்து, 24 மணி நேரமும் செயல்படவைத்து மக்களை பல்வேறு நோய்களில் இருந்து காப்பாற்றுகிறார்கள். மாண்புமிகு அம்மா அவர்களின் வழியில் செயல்படும் அம்மாவின் அரசும் சுகாதாரத் துறையில் அதிக அக்கறை எடுத்துச் செயல்பட்டு வருகிறது. அதன் காரணமாகத்தான் சுகாதார குறியீடுகளில், இந்தியாவிலேயே தமிழ்நாடு மூன்றாவது இடத்தில் உள்ளது. இது நிதி ஆயோக் வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள் பெண்களின் நலனிலும், பாதுகாப்பிலும் எப்போதும் கவனமாக இருந்தார்கள். எங்களிடமும் அதைத்தான் அம்மா அவர்கள் வலியுறுத்தினார்கள். இது அம்மா அவர்களின் ஆட்சி என்பதால்.. தமிழ்நாட்டு பெண்கள் அனைவரையும் நாங்கள் 'அம்மா' அவர்களின் திருஉருவங்களாகவே பார்க்கின்றோம்.

இந்தியாவிலேயே பெண்களுக்கு பாதுகாப்பான முதன்மை பெருநகரமாக சென்னையும், முதன்மை மாநகரமாக கோவையும் திகழ்வதாக தேசிய குற்ற ஆவண காப்பகத்தால் பட்டியலிடப்பட்டுள்ளது.

இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் உழைக்கும் மகளிருக்கு "அம்மா இருசக்கர வாகனம்" வழங்குவதற்கு அறிவிப்பை வெளியிட்டிருந்தார்கள். ஆனால், மாண்புமிகு அம்மாவின் மறைவிற்குப்பிறகு அந்த திட்டம் செயல்படுத்தப்படுமா என்ற ஐயம் சிலருக்கு ஏற்பட்டது. அந்த ஐயத்தைப் போக்கும் விதமாக அம்மாவினுடைய அரசானது உழைக்கும் மகளிருக்கு அம்மா இருசக்கர வாகனம் வழங்கும் திட்டத்தை



மாண்புமிகு அம்மா அவர்களின் பிறந்தநாளன்று துவக்கி வைத்து, அத்திட்டத்தினை சிறப்பாக செயல்படுத்தி வருகிறது. இத்திட்டத்தில் ஆண்டுதோறும் ஒரு இலட்சம் உழைக்கும் மகளிருக்கு அம்மா இருசக்கர வாகனம் வழங்கப்படும் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு அம்மாவின் 70ஆவது பிறந்த நாளை முன்னிட்டு 70 இலட்சம் மரக்கன்றுகள் நடும் திட்டத்தை சென்னை கலைவாணர் அரங்கில் தொடங்கி வைத்ததோடு "அம்மா இருசக்கர வாகனம் வழங்கும் திட்டத்தையும்" மாண்புமிகு பாரத பிரதமர் அவர்கள் தொடங்கி வைத்தார்கள் என்று இந்த நேரத்தில் பெருமையோடு சொல்லிக்கொள்ள கடமைப்பட்டிருக்கின்றேன்.

இந்த ஓராண்டில் நாங்கள் செய்த சாதனைத் திட்டங்களில் குடிமராமத்துத் திட்டத்தை ஒரு மக்கள் இயக்கமாக மாற்றியது மிகவும் முக்கியமானதாகும்.

குடிமராமத்து திட்டத்தின் மூலமாக முதற்கட்டமாக 100 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டு ஆயிரத்து 519 பணிகள் முடிவடைந்துள்ளன. விவசாயிகள் மீண்டும் கோரிக்கை வைத்ததின் பேரில், மேலும் 2 ஆயிரத்து 65 குடிமராமத்து பணிகள் 30 மாவட்டங்களில் சுமார் 331 கோடியே 68 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் நடைபெற்று வருகின்றன. இந்த ஏரிகளிலிருந்து அள்ளப்படும் வண்டல் மண்ணானது விவசாயிகளின் விளைநிலங்களுக்கு இயற்கை உரமாக பயன்படுத்தப்படுகிறது. ஏரிகளை ஆழப்படுத்தும் பொழுது நீர் அதிகமாக சேமிக்கப்படுகிறது.

குடிமராமத்து திட்டத்தைப் பயன்படுத்திய பல பகுதிகளில் நிலத்தடி நீர் உயர்ந்துள்ளதை நாம் கண்கூடாக பார்க்கிறோம். குடிமராமத்துத் திட்டம் ஆக்கபூர்வமான தொலைநோக்குத் திட்டம் என்று விவசாய குடிமக்கள் இந்த அரசை மனம் திறந்து பாராட்டி வருகிறார்கள். அதுமட்டுமல்ல, 83 ஆண்டுகளுக்குப் பிறகு முதன்முறையாக மேட்டூர் அணை தூர்வாரப்பட்டது என்ற மகிழ்ச்சியான செய்தியினை தெரிவித்துக் கொள்கிறேன். மேட்டூர் அணை தூர்வாரப்பட்டதின் மூலமாக, பருவமழைக் காலங்களில் பெய்கின்ற மழைநீர் சுமார் 15 டி.எம்.சி. தண்ணீர் தேக்கக்கூடிய அளவிற்கு மேட்டூர் அணை தூர்வாரப்படும் என்ற மகிழ்ச்சியான செய்தியை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு அம்மா அவர்கள் தமிழ்நாட்டை குடிசைகள் இல்லாத மாநிலமாக மாற்றுவதையே குறிக்கோளாகக் கொண்டு செயல்பட்டார்கள். மாண்புமிகு அம்மா அவர்களின் கனவை நனவாக்கும் விதமாக அம்மா வழியில் செயல்படும் இந்த அரசு வீடு இல்லாத ஏழைக் குடும்பங்கள் அனைத்துக்கும் வீடுகள் கட்டித் தரும் திட்டங்களை செயல்படுத்தி வருகின்றது.

**நாங்கள் ஆட்சிப் பொறுப்பேற்ற ஓராண்டில்**

- தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியத்தின் மூலம் 593 கோடியே 88 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 14 திட்டப் பகுதிகளில் 9 ஆயிரத்து 847 குடியிருப்புகள் கட்டப்பட்டுள்ளன.
- முதலமைச்சரின் சூரிய மின் சக்தியுடன் கூடிய பசுமை வீடுகள் திட்டத்தின் கீழ் 40 ஆயிரம் வீடுகள் 840 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டு வருகின்றன.






❖ அனைவருக்கும் வீட்டு வசதித் திட்டத்தின் கீழ், 6ஆயிரத்து 635 கோடியே 10 இலட்சம் ரூபாய் செலவில் 1 இலட்சத்து 62 ஆயிரத்து 571 குடியிருப்புகள் கட்ட ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

இரும்பைக் காய்ச்சி உருக்கிடு வீரே!
யந்திரங்கள் வகுத்திடு வீரே!
கரும்பை சாறு பிழிந்திடு வீரே!
கடலில் மூழ்கி முத்தெடுப்பீரே!

என்று மகாகவி பாரதியார் தொழிலாளர்களின் பெருமையை பாடுவார். பாரதி கண்ட புதுமைப் பெண் அம்மா அவர்களின் வழிவந்த அம்மாவின் அரசு.

➢ போக்குவரத்து தொழிலாளர்களின் நலனைக் கருத்தில் கொண்டு, ஓய்வு பெற்ற தொழிலாளர்களுக்கு நிலுவையாக இருந்த 2 ஆயிரத்து 147 கோடியே 39 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் பணிக்கொடை, வருங்கால வைப்பு நிதி மற்றும் ஓய்வூதிய ஒப்படைப்புத் தொகைகள் வழங்கப்பட்டுள்ளன.

➢ மாற்றுத்திறனாளிகளுக்கு வேலை வாய்ப்பில் 4 சதவிகித இட ஒதுக்கீட்டினை அரசு பொதுத்துறை நிறுவனங்கள், வாரியங்கள், குழுமங்கள் மற்றும் கல்வி நிறுவனங்களில் அமல்படுத்த ஆணையிடப்பட்டுள்ளது.

"ஆயுதம் செய்வோம், நல்ல காகிதம் செய்வோம், ஆலைகள் வைப்போம், கல்விச் சாலைகள் வைப்போம்"

என்ற மகாகவியின் பாடலுக்கு ஏற்ப தமிழ்நாட்டில் தொழிற் புரட்சி ஏற்படுத்த அம்மாவின் அரசு பல திட்டங்களை செயல்படுத்தி வருகிறது.

❖ பெரிய அளவில் தொழில்களை ஈர்த்து, தமிழ்நாட்டை முன்னேற்ற பாதையில் கொண்டு செல்லும் பொருட்டு ஒற்றைச் சாளர முறையினை வலுப்படுத்துவதற்கு, "தமிழ்நாடு வணிக எளிதாக்கும் சட்டம்–2018" இயற்றப்பட்டுள்ளது. மேலும் "இணையதள வழி ஒற்றைச் சாளர தகவு" துவக்கப்பட்டுள்ளது.

❖ 1,295 கோடி ரூபாய் முதலீட்டில் திருவள்ளூவர் மாவட்டம், பொன்னேரி வட்டம் புழுதிவாக்கம் மற்றும் வாயலூர் கிராமங்களில் உள்ள 360 ஏக்கர் நிலப்பரப்பில் பல்முனை சரக்கு போக்குவரத்து பூங்கா அமைக்கப்பட உள்ளது.

❖ சிப்காட் நிறுவனம் மூலம் 245 ஏக்கர் பரப்பளவில் "வானூர்திப் பூங்கா" துவக்க அடிக்கல் நாட்டப்பட்டுள்ளது. இதன்மூலம் ஆயிரம் கோடி ரூபாய் முதலீடு ஈர்க்கப்பட்டு, 10 ஆயிரம் நபர்களுக்கு நேரடியாகவும், 25 ஆயிரம் நபர்களுக்கு மறைமுகமாகவும் வேலைவாய்ப்பு உருவாக்கித்தர அம்மாவினுடைய அரசு நடவடிக்கை எடுத்திருக்கிறது என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

❖ ஒருங்கிணைந்த சாலைகள் உள்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ், ஆயிரத்து 813 கோடியே 70 இலட்சம் ரூபாய் செலவில் 3,143 கி.மீ நீளச் சாலைகள் மேம்பாடு செய்தல்

மற்றும் 120 சிறு பாலங்கள் அமைக்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

- ❖ 2 ஆயிரத்து 772 கோடியே 50 இலட்சம் ரூபாய் செலவில் 5,061 கி.மீ. நீள சாலைகள், 99 பாலங்கள் மற்றும் 638 சாலை பாதுகாப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.
- ❖ பாரத்மாலா திட்டத்தின் கீழ், சேலம், கோயம்புத்தூர் மற்றும் மதுரை நகரங்களில் ஒருங்கிணைந்த நவீன பேருந்து முனையம் ஏற்படுத்தப்பட உள்ளது.
- ❖ சென்னை மெட்ரோ இரயில் திட்டம் நிலை 1 முடிவடையும் நிலையில் உள்ளது. நிலை 2இன் கீழ் 107.55 கி.மீ நீளத்திலான 3 வழித்தடங்களுக்கான விரிவான திட்ட அறிக்கை மத்திய அரசின் ஒப்புதலுக்கு பரிந்துரைக்கப்பட்டுள்ளது.
- ❖ கோயம்புத்தூர் மாநகரத்திலும் மெட்ரோ ரயில் திட்டம் விரைவில் செயல்படுத்தப்படும்.
- ❖ 1,781.50 கோடி ரூபாய் செலவில் தமிழ்நாடு முழுவதும் கூட்டு குடிநீர் திட்டம் செயல்படுத்தப்பட்டுள்ளது.
- ❖ பொது விநியோகத் திட்டத்தை செம்மைப்படுத்த 330 கோடி ரூபாயில் ஒரு கோடியே 88 இலட்சம் மின்னணு குடும்ப அட்டைகள் வழங்கப்பட்டுள்ளது.
- ❖ 15 ஆயிரத்து 621 சீருடைப் பணியாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.
- ❖ இந்தியாவிலேயே, சிறந்த காவல் நிலையமாக கோவை ஆர்.எஸ்.புரம் காவல் நிலையமும், சிறந்த ஐந்தாவது காவல் நிலையமாக சென்னை, அண்ணா நகர் காவல் நிலையமும் தேர்வு செய்யப்பட்டுள்ளன.
- ❖ மாண்புமிகு அம்மா அரசின் இடைவிடாத முயற்சியால் மத்திய அரசிடமிருந்து தமிழ்நாடு அரசு கேபிள் டி.வி. நிறுவனத்திற்கு, டிஜிட்டல் ஒளிபரப்பு உரிமம் பெறப்பட்டது.
- ❖ 10 இலட்சம் விலையில்லா செட்டாப் பாக்ஸ்கள் இதுவரை வழங்கப்பட்டுள்ளன.
- ❖ 1,230 கோடியே 90 இலட்சம் ரூபாய் செலவில் கிராமந்தோறும் இணையவழி சேவை வழங்க பாரத் நெட் திட்டம் தொடங்கப்பட்டுள்ளது.
- ❖ மின்னாளுமை திட்டத்தினை நிருவகித்திட மின்னாளுமை கொள்கை – 2017 உருவாக்கப்பட்டு உள்ளது.
- ❖ வணிகவரி வசூல் மற்றும் சரக்குகள், சேவைகள் வரி வசூலில் நாட்டிலேயே தமிழ்நாடு இரண்டாவது இடத்தைப் பெற்றுள்ளது.
- ❖ ஆவணப்பதிவு நடைமுறையினை முற்றிலும் கணினி மயமாக்க ஒருங்கிணைந்த வலை அடிப்படையிலான மென்பொருள் அறிமுகப்படுத்தப்பட்டு உள்ளது. இதன்மூலம் பொது மக்கள் அலைச்சல் இன்றி பத்திரப்பதிவை சுலபமாக செய்து கொள்ளலாம்.
- ❖ கோவை மாவட்டம் அன்னூரில் உழவர் பெருந்தலைவர் நாராயணசாமி நாயுடு மணிமண்டபம் அமைக்கப்படவுள்ளது.
- ❖ திருச்செந்தூரில்டாக்டர்பா.சிவந்திஆதித்தனாருக்கு மணிமண்டபம் அமைக்கப்படவுள்ளது.
- ❖ இப்படி எத்தனையோ திட்டங்களை எந்தவித பெரிய விளம்பரமோ, ஆடம்பரமோ இல்லாமல் மக்கள் சேவையே மகேசன் சேவை எனக்கருதி மாண்புமிகு அம்மாவின் அரசு செய்து வருவதை மக்கள் உணர்கின்றனர். தேர்தலை நோக்கமாக கொண்டு செயல்படும் அரசு அல்ல இது. மக்கள் தேவைகளை நோக்கமாகக் கொண்டு திட்டம் வகுக்கும் அரசு அம்மாவின் அரசு.

அந்த வகையில் தான், மாநிலங்களுக்கு இடையேயான நதிநீர் பங்கீட்டில். தமிழ்நாட்டின் உரிமையை நிலைநாட்ட சட்டப்பூர்வ நடவடிக்கைகளை இந்த அரசு எடுத்து வருகிறது. உச்ச நீதிமன்றத் தீர்ப்பின் அடிப்படையில் காவேரி மேலாண்மை வாரியத்தையும், காவேரி நதிநீர் முறைப்படுத்தும் குழுவையும் மத்திய அரசு ஆறு வார காலத்திற்குள் அமைக்க வேண்டுமென இந்த அரசு வலியுறுத்தி வருகிறது. மத்திய அரசும் உச்ச நீதிமன்றத் தீர்ப்பை முழுமையாக செயல்படுத்தும் என நம்புகிறோம்.

அடுத்தப்படியாக, முல்லைப் பெரியார் அணையின் நீர்மட்டத்தை உயர்த்த வேண்டும் என்ற தமிழ்நாடு மக்களின் நீண்ட நாள் கோரிக்கைக்கு, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் தலைமையிலான அரசு எடுத்த திடமான, உறுதியான, ஆக்கப்பூர்வமான சட்ட நடவடிக்கைகள் மற்றும் உச்சநீதிமன்றம் அளித்த தீர்ப்புகளினால் முல்லைப் பெரியாறு அணையின் நீர்மட்டம் முதற்கட்டமாக 136 அடியிலிருந்து 142 அடிக்கு உயர்த்தப்பட்டது. இது 37 ஆண்டுகளுக்குப் பின் தமிழ்நாட்டிற்கு, குறிப்பாக, தமிழ்நாடு விவசாய பெருங்குடி மக்களுக்கு கிடைத்த வரலாற்று சிறப்பு மிக்க வெற்றியாகும்.

முல்லைப் பெரியாறு அணையின் முழு நீர்மட்ட அளவான (Full Reservoir Level) 152 அடிக்கு உயர்த்துவதற்கு தொடர் நடவடிக்கைகள் மாண்புமிகு அம்மாவின் அரசால் எடுக்கப்பட்டு வருகின்றன.

‘என்னைப் பொறுத்த வரையில், எப்படியாவது ஆட்சியைப் பிடிக்க வேண்டும் என்பது என் விருப்பம் அல்ல. மக்களுக்கு நன்மைகள் செய்ய வேண்டும் என்பதுதான், என்னுடைய குறிக்கோள். இந்தக் குறிக்கோளை அடைய வேண்டுமென்றால் அதற்கு ஆட்சி அதிகாரம் முக்கியம்.

அதற்காகத்தான், இந்த முதலமைச்சர் பதவியை நான் வகித்துக் கொண்டிருக்கிறேன்' என்று மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள் பேசியதுதான் எனக்கு இப்போது நினைவுக்கு வருகின்றது.

'வாழ்ந்தவர் கோடி மறைந்தவர் கோடி மக்களின் மனதில் நிற்பவர் யார்?' என்று புரட்சித்தலைவர் பாடியிருப்பார். மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் அவர்களும், மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களும், ஏழை, எளிய, மக்களுக்காக பல உன்னத திட்டங்களை செயல்படுத்தியதால் இன்னும் பல நூறாண்டு காலங்கள் மக்கள் மனதில் நிற்பார்கள். அவர்களுடைய திட்டங்கள் அவர்களை மக்களுக்கு நினைவுப்படுத்திக் கொண்டே இருக்கும். மாண்புமிகு அம்மாவின் நினைவாக,

- ❖ அவர்கள் நல்லடக்கம் செய்யப்பட்ட இடத்தில் அம்மா நினைவு மண்டபம் கட்ட ஆணையிடப்பட்டுள்ளது என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன்.
- ❖ அதேபோல, மாண்புமிகு அம்மா அவர்களின் புகழ் என்றென்றைக்கும் நிலைத்து நிற்க அவர்கள் வாழ்ந்த வேதா நிலையம் அரசு நினைவிடமாக மாற்ற ஆணையிடப்பட்டுள்ளது.

அதற்கு மேலாக, மக்களால் நான், மக்களுக்காகவே நான், என்று தன் வாழ்நாள் முழுவதும் தமிழ்நாட்டு மக்களுக்காகவே, உழைத்து மறைந்த மாண்புமிகு புரட்சித்தலைவி தங்கத்தாரகை அம்மாவின் திருவுருவப் படம் தமிழ்நாடு சட்டப்பேரவையில் திறந்து வைக்கப்பட்டது என்பதை குறிப்பிட விரும்புகிறேன். அந்த பேரவைக்கே அம்மாவால் புகழ் கிடைத்து இருக்கிறது என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன். அம்மாவின் வழியில் வந்த நாங்கள், இந்த ஓராண்டில் செயல்படுத்திய திட்டங்களை மக்கள் போற்றுவார்கள் என்று நம்புகின்றோம்.

மாண்புமிகு அம்மா அறிவித்த அத்தனை திட்டங்களையும் கடந்த ஓராண்டில் அம்மாவின் பிள்ளைகளாகிய நாங்கள் செயல்படுத்தி மக்களின் துணையோடு வெற்றிகரமாக இரண்டாம் ஆண்டில் இன்றைக்கு அடியெடுத்து வைத்துள்ளோம்.

**15.03.2018** அன்று மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் வழியில் செயல்படும் இந்த அரசு ஒரு சிறந்த தொலைநோக்குப் பார்வையுடன் கூடிய நிதிநிலை அறிக்கையையும் தொடர்ந்து செயல்படுத்த இருக்கின்ற திட்டங்களையும் சட்டசபையில் அறிவித்து, புதிய வரிகளை மக்கள் தலைமீது சுமத்தாத சிறந்த பட்ஜெட்டாக இது அமைந்தது. எனவே மக்கள் இதனைப் பாராட்டுகிறார்கள். இதை சகித்துக்கொள்ள முடியாத எதிர்கட்சிகள், மக்களின் நலனை சிந்திக்காமல், திட்டங்களின் தன்மையை ஆராயாமல், அரசியலை மட்டுமே மனதில் கொண்டு பட்ஜெட் சரியில்லை என்று விமர்சனம் செய்கிறார்கள். விமர்சனம் செய்வது அவர்கள் வேலை.. மக்கள் பணியாற்றுவது அம்மா அவர்களின் அரசின் கடமை. நாங்கள் எங்கள் கடமையிலிருந்து ஒரு போதும் தவறுவதில்லை.

மக்கள் எங்கள் பொற்கால ஆட்சியின் வெற்றிப் போக்கை உன்னிப்பாக கவனித்துக் கொண்டுதான் இருக்கிறார்கள்.எது ஒப்பனை இல்லாத உண்மை முகம்.எது அரிதாரம் பூசி நடிக்கிற போலி முகம் என்பது மக்களுக்குத் தெரியும். இந்த ஆட்சியைக் குறை சொல்வதன் மூலம் தங்களை விளம்பரப்படுத்திக் கொள்கிறார்கள். எங்களை வைத்து விளம்பரம் தேடிக் கொள்ள நினைப்பவர்களை அதே விளம்பரம் அழித்துவிடும். ஆதாயம் தேடி அரசியலுக்கு வர நினைப்பவர்கள்.. முள்செடிகளைப் போன்று முளைத்த பிறகு கருகி காணாமல் போவார்கள். ஒரு சிறிய அரசியல் சூறாவளிக்குக்கூட தாக்குப் பிடிக்க முடியாத பல கட்சிகள் விரைவில் காணாமல் போகும் என்பதை இந்த நேரத்தில் சுட்டிக்காட்டி, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் என்கின்ற இந்த பேரியக்கத்தை வழிநடத்தி வழிவழியாக எங்களிடம் வலிமையான தொண்டர்கள் உருவாகிக் கொண்டே இருப்பார்கள். இன்னும் நூறாண்டு காலம் ஆனாலும் யாராலும் அசைக்கமுடியாத சக்தியாக அ.இ.அ.தி.மு.க. விளங்கும்.

ஏதோ ஒரு மாயையில் திசைமாறிப்போன மாண்புமிகு அம்மா அவர்களின் குழந்தைகள் தங்கள் தாய்வீட்டை நோக்கி நிச்சயம் வருவார்கள். வந்து மாண்புமிகு அம்மா அவர்கள் கண்ட கனவை நனவாக்குவார்கள்.

மாண்புமிகு அம்மா அவர்களின் ஆட்சிப்படி பொற்கால ஆட்சியாக திகழ்த்துவதே அந்த ஆட்சியின் தொடர்ச்சிதான் அம்மாவின் ஆட்சி என்பதால் இதுவும் வரலாற்றில் சிறப்பான இடத்தைப் பெறும் என்று நான் உறுதியாக கூறுகின்றேன். அந்த பொற்காலத்தையே தொடர்வதற்கும் இந்த இனிய வேளையில் நாம் அனைவரும் உறுதிமொழி எடுத்துக் கொள்வோம்.

"தாய் வழி வந்த தங்கங்கள் எல்லாம் ஓர் வழி நின்று நேர் வழி சென்றால் நாளை நமதே! என்றும் நாளை நமதே!" என்ற புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் அவர்களின் பாடல் வரிகளுக்கு ஏற்ப, கழக கண்மணிகள் ஒற்றுமையாக இருக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இதை கூறுகின்ற போது எனக்கு ஒரு கதை நினைவுக்கு வருகிறது.

காடு ஒன்றில் விலங்குகள் ஒற்றுமையாக வாழ்ந்து வந்தன. ஆனால், ஒரு நரிக்கு மட்டும் மற்ற விலங்குகள் ஒற்றுமையாக வாழ்வது பிடிக்கவில்லை. விலங்குகள் அனைத்தையும் காட்டை விட்டு தந்திரமாக விரட்டிவிட்டு தான் மட்டும் சுதந்திரமாக வாழ நினைத்தது. நரியின் கெட்ட எண்ணத்திற்கு ஒரு ஓநாயும் ஆதரவு தெரிவித்தது.

ஒருநாள் நரியும், ஓநாயும் காட்டின் வழியே சென்று கொண்டிருந்தபோது எதிரில் ஒரு கரடி வந்தது. அது நரியைப் பார்த்து "நரியே! நகரத்திற்கு சென்று வந்தாயே என்ன புதிய செய்தி கொண்டு வந்தாய்?" என்று கேட்டது.

கரடிக்கு ஓட்டை வாய். எதைச் சொன்னாலும் ஊரெல்லாம் தாம்பூலம் வைக்கும் குணம் உண்டு. எனவே தனது திட்டத்திற்கு கரடியை பயன்படுத்திக் கொள்ள நரி நினைத்தது.

"கரடியாரே, நாங்கள் இந்த காட்டை விட்டு ஓடப் போகிறோம். ஏனென்றால், காட்டுக்குள் சுனாமியும், சூறாவளியும் வரப்போகிறது. காடு அழியப் போகிறது. எனவே நானும், ஓநாயும் காட்டை விட்டு ஓடிக் கொண்டிருக்கிறோம்" என்றது.

உடனடியாக கரடி இந்த செய்தியை அனைத்து விலங்குகளிடம் தெரிவித்தது. இதனால் அனைத்து விலங்குகளும் பீதியுடன் காட்டை விட்டு வெளியேறத் தொடங்கின. இதனை மலையின் உச்சியிலிருந்து நரியும் ஓநாயும் பார்த்து ரசித்துக் கொண்டிருந்தன.

இதனிடையே ஓநாய் ஒரு சதித் திட்டம் தீட்டியது. நரியை ஒழித்து விட்டு, தானே ராஜாவாக வாழ நினைத்தது. அப்பொழுது அவ்வழியே வேடன் ஒருவன் வந்தான். வேடனைக் கண்டவுடன் ஓநாய் அருகில் இருந்த புதரில் மறைந்தது. வேடன் வலையை விரித்து அங்கிருந்த நரியை பிடித்துக் கொண்டான். நரியிட்ட கூச்சலைக் கண்டுக் கொள்ளாமல் ஓநாய் அந்த இடத்தை விட்டு தப்பித்தது.

அனைத்து விலங்குகளும் கூட்டமாக ஒற்றுமையுடன் வாழ்ந்திருந்தால் ஆபத்தான நேரத்தில் கண்டிப்பாக யாராவது உதவியிருப்பார்கள் எனக் கூடி வாழ்தலின் பெருமையை நரி அப்போது உணர்ந்தது. எனவே, நாம் நயவஞ்சகர்களின் சூழ்ச்சிகளுக்கு பலியாகாமல் அனைவரும் ஒற்றுமையுடன் இருந்து பாடுபட்டால், மாண்புமிகு அம்மா அவர்களின் அரசே இன்னும் நூறாண்டுகள் தொடர்ந்து மாண்புமிகு அம்மா அவர்களின் 'அமைதி, வளம், வளர்ச்சி' என்னும் கோட்பாட்டின்படி தமிழ்நாட்டை சீரிய பாதையில் முன் எடுத்துச் செல்வோம் என்பதை இங்கே உறுதியாகக் கூறிக் கொள்கிறேன்.

இந்த ஓராண்டு காலத்திலே எவ்வளவோ சோதனைகளை நாம் சந்தித்தோம். மாண்புமிகு சட்டப்பேரவை தலைவர் அவர்கள் கூறுகின்ற பொழுது, எந்த ஒரு ஆட்சிக்கும் ஏற்படாத சோதனைகளை இந்த ஓராண்டிலே நாம் சந்தித்தோம். அந்த சோதனைகளை எல்லாம் வெற்றி படிக்கட்டுகளாக மாற்றி ஓராண்டு நிறைவு பெற்று இரண்டாவது ஆண்டிலே அடியெடுத்து வைத்திருக்கின்றோம். இந்த சாதனைக்கு துணையாய் நின்ற மாண்புமிகு துணை முதலமைச்சர் அண்ணன் திரு.ஓ. பன்னீர்செல்வம் அவர்களுக்கும், இந்த ஆட்சிக்கு துணையாய் நின்ற மாண்புமிகு அமைச்சர் பெருமக்களுக்கும் அதற்கு மேலாக என்றென்றும் உங்களோடு இருந்து மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மாவினுடைய ஆட்சியை இன்னும் மாண்புமிகு அம்மா எண்ணியதைப்போல பல நூறாண்டு காலம் தமிழகத்திலே நிலைத்து நிற்க வேண்டும் என்று சட்டப்பேரவை உறுப்பினர்கள் அனைவரும் என்னோடு பக்கபலமாக இருந்த அத்தனை சட்டப்பேரவை உறுப்பினர்களுக்கும், அதோடு, நம்முடைய தமிழ்நாட்டின் உரிமையை நிலைநாட்டுவதற்காக நாடாளுமன்றத்திலே குரல் கொடுத்துக் கொண்டிருக்கின்ற நம்முடைய நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும், அத்தனைக்கும் மேலாக, கட்சி பலமாக இருந்தால்தான், ஆட்சி சிறப்பாக நடக்கும். அதற்கு வளமாக இருப்பதற்கு உறுதுணையாக விளங்கிய ஆற்றல்மிக்க தலைமைக்கழக நிருவாகிகளுக்கும், கழகத்தினுடைய முன்னோடி நிருவாகிகளுக்கும், கழக நிருவாகிகளுக்கும், தொண்டர்களுக்கும், அதே நேரத்தில் ஒட்டுமொத்தமாக மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மாவினுடைய ஆட்சி என்றென்றைக்கும் தமிழகத்திலே நிலைத்து நிற்க வேண்டும் என்று எண்ணுகின்ற பொதுமக்களுக்கும், இந்த நேரத்தில் என்னுடைய நன்றி கலந்த வணக்கத்தை தெரிவித்துக் கொள்கிறேன். அதேபோல, இந்த ஆட்சி சிறப்பாக நடைபெற உறுதுணையாக இருந்த தலைமைச் செயலாளர் அவர்களுக்கும், அவர்களுக்கு உறுதுணையாக இருந்த அனைத்து துறை செயலாளர்களுக்கும், அனைத்து அரசு உயர் அதிகாரிகளுக்கும், அனைத்து அரசு அலுவலர்களுக்கும் இந்த நேரத்தில் என்னுடைய நன்றி கலந்த வணக்கத்தை உரித்தாக்குகின்றேன்.

எவ்வளவு சட்டங்களை போட்டாலும், திட்டங்களை போட்டாலும், நடைமுறைப்படுத்துவது அரசு அதிகாரிகள்தான். அந்த அரசு அதிகாரிகளும் மிகச் சிறப்பான முறையிலே அரசு போட்ட திட்டங்களை நடைமுறைப்படுத்தி காட்டினார்கள். இந்த அத்தனை திட்டங்களும் நிறைவேற்றப்பட்டால், அது மக்கள் தெரிந்து கொள்ளக்கூடிய அளவிற்கு, மக்களை சென்றடையக் கூடிய சூழ்நிலையை உருவாக்கி தந்த ஊடக நண்பர்களுக்கும், பத்திரிகை நண்பர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றியை இந்த நேரத்திலே தெரிவித்துக் கொண்டு,

நேற்றும் நமதே!
இன்றும் நமதே!
நாளையும் நமதே!
வாழ்க அண்ணா நாமம்!
வளர்க புரட்சித் தலைவர் புகழ்!
தொடர்க அம்மாவின் ஆட்சி!
நன்றி! வணக்கம்! ❖



# நிதிநிலை அறிக்கை 2018 - 2019

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே!

**ஈதல் இசைபட வாழ்தல் அதுவல்லது**
**ஊதியம் இல்லை உயிர்க்கு (குறள் 231)**

கொடைத் தன்மையால் அழியாப் புகழ் பெற்று வாழ்வதைப் போல, மனித வாழ்க்கைக்கு உயர்வு தருவது வேறொன்றும் இல்லை என்ற பொய்யாமொழிப் புலவர் திருவள்ளுவரின் திருவாக்கிற்கிணங்க, தமிழ்நாட்டின் வரலாற்றில், ஈடு இணையற்ற தலைவராக விளங்கிய மறைந்த முன்னாள் முதலமைச்சர் புரட்சித்தலைவி ஜெ ஜெயலலிதா அவர்கள், தமிழ்நாட்டு மக்களின் வாழ்க்கையை வளமாக்க எடுத்த உறுதியான நடவடிக்கைகளால், புகழின் உச்சத்தை அடைந்தார்கள். அவர்களின் கடுமையான உழைப்பாலும், சிந்திய வியர்வையாலும்தான் 2016ஆம் ஆண்டில் மக்கள் அளித்த வரலாற்றுச் சிறப்பு மிக்க வெற்றியைப் பெற்று இந்த அரசு உருவாக்கப்பட்டுள்ளது. புரட்சித்தலைவி அம்மா அவர்கள்

மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர்
திரு. **ஓ. பன்னீர்செல்வம்** அவர்கள்,
2018–2019 ஆம் ஆண்டிற்கான
வரவு–செலவுத் திட்டத்தை,
2018 ஆம் ஆண்டு மார்ச் திங்கள்
15 ஆம் நாள் சட்டமன்றப் பேரவையின்
முன் வைத்து ஆற்றிய உரை.

வங்கக் கடலோரம் மீளாத்துயில் கொண்டு பேரமைதியில் உறைந்திருந்தாலும், அவர்கள் வகுத்துத் தந்த பாதையில் பயணித்து நமது மாநிலத்தை நாட்டிலேயே முதன்மை

மாநிலமாக உயர்த்த வேண்டும் என்ற அவர்களது கனவை நனவாக்க, மாண்புமிகு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே. பழனிசாமி அவர்களின் திறன்மிக்க தலைமையின் கீழ் நடைபெறும் இந்த அரசுக்கு, அம்மா அவர்களின் ஆன்மா வழிகாட்டியாக உள்ளது. புரட்சித்தலைவி அம்மா அவர்களின் உன்னதமான ஆன்மாவின் முன் தலைவணங்கி, 2018–2019ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையை இந்தப் பேரவையின் முன் சமர்ப்பிக்க விழைகிறேன்.

மக்களின் உள்ளங்களில் நீங்கா இடம் பெற்று, அவர்களின் பேரன்பைப் பெற்ற மாபெரும் தலைவியாக விளங்கிய புரட்சித்தலைவி அம்மா அவர்கள் தொடங்கி வைத்த அனைத்து திட்டங்களையும் தொடர்ந்து செயல்படுத்துவதில் இந்த அரசு உறுதியாக உள்ளது. தொலைநோக்குப் பார்வையும், மதிநுட்பமும் வாய்ந்த புரட்சித்தலைவி அம்மா அவர்களின் 'அமைதி, வளம், வளர்ச்சி' என்ற கொள்கை முழக்கம், இந்த மாநிலத்தை முன்னேற்றப் பாதையில் கொண்டு செல்வதற்கான அடிப்படை கொள்கையாக தொடர்ந்து விளங்கும். பொது சுகாதாரம், கல்வி, சமூகப் பாதுகாப்பு போன்ற துறைகளில் செயல்படுத்தப்பட்டு வரும் பல்வேறு திட்டங்கள், நமது மாநிலத்தின் மனிதவள மேம்பாட்டுக் குறியீடுகளை உயர்த்தி, நாட்டிலேயே சமூகநலத்தைப் பேணிப் போற்றும் முன்மாதிரி மாநிலமாகத் தமிழ்நாட்டை உருவாக்கியுள்ளது என்பதை யாராலும் மறுக்க முடியாது. கடல் அலை உயரும்போது அனைத்துப் படகுகளும் ஒருசேர உயர்வது போல், மாநிலத்தின் துரிதமான பொருளாதார வளர்ச்சி, அனைத்துக் குடும்பங்களின் பொருளாதார நிலையையும் ஒருசேர உயர்த்தும் என்பதில் ஐயமில்லை. எனினும், சமுதாயத்தில் அனைத்து மக்களின் வாழ்வையும் மேம்படுத்தி, ஏற்றத்தாழ்வுகளைக் களைந்து, பொருளாதாரச் சம நிலையைக் கொண்டு வருவதற்காக, பல்வேறு நலத்திட்டங்களை, குறிப்பாக ஏழை எளிய மக்களின் மேம்பாட்டிற்கான திட்டங்களை இந்த அரசு தொடர்ந்து செயல்படுத்தும். எனவே, பொருளாதார மேம்பாட்டிற்கு பெரும் ஊக்கம் தரும் அதே வேளையில், நலத்திட்டப் பணிகளும் இந்த அரசின் வளர்ச்சிக் கொள்கையில் தொடர்ந்து முக்கியத்துவத்தைப் பெறும்.

பல சவாலான சூழ்நிலைகளுக்கிடையே, இந்த வரவு–செலவுத் திட்ட அறிக்கை சமர்ப்பிக்கப்படுகிறது. பணமதிப்பிழப்பு, பொருட்கள் மற்றும் சேவைகள் வரி விதிப்பு முறை நடைமுறைக்கு வந்த பிறகு ஏற்பட்டுள்ள பெருத்த மாற்றங்களைக் கடந்து, தொடர்ந்து முன்னேற வேண்டிய முக்கியக் கட்டத்தில் நமது பொருளாதாரம் உள்ளது. இந்த முக்கியத் தருணத்தில், மாநிலம் சந்தித்து வரும் பல்வேறு சவால்கள்:

- ★ முதலீடுகளை ஈர்த்து, அதிக வேலைவாய்ப்புகளை உருவாக்குதல்
- ★ இளைஞர்களுக்குத் திறன் பயிற்சி அளித்து, வேலைவாய்ப்பிற்கான தகுதியை அவர்கள் பெறச் செய்தல்
- ★ விவசாய உற்பத்தித் திறனையும், விவசாயிகளின் வருவாயையும் பெருக்குதல்
- ★ நகர்ப்புரங்களில் அடிப்படை வசதிகளையும், உட்கட்டமைப்பையும் மேம்படுத்துதல்
- ★ அனைவருக்கும் வீட்டுவசதி என்ற இலக்கை அடைய ஏழைகளுக்கு வீட்டுவசதி வழங்குதல்
- ★ நீர்நிலை உள்ளிட்ட இயற்கை ஆதாரங்களை பாதுகாத்துப் பராமரித்தல்
- ★ நகர்ப்புரங்களிலும், ஊரகப் பகுதிகளிலும் வறுமை ஒழிப்பு
- ★ கல்வி, சுகாதாரம், மருத்துவ வசதிகளின் தரத்தை மேம்படுத்தி, அவற்றை அனைவரும் எளிதாகப் பெற வழிவகை செய்தல்
- ★ பருவநிலை மாற்றத்தால் ஏற்படும் தாக்கத்தைக் குறைப்பதுடன், கடல் அரிப்பிலிருந்து கடலோரப் பகுதிகளைப் பாதுகாத்தல்
- ★ குறைந்து வரும் மத்திய வரிப் பகிர்வு, சொந்த வரி, வரியல்லாத வருவாய் வரவினங்களில் உள்ள தற்போதைய சூழ்நிலையை சமாளித்து, நிதிநிலையை திறம்பட மேலாண்மை செய்தல்

இந்த பத்து முக்கியச் சவால்களையும் எதிர்கொண்டு பொருளாதார வளர்ச்சியை ஊக்குவித்து, தமிழ்நாட்டை வளமான மாநிலமாக மாற்றச் செய்வதற்கான உத்திகளை உள்ளடக்கி இந்த நிதிநிலை அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது.

### பொருளாதார வளர்ச்சி

மாநிலத்தின் பொருளாதாரத்தில் நிலவி வந்த மந்தநிலையில் மாற்றம் ஏற்பட்டு, 2017–2018ஆம் ஆண்டில் பொருளாதார வளர்ச்சி ஓரளவு உயர்ந்துள்ள நிலையில், 2018–2019ஆம் ஆண்டில் இது மேலும் உயரும் எனக் கருதப்படுகிறது. தமிழ்நாட்டின் மாநில மொத்த உற்பத்தியின் வளர்ச்சி விகிதம், நிலையான விலைகளின் அடிப்படையில், 2017–2018ஆம் ஆண்டில்

8.03 சதவீதமாக இருக்கும் என கணிக்கப்பட்டுள்ளது. மாநிலப் பொருளாதாரத்தில் காணப்படும் இத்தகைய சாதகமான சூழ்நிலையில், முதன்மைத் துறையில் இந்த அரசு தொடர்ந்து செய்து வரும் நீடித்த முதலீடுகளாலும், மாநிலத்தில் தொழில் துறை முதலீடுகளை ஊக்குவிப்பதற்கு அரசால் மேற்கொள்ளப்பட்டு வரும் நடவடிக்கைகளாலும், 2018–2019ஆம் ஆண்டில் மாநிலப் பொருளாதார வளர்ச்சி விகிதம் 9 சதவீதமாக உயரும் எனக் கருதப்படுகிறது.

### பொருட்கள் மற்றும் சேவைகள் வரி

பொருட்கள் மற்றும் சேவைகள் வரி (GST) விதிப்பு முறை, 2017ஆம் ஆண்டு ஜூலை மாதம் 1 ஆம் தேதி முதல், நாட்டில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளதை மாண்புமிகு உறுப்பினர்கள் அறிவீர்கள். புதிய வரி விதிப்பு முறையை நடைமுறைப்படுத்தும்போது மாநிலங்களுக்கு ஏற்படக்கூடிய வரி வருவாய் இழப்பினை ஐந்தாண்டுகள் வரை மத்திய அரசு ஈடுசெய்யும். பொருட்கள் மற்றும் சேவைகள் வரியின் கீழ், 2017ஆம் ஆண்டு ஜூலை மாதம் முதல் பிப்ரவரி 2018 வரை 632 கோடி ரூபாயினை இழப்பீடாக தமிழ்நாடு மத்திய அரசிடமிருந்து பெற்றுள்ளது. கடந்த எட்டுமாத காலத்தில், 14 சதவீத வளர்ச்சி விகிதத்துடன் எதிர்பார்க்கப்படும் உறுதி செய்யப்பட்ட வருவாய்க்கும், கிடைக்கப்பெற்ற வருவாய்க்கும் இடையேயான இடைவெளி கணிசமாகக் குறைந்து வருவதால், பொருட்கள் மற்றும் சேவைகள் வரி விதிப்பு முறையினால் நமது மாநிலம் நல்ல பலனைப் பெற்றுள்ளது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

### திட்டம் மற்றும் வளர்ச்சி

தொலைநோக்குப் பார்வையும், மதிநுட்பமும் மிக்க தலைவரான மறைந்த முன்னாள் முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்களால் உருவாக்கப்பட்டு வெளியிடப்பட்ட, ‘தமிழ்நாடு தொலைநோக்குத் திட்டம் 2023’ ஆவணம், மாநில வளர்ச்சி மற்றும் சமூகநலத் திட்டங்களை உருவாக்குவதற்கு இந்த அரசுக்கு வழிகாட்டியாக அமைந்துள்ளது. இந்த ஆவணத்தில் உள்ள திட்டங்களை நிறைவேற்றிடத் தேவையான நிதி ஆதாரங்களின் ஒரு பகுதியை, தமிழ்நாடு உட்கட்டமைப்பு நிதி மேலாண்மைக் கழகத்தின் மூலம் திரட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. தமிழ்நாடு உட்கட்டமைப்பு நிதியத்தின் மொத்த நிதியில், முதலில் ஈடுசெய்யப்படும் ஊக்க மூலதனமாக (First Loss Catalytic Capital) வழங்கப்பட வேண்டிய 300 கோடி ரூபாயில், 30 கோடி ரூபாயை மாநில அரசு ஏற்கெனவே விடுவித்துள்ளது. 2018–2019ஆம் ஆண்டிற்கான வரவு–செலவுத் திட்டத்தில் இந்த ஊக்க மூலதனத்திற்காக மீதமுள்ள 270 கோடி ரூபாயும், தமிழ்நாடு உட்கட்டமைப்பு மேம்பாட்டு வாரியத்தின் திட்டத் தயாரிப்பு நிதிக்காக 100 கோடி ரூபாயும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன.

தமிழ்நாட்டின் பல்வேறு பகுதிகளுக்கு இடையேயான ஏற்றத்தாழ்வுகளைக் களைந்து, சமச்சீரான பொருளாதார மேம்பாட்டினை மாநிலம் முழுவதும் கொண்டு வருவதற்காகத் தொடங்கப்பட்ட ‘மாநில சமச்சீர் வளர்ச்சி நிதியத்திற்கு’, 2018–2019ஆம் ஆண்டிற்கான வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில் 100 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. அதேபோல், மாநிலத்தின் இயற்கை வளங்களை நிலைக்கத்தக்க வகையில் பயன்படுத்தி, மலைப் பகுதிகளில் வாழும் மக்களின் குறிப்பிட்ட தேவைகளை நிறைவு செய்வதற்காகத் தொடங்கப்பட்ட ‘சிறப்புப் பகுதி மேம்பாட்டுத் திட்டத்திற்கு’ 75 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. அரசு நிருவாகத்தில் புதுமை முயற்சிகளை ஊக்கப்படுத்தும் வகையில், 100 கோடி ரூபாய் ஒதுக்கீட்டுடன் தமிழ்நாடு புதுமை முயற்சிகள் திட்டம் (TANII) தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

### பேரிடர் நிவாரணம்

கன்னியாகுமரி மாவட்டத்தைத் தாக்கிய ‘ஒகி’ புயலினால், கடலில் காணாமல் போன மீனவர்களைத் தேடி மீட்கும் நடவடிக்கைகளில் இந்த அரசு துரிதமாகச் செயல்பட்டது. இந்த நடவடிக்கைகளால், 3,506 மீனவர்கள் பாதுகாப்பாக மீட்கப்பட்டுள்ளதுடன், 288 மீன்பிடிப் படகுகளும் மீட்கப்பட்டுள்ளன. இந்த நிலையில், காணாமல் போன 177 மீனவர்களை மீட்க வாய்ப்பில்லை என அறிவித்து, பாதிக்கப்பட்ட ஒவ்வொரு குடும்பத்திற்கும் தலா 20 இலட்சம் ரூபாய் வழங்கப்பட்டுள்ளது. ஒகி புயலால் ஏற்பட்ட பாதிப்புகளைச் சீர் செய்வதற்காகவும், நிவாரணப் பணிகளை மேற்கொள்வதற்காகவும், மொத்தம் 124.11 கோடி ரூபாயை அரசு விடுவித்துள்ளது. இது தவிர, 2017ஆம் ஆண்டு நவம்பர் மாதம் பெய்த தொடர் கடும் மழையால் ஏற்பட்ட பாதிப்புகளைச் சரி செய்து, உட்கட்டமைப்பு வசதிகளை மறுசீரமைக்கவும், நிவாரண உதவிக்காகவும் 51.05 கோடி ரூபாயை அரசு விடுவித்துள்ளது. 2018–2019ஆம் ஆண்டிற்கான வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில், மாநிலப் பேரிடர் நிவாரண நிதியத்திற்காக 786 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

மழை வெள்ளத்தால் அடிக்கடி பாதிப்புக்குள்ளாகும் சென்னை மற்றும் அதன் புறநகர்ப் பகுதிகளுக்கு நிரந்தரத்

தீர்வுகாணும் வகையில், வட சென்னை மற்றும் தென் சென்னைப் பகுதிகளுக்கான விரிவான வெள்ளத் தடுப்பு மேலாண்மைத் திட்டம், முறையே 2,055.67 கோடி ரூபாய் மற்றும் 1,243.15 கோடி ரூபாய் மதிப்பீட்டில் தயாரிக்கப்பட்டு, மத்திய அரசிடம் நிதியுதவி கோரப்பட்டுள்ளது. அதேபோல், மத்திய அரசின் உதவியைப் பெறும் வகையில், ஒருங்கிணைந்த மீன்பிடித் துறைமுகம் மற்றும் மீன் பதப்படுத்தும் பூங்காவினை கன்னியாகுமரி மாவட்டம், தேங்காய்ப்பட்டினத்தில் அமைப்பதற்கு விரிவான திட்ட அறிக்கையினை இந்த அரசு தயாரித்து வருகிறது. இத்திட்டங்களுக்கு மத்திய அரசு ஒப்புதல் அளித்து, நிதியுதவியும் வழங்கும் என நான் நம்புகிறேன்.

**வறுமை ஒழிப்பு**

வறுமை ஒழிப்பிற்கான இயக்கத்தினை ஒருமுகப்படுத்தி செயல்படுத்துவதற்கான முகமையாக, தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனம் செயல்பட்டு வருகிறது. கல்வி, சுகாதாரம் ஆகியவற்றுடன் நிலைக்கத்தக்க வாழ்வாதார வாய்ப்புகளை உருவாக்கி, ஊரக மற்றும் நகர்ப்புரப் பகுதிகளில் வறுமையை அறவே அகற்ற வேண்டும் என்பதுதான் இந்த இயக்கத்தின் குறிக்கோளாகும். 'புதுவாழ்வு திட்டத்தின்' மூலம், கிராம அளவில் மகளிர் சுய உதவிக் குழுக்கள் அமைக்கப்பட்டு, அவர்களுக்குத் திறன் பயிற்சியும், வங்கிகள் மூலம் கடனுதவியும் வழங்கப்பட்டுள்ளன. இந்தத் திட்டத்தினால் கிடைக்கப் பெற்ற அனுபவத்தின் அடிப்படையில் அதன் பயன்களை நிலைப்படுத்தும் வகையில், 920.63 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான தமிழ்நாடு கிராமப்புற புத்தாக்கத் திட்டத்தினை உலக வங்கி நிதியுதவியுடன், 26 மாவட்டங்களில் உள்ள 120 வட்டாரங்களில் இந்த அரசு செயல்படுத்த உள்ளது. கிராமங்களில் மகளிர் சுய உதவிக் குழுக்கள் மூலமாக குறுந்தொழில்களைத் தொடங்குவதற்கும், அவற்றை வட்டார / மாவட்ட அளவில் சீரிய முறையில் ஒருங்கிணைத்து, உற்பத்தியாளர் கூட்டமைப்பு நிறுவனங்களாக உருவாக்குவதற்கும் இத்திட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுக்கப்படும். இதன் மூலம் பொருளாதார அளவின் பலன்களை (Economies of Scale) சிறிய முதலீட்டில் தொடங்கப்படும் கிராமப்புறத் தொழில் நிறுவனங்களும் பெற இயலும். 2018–2019ஆம் ஆண்டிற்கான வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில், இத்திட்டத்திற்காக 100 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இது தவிர மாநிலத்தில் உள்ள 265 வட்டாரங்களில் 'தேசிய ஊரக வாழ்வாதார இயக்கமும்', 'தமிழ்நாடு ஊரக வாழ்வாதார இயக்கமும்' செயல்படுத்தப்பட்டு வருவதால், மாநிலம் முழுவதும் உள்ள அனைத்து வட்டாரங்களிலும் வறுமை ஒழிப்புத் திட்டங்கள் செயல்படுத்த வழிவகை ஏற்பட்டுள்ளது. 2018–2019ஆம் ஆண்டிற்கான வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில், அனைத்து ஊரக வறுமை ஒழிப்புத் திட்டங்களுக்கும் மொத்தமாக 519.81 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

மத்திய அரசின் தேசிய நகர்ப்புர வாழ்வாதார இயக்கத்தின் கீழ் கிடைக்கப் பெறும் நிதியுதவியுடன், மாநில நிதியில் தொடங்கப்பட்ட தமிழ்நாடு நகர்ப்புர வாழ்வாதார இயக்கத்தையும் இந்த அரசு செயல்படுத்தி வருகிறது. 2017–2018ஆம் ஆண்டில், மத்திய அரசிடமிருந்து இதுவரை தேசிய நகர்ப்புர வாழ்வாதார இயக்கத்திற்கு 59.40 கோடி ரூபாய் கிடைக்கப் பெற்றுள்ளது. 2018–2019ஆம் ஆண்டிற்கான வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில், நகர்ப்புர வறுமை ஒழிப்புத் திட்டங்களுக்காக மொத்தமாக 300 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**வேலைவாய்ப்பு மற்றும் திறன் மேம்பாடு**

மாநிலத்தில் உள்ள அனைத்து வேலைவாய்ப்பு அலுவலகங்களும் ஏற்கெனவே ஒருங்கிணைக்கப்பட்டு, நவீனமயமாக்கப்பட்டுள்ளதுடன், அவை வேலை வாய்ப்பை பெற உதவி புரியும் மையங்களாக மாற்றப்பட்டுள்ளன. வேலைவாய்ப்பற்ற இளைஞர்களுக்கு வழங்கப்படும் மாதாந்திர உதவித்தொகை 2017–2018ஆம் ஆண்டில் இரட்டிப்பாக்கப்பட்டது. இந்த வரவு–செலவுத் திட்டத்தில் 31.01கோடி ரூபாய் இதற்காக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மாவட்ட அளவிலான வேலைவாய்ப்பு மையங்களை ஒருங்கிணைத்து, தொழில் நிறுவனங்கள் மற்றும் தனியார் வேலைவாய்ப்பு நிறுவனங்களுடன் வேலை தேடுபவர்களை இணையம் வழியாக இணைக்கும் வகையில், மாநில அளவிலான ஒரு தொழில் நெறி வழிகாட்டும் மையம் ஏற்படுத்தப்படும். வேலைவாய்ப்பு மையங்களில் பதிவு செய்து, மாதாந்திர உதவித்தொகை பெற்று வரும் வேலையில்லா இளைஞர்களை மாவட்ட வாரியாகத் திரட்டி, வேலைவாய்ப்பு மையங்களின் மூலமாக ஆலோசனைகளை வழங்கி, திறன் மேம்பாட்டு இயக்கத்தின் கீழ் அவர்களுக்கு உரிய பயிற்சியும் அளித்து, அவர்கள் வேலைவாய்ப்பைப் பெற இந்த அரசு உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளும்.

மாநிலத்தில் 88 அரசு தொழிற்பயிற்சி நிறுவனங்கள், 484 தனியார் தொழிற்பயிற்சி நிறுவனங்கள் மற்றும் 385 தொழிற்பயிற்சிப் பள்ளிகள் மூலம் தொழிற்பயிற்சி வழங்கப்பட்டு வருகிறது. அரசு நடத்தி வரும் 88 தொழிற்பயிற்சி நிறுவனங்களில் 26 தொழிற்பயிற்சி நிறுவனங்களைத் தவிர ஏனைய தொழிற்பயிற்சி நிறுவனங்கள் தேசிய பயிற்சிக் குழு முறையின் (National Council for Vocational Training) கீழ் கொண்டு வரப்பட்டுள்ளன. இந்த 26 தொழிற்பயிற்சி

“2018–2019ஆம் ஆண்டில், பல்வேறு திட்டங்களின் நிதிகளும் ஒருங்கிணைக்கப்பட்டு கூடுதலாக இரண்டு இலட்சம் இளைஞர்களுக்குத் திறன் மேம்பாட்டுப் பயிற்சிகள் வழங்கப்படும். அயல்நாட்டு வேலைவாய்ப்பு நிறுவனம் (Overseas Manpower Corporation), தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகத்தின் மூலம் வெளிநாடுகளில் வேலைவாய்ப்பினைத் தேடும் இளைஞர்களுக்கு உரிய தொழில்நுட்பத் திறனுடன் மென்திறன் பயிற்சிகளையும் வழங்கி, வெளிநாட்டு வேலைவாய்ப்புகளையும் உருவாக்கும்.”

நிறுவனங்களையும் 126 கோடி ரூபாய் செலவில் தரம் உயர்த்தி, வரும் இரண்டு ஆண்டுகளில் தேசிய பயிற்சிக் குழு முறையின் கீழ் கொண்டு வரப்படும். அரசு தொழிற்பயிற்சி நிறுவனங்களின் கட்டமைப்பில் உள்ள குறைபாடுகளை 30 கோடி ரூபாய் செலவில் நீக்கி, மத்திய அரசின் நிதியுதவி பெற வழிவகை செய்யப்படும். தொழிற்பயிற்சி நிறுவனங்களில் படிக்கும் மாணவர்களின் வேலைவாய்ப்பினை அதிகரிக்கும் வகையில், 20 தொழிற் பயிற்சி நிறுவனங்களில் 38 கோடி ரூபாய் செலவில் மருத்துவ மின்னணுவியல், இயந்திரவியல், கருவியியல் மற்றும் அச்சு உருவாக்கம், மின் மின்னணுவியல் மற்றும் கட்டட வடிவமைப்பு ஆகிய புதிய தொழிற்பிரிவுகளை இந்த அரசு தொடங்கும். தொழிற்பயிற்சி நிறுவனங்களில் பயிலும் 10,000 மாணவர்களுக்கு தொழில் அனுபவம் வழங்கவும், அவர்கள் வேலைவாய்ப்புப் பெறுவதற்குத் தேவையான திறன்களைப் பெறவும், தொழிற்சாலைகளில் நேரடியாக பயிற்சி பெற இந்த அரசு உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளும்.

தமிழ்நாடு திறன் மேம்பாட்டு இயக்கத்தைச் செயல்படுத்தும் முகமையாக தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகத்தை இந்த அரசு உருவாக்கியுள்ளது. இந்த இயக்கத்தின் கீழ், இதுவரை 4.32 இலட்சம் இளைஞர்கள் திறன் வளர் பயிற்சி பெற்றுள்ளனர். இவர்களில் 1.03 இலட்சம் இளைஞர்கள் பணியமர்த்தப்பட்டுள்ளனர். சீமென்ஸ் நிறுவனத்தின் உதவியுடன் உயர்மட்டத் திறன் பயிற்சிகளும் அளிக்கப்பட்டு வருகின்றன. பிரதம மந்திரியின் திறன் மேம்பாட்டுத் திட்டம் மூலமும் திறன் வளர் பயிற்சியை இந்த அரசு வழங்கி வருகிறது. தமிழ்நாடு திறன் மேம்பாட்டு இயக்கத்திற்கான நிதி ஒதுக்கீடு 150 கோடி ரூபாயிலிருந்து 200 கோடி ரூபாயாக வரும் நிதியாண்டில் உயர்த்தப்படும். 2018–2019ஆம் ஆண்டில், பல்வேறு திட்டங்களின் நிதிகளும் ஒருங்கிணைக்கப்பட்டு கூடுதலாக இரண்டு இலட்சம் இளைஞர்களுக்குத் திறன் மேம்பாட்டுப் பயிற்சிகள் வழங்கப்படும். அயல்நாட்டு வேலைவாய்ப்பு நிறுவனம் (Overseas Manpower Corporation), தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகத்தின் மூலம் வெளிநாடுகளில் வேலைவாய்ப்பினைத் தேடும் இளைஞர்களுக்கு உரிய தொழில்நுட்பத் திறனுடன் மென்திறன் பயிற்சிகளையும் வழங்கி, வெளிநாட்டு வேலைவாய்ப்புகளையும் உருவாக்கும்.

**தமிழ்மொழி வளர்ச்சி மற்றும் பண்பாடு**

ஹார்வர்டு பல்கலைக்கழகத்தில் தமிழ் இருக்கையினை நிறுவிட 10 கோடி ரூபாயை இந்த அரசு வழங்கியுள்ளது. சர்வதேச அளவில் தமிழ்மொழி மற்றும் பண்பாட்டைப் பாதுகாத்துப் பரப்புவதற்காக, தஞ்சாவூர் தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் தமிழ்மொழி விரிவாக்க மையம் ஒன்று உருவாக்கப்படும். இதற்கென ஆண்டு மானியமாக இரண்டு கோடி ரூபாயை அரசு வழங்கும். அதேபோன்று, ஒரு கோடி ரூபாய் ஆண்டு மானியத்தில் தமிழ்ப் பண்பாட்டு மையம் ஒன்றும் உருவாக்கப்படும். நலிந்த கலைஞர்களுக்கான மாதாந்திர நிதியுதவி 1,500 ரூபாயிலிருந்து 2,000 ரூபாயாக உயர்த்தி வழங்கப்படும். 2018–2019ஆம் ஆண்டிற்கான வரவு – செலவுத் திட்ட மதிப்பீடுகளில், தமிழ் வளர்ச்சித் துறைக்காக 52.56 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

நமது மாநிலம் 1969ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 14ஆம் நாளன்று தமிழ்நாடு என்று பெயர் மாற்றம் செய்யப்பட்டு 50ஆவது ஆண்டில் அடியெடுத்து வைப்பதை முன்னிட்டு, இந்த ஆண்டினை ‘தமிழ்நாடு பொன்விழா’ ஆண்டாக அரசு கொண்டாடி வருகிறது. ஆளுநர் உரையில் ஏற்கெனவே அறிவித்தபடி, மறைந்த முன்னாள் முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நினைவைப் போற்றும் விதமாக மெரினா கடற்கரையில்

நினைவு மண்டபம் 50.80 கோடி ரூபாய் செலவில் அமைக்கப்படும். இத்துடன், மறைந்த முன்னாள் முதலமைச்சரின் 'வேதா நிலையம்' இல்லத்தை நினைவிடமாக மாற்றுவதற்காக 20 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்துள்ளது. புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களின் நூற்றாண்டு விழா கொண்டாட்டங்கள் 30 மாவட்டங்களில் சிறப்பாக நடத்தப்பட்டன. இந்த நூற்றாண்டு விழாக்களின் நிறைவாக, சென்னையில் மாபெரும் நிகழ்ச்சி நடத்தப்படும்.

### சட்டம் ஒழுங்கு

மாநிலத்தில் அமைதியை நிலைநாட்டும் விதமாக, சட்டம் ஒழுங்கை இந்த அரசு தொடர்ந்து சிறப்பாகப் பராமரித்து வருகிறது. 2011ஆம் ஆண்டு முதல், 671 கோடி ரூபாய் செலவில் காவல் நிலையங்களுக்கான கட்டடங்கள் உட்பட புதிய கட்டடங்களும், 1,659 கோடி ரூபாய் செலவில் குடியிருப்புகள் கட்டும் பணிகளும் மேற்கொள்ளப்பட்டு உள்ளன. 2018–2019ஆம் ஆண்டில் காவல் துறையின் பல்வேறு பயன்பாடுகளுக்காக 35 கட்டடங்களுடன் 15 காவல் நிலையக் கட்டடங்களும், 543 குடியிருப்புகளும் 217.41 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்படும்.

சட்டம்ஒழுங்கைசீரியமுறையில்பராமரிப்பதற்காகவும், குற்றங்களைத் தடுப்பதற்காகவும், காவல் துறைக்கு போதுமான பணியாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளதுடன், அவர்களுக்குத் தேவையான வாகனங்கள் மற்றும் நவீன உபகரணங்களும் வழங்கப்பட்டுள்ளன. 'காவல் துறை நவீனமயமாக்கல்' திட்டத்தின் கீழ், கூடுதல் வாகனங்களையும், கண்காணிப்பு மற்றும் தகவல் தொடர்புக்கான நவீன கருவிகளையும் 2017–2018ஆம் ஆண்டில் 98.18 கோடி ரூபாய் செலவில் இந்த அரசு வழங்கியுள்ளது. முதலமைச்சரின் காவலர் விருதுகளின் எண்ணிக்கை, 2018–2019 ஆண்டு முதல் 1,500இல் இருந்து 3,000 ஆக உயர்த்தப்படும். இணைய வழி குற்றங்களைத் திறம்படக் கண்டறிய, அனைத்து மாவட்டங்களிலும் ஆணையரகங்களிலும் தலா ஒரு இணையவழி குற்றத்தடுப்பு காவல் நிலையம் 23.28 கோடி ரூபாய் செலவில் ஏற்படுத்தப்படும். இந்த வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில், காவல் துறைக்கு 7,877.58 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள்

நவீனக் கருவிகளை தொடர்ந்து வழங்கி, தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறையை இந்த அரசு நவீனப்படுத்தி வருகிறது. வரும் நிதியாண்டில் 28.23 கோடி ரூபாய் மதிப்பீட்டில், 20 இடங்களில் தீயணைப்பு நிலையக் கட்டடங்கள் கட்டப்படும். இது தவிர, மணலியில் 18.51 கோடி ரூபாய் மதிப்பீட்டில் தீயணைப்புப் படை குடியிருப்புகள் அமைக்கப்படும். 2018–2019ஆம் ஆண்டிற்கான வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில், தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறைக்கு 347.59 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### சிறைச்சாலைகள்

குற்றவாளிகள் தங்களைத் திருத்திக் கொள்வதற்கான சூழ்நிலையை அமைத்துத் தரும் இடமாக சிறைச்சாலைகள் அமைந்து, அவர்கள் விடுதலை பெற்றபின் சமுதாயத்துடன் ஒன்றிணைந்திட வேண்டும் என்ற நோக்கத்தில் தேவையான திறன் பயிற்சிகளும் வழங்கப்படுகிறது. 2018–2019ஆம் ஆண்டிற்கான வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில் சிறைத் துறைக்கு 306.80 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### நீதி நிருவாகம்

நீதித் துறையின் செயல்பாட்டினை மேம்படுத்துவதற்காக, புதிய நீதிமன்றங்களை அமைக்கவும், பல்வேறு புதிய கட்டடங்களைக் கட்டுவதற்காகவும், கூடுதல் பணியாளர்களை நியமனம் செய்வதற்காகவும், 2011ஆம் ஆண்டு முதல் 1,382.76 கோடி ரூபாயை இந்த அரசு அனுமதித்துள்ளது. மேலும், நீதிமன்றங்களின் செயல்திறனை உயர்த்துவதற்காக, நீதிமன்ற ஆவணங்களை கணினிமயமாக்கும் திட்டம் 37 கோடி ரூபாய் செலவில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. நீதி நிருவாகத் துறைக்கு 1,197.95 கோடி ரூபாயும், நீதிமன்றக் கட்டடங்களின் கட்டுமானப் பணிகளுக்காக 182.44 கோடி ரூபாயும் இந்த வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன.

### நிருவாக ஆளுமை

மாநிலம் முழுவதும் இயங்கி வரும் 10,420 இ–சேவை மையங்கள் 207 சேவைகளை வழங்கி வருகின்றன. 2017–2018ஆம் ஆண்டில், இதுவரை 1.69 கோடி பரிவர்த்தனைகள் மேற்கொள்ளப்பட்டு, அனைத்து பொதுச் சேவைகளையும் மக்களுக்கு ஒரே இடத்தில் வழங்கும் மையங்களாக இவை உருவெடுத்துள்ளன. அடுத்த மூன்று ஆண்டுகளில் 900–க்கும் மேற்பட்ட சேவைகளை இணையதளம் வழியாகவும், அலைபேசி செயலி வழியாகவும் வழங்க அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது. மக்கள் தங்களுக்குத் தொடர்பான தரவுத் தகவல்களைத் தாங்களே திருத்தம் செய்ய ஏதுவாக, ஒருங்கிணைந்த 'தமிழ்நாடு மக்கள் இணையதளம்' (Tamil Nadu Makkal Portal)

விரைவில் தொடங்கப்படும். அரசின் திட்ட உதவிகள் பயனாளிகளுக்கு முறையாகவும், முழுமையாகவும் சென்றடைவதை உறுதி செய்ய வழிவகுக்கும் 'தமிழ்நாடு மாநில ஆதார் சட்ட முன்வடிவினை' இந்த வரவு–செலவுக் கூட்டத் தொடரில் அரசு அறிமுகம் செய்ய உள்ளது. மின்னாளுமைக் கொள்கை ஏற்கெனவே வடிவமைக்கப்பட்டு வெளியிடப்பட்டுள்ளது. அனைத்து அரசுத் துறைகளுக்குமான பொது மின்னாளுமை வடிவமைப்பு (e-Governance Architecture) உருவாக்கப்பட்டு, அது விரைவில் செயல்பாட்டிற்கு கொண்டுவரப்படும்.

### வருவாய் நிருவாகம்

2011ஆம் ஆண்டு மே மாதம் முதல், மாநிலத்தில் 71 புதிய வருவாய் வட்டங்களும், 9 புதிய வருவாய்க் கோட்டங்களும் உருவாக்கப்பட்டுள்ளன. இதனால், வருவாய்த் துறை அலுவலகங்களைப் பொதுமக்கள் எளிதாக அணுகி பொதுச் சேவைகளைப் பெறும் வாய்ப்பு மேம்படுத்தப்பட்டுள்ளது. வட்டாட்சியர் அலுவலகங்கள், கோட்டாட்சியர் அலுவலகங்கள் மற்றும் மாவட்ட ஆட்சியர் அலுவலகங்களுக்கு புதிய கட்டடங்களைத் தொடர்ந்து கட்டித் தருவதன் மூலம் வருவாய்த் துறையின் உட்கட்டமைப்பினை இந்த அரசு வலுப்படுத்தி வருகிறது. 2018–2019ஆம் ஆண்டில் 22.40 கோடி ரூபாய் மதிப்பீட்டில், மேலும் 3 வட்டாட்சியர் அலுவலகங்களுக்கும், ஒரு கோட்டாட்சியர் அலுவலகத்திற்கும் புதிய கட்டடங்கள் கட்டப்படும்.

2017–2018ஆம் ஆண்டில், இதுவரை 3.80 இலட்சம் இலவச வீட்டுமனைப் பட்டாக்களை இந்த அரசு வருவாய்த் துறை மூலம் வழங்கியுள்ளது. 2018–2019ஆம் ஆண்டிலும், 3 இலட்சம் வீட்டுமனைப் பட்டாக்களை ஏழைக் குடும்பங்களுக்கு இந்த அரசு இலவசமாக வழங்கும். நீர்வழிப் பாதை போன்ற ஆட்சேபத்திற்குரிய புறம்போக்கு நிலங்களில் வசிக்கும் ஏழை மக்களுக்கு நிரந்தரமாக வீடு வழங்க வேண்டும் என்பதற்காகவும், இத்தகைய நிலங்களை ஆக்கிரமிப்பிலிருந்து மீட்டெடுப்பதற்காகவும், சம்பந்தப்பட்ட கிராமங்களில் வருவாய்த் துறையின் மூலமாக தனியார் நிலங்களைக் கையகப்படுத்தி, ஏழைக் குடும்பங்களுக்கு வீட்டுமனைப் பட்டாவை இலவசமாக வழங்கும் புதிய திட்டத்தை இந்த அரசு செயல்படுத்தும். அவ்வாறு வீட்டுமனைப் பட்டா வழங்கப்பட்ட குடும்பங்களுக்கு, ஊரக வளர்ச்சித் துறை மூலமாக தற்போது நடைமுறையில் உள்ள திட்டங்களின் கீழ், விதிமுறைகளுக்கு உட்பட்டு வீட்டுவசதி வழங்கப்படும்.

அரசு சேவைகளை மக்களின் இல்லங்களுக்கே கொண்டு சென்று, பொதுமக்களின் குறைகளைக் களையும் அம்மா திட்டம் சிறப்பாகச் செயல்பட்டு வருகிறது. 'உழவர் பாதுகாப்புத் திட்டத்தின்' கீழ், 2017–2018ஆம் ஆண்டில் 248.48 கோடி ரூபாய் அளவிற்கு 3.67 இலட்சம் பயனாளிகள் பயன் பெற்றுள்ளனர். இத்திட்டத்திற்கு 269.82 கோடி ரூபாய் இந்த வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. விபத்து நிவாரணத் திட்டத்திற்கு 80 கோடி ரூபாயும், நலிந்தோர் நிவாரணத் திட்டத்திற்கு 18.37 கோடி ரூபாயும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன. 2018–2019ஆம் ஆண்டிற்கான வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில், மொத்தம் 6,144.58 கோடி ரூபாய் வருவாய்த் துறைக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### வேளாண்மை

மாநிலத்தின் பெரும்பாலான மக்களின் முக்கியமான தொழிலாக வேளாண்மை இன்றளவும் திகழ்ந்து வரும் நிலையில், விவசாயிகளின் வருமானத்தை உயர்த்தவும், பண்ணை உற்பத்தியைப் பெருக்கவும் இந்த அரசு ஒருங்கிணைந்த முயற்சிகளை தொடர்ந்து எடுத்து வருகிறது. நவீன தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தி, உணவு தானிய உற்பத்தியைப் பெருக்க உணவு தானிய இயக்கம் மாநிலத்தில் 2012–2013ஆம் ஆண்டில் துவக்கப்பட்டது. மாநிலத்தில் உணவு தானிய உற்பத்தியைப் பெருக்குவதற்காக, 2018–2019ஆம் ஆண்டில் திருந்திய நெல் சாகுபடி முறை (System of Rice Intensification) 10 இலட்சம் ஹெக்டேரில் மேற்கொள்ளப்படும். சாதாரண ரக நெல் குவிண்டால் ஒன்றிற்கு 1,600 ரூபாய் விலையிலும், சன்ன ரக நெல் குவிண்டால் ஒன்றிற்கு 1,660 ரூபாய் விலையிலும் அரசு கொள்முதல் செய்து வருகிறது. குறைந்தபட்ச ஆதரவு விலைக்கும், கொள்முதல் விலைக்கும் உள்ள வித்தியாசத்தை, நெல் உற்பத்திக்கான ஊக்கத்தொகையாக வழங்க 2018–2019ஆம் ஆண்டிற்கு 200 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. 2017–2018ஆம் ஆண்டில், தீவிர பயறு உற்பத்தித் திட்டத்தின் கீழ், கிராமத் தொகுப்பு அடிப்படையில் பயறு சாகுபடி ஊக்குவிக்கப்பட்டு 85,000 ஹெக்டேர் கூடுதல் பரப்பளவு பயறு சாகுபடிக்கு கொண்டு வரப்பட்டுள்ளது. பயறு உற்பத்தியைப் பெருக்குவதற்கு 2018–2019ஆம் ஆண்டில்பன்முகஉத்திகள்மேற்கொள்ளப்படும்.நீண்டகால அளவில் பயறு உற்பத்தியை அதிகரிக்கும் வகையில், நெல் கொள்முதல் செய்வது போன்று குறைந்தபட்ச ஆதரவு விலையில் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் மூலமாக விவசாயிகளிடமிருந்து துவரை, உளுந்து மற்றும் பச்சைப் பயறு போன்ற பயறு வகைகளை 2018–2019ஆம் ஆண்டு முதல் அரசு நேரடியாகக் கொள்முதல் செய்யும். 2018–2019ஆம் ஆண்டில் 110 இலட்சம் மெட்ரிக் டன்

அளவிற்கு உணவு தானிய உற்பத்தியை அடைய இந்த அரசு இலக்கு நிர்ணயித்துள்ளது.

பயிர் சாகுபடியை பல்வகையாக்கவும், விவசாயிகளின் வருமானத்தைப் பெருக்கவும் தோட்டக்கலைப் பயிர் சாகுபடிக்கு இந்த அரசு முன்னுரிமை அளித்து வருகிறது. பத்து மாவட்டங்களில் 398.75 கோடி ரூபாய் செலவில், இந்த அரசால் செயல்படுத்தப்பட்டு வரும் அழுகக்கூடிய பொருட்களுக்கான விநியோகத் தொடரமைப்பு மேலாண்மைத் திட்டத்தின் மூலம், 3,400 விவசாய உற்பத்தி தொகுப்புகளில் 58 முதன்மை பதப்படுத்தும் மையங்களையும் (Primary Processing Centres), 487 சேகரிப்பு மையங்களையும் (Collection Centres) வலுப்படுத்தி, உயர் தொழில்நுட்பம் மூலம் தோட்டக்கலைப் பயிர்களின் உற்பத்தியையும் உற்பத்தித் திறனையும் அதிகரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இதுவரை, இத்திட்டத்தின் கீழ் 123 கோடி ரூபாய் செலவிடப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்கென, 2018–2019ஆம் ஆண்டிற்கான வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில் 175.75 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

வேளாண் பொருட்களின் மதிப்பைக் கூட்டி சேதங்களைக் குறைக்க, வலுவான மற்றும் திறன்மிக்க உணவு பதப்படுத்தும் தொழில் மையங்கள் முக்கியப் பங்கு வகிக்கின்றன. உணவு பதப்படுத்தும் தொழிலின் ஆரோக்கியமான வளர்ச்சிக்கு உகந்த சூழலை உருவாக்க, 2018–2019ஆம் ஆண்டில் சிறப்பு உணவு பதப்படுத்தும் கொள்கை இந்த அரசால் வெளியிடப்படும். விவசாய உற்பத்தியைப் பெருக்கவும், உணவு பதப்படுத்தும் தொழிற்சாலைகளை ஊக்குவிக்கவும், ஒப்பந்த அடிப்படையிலான உற்பத்தி முறைக்கு உரிய சட்டம் (Contract Farming Act) விரைவில் கொண்டு வரப்படும். மேலும், திண்டிவனம் அருகில் பெலாக்குப்பம் என்ற கிராமத்தில், சுமார் 450 ஏக்கர் பரப்பளவில் மிகப்பெரிய உணவு பதப்படுத்தும் பூங்கா (Ultra Mega Food Park) அமைக்கப்படும். இதனைத் தொடர்ந்து, தேனி, விருதுநகர், தூத்துக்குடி, ஈரோடு, கடலூர், சேலம், திண்டுக்கல், திருநெல்வேலி, திருவண்ணாமலை மற்றும் கிருஷ்ணகிரி மாவட்டங்களில் ஒருங்கிணைந்த உணவு பதப்படுத்தும் பூங்காக்கள் உருவாக்கப்படும். இந்த உணவு பதப்படுத்தும் பூங்காக்களில் பழங்கள், காய்கறிகள், மீன்கள், பால் பொருட்கள், கோழி மற்றும் இறைச்சி போன்ற உணவுப் பொருட்களைப் பதப்படுத்தும் தனியார் தொழில் நிறுவனங்கள் முதலீடு செய்ய ஊக்குவிக்கப்பட்டு, கிராமப்புறங்களில் கணிசமான வேலை வாய்ப்புகள் உருவாக வழிவகை செய்யப்படும்.

சர்க்கரை ஆலைகள் பொதுவாக சுழற்சி முறையில் ஏற்றத்தாழ்வுகளைச் சந்தித்து வருகின்றன. பருவமழை பொய்த்தல், கரும்பு ரகங்களில் ஏற்பட்டுள்ள வீரிய குறைபாடு (varietal degeneration), சர்க்கரை கட்டுமான விகிதத்தில் குறைவு (recovery), கரும்பு சாகுபடிப் பரப்பளவில் குறைவு போன்ற பல்வேறு இடர்ப்பாடுகளால் இத்தொழில் தற்போது நலிவடைந்து, சர்க்கரை ஆலைகளின் செயல்திறன் குறைந்து வருகிறது. இதனால், விவசாயிகளுக்கு குறித்த காலத்தில் பணம் வழங்குவது பாதிக்கப்பட்டுள்ளது. டாக்டர் ரங்கராஜன் குழு பரிந்துரையின்படி, வருவாயில் பகிர்வு செய்யும் முறையின் அடிப்படையில் விலை நிர்ணயம் செய்யும் முறைக்கு, அதிக அளவில் சர்க்கரை உற்பத்தி செய்யும் மஹாராஷ்ட்ரா, கருநாடகா போன்ற மாநிலங்கள் மாறியுள்ளன. ஆனால், நியாயமான மற்றும் ஆதாய விலைக்கும் கூடுதலாக மாநில அரசின் பரிந்துரை விலை நிர்ணயிக்கும் முறையே நமது மாநிலத்தில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இப்பிரச்சினைக்கு ஒரு நிரந்தரத் தீர்வு காணும் வகையில், இந்தப் பருவம் முதல் வருவாய்ப் பகிர்வு விலை நிர்ணய முறைக்கு மாற அரசு முடிவு செய்துள்ளது. இதனால், விவசாயிகள் நியாயமான மற்றும் ஆதாய விலை பெறுவதை உறுதி செய்வதுடன், கூடுதலாக சர்க்கரை ஆலைகளின் இலாபத்தில் ஒரு பகிர்வும் விவசாயிகளுக்கு கிடைக்கும். இந்த மாற்றத்தினைக் கொண்டு வர, மெட்ரிக் டன் ஒன்றிற்கு, போக்குவரத்துச் செலவான 100 ரூபாயை சர்க்கரை ஆலைகளே தொடர்ந்து ஏற்கும். போக்குவரத்துச் செலவு போக, தற்போது விவசாயிகள் பெற்று வரும் மாநில அரசின் பரிந்துரை விலையான 2,750 ரூபாயை அனைத்து விவசாயிகளும் பெறுவதை உறுதி செய்ய, புதிய வருவாய்ப் பகிர்வு முறையில் பெறப்படும் விலைக்கும், தற்போது பெற்று வரும் 2,750 ரூபாய்க்கும் இடையேயான வித்தியாசத்தை, கரும்பு உற்பத்திக்கான ஊக்கத் தொகையாக இந்த அரசு நேரடியாக விவசாயிகளுக்கு வழங்கும். 2018–2019ஆம் ஆண்டிற்கான வரவு – செலவுத் திட்ட மதிப்பீடுகளில் இந்த உற்பத்தி ஊக்கத்தொகைக்காக 200 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. கரும்பு உற்பத்தியை அதிகரிப்பதற்காகவும், சர்க்கரை கட்டுமான அளவை அதிகரிப்பதற்காகவும், சர்க்கரை ஆலைகளுடன் இணைந்து ஒரு சிறப்புத் திட்டத்தினை வகுத்து, 55,000 ஏக்கர் பரப்பளவில் நீடித்த நவீன கரும்பு சாகுபடித் திட்டத்தை 2018–2019ஆம் ஆண்டில் அரசு செயல்படுத்தும்.

தொகுப்பு (Clusters) அடிப்படையில் 25 மாவட்டங்களில் உள்ள 10 இலட்சம் ஹெக்டேர் மானாவாரி நிலங்களை மேம்படுத்த 2016–2017ஆம் ஆண்டில் தொடங்கப்பட்ட நீடித்த நிலையான மானாவாரி

“2018–2019ஆம் ஆண்டில் 100.42 கோடி ரூபாய் செலவில் இரண்டு இலட்சம் சிறு, குறு விவசாயிகளை ஒருங்கிணைக்கும் வகையில் 2,000 புதிய வேளாண் உற்பத்தியாளர் குழுக்கள் ஏற்படுத்தப்படும். இவற்றில் 500 குழுக்கள் 10 கோடி ரூபாய் அரசு நிதியுதவியுடன் 50 உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்களாகத் தரம் உயர்த்தப்படும். மேலும் ஒரு புதுமை முயற்சியாக, பயிர் சாகுபடியுடன் கால்நடை வளர்ப்பு, வேளாண் காடுகள் வளர்ப்பு, மீன் வளர்ப்பு போன்ற வேளாண் சார்ந்த நடவடிக்கைகளை விவசாயிகள் ஒருங்கிணைத்துச் செயல்படுத்த, 2018–2019ஆம் ஆண்டில் ‘ஒருங்கிணைந்த பண்ணைய திட்டத்தை’ இந்த அரசு தொடங்கும்.”

வேளாண்மைக்கான சிறப்புத் திட்டத்தில் (Mission on Sustainable Dry Land Agriculture), 2017–2018ஆம் ஆண்டில் 175.16 கோடி ரூபாய் செலவில் 400 மானாவாரித் தொகுப்புகள் உருவாக்கப்பட்டுள்ளன. இந்தத் தொகுப்புகளில் உற்பத்தியைத் தொடர்ந்து மேம்படுத்துவதுடன், மேலும் 400 புதிய மானாவாரித் தொகுப்புகளை ஏற்படுத்த 2018–2019ஆம் ஆண்டில் 321.16 கோடி ரூபாய் செலவிடப்படும். மற்றுமொரு புதுமை முயற்சியாக, வேளாண் உற்பத்தியாளர் குழுக்கள் மற்றும் உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்கள் மூலம் விவசாயிகளுக்கிடையே ‘கூட்டுப் பண்ணைய’ செயல்பாட்டை ஊக்குவிக்கும் வகையில், 2017–2018ஆம் ஆண்டில் இந்த அரசு கூட்டுப் பண்ணைய திட்டத்தை தொடங்கியது. தமிழ்நாட்டில் ஏற்கெனவே 391 உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்கள் செயல்பட்டு வரும் நிலையில், இத்திட்டத்தில், 2018–2019ஆம் ஆண்டில் 100.42 கோடி ரூபாய் செலவில் இரண்டு இலட்சம் சிறு, குறு விவசாயிகளை ஒருங்கிணைக்கும் வகையில் 2,000 புதிய வேளாண் உற்பத்தியாளர் குழுக்கள் ஏற்படுத்தப்படும். இவற்றில் 500 குழுக்கள் 10 கோடி ரூபாய் அரசு நிதியுதவியுடன் 50 உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்களாகத் தரம் உயர்த்தப்படும். மேலும் ஒரு புதுமை முயற்சியாக, பயிர் சாகுபடியுடன் கால்நடை வளர்ப்பு, வேளாண் காடுகள் வளர்ப்பு, மீன் வளர்ப்பு போன்ற வேளாண் சார்ந்த நடவடிக்கைகளை விவசாயிகள் ஒருங்கிணைத்துச் செயல்படுத்த, 2018–2019ஆம் ஆண்டில் ‘ஒருங்கிணைந்த பண்ணைய திட்டத்தை’ இந்த அரசு தொடங்கும். சோதனை முறையில் ஐந்து வட்டாரங்களில் தலா 1,000 விவசாயிகள் பயன்பெறும் வகையில் செயல்படுத்தப்படும் இத்திட்டத்திற்கு, தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகம் மற்றும் கால்நடை பல்கலைக்கழகங்கள் உரிய தொழில்நுட்ப உதவியை வழங்கும். இந்த முயற்சி, பாரம்பரியமாக நாம் பின்பற்றி வந்த நிலைக்கத்தக்க விவசாய முறைகளுக்கு விவசாயிகளை திரும்பக் கொண்டு செல்லும் என நம்புகிறேன். இத்திட்டம் 50 கோடி ரூபாய் மதிப்பீட்டில் செயல்படுத்தப்படும்.

பயிர்க் காப்பீட்டுத் திட்டத்தின் மூலம் வானிலை பாதிப்பால் ஏற்படும் பயிர் இழப்பின் பாதிப்பைக் குறைக்க இந்த அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது. 2016–2017ஆம் ஆண்டில் பிரதம மந்திரியின் புதிய பயிர்க் காப்பீட்டுத் திட்டத்தின் கீழ், காப்பீட்டுக் கட்டண மானியத் தொகையில் மாநில அரசின் பங்குத் தொகையாக காப்பீட்டு நிறுவனங்களுக்கு 565 கோடி ரூபாய் வழங்கப்பட்டுள்ளது. இதுவரை, 10.15 இலட்சம் விவசாயிகளுக்கு இழப்பீட்டுத் தொகையாக 3,113 கோடி ரூபாய் வழங்கப்பட்டுள்ளது. 2017–2018ஆம் ஆண்டில் காப்பீட்டுக் கட்டண மானியத் தொகை செலுத்துவதற்காக 523 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டது. 2018–2019ஆம் ஆண்டில், பயிர்க் காப்பீட்டுத் திட்டத்தை கணினிமயமாக்குவதன் மூலம், இத்திட்டத்தில் விவசாயிகளைப் பதிவு செய்யும் நடவடிக்கைகளில் வெளிப்படைத் தன்மை கொண்டுவரப்படும். இத்திட்டத்தின் கீழ், மாநில அரசின் காப்பீட்டுக் கட்டண மானியப் பங்குத்தொகையை வழங்குவதற்காக 2018–2019ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்ட மதிப்பீடுகளில் 632 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

வேளாண் இயந்திரமயமாக்கல் மற்றும் சந்தைகளை மேம்படுத்தி ஒருங்கிணைத்தல் ஆகியவை வேளாண் மேம்பாட்டிற்கு முக்கியப் பங்காற்றி வருகின்றன. 2014–2015ஆம் ஆண்டு முதல் பண்ணை இயந்திர மயமாக்கலை ஊக்கப்படுத்த வேளாண் இயந்திரங்களை வாடகைக்கு வழங்கும் 1,106 மையங்களை இந்த அரசு ஏற்படுத்தியுள்ளது.

2018–2019ஆம் ஆண்டில் மேலும் 500 மையங்கள் இந்த அரசால் ஏற்படுத்தப்படும். வேளாண் இயந்திரமயமாக்கலை ஊக்குவிக்க 2017–2018ஆம் ஆண்டில் 71 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டது. 2018–2019ஆம் ஆண்டில் 150 கோடி ரூபாய் இதற்கென ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. ஒருங்கிணைந்த சந்தை இணையதள வசதிகளைப் பயன்படுத்தி, ஈரோடு மாவட்டத்தில் உள்ள பெருந்துறை ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில் மஞ்சளுக்கான மின்னணு வர்த்தகம் முதன் முதலாக அறிமுகப்படுத்தப்பட்டது. இதைத் தொடர்ந்து, தேசிய வேளாண் மின்னணு சந்தையுடன் ஒருங்கிணைப்பதற்காக மேலும் முப்பது ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்கள் மற்றும் 8 கூட்டுறவு விற்பனை மையங்களில் மின்னணு வர்த்தக வசதிகள் உருவாக்கப்படும். இந்த 38 விற்பனை மையங்களிலும் 159 கோடி ரூபாய் செலவில் கட்டமைப்பு வசதிகள் மேம்படுத்தப்படும்.

தமிழ்நாட்டில் தண்ணீர்ப் பற்றாக்குறை தொடர்ந்து நிலவி வரும் நிலையில், வேளாண் மற்றும் தோட்டக்கலை பயிர் சாகுபடிக்காக நுண்ணீர்ப் பாசனத்தை பெரிய அளவில் விரிவாக்கம் செய்வது அவசியமாகிறது. நுண்ணீர்ப் பாசனத்தை மேம்படுத்த 2017–2018ஆம் ஆண்டில் 622 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டது. வரும் 2018–2019ஆம் ஆண்டில் இதற்கென 715 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. காவேரிப் பாசன கடைமடைப் பகுதிகளிலும், கடலோரப் பகுதிகளிலும், பயிர் முதிரும் நிலையில் ஏற்படும் நீர்ப் பற்றாக்குறையை நிவர்த்தி செய்ய, பயிர்களைக் காக்கும் உயிர்ப் பாசனம் வழங்குவதில் பண்ணைக் குட்டைகள் ஆற்றும் பங்கினை உணர்ந்துள்ள இந்த அரசு, 100 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மேலும் 10,000 பண்ணைக் குட்டைகளை அமைக்க நடவடிக்கை எடுக்கும்.

இது தவிர வேளாண் உற்பத்தியை மேம்படுத்த இந்த அரசு கீழ்க்கண்ட புதிய முயற்சிகளையும் மேற்கொள்ளும்,

- ❖ 10.62 கோடி ரூபாய் மதிப்பீட்டில் தமிழ்நாடு பருத்தி சாகுபடி இயக்கம் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.
- ❖ விவசாயிகளுக்கு பயன்படும் வகையில் ‘உழவன்’ என்ற அலைபேசி செயலி அறிமுகப்படுத்தப்படும்.
- ❖ கிண்டியில் 20 கோடி ரூபாய் மதிப்பீட்டில் ‘அம்மா பசுமைப் பூங்கா’ புதிதாக அமைக்கப்படும்.
- ❖ கிருஷ்ணகிரி மாவட்டம், ஓசூரில் மலர்களுக்கான வணிக வளாகம் புதிதாக அமைக்கப்படும்.
- ❖ கடலூர் மாவட்டம், மங்களூரில் மக்காச்சோளம் பதப்படுத்தும் அலகு ஒன்று அமைக்கப்படும்.
- ❖ தோவாளையில் மலர்களை அறுவடைக்குப் பின் பதப்படுத்தும் அலகு ஒன்று அமைக்கப்படும்.

2018–2019ஆம் ஆண்டிற்கான வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில், வேளாண்மைத் துறைக்கு ஒட்டு மொத்தமாக 8,916.25 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**கால்நடை பராமரிப்பு**

விலையில்லா கறவைப் பசுக்கள், வெள்ளாடுகள் அல்லது செம்மறி ஆடுகள் வழங்கும் திட்டத்தை இந்த அரசு தொடர்ந்து செயல்படுத்தும். 2011ஆம் ஆண்டு முதல் இதுவரை, 75,398 ஏழைப் பெண்களுக்கு தலா ஒரு கறவைப் பசுவும், 8.71 இலட்சம் ஏழைக் குடும்பங்களுக்கு 34.85 இலட்சம் வெள்ளாடுகள் அல்லது செம்மறி ஆடுகளும் வழங்கப்பட்டுள்ளன. 2018–2019ஆம் ஆண்டில் 12,000 கறவைப் பசுக்களையும், 1.50 இலட்சம் பயனாளிகளுக்கு ஆறு இலட்சம் வெள்ளாடுகள் அல்லது செம்மறி ஆடுகளையும் இத்திட்டத்தின் கீழ் இந்த அரசு வழங்கும். இதற்காக, வரவு–செலவுத் திட்டத்தில் 248.58 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மேலும், கோழிப் பண்ணை வளர்ச்சித் திட்டத்திற்காக 50 கோடி ரூபாயும், தீவன உற்பத்தித் திட்டத்திற்காக 25 கோடி ரூபாயும் 2018–2019ஆம் ஆண்டு வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன.

கிராமப்புறங்களில் கால்நடை பராமரிப்புத் துறையின் முதுகெலும்பாக அமைந்துள்ள கால்நடை மருத்துவ சேவைக் கட்டமைப்பினை இந்த அரசு பெருமளவில் மேம்படுத்தியுள்ளது. இதன் தொடர்ச்சியாக 2018–2019ஆம் ஆண்டில், மேலும் 100 கால்நடை கிளை நிலையங்களை கால்நடை மருந்தகங்களாகத் தரம் உயர்த்த நடவடிக்கை எடுக்கப்படும். இது தவிர, இராணிப்பேட்டையில் உள்ள கால்நடை நோய் தடுப்பு மருந்து நிறுவனத்தின் கட்டமைப்பு 10 கோடி ரூபாய் செலவில் மேம்படுத்தப்படும்.

ஆவின் நிறுவனத்தின் பால் பதப்படுத்துவதற்கான உட்கட்டமைப்பு தொடர்ந்து வலுப்படுத்தப்பட்டு வருகிறது. இதன் பலனாக, 2011ஆம் ஆண்டில் நாளொன்றுக்கு 32.57 இலட்சம் லிட்டராக இருந்த ஆவின் நிறுவனத்தின் சராசரி பால் பதப்படுத்தும் திறன், 2017ஆம் ஆண்டில் நாளொன்றுக்கு 43.36 இலட்சம் லிட்டராக உயர்ந்துள்ளது. 2011ஆம் ஆண்டில் 21.37 இலட்சம் லிட்டராக இருந்த நாளொன்றுக்கான சராசரி பால் கொள்முதல், 2017ஆம் ஆண்டில் 29.64 இலட்சம் லிட்டராக உயர்ந்துள்ளது. பல்வேறு மதிப்புக் கூட்டப்பட்ட பொருட்களைத் தயாரிப்பதற்கான முயற்சிகளை ஆவின் நிறுவனம் தீவிரமாக மேற்கொண்டு வருகிறது.

“2018–2019ஆம் ஆண்டில் 12,000 கறவைப் பசுக்களையும், 1.50 இலட்சம் பயனாளிகளுக்கு ஆறு இலட்சம் வெள்ளாடுகள் அல்லது செம்மறி ஆடுகளையும் இத்திட்டத்தின் கீழ் இந்த அரசு வழங்கும். இதற்காக, வரவு–செலவுத் திட்டத்தில் 248.58 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மேலும், கோழிப் பண்ணை வளர்ச்சித் திட்டத்திற்காக 50 கோடி ரூபாயும், தீவன உற்பத்தித் திட்டத்திற்காக 25 கோடி ரூபாயும் 2018–2019ஆம் ஆண்டு வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன.”

மாநிலத்தில் பால்வளத் துறையின் மேம்பாட்டிற்கு ஊக்கம் அளிப்பதற்காக, நபார்டு வங்கியின் பால்வள மேம்பாட்டு நிதியத்திலிருந்து 500 கோடி ரூபாய் கடன் பெற்று, பால் பதப்படுத்துவதற்கான உட்கட்டமைப்பு மேம்படுத்தப்படும். 2018–2019ஆம் ஆண்டிற்கான வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில், கால்நடை பராமரிப்பு மற்றும் பால்வளத் துறைகளுக்கு முறையே 1,227.69 கோடி ரூபாயும், 130.82 கோடி ரூபாயும் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன.

### மீனளம்

மீன்பிடி தடைக் காலத்திலும், மீன்பிடி குறைவாக உள்ள காலத்திலும் மீனவர் குடும்பங்கள் கண்ணியமாக வாழ்வதற்கு வழங்கப்பட்டு வரும், குடும்பத்திற்கு தலா 5,000 ரூபாய் உதவித்தொகை தொடர்ந்து வழங்கப்படும். மாநிலத்தில் மீன்பிடிப்பிற்கான உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்காக, கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள குளச்சல், தேங்காய்ப்பட்டிணம் மற்றும் சின்னமுட்டத்திலும், நாகப்பட்டினம் மாவட்டத்தில் உள்ள பூம்புகாரிலும் புதிய மீன்பிடி துறைமுகங்கள், 423.34 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன. இத்திட்டங்களை தடையின்றி நிறைவேற்றும் நோக்கில், மாநில அரசின் பங்குத் தொகையான 182 கோடி ரூபாயுடன், மத்திய அரசு ஏற்றுக்கொண்டபடி விடுவிக்காத நிலுவைத் தொகையான 41.65 கோடி ரூபாயையும் மாநில அரசே ஏற்றுள்ளது. மேலும், இராமநாதபுரம் மாவட்டத்தில் உள்ள மூக்கையூரில் 113.90 கோடி ரூபாய் செலவில் புதிய துறைமுகம் அமைக்கும் பணி நடைபெற்று வருகிறது. வரும் நிதியாண்டில் 70 கோடி ரூபாய் செலவில் இராமநாதபுரம் மாவட்டத்தில் உள்ள குந்துக்கல்லில் மீன் இறங்கு தளமும், 220 கோடி ரூபாய் மொத்தச் செலவில் நாகப்பட்டினம் மாவட்டத்தில் உள்ள வெள்ளப்பள்ளம் மற்றும் தரங்கம்பாடி ஆகிய இடங்களில் மீன்பிடி துறைமுகங்களும் கட்டுவதற்கான பணிகளை இந்த அரசு மேற்கொள்ளும். 2018–2019ஆம் ஆண்டில், கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள குரும்பனை, பொழிக்கரை, கேசவன்புத்தன்துறை மற்றும் பள்ளம்துறை ஆகிய இடங்களில் மீன் இறங்கு தளங்கள் அமைப்பதற்கான பணிகளையும் இந்த அரசு 16 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மேற்கொள்ளும்.

உலக வங்கி நிதியுதவியுடன் 62.14 கோடி ரூபாய் செலவில் பதின்மூன்று கடலோர மாவட்டங்களில் உள்ள கடலோரப் பகுதிகளில் தடையில்லாத் தகவல் தொடர்புத் திட்டம் இந்த அரசால் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ், பாரம்பரிய மீன்பிடிப் படகுகள் மற்றும் மோட்டார் பொருத்தப்பட்ட மீன்பிடி விசைப் படகுகளுக்கு உயர் அதிர்வெண் தொடர்புக் கருவிகள் வழங்கப்பட்டு வருகின்றன. இதன் மூலம், 60 கடல் மைல் தொலைவு வரை தடையற்ற தகவல் தொடர்பு பெறும் வசதி உருவாக்கப்படும். இத்திட்டம் 2018ஆம் ஆண்டு ஜூன் மாதத்திற்கு முன்னர் பயன்பாட்டிற்கு வரும். ஆழ்கடல் மீன்பிடிப்பிற்காக 60 கடல் மைல் தொலைவிற்கு அப்பால் பல நாட்கள் பயணம் செய்து மீன்பிடிப்பில் ஈடுபடும் நமது மீனவர்களின் பாதுகாப்பை உறுதி செய்வதற்கான முக்கிய நடவடிக்கையாக, மானிய விலையில் ஆழ்கடல் மீன்பிடி படகுகளுக்கு உயர் அதிர்வெண் தொடர்பு கருவிகளை படிப்படியாக இந்த அரசு வழங்கும். 2018–2019ஆம் ஆண்டிற்கான வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில் மீன்வளத் துறைக்காக 1,016.53 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### கூட்டுறவு

சிறு, குறு விவசாயிகள் கூட்டுறவு வங்கிகளுக்குச் செலுத்த வேண்டிய குறுகிய காலப் பயிர்க் கடன்கள், நடுத்தரகால மற்றும் நீண்டகால விவசாயக் கடன்களைத் தள்ளுபடி செய்து மறைந்த முன்னாள் முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்கள்

அறிவித்ததை மாண்புமிகு உறுப்பினர்கள் அறிவீர்கள். இந்தக் கடன் தள்ளுபடித் திட்டப்படி, 6,094.89 கோடி ரூபாய் நிலுவைக் கடனை ஐந்தாண்டுகளில் கூட்டுறவு வங்கிகளுக்கு அரசு ஈடுசெய்ய வேண்டும். இதில், 3,664.76 கோடி ரூபாய் ஏற்கெனவே ஈடுசெய்யப்பட்ட நிலையில், 2018–2019ஆம் ஆண்டிற்கான வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில் 883.71 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. வரும் நிதியாண்டில் கூட்டுறவு நிறுவனங்கள் மூலம் விவசாயிகளுக்கு 8,000 கோடி ரூபாய் அளவிற்கு புதிய பயிர்க் கடன்கள் வழங்கப்படும்.

### பொது விநியோகத் திட்டம்

தமிழகத்தில் 2016ஆம் ஆண்டு நவம்பர் 1ஆம் தேதி முதல், தேசிய உணவுப் பாதுகாப்புச் சட்டம், 2013 நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள போதிலும், அனைவருக்குமான பொது விநியோகத் திட்டத்தை இந்த அரசு தொடர்ந்து செயல்படுத்தி வருகிறது. இதன் அடிப்படையில், 34,773 நியாயவிலைக் கடைகள் மூலம் 1.83 கோடி அரிசி அட்டைதாரர்களுக்கு விலையில்லா அரிசி வழங்கப்படுகிறது. இதன் மூலம், அவர்களுக்கான உணவுப் பாதுகாப்பை இந்த அரசு உறுதி செய்துள்ளது. இத்திட்டத்தின் கீழ், விலையில்லா அரிசி வழங்கப்படுவதுடன், சர்க்கரை, மண்ணெண்ணெய், துவரம் பருப்பு, சமையல் எண்ணெய் ஆகியவற்றை மானிய விலையிலும் அரசு தொடர்ந்து வழங்கும். பொது விநியோகத் திட்டத்தின் வெளிப்படைத் தன்மையை அதிகரிப்பதற்காகவும், சிறப்பாகச் செயல்படுத்துவதற்காகவும், ஆதார் எண்ணுடன் இணைக்கப்பட்ட ஸ்மார்ட் அட்டைகளை அனைத்துக் குடும்பங்களுக்கும் இந்த அரசு வழங்கியுள்ளது. ஊரக மற்றும் நகர்ப்புர நியாய விலைக் கடைகளில் ஏற்படும் நட்டத்தினை கூட்டுறவு அமைப்புகளுக்கு ஈடு செய்வதற்காக 2017–2018ஆம் ஆண்டிற்கான வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில் ஒதுக்கீடு செய்யப்பட்ட 222.93 கோடி ரூபாய், திருத்த மதிப்பீடுகளில் 437.69 கோடி ரூபாயாக உயர்த்தப்பட்டுள்ளதுடன், 2018–2019ஆம் ஆண்டிற்கான வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில் இத்தொகை 460.17 கோடி ரூபாயாக உயர்த்தி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இது தவிர, 2018–2019ஆம் ஆண்டிற்கான வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில் 6,000 கோடி ரூபாய் உணவு மானியத்திற்காக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### சுற்றுச்சூழல் மற்றும் வனம்

பல்லுயிரினப் பாதுகாப்பு மற்றும் வனங்களுக்கு அருகில் உள்ள கிராமங்களில் வசிக்கும் மக்களின் மேம்பாட்டிற்காக, 686 கோடி ரூபாய் செலவில் பல்வேறு நடவடிக்கைகளை, 'தமிழ்நாடு பல்லுயிரினப் பாதுகாப்பு மற்றும் பசுமைத் திட்டத்தின்' கீழ் அரசு எடுத்து வருகிறது. இத்திட்டத்திற்காக, இதுவரை 469.40 கோடி ரூபாய் செலவிடப்பட்டுள்ளதுடன், 2018–2019ஆம் ஆண்டிற்கான வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில் 86.57 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. முன்னாள் முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் 70ஆவது பிறந்தநாள் நினைவாக, பாரதப் பிரதமர் அவர்களால் 24.02.2018 அன்று மரம் நடும் மாபெரும் விழா தொடங்கப்பட்டது. இத்திட்டத்தில் மர அடர்த்தி குறைவாக உள்ள காப்புக் காடுகளின் பகுதிகளைப் புதுப்பித்து, அப்பகுதிகளை அடர்ந்த காடுகளாக மாற்ற, 7,000 ஏக்கர் பரப்பளவில் மரம் நடும் பணிகள் 21.43 கோடி ரூபாய் செலவில் வரும் நிதியாண்டில் இந்த அரசால் மேற்கொள்ளப்படும். இத்திட்டத்தின் ஒரு பகுதியாக, மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை வாய்ப்பு உறுதித் திட்டத்தின் கீழ் (MGNREGS), அரசு பொது நிலங்கள் மற்றும் ஏரிக்கரைகளில் மரம் நடும் பணிகள் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

தேசியப் பருவநிலை மாற்றத் தழுவல் நிதியின் (National Adaptation Fund for Climate Change) கீழ் பள்ளிக்கரணை சதுப்பு நிலங்களை மீட்டெடுக்க, மத்திய அரசின் நிதியுதவியை எதிர்நோக்கி, 695 ஹெக்டேர் சதுப்பு நிலத்தில் 'பள்ளிக்கரணை சுற்றுச்சூழல் மீட்புத் திட்டத்தினை', 165.68 கோடி ரூபாய் செலவில் அரசு செயல்படுத்தும். இத்திட்டம், ஐந்து ஆண்டுகளில், அதாவது 2018–2019ஆம் ஆண்டு முதல் 2022–2023ஆம் ஆண்டு வரையில் செயல்படுத்தப்படும். 2018–2019ஆம் ஆண்டிற்கான வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில் 25 கோடி ரூபாய் இத்திட்டத்திற்காகவும், மொத்தமாக 649.34 கோடி ரூபாய் சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறைக்கும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### நீர்வள ஆதாரங்கள் மற்றும் பாசனம்

நீர்வள ஆதாரங்களைப் பாதுகாக்க, 2016–2017ஆம் ஆண்டு முதல், பாரம்பரிய நீர் மேலாண்மை முறையான குடிமராமத்து முறைக்கு புத்துயிரூட்டி, அதனை ஓர் இயக்கமாக இந்த அரசு செயல்படுத்தி வருகிறது. குடிமராமத்து திட்டத்தினைத் தொடர்ந்து செயல்படுத்த, 2018–2019ஆம் ஆண்டிற்கான வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில் 300 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. நிலத்தடி நீர் செறிவூட்டுதல் மூலம் நீர்வளத்தை மேம்படுத்துவதற்கு, 1,000 கோடி ரூபாய் செலவில் தடுப்பணைகள் கட்டப்படும் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இப்பேரவையில் ஏற்கெனவே அறிவித்துள்ளதை மாண்புமிகு உறுப்பினர்கள்

**“2018–2019ஆம் ஆண்டிற்கான வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில் 86.57 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. முன்னாள் முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் 70ஆவது பிறந்தநாள் நினைவாக, பாரதப் பிரதமர் அவர்களால் 24.02.2018 அன்று மரம் நடும் மாபெரும் விழா தொடங்கப்பட்டது. இத்திட்டத்தில் மர அடர்த்தி குறைவாக உள்ள காப்புக் காடுகளின் பகுதிகளைப் புதுப்பித்து, அப்பகுதிகளை அடர்ந்த காடுகளாக மாற்ற, 7,000 ஏக்கர் பரப்பளவில் மரம் நடும் பணிகள் 21.43 கோடி ரூபாய் செலவில் வரும் நிதியாண்டில் இந்த அரசால் மேற்கொள்ளப்படும்.”**

அறிவீர்கள். 2017–2018ஆம் ஆண்டில், நபார்டு வங்கியின் நிதியுதவியுடன் 200 கோடி ரூபாய் செலவில் தடுப்பணைகளைக் கட்ட அரசு நடவடிக்கை மேற்கொண்டு வருகிறது. நபார்டு வங்கியின் ஊரக உட்கட்டமைப்பு மேம்பாட்டு நிதியின் கீழ், 2018–2019ஆம் ஆண்டில், மேலும் 250 கோடி ரூபாய் செலவில் தடுப்பணைகள் கட்டுவதற்கு இந்த அரசு நடவடிக்கை எடுக்கும்.

நீர் நிலைகளை மீட்டெடுப்பதற்காகவும், நிலத்தடிநீர் செறிவூட்டுதலை மேம்படுத்துவதற்காகவும் இந்த அரசு ‘நீர்வள நிலவளத் திட்டத்தின்’ (Irrigated Agriculture Modernisation and Water-Bodies Restoration and Management Project) இரண்டாம் கட்டப் பணிகளை, 3,008 கோடி ரூபாய் திட்ட மதிப்பீட்டில் உலக வங்கி நிதியுதவியுடன் மேற்கொண்டு வருகிறது. இத்திட்டத்தின் கீழ், 29 மாவட்டங்களில், 66 உப வடிநிலப் பகுதிகளுடன் 4,778 குளங்களையும், 477 அணைக்கட்டுகளையும் மறுசீரமைப்பு செய்வதன் மூலம் 5.43 இலட்சம் ஹெக்டேர் ஆயக்கட்டு நிலங்கள் பயனடையும். 2018–2019ஆம் ஆண்டிற்கான வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில் 655.29 கோடி ரூபாய் நீர்வள, நிலவள இரண்டாம் கட்டத் திட்டத்திற்காக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

ஆசிய வளர்ச்சி வங்கியின் நிதியுதவியுடன் 960.66 கோடி ரூபாய் செலவில் ‘பருவநிலை மாற்றத் தழுவல் திட்டம்’ செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டம், காவேரி பாசனப் பகுதியின் வெண்ணாறு உப வடிநிலப் பகுதியில் வெள்ள நீர் வடிதலை செம்மைப்படுத்தி, பருவநிலை மாற்றத்தால் ஏற்படும் தாக்கத்தை குறைக்கும். இதுவரையில், இத்திட்டத்தின் கீழ் 215.84 கோடி ரூபாய் செலவிலான பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. 2018–2019ஆம் ஆண்டிற்கான வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில் 437.41 கோடி ரூபாய் இத்திட்டத்திற்காக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

‘அணைகள் புனரமைப்பு மற்றும் மேம்பாட்டுத் திட்டம்’ உலக வங்கி உதவியுடன், தமிழ்நாட்டில் உள்ள 89 அணைகளில் 745.49 கோடி ரூபாய் செலவில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இதுவரையில், 362.02 கோடி ரூபாய் செலவிடப்பட்டு 63 அணைகளில் பணிகள் முடிக்கப்பட்டுள்ளதுடன், 23 அணைகளில் பணிகள் நடைபெற்றும் வருகின்றன. 2018–2019ஆம் ஆண்டிற்கான வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில் 166.08 கோடி ரூபாய் இத்திட்டத்திற்காக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

அத்திக்கடவு–அவிநாசி குடிநீர் வழங்கல் மற்றும் நீர்ப்பாசனத் திட்டத்தை, 1,789 கோடி ரூபாய் மதிப்பீட்டில் செயல்படுத்த இந்த அரசு விரைவில் அனுமதி வழங்க உள்ளது என்பதை இந்த மாமன்றத்தில் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். இத்திட்டத்தின் மூலம், காளிங்கராயன் அணையின் கீழ்ப்புறத்திலிருந்து 1.5டி.எம்.சி அடி உபரி நீரினை நீரேற்றம் செய்து கோயம்புத்தூர், திருப்பூர் மற்றும் ஈரோடு மாவட்டங்களில் உள்ள 32 பொதுப்பணித் துறை ஏரிகள், 42 ஊராட்சி ஒன்றிய ஏரிகள் மற்றும் 971 குளங்கள் நிரப்பப்படும். 2018–2019ஆம் ஆண்டிற்கான வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில் 250 கோடி ரூபாய் அத்திக்கடவு–அவிநாசி திட்டத்திற்காக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மாநிலங்களுக்கிடையே ஆறுகளை இணைக்கும் திட்டத்தின் ஒரு பகுதியாக, தாமிரபரணி ஆற்றினை நம்பியாற்றுடன் இணைக்கும் திட்டத்திற்கு, இதுவரையில் 349.36 கோடி ரூபாய் செலவிடப்பட்டுள்ள நிலையில், 2018–2019ஆம் ஆண்டு வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில் 100.88 கோடி ரூபாய் இத்திட்டத்திற்காக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

மாநிலங்களுக்கு இடையேயான நதிநீர்ப் பங்கீட்டில், தமிழ்நாட்டின் உரிமையை நிலைநாட்ட சட்டப்பூர்வ நடவடிக்கைகளை இந்த அரசு தொடர்ந்து எடுத்து

வருகிறது. உச்ச நீதிமன்றத் தீர்ப்பின் அடிப்படையில் காவேரி மேலாண்மை வாரியத்தையும், காவேரி நதிநீர் முறைப்படுத்தும் குழுவையும் மத்திய அரசு ஆறு வார காலத்திற்குள் அமைக்க வேண்டுமென இந்த அரசு வலியுறுத்தி வருகிறது. மத்திய அரசும் உச்ச நீதிமன்றத் தீர்ப்பை முழுமையாகச் செயல்படுத்தும் என நம்புகிறேன்.

2018–2019ஆம் ஆண்டிற்கான வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில் 5,127.57 கோடி ரூபாய் நீர்வள ஆதாரத் துறைக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**நெடுஞ்சாலைத் துறை**

மாநில நெடுஞ்சாலைகள் அனைத்தும் குறைந்தபட்சம் இருவழித்தடச் சாலைகளாகவும், மாவட்ட முக்கியச் சாலைகள் அனைத்தும் குறைந்தபட்சம் இடைவழித்தடச் சாலைகளாகவும் அகலப்படுத்தப்படும் என்று 2011–2012ஆம் ஆண்டில் இந்த அரசு அறிவித்தது. இதன் காரணமாக, குறைந்தபட்சம் இருவழித்தட மாநில நெடுஞ்சாலைகள் 2011ஆம் ஆண்டில் 9,566 கிலோமீட்டர் நீளத்திலிருந்து 2017ஆம் ஆண்டில் 11,412 கிலோமீட்டர் நீளமாக அதிகரிக்கப்பட்டுள்ளது. அதேபோல், 2011ஆம் ஆண்டில், இடைவழித்தடச் சாலைகளாக இருந்த 7,613 கிலோமீட்டர் நீளமுள்ள மாவட்ட முக்கியச் சாலைகள் 2017ஆம் ஆண்டில் 11,219 கிலோமீட்டர் நீளமாக அதிகரிக்கப்பட்டுள்ளது. மீதமுள்ள 54 கிலோமீட்டர் நீளமுள்ள மாநில நெடுஞ்சாலைகளையும், 34 கிலோமீட்டர் நீளமுள்ள மாவட்ட முக்கியச் சாலைகளையும் 80 கோடி ரூபாய் செலவில் அகலப்படுத்துவதற்கான பணிகள் வரும் நிதியாண்டில் மேற்கொள்ளப்படும்.

‘ஒருங்கிணைந்த சாலைக் கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டத்தின்’ (CRIDP) கீழ் 2018–2019ஆம் ஆண்டில் 1,000 கிலோமீட்டர் நீளமுள்ள சாலைகளை அகலப்படுத்தும் பணிகளையும், 4,000 கிலோமீட்டர் நீளமுள்ள சாலைகளை மேம்படுத்துவதற்கான பணிகளையும் இந்த அரசு மேற்கொள்ளும். பொள்ளாச்சி, கிருஷ்ணகிரி, இராமநாதபுரம், திருவள்ளூர் மற்றும் விருதுநகர் கோட்டங்களில் உள்ள முக்கிய மாநில நெடுஞ்சாலைகளை மேம்படுத்திப் பராமரிக்கும் பணிகள் செயல்பாடு அடிப்படையிலான பராமரிப்பு ஒப்பந்த (Performance Based Maintenance Contract) முறையின் கீழ் ஏற்கெனவே கொண்டுவரப்பட்டுள்ளன. இந்தப் பராமரிப்பு முறை 2018–2019ஆம் ஆண்டில் பழனி கோட்டத்திற்கும் நீட்டிக்கப்படும். சாலைகளின் தரத்தை மேம்படுத்துவதற்கான தேவைகளைக் கருதியும், சீரான கால இடைவெளியில் சாலைகளைப் பராமரிப்பதற்காகவும், ஒருங்கிணைந்த சாலைக் கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டத்திற்கான நிதி கணிசமாக உயர்த்தப்பட்டு, வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில் 3,800 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இது தவிர, வழக்கமான பராமரிப்புப் பணிகளுக்காக, 2018–2019ஆம் ஆண்டிற்கான வரவு–செலவுத் திட்டத்தில் 544 கோடி ரூபாயும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

‘ஊரகச் சாலைகளை தரம் உயர்த்தும் திட்டத்தின்’ கீழ், 2017–2018ஆம் ஆண்டில் 608 கோடி ரூபாய் செலவில் 1,435.96 கிலோமீட்டர் நீளமுள்ள ஊராட்சி ஒன்றிய சாலைகளையும், ஊராட்சி சாலைகளையும் தரம் உயர்த்தும் பணிகளை அரசு ஏற்கெனவே மேற்கொண்டுள்ளது. 2018–2019ஆம் ஆண்டில், கூடுதலாக 2,500 கிலோமீட்டர் நீளமுள்ள சாலைப் பணிகள் 1,000 கோடி ரூபாய் செலவில் மேற்கொள்ளப்படும். இத்திட்டத்திற்காக, 675 கோடி ரூபாய் இந்த வரவு–செலவுத் திட்டத்தில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

உலக வங்கி கடனுதவியுடன் ‘தமிழ்நாடு சாலை மேம்பாட்டுத் திட்டத்தின்’ (TNRSP இரண்டாவது கட்ட திட்டப் பணிகள் 5,171 கோடி ரூபாய் செலவில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. 2017–2018ஆம் ஆண்டில் 413 கோடி ரூபாய் செலவில், திருநெல்வேலி – செங்கோட்டை – கொல்லம் இடையிலான சாலையில் 45 கிலோமீட்டர் நீளமுள்ள சாலைகளை அகலப்படுத்தி வலுப்படுத்தும் பணிகளும், 712 கோடி ரூபாய் செலவில், ஒட்டன்சத்திரம் – தாராபுரம் – அவிநாசி இடையிலான சாலையில் 71 கிலோமீட்டர் நீளமுள்ள சாலைகளை நான்குவழிச் சாலைகளாக மேம்படுத்தும் பணிகளும் அரசு – தனியார் துறை பங்களிப்புடன் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. தமிழ்நாடு சாலை மேம்பாட்டுத் திட்டத்திற்கு இந்த ஆண்டு வரவு–செலவுத் திட்டத்தில் 482.84 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

கிழக்கு கடற்கரை பொருளாதார வழித் தடத்தின் ஓர் அங்கமான சென்னை–கன்னியாகுமரி தொழில் வழித்தடத் திட்டம், தமிழ்நாட்டின் கடற்கரைப் பகுதிகளையும், துறைமுகங்களையும் மேம்படுத்தும் வகையில் செயல்படுத்தப்பட உள்ளது. இத்திட்டத்தின் ஒரு பகுதியாக 6,448.24 கோடி ரூபாய் செலவிலான, 654.54 கிலோமீட்டர் நீளமுள்ள 14 சாலை மேம்பாட்டுப் பணிகளுக்கான விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டு, ஆசிய வளர்ச்சி வங்கியின் நிதியுதவியினைப் பெறுவதற்காக மத்திய அரசின் பரிசீலனையில் உள்ளது. ஜப்பான் பன்னாட்டுக் கூட்டுறவு முகமையின் நிதியுதவியுடன் 12,301 கோடி ரூபாய் செலவில் செயல்படுத்தப்படவிருக்கும் சென்னை சுற்றுவட்டச் சாலை திட்டத்தின் திருத்திய விரிவான திட்ட அறிக்கைக்கு மத்திய அரசு ஒப்புதல் அளித்துள்ளது. இத்திட்டத்தின் முதல் கட்டமாக, தேசிய நெடுஞ்சாலை

**“நீர் நிலைகளை மீட்டெடுப்பதற்காகவும், நிலத்தடிநீர் செறிவூட்டுதலை மேம்படுத்துவதற்காகவும் இந்த அரசு ‘நீர்வள நிலவளத் திட்டத்தின்’ (Irrigated Agriculture Modernisation and Water-Bodies Restoration and Management Project) இரண்டாம் கட்டப் பணிகளை, 3,008 கோடி ரூபாய் திட்ட மதிப்பீட்டில் உலக வங்கி நிதியுதவியுடன் மேற்கொண்டு வருகிறது. இத்திட்டத்தின் கீழ், 29 மாவட்டங்களில், 66 உப வடிநிலப் பகுதிகளுடன் 4,778 குளங்களையும், 477 அணைக்கட்டுகளையும் மறுசீரமைப்பு செய்வதன் மூலம் 5.43 இலட்சம் ஹெக்டேர் ஆயக்கட்டு நிலங்கள் பயனடையும்.”**

எண். 5–ஐ இணைக்கும் எண்ணூர் துறைமுகம் முதல் தச்சூர் வரையிலான வடக்குத் துறைமுக அணுகு சாலையை அமைப்பதற்கான பணிகள் விரைவில் தொடங்கப்படும். இத்திட்டத்திற்காக, 2018–2019ஆம் ஆண்டிற்கான வரவு–செலவுத் திட்டத்தில் 200.60 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இரயில்வே பணிகள் திட்டத்தின் கீழ், 2011ஆம் ஆண்டு முதல் 1,436.66 கோடி ரூபாய் செலவில், 60 இரயில்வே மேம்பாலப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு உள்ளன. இதன் தொடர்ச்சியாக 2018–2019ஆம் ஆண்டில் 6 இரயில்வே மேம்பால கட்டுமானப் பணிகளை 184 கோடி ரூபாய் செலவில் இந்த அரசு மேற்கொள்ளும். 2017–2018ஆம் ஆண்டில் 315 கோடி ரூபாய் செலவில் 126 பாலங்கள் நபார்டு வங்கி நிதியுதவியுடன் கட்டப்பட்டு வருகின்றன. 2018–2019ஆம் ஆண்டில் நபார்டு வங்கி நிதியுதவியுடன் 200 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கூடுதலாக 70 பாலங்களை இந்த அரசு அமைக்கும். 2018–2019ஆம் ஆண்டிற்கான வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில், இரயில்வே பணிகள் திட்டத்திற்காக 513.66 கோடி ரூபாயும், நபார்டு திட்டப் பணிகளுக்காக 250 கோடி ரூபாயும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன. நெடுஞ்சாலைத் துறைக்கு மொத்தமாக 11,073.66 கோடி ரூபாய் இந்த வரவு–செலவுத் திட்டத்தில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### எரிசக்தி

மறைந்த முன்னாள் முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் தொலைநோக்குப் பார்வையாலும் உறுதியான தலைமையாலும், மாநிலத்தில் எரிசக்தித் துறை பெரும் மாற்றங்களைக் கண்டுள்ளது. 2011ஆம் ஆண்டு முதல், இதுவரை கூடுதலாக 10,777 மெகாவாட் மின் உற்பத்தி செய்யும் திறனை சேர்த்துள்ளதன் விளைவாக, மாநிலம் 2016ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில் ஏற்பட்ட அதிகபட்ச மின் தேவையான 15,343 மெகா வாட் மின்சாரத்தை நிறைவாக வழங்க முடிந்தது. மாநிலத்தில் அதிகரித்து வரும் மின் தேவையினைக் கருத்தில் கொண்டு, மின் திட்டங்களை விரைவில் முடித்து, உற்பத்தியைத் தொடங்குவதற்கு அரசு தொடர் முயற்சிகளை எடுத்து வருகிறது. இதன் தொடர்ச்சியாக, 660 மெகாவாட் உற்பத்தித் திறன் கொண்ட எண்ணூர் விரிவாக்க மின்திட்டம், எண்ணூர் சிறப்புப் பொருளாதார மண்டலத்தில் தலா 660 மெகாவாட் உற்பத்தித் திறன் கொண்ட இரண்டு அலகுகள், 800 மெகாவாட் உற்பத்தித் திறன் கொண்ட வடசென்னை அனல் மின்திட்டம் நிலை–III, தலா 800 மெகாவாட் உற்பத்தித் திறனுடைய இரண்டு அலகுகள் கொண்ட உப்பூர் மின்திட்டம் மற்றும் 660 மெகாவாட் உற்பத்தித் திறன் கொண்ட உடன்குடி அனல் மின்திட்டம் நிலை–I இல் இரண்டு அலகுகள் போன்ற மின் திட்டங்களுக்கான பணிகள் நடைபெற்று வருகின்றன.

புதுப்பிக்கத்தக்க எரிசக்தித் துறையில் மாநிலத்தின் முழுத் திறனையும் பயன்படுத்த இந்த அரசு உரிய நடவடிக்கைகளை மேற்கொண்டு வரும் நிலையில், மிகையாக உள்ள காற்றாலை மின்சாரத்தை மின் தட்டுப்பாடு உள்ள இதர மாநிலங்களுக்குக் கொண்டு செல்ல ஏதுவாக மாநிலங்களுக்கு இடையேயான சிறப்புப் பசுமை மின்வழித் தடத்தினை நிறுவிட மத்திய அரசினை இந்த அரசு தொடர்ந்து வலியுறுத்தி வருகிறது. தமிழ்நாடு எரிசக்தி மேம்பாட்டு முகமை, மத்திய அரசின் நிறுவனமான எரிசக்தி திறன் சேவைகள் நிறுவனத்துடன் (Energy Efficiency Services Ltd.,) விரைவில் புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்ய உள்ளது. இதன் விளைவாக, அடுத்த மூன்று ஆண்டுகளில்

புதுப்பிக்கத்தக்க எரிசக்தித் துறையில் 11,000 கோடி ரூபாய் அளவிற்கு தொழில் முதலீடுகள் பெறுவதை துரிதப்படுத்த இயலும்.

ஜெர்மன் வளர்ச்சி வங்கியின் (KfW) கடனுதவியுடன், 1,593 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 'பசுமை ஆற்றல் மின்தொடர் திட்டத்தை' அரசு செயல்படுத்தி வருகிறது. இத்திட்டத்திற்கு இதுவரை 725 கோடி ரூபாய் செலவிடப்பட்டுள்ளது. மேலும், மாநிலத்தின் மின்கடவுத் திறனை மேம்படுத்துவதற்கு, ஜப்பான் பன்னாட்டுக் கூட்டுறவு முகமை உதவியுடன், 5,014 கோடி ரூபாய் மதிப்பீட்டில், 'தமிழ்நாடு மின்தொடரமைப்பு மேம்பாட்டுத் திட்டம்' செயல்படுத்தப்பட்டு வருகிறது. இந்த வரவு–செலவுத் திட்டத்தில் இவ்விரு திட்டங்களுக்கும் முறையே, 258.21 கோடி ரூபாய் மற்றும் 673 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன.

தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்தின் 22,815 கோடி ரூபாய் கடனை, 2016–2017ஆம் ஆண்டில் இந்த அரசு 'உதய்' திட்டத்தின் கீழ், ஏற்றுக்கொண்டதன் விளைவாக, 2016–2017ஆம் ஆண்டில் 4,349 கோடி ரூபாயாக இருந்த தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்தின் நிகர நட்டமானது, 2017–2018ஆம் ஆண்டில் 2,975 கோடி ரூபாயாகக் குறையுமென எதிர்பார்க்கப்படுகிறது. அரசுக்கு ஏற்பட்ட இந்தக் கூடுதல் கடன் சுமையால், வட்டிச் செலவினத்திற்காக 1,779.42 கோடி ரூபாய் 2018–2019ஆம் ஆண்டு வரவு–செலவுத் திட்டத்தில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மேலும், தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்திற்கு அரசால் வழங்கப்பட்ட உதய் திட்டக் கடனை சரிக்கட்டுவதற்காக 4,563 கோடி ரூபாயை மானியமாக வழங்க ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. உதய் திட்டத்தின் கீழ், 2017–2018ஆம் ஆண்டு தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்தில் ஏற்படக்கூடிய நட்டத்தில் 10 சதவீதத்தை, வரும் நிதியாண்டில் தமிழ்நாடு அரசு ஏற்க வேண்டியுள்ளதால், 2018–2019ஆம் ஆண்டிற்கான வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில் 297.50 கோடி ரூபாய் இதற்கென ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. 2018–2019ஆம் ஆண்டிற்கான வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில், விவசாயம் மற்றும் இதர பயன்பாடுகளுக்கான மின்சார மானியமாக 7,537.78 கோடி ரூபாய் உட்பட, 13,964.08 கோடி ரூபாய் மொத்தமாக எரிசக்தித் துறைக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**போக்குவரத்து**

தமிழ்நாட்டில், பேருந்து போக்குவரத்தை பொதுமக்கள் அதிக அளவில் பயன்படுத்தி வருவதால், அதனைத் திறமையாகவும், சிறப்பாகவும் பொதுமக்களுக்கு வழங்க வேண்டும் என்பதில் அரசு உறுதியாக உள்ளது. பொதுவான விலையேற்றம் மற்றும் சம்பளங்களில் ஏற்பட்ட உயர்வால், அரசுப் போக்குவரத்துக் கழகங்களின் செயல்பாடுகளில் ஏற்பட்டுள்ள கடுமையான நிதி நிலைமையைச் சமாளிக்க, 2017–2018ஆம் ஆண்டில் ஓய்வூதியதாரர்களுக்கான ஓய்வூதியப் பலன் நிலுவைகளையும், பணியாளர்களுக்கு வழங்க வேண்டிய நிலுவைகளையும், சாலை விபத்துகளால் பாதிக்கப்பட்டோருக்கான இழப்பீடுகளையும் வழங்க மாநில அரசு 2,519.25 கோடி ரூபாய் நிதியை சிறப்பு வழிவகை முன்பணமாக வழங்கியுள்ளது. மேலும், டீசல் மானியம், மூத்த குடிமக்களுக்கான கட்டண மானியம், மாணவர்களுக்கான பயணக் கட்டணச் சலுகை மானியம் மற்றும் பங்கு மூலதன உதவியாக, 2017–2018ஆம் ஆண்டின் வரவு–செலவுத் திட்டத்தில் 1,364.12 கோடி ரூபாய் ஏற்கெனவே ஒதுக்கீடு செய்யப்பட்டு விடுவிக்கப்பட்டுள்ளது. இது தவிர, மாநிலப் போக்குவரத்துக் கழகங்கள் அரசுக்கு செலுத்த வேண்டிய கடன் தொகையில் 3,001.47 கோடி ரூபாய், மூலதனப் பங்குத் தொகையாக நடப்பாண்டில் மாற்றம் செய்யப்படும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

2018–2019ஆம் ஆண்டில் மாநிலப் போக்குவரத்துக் கழகங்களுக்காக, புதிதாக 3,000 பேருந்துகள் வாங்கப்படும். இதற்கு மொத்தமாகத் தேவைப்படும் 600 கோடி ரூபாயையும் பங்கு மூலதனமாக அரசு வழங்கும். இதன் மூலம், 2017–2018ஆம் ஆண்டில் வாங்க அனுமதிக்கப்பட்ட 2,000 புதிய பேருந்துகளுடன், இந்த 3,000 பேருந்துகளையும் கொண்டு, 10 ஆண்டுகளுக்கும் மேலாகப் பயன்பாட்டில் உள்ள 4,593 பழைய பேருந்துகளும் புதிதாக மாற்றப்படும். நிதி நிறுவனங்களுக்கு கொடுக்கப்பட வேண்டிய நிலுவைகளையும், பணியாளர்களுக்கு வழங்க வேண்டிய நிலுவைத் தொகையையும் வழங்க, வழிவகை முன்பணமாக 900 கோடி ரூபாய் நிதியினை ஒரு சிறப்பு நிகழ்வாக அரசுப் போக்குவரத்துக் கழகங்களுக்கு வழங்க, இந்த வரவு–செலவுத் திட்டத்தில் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மாணவர்கள் மற்றும் மூத்த குடிமக்களுக்கான பயணக் கட்டணச் சலுகை மானியத்திற்காக 799.25 கோடி ரூபாய் உட்பட, போக்குவரத்துத் துறைக்கு 2,717.34 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**சென்னை மெட்ரோ இரயில் திட்டம்**

சென்னை மாநகரப் போக்குவரத்தில், சென்னை மெட்ரோ இரயில் திட்டம் மாபெரும் மாற்றத்தினை ஏற்படுத்தியுள்ளது. திருவொற்றியூர் வரையிலான நீட்டிப்பு

"2018–2019ஆம் ஆண்டில் நபார்டு வங்கி நிதியுதவியுடன் 200 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கூடுதலாக 70 பாலங்களை இந்த அரசு அமைக்கும். 2018–2019ஆம் ஆண்டிற்கான வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில், இரயில்வே பணிகள் திட்டத்திற்காக 513.66 கோடி ரூபாயும், நபார்டு திட்டப் பணிகளுக்காக 250 கோடி ரூபாயும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன.நெடுஞ்சாலைத் துறைக்கு மொத்தமாக 11,073.66 கோடி ரூபாய் இந்த வரவு–செலவுத் திட்டத்தில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது."

உட்பட மொத்த திட்டச் செலவான 22,828 கோடி ரூபாயில், இதுவரை 16,258.45 கோடி ரூபாய் செலவிடப்பட்டுள்ளது. மெட்ரோ இரயில் திட்டத்தின் பலனைக் கருத்திற்கொண்டு, இத்திட்டத்தின் இரண்டாம் கட்டமாக, 107.55 கிலோமீட்டர் நீளமுள்ள மூன்று மெட்ரோ இரயில் வழித்தடங்கள் அமைப்பதற்கான திட்டம் மாநில அரசால் பரிந்துரைக்கப்பட்டு, ஜப்பான் பன்னாட்டுக் கூட்டுறவு முகமையின் நிதியுதவியை எதிர்நோக்கி மத்திய அரசின் ஒப்புதலுக்காக அனுப்பப்பட்டுள்ளது. சென்னை மெட்ரோ இரயில் திட்டத்தின் இரண்டாம் கட்டத் திட்டத்திற்கு, மத்திய அரசு விரைவில் தனது ஒப்புதலை வழங்கும் என நான் நம்புகிறேன். இதன் தொடர்ச்சியாக, கோயம்புத்தூர் மாநகருக்கான மெட்ரோ இரயில் திட்டத்தினைச் செயல்படுத்துவது தொடர்பான விரிவான சாத்தியக் கூறுகள் மற்றும் திட்ட அறிக்கை தயாரிப்பதற்கான பணிகள் துவங்கப்பட்டுள்ளன. இந்த வரவு–செலவுத் திட்டத்தில் சென்னை மெட்ரோ இரயில் திட்டத்திற்கு 750 கோடி ரூபாயை பங்கு மூலதன உதவியாகவும், 1,000 கோடி ரூபாயை துணைக் கடனாகவும் வழங்குவதற்கு நிதி ஒதுக்கீடுகள் செய்யப்பட்டுள்ளன.

### சுற்றுலா

அரசு எடுத்த பல்வேறு நடவடிக்கைகளினால், 2016ஆம் ஆண்டிலும் நாட்டிலேயே உள்நாட்டு சுற்றுலாப் பயணிகளை ஈர்ப்பதில் தொடர்ந்து நான்காவது ஆண்டாக முதலிடத்திலும், வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளை ஈர்ப்பதில் தொடர்ந்து மூன்றாவது ஆண்டாக முதலிடத்திலும் தமிழ்நாடு உள்ளது. ஆசிய வளர்ச்சி வங்கியின் கடனுதவியுடன் செயல்படுத்தப்பட்ட 'தமிழ்நாடு சுற்றுலா உட்கட்டமைப்பு மேம்பாட்டு முதலீட்டுத் திட்டத்தின்' முதல் கட்டப் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. இத்திட்டத்தின் இரண்டாம் கட்டப் பணிகள் ஏற்கெனவே துவங்கப்பட்டுள்ளன. இத்திட்டத்தின் கீழ், 288 கோடி ரூபாய் செலவில், 14 தொகுப்புப் பணிகளுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ள நிலையில், அவற்றிற்கான பணிகள் 2018–2019ஆம் ஆண்டில் துவங்கும். இந்த வரவு–செலவுத் திட்டத்தில் சுற்றுலா மேம்பாட்டிற்காக 173.42 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### தகவல் தொழில்நுட்பவியல்

தமிழ்நாட்டில் 8 தகவல் தொழில்நுட்பப் பூங்காக்களை அரசு ஏற்படுத்தியுள்ளது, அவற்றில், சேலம் மற்றும் ஒசூரில் புதிய தகவல் தொழில்நுட்பப் பூங்காக்கள் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் சமீபத்தில் தொடங்கி வைக்கப்பட்டன. ஊரகப் பகுதிகளில் வசிக்கும் மக்களுக்கு நம்பகமான, அதிவேக இணைப்பினை வழங்கும் வகையில், கண்ணாடி இழை வட வலையமைப்பு (Optical Fibre Network) மூலம் கிராமங்களை வட்டாரத் தலைமையகத்துடன் இணைக்க, 1,230 கோடி ரூபாய் மதிப்பீட்டில் பாரத் நெட் திட்டம் தமிழ்நாடு இழை வலையமைப்புக் கழகத்தின் (Tamil Nadu Fibre Net Corporation) மூலம் செயல்படுத்தப்படும். இதேபோன்று, மாநிலத் தலைமையிடத்தை மாவட்டத் தலைமையிடங்களுடனும், வட்டாரத் தலைமையிடங்களுடனும் கண்ணாடி இழை வட வலையமைப்பு மூலமாக இணைக்க, அரசுத் துறை – தனியார் துறை பங்களிப்புடன் தமிழ் நெட் திட்டம் செயல்படுத்தப்படும். மாநில அளவிலான அலுவலகங்களை தகவல் தொழில்நுட்ப வலையமைப்பு மூலம் வட்டாரங்களுடன் இணைப்பதை மேலும் செம்மைப்படுத்த, தமிழ்நாடு மாநில பெரும்பரப்பு வலையமைப்புத் திட்டத்தின் மூன்றாம் கட்டப் பணிகள் (Tamil Nadu State Wide Area Network – III) 443.64 கோடி ரூபாய் மதிப்பீட்டில் விரைவில் தொடங்கப்படும். 2018–2019ஆம் ஆண்டிற்கான வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில் தகவல் தொழில்நுட்பத் துறைக்கு 158.11 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### தொழில் வளர்ச்சி

தொழில் வளர்ச்சியில், நாட்டிலேயே தமிழ்நாடு முன்னிலை வகித்து வருகிறது. புதிய முதலீடுகளை ஈர்ப்பதற்கும், புதிய வேலைவாய்ப்புகளை உருவாக்குவதற்கும் சாதகமான சூழலை ஏற்படுத்துவதன் மூலம், முதலீடுகளை ஈர்த்துப் பெறுவதில் முன்னோடி மாநிலமாகத் தமிழ்நாட்டை தொடர்ந்து நிலைநிறுத்த, அரசு பெரும் முக்கியத்துவம் அளித்து வருகிறது. ஒரு முக்கிய நிருவாக அமைப்புச் சீர்திருத்த முன்முயற்சியாக, அனுமதிகளையும், புதுப்பித்தல் உத்தரவுகளையும் சம்பந்தப்பட்ட 11 துறைகளில் முதலீட்டாளர்கள் எளிதில் பெறுவதற்கு வழிவகை செய்ய, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் ஒற்றைச் சாளர முறைக்கான இணையதளம் (Single Window Portal) துவக்கி வைக்கப்பட்டுள்ளது. ஒரு குறிப்பிட்ட காலவரையறைக்குள் ஒப்புதல் வழங்கவும், அதில் தாமதம் ஏற்பட்டால், சில இனங்களுக்கு ஒப்புதல் அளித்ததாகக் கருதிட வழிவகை செய்யும் ஒற்றைச் சாளர முறையை வலுப்படுத்தும் வகையில் தமிழ்நாடு வணிக எளிதாக்குதல் சட்டம், 2018 இயற்றப்பட்டுள்ளது. நமது மாநிலத்தின் தொழில் செய்வதை எளிமையாக்கும் நிலைப்பாட்டுக் குறியீட்டை (Ease of Doing Business Index) மேம்படுத்திட ஒருங்கிணைந்த முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

புதிய தொழில் அலகுகளை ஊக்குவிக்கும் பொருட்டு 5,023 ஏக்கர் அளவிலான நில வங்கியினை சிப்காட் ஏற்கனவே உருவாக்கியுள்ளது. புதிய முதலீட்டாளர்களுக்குப் போதுமான நிலத்தினை ஒதுக்கீடு செய்வதற்கு, கூடுதலாக 9,030 ஏக்கர் நிலங்களைக் கையகப்படுத்தி சிப்காட் நிறுவனம் நில வங்கியை விரிவுபடுத்தும். சென்னை கன்னியாகுமரி தொழில் வழித்தடத் திட்டம் மற்றும் மதுரை–தூத்துக்குடி தொழில் வழித்தடத் திட்டங்களைச் செயல்படுத்தி, தமிழ்நாட்டின் தென் பகுதிகளில் தொழில் மேம்பாட்டிற்கு சிறப்புக் கவனம் செலுத்தப்படும். தொழில் முதலீடுகளை ஊக்குவிக்கும் வகையில், காஞ்சிபுரம் மாவட்டம், வல்லம் வடகாலில் வானூர்திப் பூங்கா, கோயம்புத்தூரில் டைசல் உயிர்ப் பூங்கா, பொன்னேரியில் பிளாஸ்டிக் தொழிற்பூங்கா மற்றும் செங்கல்பட்டில் மருத்துவப் பூங்கா அமைக்க சிறப்பு முயற்சிகளை இந்த அரசு தொடர்ந்து எடுத்து வருகிறது. வளர்ச்சியடைந்த வாகன தயாரிப்புத் துறையினை அடித்தளமாகக் கொண்டு, வானூர்திப் பூங்கா மற்றும் பாதுகாப்பு உபகரண உற்பத்திக்கான தொழில் வழித்தடத்தையும் அமைக்க சிறப்புக் கவனம் செலுத்தப்படும். இதன் மூலம், 10,000 கோடி ரூபாய் அளவிற்கு முதலீடுகள் ஈர்க்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

உலக முதலீட்டாளர்கள் முதல் மாநாடு செப்டம்பர் 2015ஆம் ஆண்டு செப்டம்பர் மாதத்தில், புரட்சித்தலைவி அம்மா அவர்களின் தலைமையில் வெற்றிகரமாக நடத்தப்பட்டது. மொத்தமாக 2.42 இலட்சம் கோடி ரூபாய் முதலீட்டிலான, 98 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையெழுத்திடப்பட்டன. இதில், 62,738 கோடி ரூபாய் முதலீட்டில் 62 திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. இதனால் 96,341 நபர்களுக்கு வேலை வாய்ப்புகள் உருவாக்கப்பட்டுள்ளன. இதைத் தொடர்ந்து, உலக முதலீட்டாளர்கள் இரண்டாவது மாநாட்டை 2019ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 23 மற்றும் 24 ஆகிய தேதிகளில் நடத்துவதற்கு அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது. பெரிய முதலீடுகளுக்கு கட்டமைப்பு உதவித் தொகுப்புகள் வழங்கும் கொள்கையினை இந்த அரசு தொடர்ந்து கடைபிடிக்கும். முதலீட்டு அளவைப் பொறுத்தும், வேலைவாய்ப்பை உருவாக்கும் திறனைப் பொறுத்தும், உப தொழில்கள் மற்றும் சார்புத் தொழில்கள் உருவாக்கப்பட உள்ள வாய்ப்புகளைப் பொறுத்தும், உதவித் தொகுப்புகளின் அம்சங்கள் தனிப்பட்ட முறையில் ஒவ்வொரு முதலீட்டாளருக்கும் முடிவு செய்யப்படும். 2017–2018ஆம் ஆண்டில் முதலீட்டு மானியமாக 1,600 கோடி ரூபாய் விடுவிக்கப்பட்ட நிலையில், 2018–2019ஆம் ஆண்டில் இந்த மானியம் 2,000 கோடி ரூபாயாக உயர்த்தப்பட்டுள்ளது.

### குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில்கள்

தமிழ்நாட்டில் பதிவு செய்யப்பட்ட 17.20 இலட்சம் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் இயங்கி வருகின்றன. 2015ஆம் ஆண்டு நடைபெற்ற உலக முதலீட்டாளர்கள் மாநாட்டில், 16,533 கோடி ரூபாய் முதலீட்டில் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களை முதலீட்டாளர்கள் தொடங்குவதற்கான 10,073 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்பட்டன. இவற்றில், 6,280 கோடி ரூபாய் முதலீட்டில், 72,939 நபர்களுக்கு வேலைவாய்ப்பை உருவாக்கும் 5,544 தொழில் நிறுவனங்கள் உற்பத்தியைத் தொடங்கியுள்ளன. குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள், ஒதுக்கப்பட்ட நிலத்தை திறன்படப் பயன்படுத்துவதை ஊக்குவிக்க, மனைகளுக்கான பரப்பளவு (Plot Coverage) மாநிலத்தின் அனைத்துப் பகுதிகளுக்கும் 75 சதவீதமாக சீராக உயர்த்தப்பட்டு, தரைதளக் குறியீடும் (Floor Space Index) சாலை அகலத்திற்கு ஏற்றார் போல் உயர்த்தப்படும். அம்பத்தூர் தொழிற்பேட்டையில் 30 கோடி ரூபாய் செலவில் குறு நிறுவனங்களுக்காக பன்னடுக்கு பணிமனைகள் சிறுதொழில் மேம்பாட்டுக் கழகத்தால் (SIDCO)

கட்டப்படும். தேவையான இடங்களில், குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களின் பணியாளர்கள் குறைந்த செலவில் தங்குவதற்காக பணியாளர்களுக்கான விடுதிகள் கட்டப்பட்டு, அரசு–தனியார் பங்களிப்பு முறையின் கீழ் நிருவகிக்கப்படும்.

குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களை ஊக்குவிக்கும் பொருட்டு, மாநிலம் முழுவதும் 105 தொழிற்பேட்டைகளை தமிழ்நாடு அரசு உருவாக்கியுள்ளது. இத்தகைய தொழில் நிறுவனங்கள் சிறப்பாகச் செயல்பட ஏதுவாக, புதிய தொழிற்பேட்டைகள் அமைக்க இந்த அரசு எடுத்து வரும் முன்முயற்சிகள் தொடரும். பெரிய தொழிற்சாலைகளுக்கு தற்போது கிடைக்கும் இணையதள ஒற்றைச் சாளர முறையில் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களுக்குத் தகுந்தாற்போல் மாற்றங்கள் செய்யப்பட்டு, விரைவில் செயல்முறைக்கு கொண்டு வரப்படும். தமிழ்நாடு வணிக எளிதாக்குதல் சட்டமும், இணையதள ஒற்றைச் சாளர முறையும் ஒன்றுக்கொன்று இசைந்து செயல்பட்டு, குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களின் வளர்ச்சிக்கு உதவும். மேலும், அரசு மற்றும் மாநிலப் பொதுத்துறை நிறுவனங்கள் மூலம் மேற்கொள்ளப்படும் கொள்முதல்களில், 25 சதவீதம் வரை தகுதியான குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களிடமிருந்து முன்னுரிமை அடிப்படையில் கட்டாயமாக கொள்முதல் செய்யும் வகையில், தமிழ்நாடு ஒளிவுமறைவற்ற ஒப்பந்தப் புள்ளிகள் சட்டத்தில் உரிய திருத்தம் கொண்டுவரப்படும்.

முதல் தலைமுறை தொழில் முனைவோரை ஊக்கப்படுத்த இந்த அரசால் தொடங்கப்பட்ட முன்னோடித் திட்டமான 'புதிய தொழில் முனைவோர் மற்றும் தொழில் மேம்பாட்டுத் திட்டம் தொடங்கப்பட்ட 2011ஆம் ஆண்டிலிருந்து இதுவரை 4,190 முதல் தலைமுறை தொழில் முனைவோர்கள் பயனடைந்துள்ளனர். இத்திட்டத்தில் அதிகபட்ச கடன் உச்சவரம்பு தற்போதுள்ள ஒரு கோடி ரூபாயிலிருந்து ஐந்து கோடி ரூபாயாக உயர்த்தப்படும். எனினும், அதிகபட்ச மானிய உச்சவரம்பு தற்போதுள்ள 25 இலட்சம் ரூபாயாகத் தொடரும். 2018–2019ஆம் ஆண்டிற்கான வரவு–செலவுத் திட்டத்தில், இத்திட்டத்திற்கு 100 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் துறைக்கு, 2018–2019ஆம் ஆண்டிற்கான வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில் 540.66 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை

கைத்தறி நெசவாளர்களுக்குத் தொடர்ச்சியாக வேலைவாய்ப்பு கிடைப்பதை உறுதி செய்யும் வகையில், 2018–2019ஆம் ஆண்டில் 'விலையில்லா சேலைகள், வேட்டிகள் வழங்கும் திட்டத்தைச்' செயல்படுத்துவதற்காக, 490.45 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. ஒருங்கிணைந்த கைத்தறி வளர்ச்சித் திட்டத்தின் கீழ், சந்தைப்படுத்துதலுக்கான ஊக்கத்தொகை வழங்க மத்திய அரசு விதிமுறைகளை கடுமையாக்கியுள்ளதால், கைத்தறித் துறைக்கு ஏற்படும் பாதிப்பைத் தவிர்க்க, தள்ளுபடி மானியத் திட்டத்திற்கான ஒதுக்கீட்டை இந்த அரசு அதிகரித்துள்ளது. கைத்தறி நெசவுக்கு மேலும் ஆதரவு அளிக்கும் வகையில், உற்பத்திப் பொருட்களில் புதுமை முயற்சிகளையும், பல்வகைப்படுத்துதலையும் ஊக்குவிக்கும் வகையில் நிதியுதவி அளிக்க 'கைத்தறி உதவித் திட்டம்' என்ற புதிய திட்டத்தை அரசு செயல்படுத்தும். கைத்தறி துணி விற்பனை மீதான தள்ளுபடி மானியத் திட்டத்திற்கான ஒதுக்கீடு 80 கோடி ரூபாயிலிருந்து 150 கோடி ரூபாயாக உயர்த்தப்படுவதுடன், கைத்தறி உதவித் திட்டத்திற்கு 2018–2019ஆம் ஆண்டிற்கான வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில் 40 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மேலும், கைத்தறி, விசைத்தறி, பின்னலாடை மற்றும் ஆயத்த ஆடை தொழில்களை ஊக்குவித்து, நிலைக்கத்தக்க வகையில் வலுப்படுத்தி மேம்படுத்திட, ஒரு 'புதிய ஒருங்கிணைந்த ஜவுளிக் கொள்கையினை' அரசு விரைவில் வெளியிடும். வளர்ந்து வரும் தொழில்நுட்ப ஜவுளி துணிகளை (Technical Textiles) தயாரிக்கும் நிறுவனங்கள் போன்று, புதிய உற்பத்தி முயற்சியில் ஈடுபடும் நிறுவனங்களை ஊக்குவிக்கவும், ஜவுளி ஏற்றுமதியை அதிகரிக்கவும் உரிய உத்திகளுடன் இந்தப் புதிய கொள்கை வடிவமைக்கப்படும்.

கதர் பொருட்களை உற்பத்தி செய்யும் சர்வோதய சங்கங்களை ஊக்குவிக்கும் வகையில், 'சந்தை மேம்பாட்டு நிதியுதவித் திட்டம்' 2018–2019ஆம் ஆண்டின் வரவு–செலவுத் திட்டத்தில் 30 கோடி ரூபாய் ஒதுக்கீட்டுடன் தொடர்ந்து செயல்படுத்தப்படும். 2018–2019ஆம் ஆண்டிற்கான வரவு–செலவுத் திட்டத்தில், கைத்தறி மற்றும் துணிநூல் துறைக்காக 1,240.72 கோடி ரூபாயும், கைவினை மற்றும் கதர்த் துறைக்காக 227.46 கோடி ரூபாயும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன.

### ஊரக வளர்ச்சி

அனைத்து ஊரகக் குடியிருப்புகளுக்கும் சாலை இணைப்பு மற்றும் இதர அடிப்படை வசதிகளை ஏற்படுத்தித் தரவேண்டும் என்பதில் இந்த அரசு உறுதியாக உள்ளது. அனைத்துப் பருவகாலங்களுக்கும் ஏற்ற சாலைகளுடன் இதுவரை இணைக்கப்படாத

ஐந்நூறுக்கும் மேற்பட்ட மக்கள் தொகை கொண்ட 16 பழங்குடியினர் குடியிருப்புகளுக்கு 2018–2019ஆம் ஆண்டில் சாலை இணைப்புகள் ஏற்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும். 2017–2018ஆம் ஆண்டில் 'பிரதம மந்திரி கிராமப்புறச் சாலைகள் திட்டத்தின்' கீழ், 1,367 கிலோமீட்டர் நீளமுள்ள 573 சாலைகள் மேம்படுத்தப்பட்டுள்ளதுடன், 22 பாலங்களின் கட்டுமானப் பணிகள் 758.44 கோடி ரூபாய் செலவில் மேற்கொள்ளப்பட்டுள்ளன. மேலும், 2018–2019ஆம் ஆண்டில் 'பிரதம மந்திரி கிராமப்புறச் சாலைகள் திட்டத்தின்' கீழ், 2,658.58 கிலோமீட்டர் நீளமுள்ள 769 சாலைகளின் மேம்பாடு மற்றும் 25 பாலங்களின் கட்டுமானப் பணிகள் 1,244.35 கோடி ரூபாய் செலவில் மேற்கொள்ளப்படும்.

'மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதித் திட்டத்தை' சிறப்பாகச் செயல்படுத்தி, மத்திய அரசின் பாராட்டுதலை தமிழ்நாடு தொடர்ந்து பெற்று வருகிறது. 2017–2018ஆம் ஆண்டில் இதுவரை, 22.77 கோடி மனித நாட்களுக்கு வேலைவாய்ப்புகள் ஏற்படுத்தப்பட்டு, 5,186.19 கோடி ரூபாய் பயனாளிகளுக்கு ஊதியமாக வழங்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ், மொத்த வேலை நாட்களில் 19.50 கோடி வேலை நாட்கள் பெண்களின் பங்களிப்பைப் பெற்று, நாட்டிலேயே தமிழ்நாடு பெண்களின் பங்களிப்பில் முதன்மையாகத் திகழ்கிறது. இத்திட்டத்தில் 2018–2019ஆம் ஆண்டில் 5,200 கோடி ரூபாயை மத்திய அரசிடமிருந்து நேரடியாக மானியமாகப் பெறப்படும் எனக் கருதி, 1,000 கோடி ரூபாய் மாநில அரசின் பங்காக வரவு–செலவுத் திட்டத்தில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

2017–2018ஆம் ஆண்டில் 'சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்' கீழ், சட்டமன்ற உறுப்பினர்களுக்கு வழங்கப்படும் வளர்ச்சி நிதி, இரண்டு கோடி ரூபாயிலிருந்து இரண்டரை கோடி ரூபாயாக உயர்த்தப்பட்டுள்ளதை மாண்புமிகு உறுப்பினர்கள் அறிவீர்கள். 2018–2019ஆம் ஆண்டிற்கான வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில், சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்திற்கு 587.50 கோடி ரூபாய் உட்பட, மொத்தமாக 17,869.93 கோடி ரூபாய் ஊரக வளர்ச்சித் துறைக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**நகராட்சி நிருவாகம்**

மாநிலத்தில் நகரமயமாதல் அதிகரித்து வருவதால், நகர்ப் பகுதிகளில் அடிப்படை வசதிகளும், உட்கட்டமைப்பு வசதிகளும் தரம் உயர்த்தப்பட வேண்டிய தேவை அதிகரித்துள்ளது. சென்னை மாநகராட்சியின் விரிவாக்கப்பட்ட பகுதிகளில், அடிப்படை வசதிகளை வழங்குவதற்காகவும், சாலைகள், குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீர் மேலாண்மை போன்ற நகர்ப்புர உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்காகவும், 2018–2019ஆம் ஆண்டு முதல் சென்னைப் பெருநகர வளர்ச்சி இயக்கத்தை அரசு மீண்டும் செயல்படுத்தும். இத்திட்டத்திற்காக, 2018–2019ஆம் ஆண்டிற்கான வரவு–செலவுத் திட்டத்தில், 500 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. அதேபோல், 'அட்டல் நகர்ப்புர புத்துணர்வு மற்றும் நகர்ப்புர மாற்றத்திற்கான திட்டத்தின்' (AMRUT) கீழ், பணிகள் மேற்கொள்ளப்படாத நகரங்களில், நகர்ப்புர உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்திட 'ஒருங்கிணைந்த நகர்ப்புர வளர்ச்சி இயக்கத்தையும்' 2018–2019ஆம் ஆண்டு முதல் மீண்டும் இந்த அரசு செயல்படுத்தும். இதற்கென வரவு–செலவுத் திட்டத்தில் 750 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

மத்திய அரசின் 'திறன்மிகு நகரங்கள் இயக்கத்தின்' கீழ், 2017–2018ஆம் ஆண்டில், ஈரோடு, திருப்பூர், தூத்துக்குடி, திருநெல்வேலி மற்றும் திருச்சிராப்பள்ளி ஆகிய நகரங்கள் சேர்க்கப்பட்டுள்ளன. இந்நகரங்களையும் சேர்த்து, தற்போது தமிழ்நாட்டிலுள்ள 11 நகரங்கள் இந்த திறன்மிகு நகரங்கள் இயக்கத்தின் கீழ் நிதியுதவி பெறுகின்றன. இத்திட்டத்தின் கீழ், 198 திட்டங்களுக்கு 15,213 கோடி ரூபாய் ஒப்புதலளிக்கப்பட்டு 33 திட்டங்களுக்கான பணிகள் செயல்பாட்டில் உள்ளன. இத்திட்டத்திற்கு தனது பங்காக 828 கோடி ரூபாயை மத்திய அரசு இதுவரை விடுவித்துள்ளது. மாநில அரசும் தனது பங்காக 840 கோடி ரூபாய் நிதியினை இதுவரை விடுவித்துள்ளது. 2018–2019ஆம் ஆண்டிற்கான வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில் திறன்மிகு நகரங்கள் இயக்கத்திற்கு 1,400 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

அம்ருத் திட்டத்தின் கீழ், 28 நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. இதுவரை, 28 நகரங்களில் 428 உட்கட்டமைப்பு மேம்பாட்டுப் பணிகள் 11,498.41 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மேற்கொள்ள ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. மாநில அரசின் பங்கு உட்பட மொத்தம் 1,468.28 கோடி ரூபாய் உள்ளாட்சி அமைப்புகளுக்கு இத்திட்டத்தில் விடுவிக்கப்பட்டுள்ளது. இந்த வரவு–செலவுத் திட்டத்தில் 1,200 கோடி ரூபாய் அம்ருத் திட்டத்திற்கென ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளின் பங்குத் தொகையினை வழங்கி, அம்ருத் திட்டத்தினைச் செயல்படுத்திட, 4,790 கோடி ரூபாய் மதிப்பீட்டில் ஆசிய வளர்ச்சி வங்கி நிதியுதவியுடன் 'தமிழ்நாடு நகர்ப்புர முன்னோடி முதலீட்டுத் திட்டத்தினை' (Tamil Nadu Urban Flagship Investment Programme) மாநில

“2018–2019ஆம் ஆண்டிற்கான வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில், ‘தமிழ்நாடு நிலையான நகர்ப்புர வளர்ச்சித் திட்டத்திற்கு’ 712.70 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. 2018–2019ஆம் ஆண்டில், 200 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நபார்டு வங்கி நிதியுதவியுடன், பேரூராட்சிகளில் உள்ள 400 கிலோமீட்டர் நீளமுள்ள சாலைகளைத் தரம் உயர்த்துவதற்கான மேம்பாட்டுப் பணிகளை இந்த அரசு செயல்படுத்தும்.”

அரசு செயல்படுத்தும். இந்தத் திட்டத்திற்கு ஆசிய வளர்ச்சி வங்கி விரைவில் தனது ஒப்புதலை அளிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. 2015ஆம் ஆண்டு முதல், உலக வங்கி நிதியுதவியுடன், ‘தமிழ்நாடு நிலையான நகர்ப்புர வளர்ச்சித் திட்டத்தை’ (TNSUDP) 3,831 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மாநில அரசு செயல்படுத்தி வருகிறது. இத்திட்டத்தின் கீழ், இதுவரை 13 நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளில்,854.59கோடி ரூபாய்செலவிடப்பட்டுள்ளது. 2018–2019ஆம் ஆண்டிற்கான வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில், ‘தமிழ்நாடு நிலையான நகர்ப்புர வளர்ச்சித் திட்டத்திற்கு’ 712.70 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. 2018–2019ஆம் ஆண்டில், 200 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நபார்டு வங்கி நிதியுதவியுடன், பேரூராட்சிகளில் உள்ள 400 கிலோமீட்டர் நீளமுள்ள சாலைகளைத் தரம் உயர்த்துவதற்கான மேம்பாட்டுப் பணிகளை இந்த அரசு செயல்படுத்தும்.

நகர்ப்புரம் மற்றும் நகர்ப்புரத்தை ஒட்டியுள்ள பகுதிகளில் பாதாளச் சாக்கடைக்கான கட்டுமானப் பணிகளை, சென்னை குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வாரியத்தின் மூலமாகவும், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலமாகவும் இந்த அரசு மேற்கொண்டு வருகிறது. இதுவரை, 8 மாநகராட்சிகள், 27 நகராட்சிகள் மற்றும் 3 பேரூராட்சிகளில் பாதாளச் சாக்கடை திட்டங்கள் செயல்பாட்டில் உள்ளன. 11 மாநகராட்சிகள், 21 நகராட்சிகள் மற்றும் 6 பேரூராட்சிகளில் பாதாளச் சாக்கடை திட்டப் பணிகள் நடைபெற்று வருகின்றன. தற்போது, 5,844.70 கோடி ரூபாய் செலவில் 38 பாதாளச் சாக்கடைத் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. இதேபோல், சென்னை குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வாரியம் 704.26 கோடி ரூபாய் செலவில், 13 பாதாளச் சாக்கடை திட்டப் பணிகளை சென்னை மாநகரில் மேற்கொண்டு வருகிறது. சென்னை மாநகராட்சியில் புதிதாகச் சேர்க்கப்பட்ட விரிவாக்கப் பகுதிகளில், 2018–2019ஆம் ஆண்டில் 614.84 கோடி ரூபாய் செலவில் பாதாளச் சாக்கடைப் பணிகள் மேற்கொள்ளப்படும்.

2018–2019ஆம் ஆண்டிற்கான வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில், நகராட்சி நிருவாகத் துறைக்கு 13,896.48 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### குடிநீர் விநியோகம்

தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் 4,466 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 101.67 இலட்சம் மக்கள் பயனடையும் வகையில், இரண்டு மாநகராட்சிகள், 17 நகராட்சிகள், 49 பேரூராட்சிகள் மற்றும் 14,218 கிராம ஊராட்சிகளில் 55 குடிநீர் வழங்கும் திட்டங்களை செயல்படுத்தி வருகிறது. சென்னையுடன் இணைக்கப்பட்ட 27 பகுதிகளிலும், 599.66 கோடி ரூபாய் செலவில் குடிநீர் வழங்கும் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. அம்ருத் திட்டத்தின் கீழ், ஐந்து மாநகராட்சிகள் மற்றும் இரண்டு நகராட்சிகளில் வசிக்கும் 23.17 இலட்சம் மக்கள் பயன்பெறும் வகையில், ஏழு குடிநீர் வழங்கும் திட்டங்கள் 1,823.60 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

‘தேசிய ஊரகக் குடிநீர் திட்டத்திற்கான’ (NRDWP) ஒதுக்கீட்டை மத்திய அரசு குறைத்துள்ள போதிலும், நபார்டு வங்கி நிதியுதவியுடன் ஊரகப் பகுதிகளில் குடிநீர் வழங்கல் திட்டங்களை மாநில அரசு தொடர்ந்து செயல்படுத்தி வருகிறது. தேசிய ஊரக குடிநீர் திட்டத்தின் கீழ் 300 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான பணிகளும், குறைந்தபட்ச தேவைகள் திட்டத்தின் கீழ், 186 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான பணிகளும், நபார்டு வங்கி நிதியுதவியின் கீழ் 600 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான பணிகளும் 2017–2018ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்டுள்ளன. 2018–2019ஆம் ஆண்டிற்கான வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில், தேசிய ஊரகக் குடிநீர் திட்டத்திற்காக 300 கோடி ரூபாயும், குறைந்தபட்ச தேவைகள் திட்டத்திற்காக 186 கோடி ரூபாயும், நபார்டு வங்கி

நிதியுதவி வழங்கும் திட்டங்களுக்காக 600 கோடி ரூபாயும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன.

குடிநீர் வழங்கல் பணிகளுக்காக, மொத்தமாக 1,853.38 கோடி ரூபாய் இந்த வரவு செலவுத் திட்டத்தில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**ஏழைகளுக்கான வீட்டு வசதி**

தமிழ்நாட்டில் குடிசைகளற்ற கிராமங்களையும், குடிசைப் பகுதிகளற்ற நகரங்களையும் உருவாக்க வேண்டும் என்ற மறைந்த முன்னாள் முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் கனவை நனவாக்க இந்த அரசு தொடர்ந்து செயல்பட்டு வருகிறது. 2017–2018ஆம் ஆண்டில் 'பிரதம மந்திரி வீட்டுவசதித் திட்டத்தின் (ஊரகம்)' கீழ், மத்திய அரசின் நிதியுதவியான 975 கோடி ரூபாய் உள்ளிட்ட, 2,276 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 1.30 இலட்சம் வீடுகளைக் கட்ட இந்த அரசு அனுமதி வழங்கியுள்ளது. 2018–2019ஆம் ஆண்டில், மேலும் 2,276 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 1.30 இலட்சம் வீடுகள் கட்டப்படும். இதுதவிர, 'முதலமைச்சரின் சூரியஒளி மின்வசதி கொண்ட பசுமை வீடுகள் திட்டத்தின்' கீழ், 420 கோடி ரூபாய் செலவில் 20,000 வீடுகள் கட்டப்படும். 2018–2019ஆம் ஆண்டிற்கான வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில், ஊரகப் பகுதிகளுக்கான வீட்டுவசதித் திட்டங்களுக்காக, மொத்தம் 2,696.14 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

நகர்ப்புரங்களில் வசித்து வரும் 13.92 இலட்சம் வீடில்லா ஏழைக் குடும்பங்களுக்கு வீடுகளுக்கான தேவை உள்ளது. அதை 2023ஆம் ஆண்டிற்கு முன்னர் நிறைவு செய்ய தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியம் நடவடிக்கை எடுத்து வருகிறது. இதுவரை, 'அனைவருக்கும் வீட்டுவசதி–பிரதம மந்திரி வீட்டுவசதி (நகர்ப்புரம்) திட்டத்தின்' கீழ், 16,776.04 கோடி ரூபாய் திட்ட மதிப்பீட்டில் 4.25 இலட்சம் குடியிருப்புகளைக் கட்டுவதற்கான பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அனுமதிக்கப்பட்ட இந்த மொத்த மதிப்பீட்டில், மத்திய அரசு தனது பங்கான 6,373.29 கோடி ரூபாயில், 1,497.97 கோடி ரூபாய் இதுவரை விடுவிக்கப்பட்டுள்ளது. 2018–2019ஆம் ஆண்டில் இத்திட்டத்தின் கீழ் மேலும் ஒரு இலட்சம் குடியிருப்புகள் கட்ட நடவடிக்கை எடுக்கப்படும். 2018–2019ஆம் ஆண்டிற்கான வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில், 'அனைவருக்கும் வீட்டுவசதி – பிரதம மந்திரி வீட்டுவசதி (நகர்ப்புரம்) திட்டத்திற்கு' 2,301.30 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

2017–2018ஆம் ஆண்டில், 1,278.87 கோடி ரூபாய் செலவில் 4,746 வீடுகளை தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம் கட்டி முடித்துள்ளன. 2018–2019ஆம் ஆண்டில், குறைந்த வருவாய்ப் பிரிவினருக்கும், பொருளாதாரத்தில் நலிவடைந்த பிரிவினருக்குமான 20,095 வீடுகளை 2,894.63 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டும் பணிகளை தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம் மேற்கொள்ளும்.

**தூய்மைத் தமிழகத்திற்கான இயக்கம்**

'தூய்மை இந்தியா இயக்கத்தின் (ஊரகம்)' கீழ், இதுவரை 4,975.52 கோடி ரூபாய் செலவில் 45.63 இலட்சம் தனிநபர் கழிவறைகள் இந்த அரசால் கட்டி முடிக்கப்பட்டுள்ளது. 2017–2018ஆம் ஆண்டில் 2,528.54 கோடி ரூபாய் செலவில் 19.42 இலட்சம் தனிநபர் கழிவறைகள் கட்டப்பட்டு வருகின்றன. இதன் பயனாக, அனைத்து வீடுகளிலும் பயன்படுத்தத்தக்க கழிவறைகள் அமைக்கப்பட்டதன் அடிப்படையில், திறந்தவெளியில் மலம் கழிக்கும் பழக்கம் அறவே இல்லாத மாவட்டங்களாக 17 மாவட்டங்கள் அறிவிக்கப்பட்டுள்ளன. 2017–2018ஆம் ஆண்டின் இறுதிக்குள் 'தூய்மை இந்தியா இயக்கத்தின் (ஊரகம்)' கீழ், ஊரகப் பகுதிகளில், திறந்தவெளியில் மலம் கழிக்கும் பழக்கம் அறவே இல்லாத மாநிலமாகத் தமிழ்நாடு அறிவிக்கப்படும். 2018–2019ஆம் ஆண்டிற்கான வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில் 'தூய்மை இந்தியா இயக்கத்திற்காக (ஊரகம்)' 1,074 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

மாநிலத்தில், மாநகராட்சிகள், பேரூராட்சிகள் மற்றும் நகராட்சிப் பகுதிகளில் அரசு மேற்கொண்ட கணக்கீட்டின்படி 4.37 இலட்சம் தனிநபர் கழிவறைகள் தேவை என கணக்கிடப்பட்டுள்ளது. 'தூய்மை இந்தியா இயக்கத்தின் (நகர்ப்புரம்)' கீழ், 2016–2017ஆம் ஆண்டில் 1.56 இலட்சம் தனிநபர் கழிவறைகளும், 2017–2018ஆம் ஆண்டில் 2.27 இலட்சம் தனிநபர் கழிவறைகளும் கட்டப்பட்டுள்ளன. மேலும் 54,278 கழிவறைகள் கட்டப்பட்டு வருகின்றன. மத்திய அரசு இதுவரை தமிழ்நாட்டில் உள்ள 11 மாநகராட்சிகள், 93 நகராட்சிகள், 60 பேரூராட்சிகளை திறந்தவெளியில் மலம் கழிக்காத நகர்ப்புரப் பகுதிகளாக அறிவித்துள்ளது. வரும் 2018ஆம் ஆண்டு அக்டோபர் மாதத்திற்குள், நிர்ணயிக்கப்பட்ட இலக்கான 4.37 இலட்சம் கழிவறைகள் கட்டி முடிக்கப்படும். 2018–2019ஆம் ஆண்டிற்கான வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில், 'தூய்மை இந்தியா இயக்கத்திற்காக (நகர்ப்புரம்)' 550 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**நகர்ப்புர மேம்பாடு**

நகர்ப்புரப் பகுதிகளில் திட்டமிட்ட வளர்ச்சியை ஏற்படுத்துவதற்காக, அரசு முனைப்புடன் செயல்பட்டு வருகிறது. இதன் முதற்கட்டமாக, 7,979 சதுர கிலோ மீட்டர் பரப்பளவிலான திருச்சிராப்பள்ளி, மதுரை,

கோயம்புத்தூர், ஈரோடு, திருப்பூர் மற்றும் ஒசூர் ஆகிய ஆறு திட்டப் பகுதிகளுக்கு திட்டமிட்ட வளர்ச்சிக்கான பெருந்திட்டத்தை அரசு உருவாக்கியுள்ளது. மாநிலத்தை ஒன்பது மண்டலங்களாகப் பிரித்து மாநிலம் முழுமைக்கும் மண்டலம் வாரியான வளர்ச்சி நெறித் திட்டங்களை (Development Plan) தற்போது அரசு உருவாக்கிவருகிறது. ஜெர்மன் அரசின் ஜிஸ் (GIZ) அமைப்பின் தொழில்நுட்ப உதவியுடன், கோயம்புத்தூர் மண்டலத்திற்கான வளர்ச்சி நெறித் திட்டம் உருவாக்கப்படும். அதேபோன்று, 'சென்னை – கன்னியாகுமரி தொழில் வழித்தடத்' திட்டத்தின் கீழ், ஆசிய வளர்ச்சி வங்கியின் நிதியுதவியுடன் மதுரை, தூத்துக்குடி, திருநெல்வேலி மண்டலங்களுக்கான திட்டமிட்ட வளர்ச்சி நெறித் திட்டங்களும் உருவாக்கப்படும்.

### உள்ளாட்சி அமைப்புகளுக்கான தேர்தல்

நிலுவையிலுள்ள பல்வேறு வழக்குகளாலும், 2011ஆம் ஆண்டு மக்கள்தொகையின் அடிப்படையில் உள்ளாட்சி அமைப்புகளுக்கான வார்டுகளின் எல்லை வரையறைப் பணிகளை தமிழ்நாடு எல்லை வரையறை ஆணையம் செய்து கொண்டிருப்பதாலும், மாநிலத்தில் உள்ளாட்சி அமைப்புகளுக்கான தேர்தல் நடத்த காலதாமதம் ஏற்பட்டுள்ளது. உள்ளாட்சி அமைப்புகளின் வார்டுகளின் எல்லைகளை மறுவரையறை செய்த பின்னரே, மாநிலத் தேர்தல் ஆணையத்தால் உள்ளாட்சித் தேர்தலுக்கான அறிவிக்கையை வெளியிட இயலும். எனினும், வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில் உள்ளாட்சி அமைப்புகளுக்கான தேர்தல் நடத்தும் செலவினங்களுக்காக 172.27 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### உள்ளாட்சி அமைப்புகளுக்கான நிதிப் பகிர்வு

2018–2019ஆம் ஆண்டிற்கு, மாநில நிதிக் குழுவின் பரிந்துரைப்படி ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கு 5,980.33 கோடி ரூபாயும், நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளுக்கு 4,834.75 கோடி ரூபாயும் பகிர்ந்தளிக்கப்படும். அதேபோல், மத்திய நிதிக்குழுவின் பரிந்துரைப்படி, ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கு 1,975.07 கோடி ரூபாயும், நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளுக்கு 1,877.10 கோடி ரூபாயும் பகிர்ந்தளிக்கப்படும்.

### சுகாதாரம் மற்றும் மக்கள் நல்வாழ்வு

ஆரம்பநிலை, இடைநிலை மற்றும் உயர்நிலை மருத்துவமனைகளின் உட்கட்டமைப்பை வலுப்படுத்தி, போதிய மனிதவளங்களை அரசு தொடர்ந்து அளித்து வருவதன் விளைவாக, மக்களுக்கு குறைந்த செலவில் தரமான மருத்துவ சேவைகளை வழங்குவதில் நாட்டிலேயே தமிழ்நாடு ஒரு முன்னோடி மாநிலமாகத் திகழ்ந்து வருகிறது. இந்த ஒருங்கிணைந்த முயற்சிகளால், மாநிலத்தின் முக்கிய மருத்துவக் குறியீடுகள் தொடர்ந்து மேம்பட்டு வருகின்றன. 2010ஆம் ஆண்டில் ஆயிரம் குழந்தைகள் பிறப்புக்கு 24 என்ற அளவில் இருந்த பச்சிளம் குழந்தை இறப்பு விகிதம் (Infant Mortality Rate), 2016ஆம் ஆண்டில் 17 ஆகக் குறைக்கப்பட்டு, நாட்டிலேயே இரண்டாவது இடத்தை மாநிலம் பெற்றுள்ளது. தேசிய மகப்பேறு இறப்பு விகித இலக்கு (MMR target) ஒரு இலட்சம் குழந்தைப் பிறப்புகளுக்கு 109 இறப்புகள் என்ற அளவில் உள்ள நிலையில், நமது மாநிலக் கணக்கெடுப்பின்படி, 2016–2017ஆம் ஆண்டில் 62 என்ற குறைந்த அளவை தமிழ்நாடு ஏற்கெனவே எட்டியுள்ளது. மேலும், 99 சதவீத குழந்தை பிறப்புகள் மருத்துவ நிலையங்களில் நிகழும் மாநிலமாகத் தமிழ்நாடு திகழ்கிறது என்பதையும் இப்பேரவைக்கு நான் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

முழு ஈடுபாட்டுடன் பணிபுரியும் நல்ல பயிற்சி பெற்ற மருத்துவர்களும், மருத்துவப் பணியாளர்களுமே மாநிலத்தில் சிறந்த அரசு மருத்துவ சுகாதார அமைப்பின் அடித்தளமாக அமைகின்றனர். மருத்துவர்களின் எண்ணிக்கையை மேலும் உயர்த்தும் நோக்கத்துடன், வரும் ஆண்டுகளில், திருநெல்வேலி, மதுரை, கன்னியாகுமரி மற்றும் கோயம்புத்தூர் அரசு மருத்துவக் கல்லூரிகளில் மருத்துவப் பட்டப்படிப்புக்கான 345 புதிய இடங்கள் உருவாக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்த அரசின் முன்னோடித் திட்டமான 'முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டம்', ஏழை எளிய மக்களும் அரசு மற்றும் தனியார் மருத்துவமனைகளில் அனைத்து அதிநவீன சிகிச்சைகளைப் பெற வழிவகுத்துள்ளது. இதன்மூலம் அனைவருக்கும் தரமான மருத்துவ சேவை என்ற குறிக்கோளை மாநிலம் எட்ட இத்திட்டம் உதவியுள்ளது. அண்மையில் மத்திய அரசால் அறிவிக்கப்பட்ட ஆயுஷ்மான் பாரத் திட்டத்தின் ஒரு அங்கமான, தேசிய மருத்துவப் பாதுகாப்புத் திட்டத்துடன், இத்திட்டமும் ஒருங்கிணைக்கப்பட்டு செயல்படுத்தப்படும். 2018–2019ஆம் ஆண்டிற்கான வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில், 'முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்திற்காக' 1,361.60 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

★ அரசு மருத்துவமனைகளில் மாவட்ட மற்றும் மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளைத் தரம் உயர்த்த இந்த அரசு ஒருங்கிணைந்த

முயற்சிகளை எடுத்து வருகிறது. இந்த முயற்சிகளின் தொடர்ச்சியாக,

★ அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளுக்கும், அரசு மருத்துவமனைகளுக்கும் 66.50 கோடி ரூபாய் செலவில் இரண்டு நேரியல் முடுக்கிகளும் (Linear Accelerator), 6 சி.டி. ஸ்கேன்களும், 4 எம்.ஆர்.ஐ. ஸ்கேன்களும் வழங்கப்படும்.

★ 24 கோடி ரூபாய் செலவில் விபத்து மற்றும் அவசர சிகிச்சைப் பிரிவுகள் பொன்னேரி மற்றும் நசரத்பேட்டையில் நிறுவப்படும்.

★ விழுப்புரம், தருமபுரி, திருவண்ணாமலை மற்றும் புதுக்கோட்டை அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளில், 34 கோடி ரூபாய் செலவில் புற்றுநோய் சிகிச்சைக்கான புதிய கோபால்ட் அலகுகள் அமைக்கப்படும். 10 அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளில் தற்போதுள்ள கோபால்ட் அலகுகள் 35 கோடி ரூபாய் செலவில் மாற்றியமைக்கப்படும்.

★ சென்னை, அரசு ஆர்.எஸ்.ஆர்.எம் மருத்துவமனையிலும், திருவாரூர், கன்னியாகுமரி மற்றும் தேனி மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளிலும் உள்ள ஒருங்கிணைந்த அவசரகால மகப்பேறு மற்றும் பச்சிளம் குழந்தை பராமரிப்பு மையங்கள் (CEmONC) 48 கோடி ரூபாய் செலவில் தரம் உயர்த்தப்படும்.

★ விருதுநகர், காஞ்சிபுரம், திருப்பத்தூர் மற்றும் இராமநாதபுரம் ஆகிய 4 மாவட்டத் தலைமையிட மருத்துவமனைகளில், 80 கோடி ரூபாய் செலவில் மகப்பேறு மற்றும் குழந்தைகள் நலப் பிரிவுகள் தொடங்கப்படும்.

★ விழுப்புரம், தருமபுரி, கன்னியாகுமரி, தூத்துக்குடி, தேனி மற்றும் திருவாரூர் மாவட்டங்களில் உள்ள அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளில் ஏழை மக்களுக்கு இதயம் மற்றும் மூளை நரம்பியல் தொடர்பான நோய்களுக்கான மருத்துவ சேவைகளை வழங்கும் வகையில் 21 கோடி ரூபாய் செலவில் மேலும் ஆறு கேத் ஆய்வகங்கள் (Cath labs) அமைக்கப்படும்.

2018–2019ஆம் ஆண்டிற்கான வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில், தேசிய சுகாதார இயக்கத்திற்காக 1,551.22 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

மாநிலத்தில் பச்சிளம் குழந்தை இறப்பு விகிதம் மற்றும் மகப்பேறு இறப்பு விகிதங்களைக் குறைக்கும் நோக்கத்துடன் செயல்படுத்தப்பட்டு வரும் 'டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி மகப்பேறு நிதியுதவித் திட்டத்தின்' கீழ், ஏற்கனவே வழங்கப்பட்டு வந்த 12,000 ரூபாய் நிதியுதவியை 18,000 ரூபாயாக உயர்த்தி வழங்க அரசு ஆணையிட்டுள்ளது. கர்ப்பிணிப் பெண்களுக்கு பரவலாக உள்ள இரத்த சோகையைப் போக்கவும், பிறக்கும் குழந்தைகளின் எடையளவை உயர்த்தவும் இத்திட்ட நிதியில் 4,000 ரூபாய் மதிப்புள்ள இரும்புச்சத்து டானிக் மற்றும் ஊட்டச்சத்துப் பொருட்கள் அடங்கிய 'அம்மா தாய்சேய் நல ஊட்டச்சத்துப் பெட்டகம்' வழங்கப்படும். 2018–2019ஆம் ஆண்டிற்கான வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில், இந்த முன்னோடித் திட்டத்திற்காக 1,001.33 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. 'அம்மா குழந்தைகள் நல பரிசுப் பெட்டகம்', 'அம்மா மகப்பேறு சஞ்சீவி' திட்டங்களை இந்த அரசு தொடர்ந்து செயல்படுத்தும். இது தவிர, மகளிர் சுகாதாரத் திட்டத்தின் கீழ், சானிட்டரி நாப்கின்கள் வழங்க வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில் 60.58 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

மாநிலத்தில் உள்ள பல்வேறு மருத்துவமனைகளை வலுப்படுத்துவதற்கு, உலக வங்கியிடமிருந்து கடனுதவியைப் பெறும் வகையில், 2,685.91 கோடி ரூபாய் திட்ட மதிப்பீட்டில் 'தமிழ்நாடு சுகாதார அமைப்புகள் திட்டத்தின்' இரண்டாம் கட்டத் திட்டத்திற்கான விரிவான திட்ட அறிக்கையை அரசு தயாரித்து வருகிறது. நகர்ப்புரங்களில் உள்ள ஏழை எளிய மக்களும், பொருளாதாரத்தில் நலிவடைந்தவர்களும் எளிதாக அரசு மருத்துவ வசதியைப் பெறும் வகையில், 1,634 கோடி ரூபாய் செலவில் ஜப்பான் பன்னாட்டுக் கூட்டுறவு முகமையின் நிதியுதவியுடன் 'தமிழ்நாடு நகர்ப்புர சுகாதாரத் திட்டத்தை' இந்த அரசு செயல்படுத்தி வருகிறது. இத்திட்டத்தின் கீழ், 11 அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகள், மாவட்ட அளவிலான 10 மருத்துவமனைகளின் கட்டடங்கள், உயர் தொழில்நுட்ப உபகரணங்கள் உள்ளிட்ட மருத்துவ உட்கட்டமைப்பு வசதிகள் மேம்படுத்தப்பட உள்ளன. வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில் இத்திட்டத்திற்கென 100 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

2018–2019ஆம் ஆண்டிற்கான வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில் சுகாதாரத் துறைக்காக 11,638.44 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### பள்ளிக் கல்வி

அனைத்து குழந்தைகளும் பள்ளிகளுக்குச் செல்வதை உறுதி செய்யவும், பள்ளிகளில் கல்வியின் தரத்தை மேம்படுத்தவும் இந்த அரசு உறுதி பூண்டுள்ளது. 2016–2017 மற்றும் 2017–2018ஆம் ஆண்டுகளில்,

6 தொடக்கப் பள்ளிகள் புதிதாகத் துவங்கப்பட்டுள்ளதுடன், 4 தொடக்கப் பள்ளிகள் நடுநிலைப் பள்ளிகளாகவும், 169 நடுநிலைப் பள்ளிகள் உயர்நிலைப் பள்ளிகளாகவும், 102 உயர்நிலைப் பள்ளிகள் மேல்நிலைப் பள்ளிகளாகவும் தரம் உயர்த்தப்பட்டுள்ளன. 2018–2019ஆம் ஆண்டில் 100 நடுநிலைப் பள்ளிகள் உயர்நிலைப் பள்ளிகளாகவும், 100 உயர்நிலைப் பள்ளிகள் மேல்நிலைப் பள்ளிகளாகவும் தரம் உயர்த்தப்படும். மேலும், இந்த அரசால் தற்போது கண்டறியப்பட்டுள்ள பள்ளிக்குச் செல்லாத 33,519 குழந்தைகளை 2018–2019ஆம் ஆண்டில் பள்ளிகளில் சேர்க்க நடவடிக்கை எடுக்கப்படும்.

மாறிவரும் சூழலில் எதிர்நோக்கியுள்ள சவால்களைச் சமாளிப்பதற்கு, தேசிய இடைநிலைக் கல்வி வாரிய (CBSE) பாடத்திட்டம் உள்ளிட்ட பல்வேறு கல்வி வாரிய பாடத்திட்டங்களுடன் ஒப்பீடு செய்து, பள்ளிப் பாடத்திட்டங்களில் உரிய மாற்றம் செய்யப்பட்டு வருகிறது. மாணவர்களிடையே புத்தகங்களைப் படிக்கும் பழக்கத்தை ஏற்படுத்த, அனைத்து உயர்நிலைப் பள்ளிகளிலும், மேல்நிலைப் பள்ளிகளிலும் தற்போதுள்ள நூலகங்கள் புதுப்பிக்கப்படும். 2018–2019ஆம் ஆண்டில், 200 கோடி ரூபாய் செலவில் நபார்டு வங்கி உதவியுடன் பள்ளிகளின் உட்கட்டமைப்பு வசதிகள் மேம்படுத்தப்படும். 2018–2019ஆம் ஆண்டிற்கான வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில், பள்ளிகளில் உட்கட்டமைப்பை மேம்படுத்த 333.36 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. பள்ளிகளிலுள்ள கழிவறைகளை தூய்மையாகவும், சுகாதாரத்துடனும் பராமரிப்பதற்காக, 2017–2018ஆம் ஆண்டில் 54.50 கோடி ரூபாய் உள்ளாட்சி அமைப்புகளால் வழங்கப்பட்டுள்ளது. இத்திட்டம் வரும் நிதியாண்டிலும் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

அனைத்து குழந்தைகளுக்கும் தரமான கல்வி அளிக்க வேண்டும் என்ற உன்னத நோக்கத்தில், மாணவ, மாணவியருக்கு நான்கு இணை சீருடைகள், புத்தகப் பைகள், காலணிகள், பாடப் புத்தகங்கள், நோட்டுப் புத்தகங்கள் மற்றும் வடிவியல் பெட்டிகள் உள்ளிட்ட கல்வி உபகரணங்கள், மிதிவண்டிகள் மற்றும் பேருந்துக் கட்டணச் சலுகைகளை இந்த அரசு விலையில்லாமல் தொடர்ந்து வழங்கி வருகிறது. 2018–2019ஆம் ஆண்டிற்கான வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில், மேற்கூறிய நலத்திட்டங்களுக்காக மொத்தம் 1,653.89 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. அரசு மற்றும் அரசு உதவிபெறும் பள்ளிகளில் பத்து, பதினொன்று மற்றும் பன்னிரெண்டாம் வகுப்பு படிக்கும் மாணவ, மாணவிகளின் பள்ளி இடைநிற்றலைக் குறைப்பதற்காக, சிறப்பு ஊக்கத் தொகையாக அனைத்து மாணவ, மாணவிகளுக்கும் தலா 5,000 ரூபாய் வழங்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்திற்காக, இந்த வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில் 313.58 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

மாணவ, மாணவியருக்கு கல்வி கற்பிக்கும் முறையினை மேம்படுத்துவதற்காக, வளர்ந்து வரும் தொழில்நுட்பத்தை உகந்த முறையில் பயன்படுத்த பல்வேறு முயற்சிகளை அரசு எடுத்து வருகிறது. இணையவழி மூலமாகக் கற்கும் வகுப்பறைகள் (Virtual Classrooms) 770 உயர் மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் ஏற்கனவே நிறுவப்பட்டுள்ளன. 3,000 தொடக்கப் பள்ளிகள் மற்றும் நடுநிலைப் பள்ளிகளில் 60 கோடி ரூபாய் செலவில் திறன்மிகு வகுப்பறைகள் (Smart Classrooms) அமைக்கப்பட்டு வருகின்றன. இந்த நிதியாண்டில் 3,090 உயர்நிலைப் பள்ளிகளிலும், 2,939 மேல்நிலைப் பள்ளிகளிலும் 462.60 கோடி ரூபாய் செலவில் 10 முதல் 20 கணினிகளுடன் கூடிய உயர் தொழில்நுட்ப ஆய்வகங்கள் அமைக்கப்பட்டு வருகின்றன. இதனால் உயர் தொழில்நுட்ப ஆய்வகம் அனைத்து அரசு உயர் மற்றும் மேல்நிலை பள்ளிகளிலும் செயல்படுவது உறுதிப்படுத்தப்படும். பள்ளி மாணவ, மாணவியருக்கு மடிக்கணினி வழங்குவதற்கு, 2018–2019ஆம் ஆண்டிற்கான வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில் 758 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

'அனைவருக்கும் கல்வி இயக்கம்' (Sarva Shiksha Abhiyan) மற்றும் 'அனைவருக்கும் இடைநிலைக் கல்வி இயக்கத்தின்' (Rashtriya Madhyamik Shiksha Abhiyan) கீழ், முந்தைய ஆண்டுகளுக்கான நிலுவைத் தொகை, முறையே 1,312.04 கோடி ரூபாய் மற்றும் 934.10 கோடி ரூபாயை மத்திய அரசு இதுவரை விடுவிக்காத நிலையிலும், இத்திட்டங்களை மாநில அரசு தொடர்ந்து தொய்வின்றி வெற்றிகரமாகச் செயல்படுத்தி வருகிறது. 2018–2019ஆம் ஆண்டிற்கான வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில் அனைவருக்கும் கல்வி இயக்கத்திற்காகவும், அனைவருக்கும் இடைநிலைக் கல்வி இயக்கத்திற்காகவும், முறையே 1,750 கோடி ரூபாய் மற்றும் 850 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன. 'குழந்தைகளுக்கான இலவச மற்றும் கட்டாயக் கல்வி உரிமைச் சட்டத்தை' திறம்படச் செயல்படுத்திட, 2018–2019ஆம் ஆண்டிற்கு 200.70 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

பள்ளிக்கல்வித் துறைக்காக, 2018–2019ஆம் ஆண்டிற்கான வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில் 27,205.88 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### உயர்கல்வி

மாநிலத்தில் அனைவருக்கும் சமமான வாய்ப்புகளுடன், குறைந்த செலவில் தரமான உயர்கல்வி கிடைப்பதற்கு இந்த அரசு மிகுந்த முக்கியத்துவம் அளித்து வருகிறது. உயர்கல்வியை மேம்படுத்த அரசு எடுத்துவரும் முயற்சிகளின் பலனாக, உயர்கல்வியில் 46.90 சதவீத மொத்தச் சேர்க்கை விகிதத்தை எட்டி, நாட்டிலேயே முதன்மை மாநிலம் என்ற நிலையை தமிழ்நாடு அடைந்துள்ளது. 2017–2018ஆம் ஆண்டில், 186.87 கோடி ரூபாய் செலவில் எட்டு புதிய அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளையும், மூன்று புதிய பல்கலைக்கழக உறுப்பு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளையும், ஒரு புதிய அரசு பலவகை தொழில்நுட்பக் கல்லூரியையும் துவங்க இந்த அரசு அனுமதி அளித்துள்ளது. 2017–2018ஆம் ஆண்டில், அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் 271 புதிய பாடத் திட்டங்களும், பல்கலைக்கழக உறுப்புக் கல்லூரிகளில் 89 புதிய பாடத் திட்டங்களும் அறிமுகப்படுத்தப் பட்டுள்ளன. அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளின் உட்கட்டமைப்பு வசதிகளை வலுப்படுத்தும் வகையில், 210 கோடி ரூபாய் செலவில் 862 வகுப்பறைகளையும், 172 ஆய்வகங்களையும் கட்டுவதற்கான பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. வரும் நிதியாண்டில், கும்பகோணம் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி, சென்னையில் உள்ள மாநிலக் கல்லூரியின் விக்டோரியா விடுதி மற்றும் இராணி மேரிக் கல்லூரியில் உள்ள பாரம்பரியமிக்க கட்டடங்கள் 26 கோடி ரூபாய் செலவில் புதுப்பிக்கப்படும்.

கல்வியில் பின்தங்கிய குடும்பங்களிலிருந்து உயர்கல்வி பயிலும் மாணவ, மாணவிகளை ஊக்குவிக்கும் நோக்கத்துடன், முதல் தலைமுறை பட்டதாரி மாணவ, மாணவிகளுக்கு கல்விக் கட்டணத்தை அரசே திரும்ப வழங்கும் திட்டத்தை இந்த அரசு செயல்படுத்தி வருகிறது. இத்திட்டத்தின் கீழ், 2017–2018ஆம் ஆண்டில் 2.17 இலட்சம் மாணவ, மாணவிகள் பயனடைந்துள்ளனர். 2018–2019ஆம் ஆண்டிற்கான வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில் இத்திட்டத்திற்காக 682.87 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. பல்கலைக்கழகங்களுக்கு வழங்கப்பட்டுவரும் தொகுப்பு நல்கைத் தொகை கடந்த பல வருடங்களாக மாற்றியமைக்கப்படவில்லை. எனவே, 2018–2019ஆம் ஆண்டு முதல் இந்த தொகுப்பு நல்கைத் தொகை புதிய கணக்கீட்டின்படி மாற்றியமைக்கப்படும். அண்ணாமலை பல்கலைக்கழகத்திற்கு 250 கோடி ரூபாய் உட்பட, அனைத்துப் பல்கலைக்கழகங்களுக்கும் மானியம் வழங்குவதற்காக, 2018–2019ஆம் ஆண்டிற்கான வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில், 500.65 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. 2018–2019ஆம் ஆண்டிற்கான வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில் உயர்கல்வித் துறைக்காக 4,620.20 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாடு

நடப்பு ஆண்டில் தேசிய, சர்வதேச அளவில் விருதுகள் வென்ற வீரர்களுக்கும், அவர்களது பயிற்றுநர்களுக்கும் 5.52 கோடி ரூபாய் ஊக்கத்தொகையாக வழங்கப்பட்டுள்ளது. 'தமிழ்நாடு உடற்கல்வி மற்றும் விளையாட்டுப் பல்கலைக்கழகத்தில்' 13.12 கோடி ரூபாய் செலவில், விளையாட்டு உயிரி இயந்திரவியலுக்கான (Sports Biomechanics) சிறப்பு மையத்தை அரசு உருவாக்கி வருகிறது. 2018–2019ஆம் ஆண்டிற்கான வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறைக்கென 191.18 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலன்

தற்போது, 98,539 மாணவ, மாணவியர் பயன்பெறும் வகையில் 1,324 ஆதிதிராவிடர் விடுதிகளும், 2,782 மாணவ, மாணவியர் பயன்பெறும் வகையில் 42 பழங்குடியினர் நல விடுதிகளும், 27,652 மாணவ, மாணவியருடன் 314 அரசு பழங்குடியினர் உண்டு உறைவிடப் பள்ளிகளும் (Government Tribal Residential Schools) மாநிலத்தில் இயங்கி வருகின்றன. இப்பள்ளிகளிலும், விடுதிகளிலும் அடிப்படை வசதிகளை மேம்படுத்தும் வகையில், புதிய கட்டடங்களை அரசு கட்டி வருகிறது. இதைத் தொடர்ந்து, 2018–2019ஆம் ஆண்டில், 46 கோடி ரூபாய் செலவில் 19 விடுதிகளுக்கு புதிய கட்டடங்கள் கட்டப்படும். பள்ளி விடுதி மாணவர்களுக்கான உணவுக் கட்டணத்தை மாதம் ஒன்றிற்கு 755 ரூபாயிலிருந்து 900 ரூபாயாகவும், கல்லூரி விடுதி மாணவர்களுக்கான உணவுக் கட்டணத்தை மாதம் ஒன்றிற்கு 875 ரூபாயிலிருந்து 1,000 ரூபாயாகவும், 2017–2018ஆம் ஆண்டில் இந்த அரசு உயர்த்தி வழங்கியது. 2018–2019ஆம் ஆண்டிற்கான வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில் விடுதிகளுக்கான கட்டடங்கள் கட்ட 32.20 கோடி ரூபாயும், உணவுக் கட்டணங்களுக்காக 118.48 கோடி ரூபாயும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன.

2017–2018ஆம் ஆண்டில், பள்ளிக்கல்வி உதவித்தொகைத் (Pre-Matric Scholarship) திட்டத்தின் கீழ் 3.60 இலட்சம் மாணவ, மாணவிகளுக்கு 98 கோடி ரூபாய் கல்வி உதவித்தொகையாக வழங்கப்பட்டுள்ளது. மத்திய அரசிடமிருந்து தமிழ்நாட்டிற்கு 1,546.88 கோடி

ரூபாய் நிலுவைத் தொகையாக வரவேண்டியுள்ள நிலையிலும், எவ்விதத் தடையுமின்றி மாணவ, மாணவிகள் உயர்கல்வியைத் தொடரும் வகையில் உயர்கல்விக்கான உதவித்தொகையை (Post-Matric Scholarship) இந்த அரசு தொடர்ந்து வழங்கி வருகிறது. உயர்கல்விக்கான உதவித்தொகை வழங்கும் திட்டத்தின் மூலம் 2017–2018ஆம் ஆண்டில், 8.75 இலட்சம் மாணவ, மாணவிகள் பயனடைந்துள்ளனர். 2018–2019ஆம் ஆண்டிற்கான வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில் பள்ளிக்கல்வி உதவித்தொகைத் திட்டத்தின் கீழ் 129.16 கோடி ரூபாயும், உயர்கல்விக்கான உதவித்தொகை வழங்கும் திட்டத்தின் கீழ் 1,838.24 கோடி ரூபாயும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன. 2018–2019ஆம் ஆண்டிற்கான வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில், 71.01 கோடி ரூபாய் விலையில்லா மிதிவண்டிகள் வழங்கும் திட்டத்திற்காகவும், 150 கோடி ரூபாய் மத்திய சிறப்பு உதவித் திட்டத்திற்காகவும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன. ஆதிதிராவிடர் குடியிருப்புகளில் அடிப்படை வசதிகளை மேம்படுத்த வேண்டியதன் அவசியம் கருதி, 2018–2019ஆம் ஆண்டு முதல் ஊரக உள்ளாட்சிகளுக்கு வழங்கும் பகிர்வு நிதியில், ஆண்டுதோறும் 100 கோடி ரூபாய் தனியாக ஒதுக்கி, ஆதிதிராவிடர் குடியிருப்புகளில் அடிப்படை வசதிகளை மேம்படுத்தும் பணிகள் மேற்கொள்ளப்படும்.

'ஒருங்கிணைந்த பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டத்தின்' கீழ் பழங்குடியினர் பகுதிகளில் பல்வேறு உட்கட்டமைப்பு மேம்பாட்டுப் பணிகள் மற்றும் வருவாய் உருவாக்கும் நடவடிக்கைகளுக்கு ஆண்டுதோறும் 50 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டு, பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. 2018–2019ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்ட மதிப்பீடுகளில், ஆதிதிராவிடர் நலத்துறைக்கென 3,207.04 கோடி ரூபாயும், பழங்குடியினர் நலத்துறைக்கென 333.82 கோடி ரூபாயும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன.

### பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலன்

பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினரின் நலனைப் பேணி, அவர்களை மேம்படுத்துவதில் இந்த அரசு உறுதியோடு உள்ளது. அரசு மற்றும் அரசு உதவிபெறும் பள்ளிகளில் பதினொன்றாம் வகுப்பு பயிலும் பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபின மாணவ, மாணவியருக்கு விலையில்லா மிதிவண்டிகளைத் தொடர்ந்து வழங்க, 2018–2019ஆம் ஆண்டிற்கான வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில் 229.98 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. நபார்டு வங்கியின் கடனுதவியுடன் கள்ளர் சீரமைப்புப் பள்ளிகளின் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்காக, 2017–2018ஆம் ஆண்டில் அரசால் 13.07 கோடி ரூபாய் அனுமதிக்கப்பட்டு, இதற்கான பணிகள் நடைபெற்று வருகின்றன. 2018–2019ஆம் ஆண்டிற்கான வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில், விடுதிகள் கட்டுவதற்காக 20.10 கோடி ரூபாயும், உணவுக் கட்டணத்திற்காக 80.37 கோடி ரூபாயும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன. 2018–2019ஆம் ஆண்டிற்கான வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில், பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலத்துறைக்காக 972.86 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### தொழிலாளர் நலன்

தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர் நல வாரியம் உட்பட, 17 அமைப்புசாரா தொழிலாளர் நல வாரியங்கள் மாநிலத்தில் உள்ளன. கட்டுமானத் தொழிலாளர் நல வாரியத்தில், பிற மாநிலங்களிலிருந்து பணிபுரிய வந்து பதிவு செய்துள்ள 17,949 புலம் பெயர்ந்த உறுப்பினர்கள் உட்பட, மாநிலத்தில் இதுவரை 68.52 இலட்சம் தொழிலாளர்கள் பல்வேறு அமைப்புசாரா தொழிலாளர் நல வாரியங்களில் பதிவு செய்துள்ளனர். 2017–2018ஆம் ஆண்டில், அமைப்புசாரா தொழிலாளர் நல வாரியங்களின் உறுப்பினர்களுக்கு 54.38 கோடி ரூபாய் அளவிலான நல உதவிகள் வழங்கப்பட்டுள்ளன. இந்நலவாரியங்களில் பதிவு செய்வதையும் நல உதவிகள் பெறுவதையும் எளிதாக்கும் வகையில் இணையதளம் உருவாக்கப்பட்டு பயன்படுத்தப்பட்டு வருகிறது. அமைப்புசாரா தொழிலாளர் நல வாரியங்களுக்கு மானியம் வழங்க இந்த வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில் 87.80 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### சமூகப் பாதுகாப்பு

மக்கள் நலம் பேணுவதில் முன்மாதிரி அரசாக உள்ள இந்த அரசு, முதியோர், கணவனை இழந்த பெண்கள், ஆதரவற்றோர், மாற்றுத்திறனாளிகள் மற்றும் திருநங்கைகள் போன்ற சமுதாயத்தில் எளிதில் பாதிப்புக்குள்ளாகக்கூடிய நலிவடைந்த பிரிவினருக்கு சமூகப் பாதுகாப்பு உதவித்தொகையாக மாதந்தோறும் 1,000 ரூபாய் வழங்கி வருகிறது. இத்திட்டத்தில் தற்போது 29.18 இலட்சம் நபர்கள் பயன்பெற்று வரும் நிலையில், தற்போது நிலுவையிலுள்ள தகுதியான விண்ணப்பதாரர்களும் பயன்பெறும் வகையில் ஒருமுறை தீர்வாக, இத்திட்டத்தின் கீழ் பயனாளிகளின் எண்ணிக்கை 29.80 இலட்சமாக உயர்த்தப்படும். இதனால், அனைத்து தகுதியான நபர்களும் சமூகப் பாதுகாப்பு

உதவித்தொகையைப் பெற வழிவகை ஏற்படும். இந்த வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில், சமூகப் பாதுகாப்பு உதவித்தொகை வழங்கும் திட்டத்திற்காக 3,881.66 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**பெண்கள் மற்றும் குழந்தைகள் நலன்**

புரட்சித்தலைவி அம்மா அவர்களால் தொடங்கப்பட்ட ‘தொட்டில் குழந்தை திட்டம்’, ‘பெண் குழந்தைகள் பாதுகாப்புத் திட்டம்’, போன்ற இந்த அரசின் முன்னோடித் திட்டங்கள், பெண் சிசுக்கொலை மற்றும் பெண்குழந்தை கருக்கலைப்பு போன்றவற்றைக் குறைப்பதற்கு கணிசமான பங்களித்திருக்கின்றன. 2018–2019ஆம் ஆண்டிற்கான வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில், இத்திட்டங்களுக்காக 140.50 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. திருமண உதவித் திட்டங்களின் கீழ், திருமாங்கல்யத்திற்காக எட்டு கிராம் தங்கம் மற்றும் பட்டதாரி அல்லாதவர்களுக்கு 25,000 ரூபாயும், பட்டதாரி அல்லது பட்டயப்படிப்பு தேர்ச்சி பெற்றவர்களுக்கு 50,000 ரூபாயும் வழங்கப்பட்டு வருகிறது. 2018–2019ஆம் ஆண்டிற்கான வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில், அனைத்து திருமண உதவித் திட்டங்களுக்காக 724 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

உழைக்கும் மகளிருக்கான ‘அம்மா இருசக்கர வாகன மானிய நிதியுதவித் திட்டம்’, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் முன்னிலையில் மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களால், கடந்த 24.02.2018 அன்று தொடங்கி வைக்கப்பட்டது. இதன்படி, ஒரு பயனாளிக்கு இருசக்கர வாகனத்தின் விலையில் 50 சதவீதத் தொகை அல்லது அதிகபட்சமாக 25,000 ரூபாய் வரை மானியமாக வழங்கப்படுகிறது. 2017–2018ஆம் ஆண்டில், ஒரு இலட்சம் பயனாளிகளில் 5,306 மகளிருக்கு மானியத்தொகை வழங்கப்பட்டுள்ளது. 2018–2019ஆம் ஆண்டில் எஞ்சியுள்ள பயனாளிகளுடன் கூடுதலாக ஒரு இலட்சம் பயனாளிகள் இத்திட்டத்தில் பயனடைவர். இந்த வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில், இத்திட்டத்திற்காக 250 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

‘புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டம்’ 43,143 சத்துணவு மையங்கள் மூலம் தொடர்ந்து செயல்படுத்தப்படும். 2018–2019ஆம் ஆண்டிற்கான வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில், சத்துணவுத் திட்டத்திற்கு 1,747.72 கோடி ரூபாயும், ‘ஒருங்கிணைந்த குழந்தைகள் மேம்பாட்டுத் திட்டத்திற்கு’ 2,146.30 கோடி ரூபாயும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன. ‘ஒருங்கிணைந்த குழந்தை பாதுகாப்புத் திட்டத்தின்’ கீழ், 100.71 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. 2018–2019ஆம் ஆண்டிற்கான வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில், சமூக நலத் துறைக்காக 5,611.62 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**அரசு அலுவலர்கள் மற்றும் ஓய்வூதியர்கள் நலன்**

அலுவலர்கள் குழுவின் அறிக்கையின் அடிப்படையில், 2017ஆம் ஆண்டு, அக்டோபர் மாதம் 1ஆம் தேதி முதல், அரசுப் பணியாளர்களுக்கான சம்பளங்களும் படிகளும், ஓய்வூதியதாரர்களுக்கான ஓய்வூதியங்களும் திருத்தப்பட்டு, உயர்த்தி வழங்கப்பட்டுள்ளன. இந்தத் திருத்தத்தினால், 14,718.90 கோடி ரூபாய் அளவில் ஆண்டொன்றிற்கு அரசுக்கு கூடுதல் செலவினம் ஏற்பட்டுள்ளது. இந்த வரவு–செலவுத் திட்டத்தில், அரசுப் பணியாளர்களுக்கான புதிய மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்திற்காகவும், ஓய்வூதியதாரர்களுக்கான புதிய மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்திற்காகவும், பிரீமியத் தொகை செலுத்துவதற்காக, முறையே 260 கோடி ரூபாயும், 126.25 கோடி ரூபாயும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன. ஓய்வூதியம் மற்றும் பிற ஓய்வுகாலப் பலன்களுக்காக, 2018–2019ஆம் ஆண்டிற்கான வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில் 25,362.20 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**இலங்கைத் தமிழ் அகதிகள் நலன்**

அகதிகள் முகாம்களில் வாழும் இலங்கைத் தமிழர்களுக்கு சமூகப் பாதுகாப்புத் திட்டங்கள், திருமண உதவித் திட்டங்கள் மற்றும் மருத்துவக் காப்பீட்டுத் திட்டம் போன்ற பல்வேறு நலத்திட்டங்களையும் நீட்டித்து இந்த அரசு வழங்கி வருகிறது. 2018–2019ஆம் ஆண்டிற்கான வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில், இலங்கைத் தமிழ் அகதிகள் நலனுக்காக 109.42 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**மாற்றுத்திறனாளிகள் நலன்**

மாற்றுத்திறனாளிகளுக்காக 435 சிறப்புப் பள்ளிகளையும் 42 தொழிற்பயிற்சி நிலையங்களையும் இந்த அரசு நடத்தி வருகிறது. 2016ஆம் ஆண்டு மாற்றுத்திறனாளிகளின் உரிமைகள் சட்டத்தின்படி, மாநில அளவில் மாற்றுத்திறனாளிகளுக்கான நிதியம் 10 கோடி ரூபாய் ஒதுக்கீட்டில் உருவாக்கப்படும். பாதுகாப்பான வாழ்க்கையை வாழ வழிசெய்ய, அவர்களுக்குத் தேவையான நலத்திட்டங்களை வடிவமைக்க ஏதுவாக, மாநில அளவிலான கணக்கெடுப்பை நடத்தி, மாற்றுத்திறனாளிகளுக்கான தரவுதளம் உருவாக்கப்படும். 2017–2018ஆம் ஆண்டில், தசைச் சிதைவு மற்றும் பக்கவாதத்தால் கை, கால் பாதிக்கப்பட்ட 1,000

நபர்களுக்கு மோட்டார் பொருத்தப்பட்ட நகரும் வண்டிகள் முதன்முறையாக அனுமதிக்கப்பட்டது. வரும் நிதியாண்டில் 13 கோடி ரூபாய் செலவில் மேலும் 2,000 பயனாளிகளுக்கு மோட்டார் பொருத்தப்பட்ட நகரும் வண்டிகள் வழங்க அனுமதி அளிக்கப்படும். மேலும், 2,000 மாற்றுத்திறனாளிகளுக்கு 12 கோடி ரூபாய் செலவில் இணைப்புச் சக்கரங்கள் பொருத்தப்பட்ட ஸ்கூட்டர்கள் வழங்கப்படும். மாற்றுத்திறனாளிகளுக்கான சுய வேலைவாய்ப்பினை ஊக்குவிக்க, அவர்களுக்கு வழங்கப்பட்டு வரும் விளிம்பு உதவித்தொகை 10,000 ரூபாயிலிருந்து 25,000 ரூபாயாக உயர்த்தப்படுவதோடு, தற்போது ஆண்டிற்கு 1,000 பயனாளிகளுக்கு உதவி வழங்கப்படுவதை இருமடங்காக உயர்த்தி, 2,000 பயனாளிகளுக்கு வழங்கப்படும். மாற்றுத்திறனாளிகள் நலத்துறைக்கு, 2018–2019ஆம் ஆண்டிற்கான வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில் 545.21 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### சிறுபான்மையினர் நலன்

கிறிஸ்தவ தேவாலயங்களைப் பராமரித்துப் புதுப்பிக்க மானியம் வழங்கும் திட்டம், 2016–2017ஆம் ஆண்டில் இந்த அரசால் அறிமுகப்படுத்தப்பட்டது. 2017–2018ஆம் ஆண்டு முதல் தமிழ்நாடு வக்ஃபு வாரியத்திற்கு வழங்கப்பட்டு வரும் ஆண்டு மானியத்தொகை ஒரு கோடி ரூபாயிலிருந்து இரண்டு கோடி ரூபாயாக உயர்த்தப்பட்டுள்ளது. சென்னை வக்ஃபு வாரியத்திற்குச் சொந்தமான இடத்தில், வேலைக்குச் செல்லும் இஸ்லாமிய சமுதாயத்தைச் சார்ந்த பெண்கள் தங்குவதற்காக, மகளிர் விடுதி ஒன்று அரசு நிதியுதவியுடன் வரும் நிதியாண்டில் கட்டப்படும். 2017–2018ஆம் ஆண்டில், சிறுபான்மையினரின் பொருளாதார மேம்பாட்டிற்காக, 5,699 பயனாளிகளுக்கு தமிழ்நாடு சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டு நிறுவனம் மூலம் 28.52 கோடி ரூபாய் அளவிற்கு கடனுதவி இந்த அரசால் வழங்கப்பட்டுள்ளது. வரும் நிதியாண்டில், சிறுபான்மையினரின் பொருளாதார மேம்பாட்டிற்காக, 35 கோடி ரூபாய் கடனுதவியாக தமிழ்நாடு சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டு நிறுவனம் வழங்கும்.

### பாகம் – ஆ

### வரவு–செலவுத் திட்டத்திற்கான நிதி ஆதாரங்கள்

2018–2019ஆம் ஆண்டிற்கான வரவு–செலவுத் திட்டத்தில் கணிக்கப்பட்டுள்ள செலவினங்களை மேற்கொள்வதற்குத் தேவையான நிதி ஆதாரங்களைப் பற்றி இனி விளக்க விழைகிறேன்.

மாநிலத்தின் வருவாய் வரவினங்களில் மிக முக்கிய ஆதாரமாக மாநிலத்தின் சொந்த வரி வருவாய் விளங்குகிறது. நான் முன்பே குறிப்பிட்டது போல், தேசிய மற்றும் மாநில அளவிலான பொருளாதார தேக்க நிலை மாறி மிதமான அளவில் பொருளாதாரம் வளர்ந்து வருவதால், மாநிலத்தின் சொந்த வரி வருவாய் வளர்ச்சியிலும் இதன் பலன் சாதகமாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

மாநிலத்தின் சொந்த வரி வருவாயில் வணிக வரிகள் முக்கிய பங்கு வகிக்கிறது. பொருட்கள் மற்றும் சேவைகள் வரியின் கீழ், மாநில பொருட்கள் மற்றும் சேவைகள் வரியையும் (SGST) மாநிலங்களுக்கிடையேயான ஒருங்கிணைந்த பொருட்கள் மற்றும் சேவைகள் வரியையும் (IGST) வணிக வரி வருவாயில் ஒரு பகுதியாக மாநிலம் பெற்று வருகிறது. பொருட்கள் மற்றும் சேவைகள் வரி இழப்பீட்டுத் தொகையை, மத்திய அரசு மானியமாக விடுவிப்பதால், அது உதவி மானியங்களின் கீழ் கணக்கிடப்படுகிறது. பெட்ரோல், டீசல் ஆகியவற்றின் மீதான விற்பனை வரி, மதுபான விற்பனையின் மீதான வரி ஆகியவை வணிக வரிகளில் பெறப்படும் பிற முக்கிய வருவாய் வரவினங்கள் ஆகும். இவற்றை அடிப்படையாகக் கொண்டு, 2017–2018ஆம் ஆண்டு திருத்த மதிப்பீடுகளில் 75,264.99 கோடி ரூபாயும், 2018–2019ஆம் ஆண்டிற்கான வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில் 86,858.59 கோடி ரூபாயும் வணிக வரிகளின் கீழ் வருவாயாகப் பெறப்படும் என கணிக்கப்பட்டுள்ளது.

மாநில ஆயத்தீர்வைகளில் உள்ள குறைவான வளர்ச்சியைக் கருத்தில் கொண்டு, இதன் வருவாய் வரவினம் 2017–2018ஆம் ஆண்டிற்கான திருத்த மதிப்பீடுகளில் 6,488.41 கோடி ரூபாயாகவும், 2018–2019ஆம் ஆண்டிற்கான வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில் 6,997.83 கோடி ரூபாயாகவும் இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. நிலத்தின் வழிகாட்டி மதிப்பு குறைக்கப்பட்டு, பத்திரப்பதிவுக் கட்டணம் உயர்த்தப்பட்டதன் விளைவாக, முத்திரைத்தாள் மற்றும் பத்திரப்பதிவுக் கட்டணங்களின் கீழ் பெறப்படும் வருவாய் வரவினங்களில் ஓரளவு வளர்ச்சி காணப்படுகிறது. இதன்படி, 2017–2018ஆம் ஆண்டிற்கான திருத்த மதிப்பீடுகளில் 9,806.97 கோடி ரூபாயும், 2018–2019ஆம் ஆண்டிற்கான வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில் 10,935.67 கோடி ரூபாயும், முத்திரைத்தாள் மற்றும் பத்திரப்பதிவுக் கட்டணங்களின் கீழ் பெறப்படும் வருவாயாக மதிப்பிடப்பட்டுள்ளது. 2018–2019ஆம் ஆண்டில் வாகனங்கள் மீதான வரி வருவாய் 6,211.74 கோடி ரூபாயாக இருக்கும் எனவும் கணிக்கப்பட்டுள்ளது.

மேற்கண்ட கணிப்புகளின் அடிப்படையில், 2017–2018ஆம் ஆண்டிற்கான திருத்த மதிப்பீடுகளில் மாநிலத்தின் சொந்த வரி வருவாய் வரவினங்கள் 98,693.24 கோடி ரூபாயாக இருக்கும் எனவும், 2018–2019ஆம் ஆண்டிற்கான வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில் 1,12,616.41 கோடி ரூபாயாக இருக்கும் எனவும் கணிக்கப்பட்டுள்ளது. 2018–2019ஆம் ஆண்டிற்கான வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில் மாநிலத்தின் சொந்த வரியல்லாத வருவாயாக 11,301.11 கோடி ரூபாய் மதிப்பிடப்பட்டுள்ளது.

பதினான்காவது நிதிக் குழுவின் பரிந்துரைகளின்படி, மாநிலங்களுக்கு இடையிலான மத்திய வரிகளின் பகிர்வில், தமிழ்நாட்டிற்கான பங்கு 4.969 சதவீதத்திலிருந்து 4.023 சதவீதமாக குறைக்கப்பட்டதன் விளைவாக, மாநிலத்தின் நிதி ஆதாரங்கள் தொடர்ந்து பாதிக்கப்பட்டு வருகிறது. பதினான்காவது நிதிக்குழு காலத்தில் மாநிலங்களுக்கான நிதிப் பகிர்வுப் பங்கை 32 சதவீதத்திலிருந்து 42 சதவீதமாக உயர்த்தியதால், மத்திய அரசு பொறுப்பேற்கும் திட்டங்களில் தனது பங்கை மத்திய அரசு கணிசமாகக் குறைத்துள்ளது. இந்த நிதிப் பகிர்வின் உயர்வால் தமிழ்நாடு கூடுதல் நிதி ஆதாரத்தைப் பெறாத நிலையில், மத்திய அரசின் திட்டங்களுக்கு மாநில அரசு தனது சொந்த வருவாயிலிருந்து கூடுதலாகச் செலவிட வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

ஒவ்வொரு ஆண்டும் சராசரியாக 15 சதவீத அளவில் மத்திய அரசின் வரி வருவாய் அதிகரிக்கின்ற நிலையில், மத்திய வரிகளில் மாநிலங்களுக்கான பகிர்வும் அதே அளவில் அதிகரிப்பது இயல்பு. எனினும், 2010–2011ஆம் ஆண்டு முதல் 2014–2015ஆம் ஆண்டு வரையிலான பதிமூன்றாவது நிதிக் குழு காலகட்டத்தில், 72,070 கோடி ரூபாயாக பரிந்துரைக்கப்பட்ட தமிழ்நாட்டிற்கான பகிர்வு, 2015–2016ஆம் ஆண்டு முதல் 2019–2020ஆம் ஆண்டு வரையிலான ஐந்தாண்டு காலத்தில், மொத்தம் 1.59 இலட்சம் கோடி ரூபாய் தமிழ்நாட்டிற்கு கிடைக்கும் என்று பதினான்காவது நிதிக்குழு பரிந்துரைத்தது. பதிமூன்றாவது நிதிக்குழு காலத்தை ஒப்பிடுகையில், பதினான்காவது நிதிக்குழு காலத்தில் தமிழ்நாட்டிற்கு 121 சதவீத உயர்வே கிடைத்துள்ள நிலையில், அனைத்திந்திய அளவில் சராசரியாக 173 சதவீத உயர்வை மாநிலங்கள் பெற்றுள்ளன. பதிமூன்றாவது நிதிக்குழு காலத்தில் தமிழ்நாடு பெற்றுவந்த அளவிலேயே நிதிப் பகிர்வு பெற்று வந்த கருநாடகா, மஹாராஷ்ட்ரா, ஒடிசா, இராஜஸ்தான் ஆகிய மாநிலங்கள், முறையே 198, 191, 166, மற்றும் 157 சதவீத உயர்வுகளை தற்போது பெற்றுள்ளன. மேலும், இந்நிதிப் பகிர்வு அளவு கூட, பதினான்காவது நிதிக் குழுவின் பரிந்துரைகளே அன்றி, உண்மையில் மாநிலம் இதைவிடக் குறைவான அளவிலேயே நிதியுதவியினைப் பெறுகிறது. உதாரணமாக, பதினான்காவது நிதிக்குழு காலத்தின் முதல் மூன்று ஆண்டுகளில், அதாவது 2015–2016, 2016–2017 மற்றும் 2017–2018 ஆண்டுகளில், மொத்தம் 81,570 கோடி ரூபாய் பரிந்துரைக்கப்பட்டிருந்த போதும், 72,234.28 கோடி ரூபாய் மட்டுமே தமிழ்நாட்டிற்கு கிடைக்கும். பதிமூன்றாவது நிதிக்குழுவின் முதல் மூன்று ஆண்டு காலத்தோடு ஒப்பிடுகையில், பதினான்காவது நிதிக்குழு காலத்தில் 89.35 சதவீத உயர்வை மட்டுமே தமிழ்நாடு பெற்றுள்ளது. ஆனால், அனைத்திந்திய அளவில் இந்த உயர்வு சராசரியாக 134.02 சதவீதமாக உள்ளது. அதே சமயம், கருநாடகா 155.14, ஒருங்கிணைந்த ஆந்திரா 127.59, மஹாராஷ்ட்ரா 148.93, குஜராத் 137.70, கேரளா 149.82 சதவீதம் உயர்வுகளைப் பெற்றுள்ளன. தமிழ்நாட்டிற்கு இவ்வாறு இழைக்கப்பட்ட அநீதியைச் சரிசெய்யவே, சிறப்பு உதவி மானியம் வழங்க தனிப்பட்ட ஒதுக்கீடு அளிக்குமாறு மத்திய அரசை நாம் வலியுறுத்தி வருகிறோம். ஆனால், மத்திய அரசு சாதகமான பதில் ஏதும் இதுவரை அளிக்கவில்லை. இவற்றின் அடிப்படையில், 2017–2018ஆம் ஆண்டிற்கான திருத்த மதிப்பீடுகளில் 27,099.72 கோடி ரூபாயாகவும், 2018–2019ஆம் ஆண்டிற்கான வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில் 31,707.09 கோடி ரூபாயாகவும் மத்திய வரிகளில் பங்கு இருக்குமென மதிப்பிடப்பட்டுள்ளது. அதைப் போலவே, பொருட்கள் மற்றும் சேவைகள் வரி இழப்பீட்டுத் தொகை உட்பட, மத்திய அரசிடமிருந்து பெறப்படும் உதவி மானியங்கள், 2017–2018ஆம் ஆண்டிற்கான திருத்த மதிப்பீடுகளில் 19,264.60 கோடி ரூபாயாகவும், 2018–2019ஆம் ஆண்டிற்கான வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில் 20,626.87 கோடி ரூபாயாகவும் கணிக்கப்பட்டுள்ளது.

**நிதிநிலைக் குறியீடுகள்**

2017–2018ஆம் ஆண்டிற்கான திருத்த மதிப்பீடுகளில், மாநிலத்தின் மொத்த வருவாய் வரவுகள் 1,55,824.70 கோடி ரூபாயாகவும், வருவாய்ச் செலவினங்கள் 1,74,194.97 கோடி ரூபாயாகவும், இதன் விளைவாக வருவாய்ப் பற்றாக்குறை 18,370.27 கோடி ரூபாயாகவும் இருக்குமென கணிக்கப்பட்டுள்ளது. தற்போது வழங்கப்பட்டுள்ள ஊதிய உயர்வையும் கணக்கில் கொண்டு, 2018–2019ஆம் ஆண்டிற்கான வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில் சம்பளங்கள் மற்றும் படிகளுக்காக 52,171.18கோடி ரூபாயும்ஓய்வூதியம்மற்றும்இதரஓய்வுகாலப்

பலன்களுக்காக 25,362.20 கோடி ரூபாயும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. எனவே, 2018–2019ஆம் ஆண்டில் மொத்த வருவாய் வரவுகள் 1,76,251.48 கோடி ரூபாயாகவும், மொத்த வருவாய்ச் செலவினங்கள் 1,93,742.06 கோடி ரூபாயாகவும், இதனால் வருவாய்ப் பற்றாக்குறை 17,490.58 கோடி ரூபாயாகவும் இருக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது.

2018–2019ஆம் ஆண்டில், மூலதனச் செலவினம் 28,282.76 கோடி ரூபாயாகவும், அதனால் நிதிப் பற்றாக்குறை 44,480.73 கோடி ரூபாயாகவும் இருக்குமெனவும், இது மாநிலத்தின் மொத்த உற்பத்தி மதிப்பில் 2.79 சதவீதமாக இருக்குமெனவும் கணிக்கப்பட்டுள்ளது. அனுமதிக்கப்பட்ட நிகரக் கடன்கள் 47,887.59 கோடி ரூபாயாக இருப்பினும், 2018–2019ஆம் ஆண்டில் 43,962.48 கோடி ரூபாய் வரை மட்டும் நிகரக் கடன் பெற உத்தேசிக்கப்பட்டுள்ளது. இதனால், 2019ஆம் ஆண்டு மார்ச் மாதம் 31ஆம் தேதி அன்று, நிகர நிலுவைக் கடன்கள் 3,55,844.84 கோடி ரூபாயாக இருக்கும். மாநில மொத்த உற்பத்தி மதிப்பில் இந்த நிலுவைக் கடன் அளவு 22.29 சதவீதமாக இருக்கும் என்பதால், அனுமதிக்கப்பட்ட 25 சதவீத அளவிற்கு உட்பட்டே கடன் அளவு இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்த நிதிநிலை அறிக்கையின் இணைப்பாக இடைப்பட்ட கால நிதி நிலவரத் திட்டம் இணைக்கப்பட்டுள்ளது. இதனை நிதிநிலை அறிக்கையின் ஒரு பகுதியாகக் கருதி அவையில் படிக்கப்பட்டதாக எடுத்துக்கொள்ள வேண்டுகிறேன்.

நலத்திட்டங்களைச் செயல்படுத்துவதில் மக்களுக்கான எதிர்பார்ப்புகள் கூடியுள்ளது என்பதை நாங்கள் நன்கு அறிந்துள்ளோம். எனினும், நிதி ஆதாரங்களிலும், நிதிநிலையிலும் சிரமமான சூழ்நிலை தொடர்ந்து நிலவி வருகிறது. இத்தகைய சூழ்நிலையிலும், பெருத்த சவால்களாக இருந்த இரண்டு முக்கிய திட்டங்களான உதய் திட்டத்தையும், ஊதியத் திருத்தங்களையும் இந்த அரசு செயல்படுத்தியுள்ளது. கருமேகங்களுக்கிடையே தென்படும் வெள்ளிக் கீற்று மின்னலைப் போன்று, பொருளாதார வளர்ச்சிக்கான அறிகுறிகள் தற்போது தென்பட ஆரம்பித்துள்ளன. இந்தப் பொருளாதார வளர்ச்சியால் மாநிலத்தின் நிதி ஆதாரங்கள் மேம்பட்டு, உதய் திட்டத்தாலும், ஊதியத் திருத்தங்களாலும் ஏற்பட்ட கூடுதல் செலவினத்தால் உருவான இந்த வருவாய்ப் பற்றாக்குறை, வரும் நிதி ஆண்டுகளில் படிப்படியாகக் குறையும் என எதிர்பார்க்கப்படுகிறது. இதன் விளைவாக, பெறப்படும் கடன் அளவு குறைக்கப்பட்டு, நலத்திட்டங்கள் மற்றும் வளர்ச்சிக்கான செலவினங்களுக்கான நிதி ஆதாரங்கள் கூடுதலாகக் கிடைக்கும். இதன்மூலம், மாநிலத்தின் பொருளாதார மேம்பாடு துரிதப்படுத்தப்பட்டு, வளமான தமிழகம் என்ற குறிக்கோளை நாம் எட்ட இயலும் என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

ஐம்பது ஆண்டுகளுக்கு முன்னர், 1967ஆம் ஆண்டு மார்ச் மாதம் 6ஆம் தேதியன்று, தமிழினத்தின் தன்னிகரற்ற தலைவர் பேரறிஞர் அண்ணா அவர்கள் தமிழ்நாட்டின் முதலமைச்சராக பொறுப்பேற்று திராவிட ஆட்சிக்கு வித்திட்டார். சில அரசியல் விமர்சகர்கள் திராவிட ஆட்சியை குறுகிய கண்ணோட்டத்துடன் குறை கூறி முற்றிலும் தவறான, உண்மைக்கு மாறான பிரச்சாரத்தை செய்து வருகின்றனர். அவர்கள் திராவிட இயக்கத்தை அழித்து விடலாம் என்று பகல் கனவு கண்டு வருகின்றனர். அவர்களுக்கு நான் தெரிவிக்க விரும்புவது, கடந்த ஐம்பது ஆண்டுகளில், நாட்டிலேயே மற்ற மாநிலங்களைக் காட்டிலும் சிறப்பாக முன்னேறி, பல்வேறு சமூக–பொருளாதார கூறுகளில் மாபெரும் முன்னேற்றத்தையும் வளர்ச்சியையும் தமிழ்நாடு கண்டுள்ளது என்பதைத்தான். மக்களுக்கு அடிப்படை வசதிகளை அளிப்பதிலும் சரி, பொது சுகாதாரம், கல்வி, சமூகப் பாதுகாப்பு, மனிதவள மேம்பாட்டுக் குறியீடு, தொழில் மற்றும் பொருளாதார வளர்ச்சிகளிலும் சரி, தமிழ்நாடு கண்டுள்ள முன்னேற்றத்தை, மனசாட்சி உள்ள எந்த நபராலும் மறுக்க இயலாது. தமிழ்நாடு கண்டுள்ள வளர்ச்சியைப் பற்றி நான் பேசிக் கொண்டே போகலாம், ஆனால், நேரத்தின் அருமை கருதி ஓரிரு முக்கிய குறியீடுகளை மட்டும் இங்கு குறிப்பிட்டுக் கூற விரும்புகிறேன். அண்மையில், நிதி ஆயோக் வெளியிட்டுள்ள மாநிலங்களுக்கிடையேயான சுகாதாரக் குறியீடுகளில் இந்தியாவிலேயே தமிழ்நாடு மூன்றாவது இடத்தில் உள்ளதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது; உயர் கல்விக்கான மாணவர் சேர்க்கையில் இந்தியாவிலேயே தமிழ்நாடு முதலிடத்தில் உள்ளது. 1973–1974ஆம் ஆண்டில், வறுமைக் கோட்டிற்குக் கீழ் 54.88 சதவீத மக்கள் நாட்டில் இருந்தனர். அதே காலகட்டத்தில், தமிழ்நாட்டில் இந்த அளவு 54.94 சதவீதம் ஆகும். ஆனால், 2011–2012ஆம் ஆண்டின் தேசிய மாதிரி கணக்கெடுப்பின்படி, இந்த குறியீடு தேசிய அளவில் 21.92 சதவீதமாக உள்ள போதிலும், தமிழ்நாட்டில் 11.28 சதவீதமாகக் குறைந்துள்ளது. இதே கால கட்டத்தில், இந்தக் குறியீடு குஜராத்தில் 48.15 சதவீதத்திலிருந்து 16.63 சதவீதமாகவும், கருநாடகாவில் 54.47 சதவீதத்திலிருந்து 20.90 சதவீதமாகவும், மத்தியப் பிரதேசத்தில் 61.78 சதவீதத்திலிருந்து 31.65 சதவீதமாகவும்,

மஹாராஷ்ட்ராவில் 53.24 சதவீதத்திலிருந்து 17.35 சதவீதமாகவும், இராஜஸ்தானில் 46.14 சதவீதத்திலிருந்து 14.71 சதவீதமாகவும், உத்திரப்பிரதேசத்தில் 57.07 சதவீதத்திலிருந்து 29.43 சதவீதமாகவும், மேற்கு வங்காளத்தில் 63.43 சதவீதத்திலிருந்து 19.98 சதவீதமாகவும் குறைந்துள்ளது. இதேபோன்று, 1960–1961ஆம் ஆண்டில், தேசிய அளவில் 306 ரூபாயாக இருந்த, தனிநபர் வருமானம், தமிழ்நாட்டில் 334 ரூபாயாக இருந்தது. 2016–2017ஆம் ஆண்டில் தனிநபர் வருமானம், தேசிய அளவில் 1,03,219 ரூபாயாக உள்ள போதிலும் தமிழ்நாட்டில் 1,53,263 ரூபாயாக உள்ளது. 1950களில் மொத்த உள்நாட்டு உற்பத்தி மதிப்பில், தமிழ்நாடு நாட்டிலேயே ஐந்தாவதாக இருந்த நிலை மாறி இன்று இரண்டாவது பெரிய பொருளாதாரமாக விளங்குகிறது. இத்தகைய மகத்தான சாதனைகளை, மத்தியில் தொடர்ந்து செயல்பட்டு வரும் அரசுகளின் பாராமுகமும், பிற மாநிலங்களுக்கு வழங்கப்படும் சிறப்புச் சலுகைகள் போல் நமக்கு கிடைக்காத நிலையிலும், சமூக சமத்துவத்தை கொள்கையாகக் கொண்ட திராவிட இயக்கத்தால் தான் சாதிக்க முடிந்தது. நாம் அடைந்த இந்த முன்னேற்றம் நமது சொந்த முயற்சிகளாலும், சொந்த பலத்தாலுமே ஏற்பட்டது என்பதைத் தெரிவிக்கக் கடமைப்பட்டுள்ளேன். சமூக–பொருளாதார மாற்றத்திற்கு, மற்ற மாநிலங்கள் பின்பற்றும் வகையிலான உதாரணமாக இன்று தமிழ்நாடு உள்ளது என்பதை இந்த அரசியல் விமர்சகர்கள் புரிந்து கொள்ள வேண்டும். தமிழ்நாடு பெற்றுள்ள வளர்ச்சியை மற்ற மாநிலங்களுடன் ஒப்பீடு செய்து, உண்மை நிலையை தமிழ்நாட்டு மக்களும் உணர்ந்து கொள்ள வேண்டும். திராவிட இயக்க ஆட்சியில் புரட்சித்தலைவரால் உருவாக்கப்பட்டு, புரட்சித்தலைவி அம்மா அவர்களால் வழிநடத்தப்பட்ட அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகமே அதிக காலம் ஆட்சியில் இருந்து, சவால்களை எதிர்கொண்டு இந்தப் பெரும் வளர்ச்சிக்கு வித்திட்டது என்பதையும் இங்கு குறிப்பிட விரும்புகிறேன். இத்தகைய எதிர்ப்புகள் எத்தனை வந்தாலும் தவறான விமர்சனங்கள், முறையற்ற பிரச்சாரங்கள் செய்தாலும், இந்த இயக்கம் தளர்வின்றி மென்மேலும் வளரும். போற்றுவார் போற்றினும் தூற்றுவார் தூற்றினும், தங்களது வியர்வையாலும், உழைப்பாலும் இந்த இயக்கத்தை வளர்த்த தலைவர்களின் கனவுகளை நனவாக்கும் பாதையில் நாம் தொடர்ந்து முன்னேறுவோம் என்பதை இங்கு தெரிவிக்கக் கடமைப்பட்டுள்ளேன்.

எளிமையானவரும், பரந்த அனுபவ அறிவும் வாய்ந்த மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இந்த நிதிநிலை அறிக்கையைத் தயாரிப்பதில் சிறப்பாக வழிகாட்டியுள்ளார்கள். அவர் மக்களின் எண்ணங்களை உணர்ந்து தனது செயலில் பிரதிபலிப்பவர். அவரது வழிகாட்டுதலில் வகுக்கப்பட்ட இந்த நிதிநிலை அறிக்கை பொருளாதார வளர்ச்சியை மேம்படுத்தி, மாநிலத்தின் வளத்தைப் பெருக்க வழிவகுக்கும் என நான் உறுதியாக நம்புகிறேன். இந்த நிதிநிலை அறிக்கையை தயாரித்து வழங்குவதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தந்த வழிகாட்டுதலுக்கும், ஆதரவிற்கும் நான் எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்த நிதிநிலை அறிக்கையை வடிவமைத்து தயாரிப்பதில் என்னுடன் அயராது பணியாற்றிய நிதித்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திரு. க. சண்முகம், இ.ஆ.ப., அவர்களுக்கும், அவருடன் கடினமாகப் பணியாற்றிய நிதித்துறையின் அனைத்து அலுவலர்களுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ’2018–2019ஆம் ஆண்டிற்கான வரவு–செலவுத் திட்டத்திற்கு இந்த அவையின் ஒப்புதலைப் பெற்றுத் தருமாறு தங்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

**நன்றி!**

**வணக்கம்!**

## இணைப்பு

### இடைப்பட்ட கால நிதி நிலவரத் திட்டம்

2003ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி நிலை நிருவாகப் பொறுப்புடைமைச் சட்டத்தின் 3ஆம் பிரிவின் உட்பிரிவு (1)இன்படி, வரவு–செலவுத் திட்ட அறிக்கையுடன், இடைப்பட்ட கால நிதி நிலவரத் திட்டம் குறித்த அறிக்கை ஒன்றையும், மாநில அரசு சட்டப் பேரவையில் வைக்க வேண்டும். மேலும், இச்சட்டத்தின், 3ஆம் பிரிவின் உட்பிரிவு (2)இன்படி, வருவாய்ப் பற்றாக்குறை, நிதிப் பற்றாக்குறை போன்ற நிதி நிலைக் குறியீடுகளுக்கான இலக்குகளை அடுத்தடுத்து வரும் ஆண்டுகளுக்குக் குறிப்பிட்டும், அவற்றின் கணக்கீட்டிற்கான அனுமானங்களைத் தெளிவாக விளக்கியும் இடைப்பட்ட கால நிதி நிலவரத் திட்டம் வகுக்கப்பட வேண்டும். மேற்சொன்ன சட்டத்தின் கீழ் கூறப்பட்டுள்ள விதிகளின்படி, 2018–2019ஆம் ஆண்டு முதல் 2020–2021ஆம் ஆண்டு வரையிலான காலத்திற்கு இடைப்பட்ட கால நிதி நிலவரத் திட்டம் சட்டமன்றப் பேரவை முன் வைக்கப்படுகிறது.

### நோக்கங்கள்

வளர்ச்சி திட்டச் செலவினங்களுக்கான தேவைகள் மற்றும் நிதிச் சிக்கனத்திற்கும் இடையே சமநிலையை ஏற்படுத்தும் வகையிலும், முக்கியத் துறைகளில் முதலீட்டுக்குத் தேவையான அடிப்படை நிதி ஆதாரத்தை உருவாக்கக் கூடிய, உயர் பொருளாதார வளர்ச்சியை அடையும் வகையிலும் இடைப்பட்ட கால நிதி நிலவரத் திட்டம் வகுக்கப்பட்டுள்ளது. சமூகப் பாதுகாப்பு, கல்வி, சுகாதாரம் போன்ற பல்வேறு பணிகளுக்கான நலத் திட்டங்களை இந்த அரசு செயல்படுத்தி வருகிறது. அதே வேளையில், அகவிலைப்படியின் காலமுறை உயர்வு, ஊதிய உயர்வு, புதிய பணியிடங்கள் தோற்றுவிப்பு மற்றும் காலியாக உள்ள பணியிடங்களை நிரப்புதல் போன்றவற்றின் காரணமாக தொடர்ந்து உயர்ந்து வரும் நிருவாகச் செலவினங்களுக்கான நிதித் தேவைகளையும் மாநில அரசு நிறைவு செய்ய வேண்டியுள்ளது. இச்செலவினங்களுடன், சாலைகள் மற்றும் பாலங்கள் கட்டுதல், நீர்ப்பாசனம் மற்றும் மின் திட்டங்கள் போன்ற மூலதனச் செலவுகளுக்கும் இந்த அரசு உரிய முக்கியத்துவம் அளித்து வருகிறது. பல்வேறு தடைகள் இருந்தாலும், மத்திய நிதிக்குழு வகுத்துள்ள இலக்குகளுக்கு உட்பட்டு நிதிநிலை உறுதித் தன்மையை அடையவும் மாநில அரசு உறுதியாக உள்ளது.

2018–2021 ஆம் ஆண்டு காலகட்டத்திலும், அதனைத் தொடர்ந்து வரும் காலத்திலும், வருவாய்ப் பற்றாக்குறை அளவைக் கட்டுப்படுத்துதல், நிதிப் பற்றாக்குறையை மாநில மொத்த உற்பத்தி மதிப்பில் மூன்று சதவீதத்திற்குள் கட்டுப்படுத்துதல் மற்றும் மத்திய நிதிக்குழு நிர்ணயித்துள்ள வரம்பிற்குள் மாநில மொத்த உற்பத்தி மதிப்பில் நிலுவைக் கடன் அளவு சதவீதத்தைப் பராமரித்தல் ஆகிய நிதிநிலை இலக்குகள் பராமரிக்கப்படுவதை இந்த இடைப்பட்ட கால நிதி நிலவரத் திட்டமானது உறுதி செய்கிறது.

### எதிர்காலக் கணிப்புகள்

மாநில மொத்த உற்பத்தி மதிப்பு, புதிய 2011–2012ஆம் ஆண்டின் நிலையான விலையின் அடிப்படையில் கணக்கிடப்பட்டு, அதன்படியே வரவு–செலவுத் திட்டத்தில் கையாளப்பட்டுள்ளது. பண மதிப்பிழப்பு மற்றும் பொருட்கள் மற்றும் சேவைகள் வரி முறையின் அறிமுகம் ஆகியவற்றால் ஏற்பட்டுள்ள நிச்சயமற்ற தன்மையால் இந்தியப் பொருளாதாரம் சவாலான காலகட்டத்தில் உள்ளது. இருந்தபோதிலும், வரும் ஆண்டுகளில் மாநிலத்தின் பொருளாதார வளர்ச்சி விகிதம் உயரும் என எதிர்பார்க்கப்படுகிறது.

### I. வருவாய்க் கணக்கு வரவுகள்

மத்திய அரசின் நிதி உதவி உள்ளிட்ட மாநில அரசின் மொத்த வருவாய் வரவுகள் 2018–2019ஆம் ஆண்டில் 1,76,251 கோடி ரூபாயாக இருக்குமென மதிப்பிடப்பட்டுள்ளது. அதன் முக்கியக் கூறுகள் மற்றும் அவற்றின் வளர்ச்சிப் போக்குகள் கீழே விவரிக்கப்பட்டுள்ளன.

### மாநில அரசின் சொந்த வரிவருவாய்

மறைமுக வரி விதிப்பு முறையில் ஒரு முக்கியமான மாற்றமாக அறிமுகப்படுத்தப்பட்ட பொருட்கள் மற்றும் சேவைகள் வரி விதிப்பு முறையால், பொருளாதாரத்தில் தற்காலிகமாக நிலவி வரும் நிச்சயமற்ற சூழ்நிலையானது பொருளாதார வளர்ச்சி விகிதத்தைப் பாதித்துள்ளது. உலக அளவிலும், உள்நாட்டிலும் பொருளாதார வளர்ச்சி விகிதம் உயர்ந்து வருகிறது. இத்தகைய எதிர்மறைக் காரணிகள் நிலவும் போதும், மாநிலம் பொருளாதாரம் சீராக வளர்ச்சியடைந்துள்ளதுடன், 2017–2018ஆம் ஆண்டில் மாநிலப் பொருளாதார வளர்ச்சி விகிதம் நிலையான விலையில் 8.03 சதவீதம் இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. மேலும், 2018–2019ஆம் ஆண்டில் பொருளாதாரமானது வேகமாக வளர்ச்சி பெறுவதன் மூலம், பொருளாதார வளர்ச்சி விகிதம் 9 சதவீதமாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. மாநிலப் பொருளாதாரத்தில் நிலவும் நேர்மறையான காரணிகள் மாநில அரசின் சொந்த வரி வருவாயை கணிசமாக அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

2017–2018 ஆம் ஆண்டிற்கான திருத்த மதிப்பீடுகளின்படி மாநில அரசின் சொந்த வரி வருவாய் 98,693 கோடி ரூபாயாகும். 2018–2019ஆம் ஆண்டிற்கான வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில் இது 1,12,616 கோடி ரூபாயாக அதிகரிக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது. 2019–2020 மற்றும் 2020–2021 ஆம் ஆண்டுகளில், முறையே 11.97 மற்றும் 11.80 சதவீதம் வளர்ச்சி பெறும் என கணக்கில் கொள்ளப்பட்டுள்ளது.

**மாநில அரசின் சொந்த வரி வருவாயின் முக்கிய அம்சங்கள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன:–**

- 2017–2018ஆம் ஆண்டு முதல் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள பொருட்கள் மற்றும் சேவைகள் வரி முறையினால், 2018–2019 ஆம் ஆண்டிற்கான வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில்

வணிக வரியின் மூலம் பெறப்படும் வரவுகள் 86,859 கோடி ரூபாயாக இருக்குமென மதிப்பிடப்பட்டுள்ளது.

- 2017ஆம் ஆண்டு, மார்ச் மாதத்தில் தேசிய நெடுஞ்சாலைகள் மற்றும் மாநில நெடுஞ்சாலைகளில் அமைந்துள்ள மதுபானக் கடைகளை நடத்துவதற்கு உச்ச நீதிமன்றம் விதித்துள்ள தடைக்குப் பின்னர் ஏற்பட்டுள்ள தாக்கத்தைக் கணக்கில் கொண்டு, 2018–2019 ஆம் ஆண்டில் மாநில ஆயத்தீர்வைகளின் மூலம் வரவுகள் 6,998 கோடி ரூபாயாக இருக்குமென மதிப்பிடப்பட்டுள்ளது.

- பத்திரப் பதிவுக்கான வழிகாட்டு மதிப்புகளைக் குறைத்தும், பதிவுக் கட்டணங்களை உயர்த்தியும் மேற்கொள்ளப்பட்டுள்ள திருத்தம், முத்திரைத்தாள் தீர்வை மற்றும் பதிவுக் கட்டணங்கள் மூலம் கிடைக்கும் வரவுகளின் மீது எதிர்மறைத் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. எனவே, 2017–2018 ஆம் ஆண்டிற்கான திருத்த மதிப்பீடுகளில், 9,807 கோடி ரூபாயாக மதிப்பிடப்பட்ட முத்திரைத்தாள் தீர்வை மற்றும் பதிவுக் கட்டணங்கள் மூலமாகக் கிடைக்கும் வரவுகள், 2018–2019 ஆம் ஆண்டில் 10,936 கோடி ரூபாயாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

- 2017–2018ஆம் ஆண்டிற்கான திருத்த மதிப்பீடுகளில் 5,635 கோடி ரூபாயாக மோட்டார் வாகன வரிவருவாய் இருக்கும் என்ற மதிப்பீடானது, 2018–2019 ஆம் ஆண்டிற்கான வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில் 6,212 கோடி ரூபாய் என மதிப்பிடப்பட்டுள்ளது.

### வரி அல்லாத வருவாய்

2018–2019 ஆம் ஆண்டிற்கான வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில், மாநிலத்தின் சொந்த வரி அல்லாத வருவாய் 11,301 கோடி ரூபாயாக மதிப்பிடப்பட்டுள்ளது. நமது மாநிலத்தில் சுரங்கத் தொழிலுக்கான வாய்ப்புகள் குறைவு என்பதாலும், பெரும்பாலான அரசு சேவைகள் கட்டணம் இல்லாமலோ அல்லது குறைந்த கட்டணத்திலோ வழங்கப்படுவதாலும், 2017–2018 ஆம் ஆண்டிற்கான திருத்த மதிப்பீட்டு அளவிலிருந்து சிறிதளவே உயரும் என மதிப்பிடப்பட்டுள்ளது. 2019–2020 மற்றும் 2020–2021 ஆம் ஆண்டுகளில் இதன் வளர்ச்சி விகிதம் 5 சதவீதமாக இருக்கும் எனக் கருதப்படுகிறது.

### மத்திய வரிகளில் மாநில அரசின் பங்கு

மாநிலங்களுக்கிடையே மத்திய வரிகளில் நிகர வரி வருவாயில் தமிழகத்தின் பங்கினை, ஒவ்வொரு நிதிக்குழுவும் குறைத்து வருகிறது. மத்திய வரிகளின் நிதிப்பகிர்வில் தமிழ்நாட்டிற்கான பங்கானது, பதிமூன்றாவது நிதி ஆணையத்தின் பரிந்துரைகளைக் காட்டிலும், பதினான்காவது நிதி ஆணையத்தின் பரிந்துரையால், சேவை வரியில் 5.047 சதவீதத்திலிருந்து 4.104 சதவீதமாகவும், ஏனைய வரிகளைப் பொறுத்தவரையில் 4.969 சதவீதத்திலிருந்து 4.023 சதவீதமாகவும் சரிவைக் கண்டுள்ளது. 2018–2019ஆம் ஆண்டிற்கான மத்திய அரசின் வரவு–செலவுத் திட்டத்தில் உள்ள கணிப்புகளின் அடிப்படையில், 2018–2019ஆம் ஆண்டில் மத்திய வரிகளில் நமது மாநிலத்திற்கான பங்கு 31,707 கோடி ரூபாயாக இருக்குமென இந்த வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில் மதிப்பிடப்பட்டுள்ளது. பதினைந்தாவது நிதிக் குழுவை மத்திய அரசு அமைத்துள்ளது. இக்குழுவின் பரிந்துரைகள் 2020–2021ஆம் ஆண்டிற்கான வரி வருவாய்ப் பகிர்வில் தாக்கத்தை ஏற்படுத்தும். இந்த இடைப்பட்ட கால நிதி நிலவரத் திட்டத்தில், இக்காரணியைக் கருதாது, வரி வருவாய்ப் பகிர்வு முறையில் மாற்றம் ஏதும் இராது எனக் கருதப்பட்டுள்ளது. 2019–2020 மற்றும் 2020–2021ஆம் ஆண்டுகளில் வளர்ச்சி விகிதம் 15 சதவீதமாக இருக்கும் எனக் கருதப்படுகிறது.

### மத்திய அரசிடமிருந்து பெறும் உதவி மானியங்கள்

2018–2019ஆம் ஆண்டிற்கான மத்திய அரசின் வரவு–செலவுத் திட்டத்தில் வழங்கப்பட்டுள்ள நிதி ஒதுக்கீடுகளை கருத்தில் கொண்டு, 2018–2019 ஆம் ஆண்டிற்கான வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில் மத்திய அரசிடமிருந்து பெறும் உதவி மானியங்கள் 20,627 கோடி ரூபாயாக இருக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது. 2019–2020 மற்றும் 2020–2021 ஆம் ஆண்டுகளில் இதன் வளர்ச்சி விகிதம் 10 சதவீதமாக இருக்கும் எனக் கருதப்படுகிறது.

### II. வருவாய்க் கணக்கில் செலவுகள்

- 2018–2019ஆம் ஆண்டில் வருவாய்க் கணக்கு செலவுகள் 1,93,742 கோடி ரூபாயாக மதிப்பிடப்பட்டுள்ளது. இது, 2017–2018 ஆம் ஆண்டு திருத்த மதிப்பீடுகளை விட 11.22 சதவீதம் கூடுதலாகும். வருவாய்க் கணக்கு செலவுகளின் முக்கிய கூறுகள் கீழே விவரிக்கப்பட்டுள்ளன.

- 2018–2019 ஆம் ஆண்டிற்கான வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில் சம்பள செலவினத்திற்கான ஒதுக்கீடு 52,171 கோடி ரூபாயாகும். ஓய்வூதியம் மற்றும் இதர ஓய்வுக்கால பலன்கள் குறித்த செலவினத்திற்கான ஒதுக்கீடு 25,362 கோடி ரூபாயாகும். ஏழாவது ஊதியக்குழுவின் பரிந்துரைகள் நடைமுறைப்படுத்தியதால், 2017–2018ஆம் ஆண்டிற்கான திருத்த மதிப்பீடுகள் மற்றும் 2018–2019ஆம் ஆண்டிற்கான வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில் சம்பளங்கள், ஓய்வூதியம் மற்றும் இதர ஓய்வுக்கால செலவினங்களுக்கான ஒதுக்கீட்டில் உயர்வு காணப்படுகிறது. இந்த நிதி ஒதுக்கீடுகள், 2018–2019ஆம் ஆண்டிற்கான மொத்த வருவாய்ச் செலவுகளில் 40.02 சதவீதமாகும். அகவிலைப்படியின் காலமுறை உயர்வு, ஊதிய உயர்வு மற்றும் காலிப் பணியிடங்களை நிரப்புதல் ஆகியவற்றால் ஏற்படக்கூடிய செலவுகளின் காரணமாக, 2019–2020 மற்றும் 2020–2021ஆம் ஆண்டுகளுக்கான சம்பளச் செலவினம், மற்றும் ஓய்வூதியம் மற்றும் இதர ஓய்வுகாலப் பலன்கள் குறித்த செலவினங்கள் ஆகியவற்றின் வளர்ச்சி விகிதம், முறையே 10.50 மற்றும் 10.15 சதவீதமாக இருக்கும் எனக் கருதப்படுகிறது.
- 2018–2019 ஆம் ஆண்டிற்கான வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில் மானியம் மற்றும் உதவித்தொகைக்கான ஒதுக்கீடு 75,723 கோடி ரூபாயாகும். உணவு மானியம், மின்சார மானியம், கல்வி உதவித்தொகைகள், வீட்டுவசதித் திட்டங்கள், விவசாயக் கடன் தள்ளுபடி திட்டம் போன்ற தற்போது நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் பல்வேறு நலத்திட்டங்களுக்கான செலவினங்கள் இந்த மதிப்பீடுகளில் உள்ளடங்கியுள்ளன. மேலும், ஐந்தாவது மாநில நிதிக்குழுவின் பரிந்துரைகளின்படி உள்ளாட்சி அமைப்புகளுக்கான நிதிப் பகிர்வு அதிகரிக்கப்பட்டு, வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில் சேர்க்கப்பட்டுள்ளது. 2019–2020 மற்றும் 2020–2021 ஆம் ஆண்டுகளில் இதன் வளர்ச்சி விகிதம் 8 சதவீதமாக இருக்கும் என கணிக்கப்பட்டுள்ளது.
- 2018–2019ஆம் ஆண்டிற்கான வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில் ஊதியம் அல்லாத செயல்முறை மற்றும் பராமரிப்பு செலவுகள் 10,838 கோடி ரூபாயாக இருக்கும் என கணிக்கப்பட்டுள்ளது. இம்மதிப்பீடுகளில், குறிப்பாக, பராமரிப்பு, நிருவாகச் செலவுகள், எரிபொருள் செலவுகள் மற்றும் பள்ளி மாணவர்களுக்கு சீருடை வழங்குதல் ஆகிய திட்டங்களுக்கான ஒதுக்கீடுகளை உள்ளடக்கியதாகும். 2019–2020 மற்றும் 2020–2021ஆம் ஆண்டுகளில் இதன் வளர்ச்சி விகிதம் 7 சதவீதமாக இருக்கும் எனக் கருதப்படுகிறது.
- 2018–2019ஆம் ஆண்டிற்கான வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில் வட்டி செலுத்துவதற்கான செலவினம் 29,624 கோடி ரூபாய் என மதிப்பிடப்பட்டுள்ளது. இது மொத்த வருவாய்ச் செலவுகளில் 15.29 சதவீதமாகும். 2018–2019 ஆம் ஆண்டிற்கான வட்டிச் செலவு மொத்த வருவாய் வரவில் 16.81 சதவீதமாகும். இது, 2019–2020 மற்றும் 2020–2021 ஆம் ஆண்டுகளில், முறையே, 17.92 மற்றும் 17.52 சதவீதமாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

### III. மூலதனக் கணக்கில் செலவுகள்

மூலதனப் பணிகளுக்கான செலவை மேற்கொள்வதில் இந்த அரசு தனிக் கவனம் செலுத்தி வருகிறது. 2017–2018ஆம் ஆண்டிற்கான திருத்த மதிப்பீடுகளில் மூலதனப் பணிகளுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட 24,298 கோடி ரூபாய், 2018–2019ஆம் ஆண்டிற்கான வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில் 28,283 கோடி ரூபாயாக உயர்த்தி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இது 2019–2020 மற்றும் 2020–2021ஆம் ஆண்டுகளில் 15 சதவீதமாக மேலும் உயரும் என எதிர்பார்க்கப்படுகிறது.

### IV. வருவாய்ப் பற்றாக்குறை மற்றும் நிதிப் பற்றாக்குறை

மாநில நெடுஞ்சாலைகள் மற்றும் தேசிய நெடுஞ்சாலைகளிலிருந்து 500 மீட்டர் தொலைவிற்குள் மதுபானக் கடைகளை நடத்துவதற்கு உச்ச நீதிமன்றம் தடை விதித்த காரணத்தால், 2017–2018ஆம் ஆண்டிற்கான வரவு–செலவுத் திட்டத்தில் மதிப்பீடு செய்யப்பட்டதை விட குறைந்துள்ளது. இதன் விளைவாக, மாநிலத்தின் சொந்த வரி வருவாய் வளர்ச்சி விகிதத்தில், குறிப்பாக வணிக வரிகள் மற்றும் மாநில ஆயத்தீர்வைகளின் கீழ் பெறப்படும் வரவுகளில், குறிப்பிடத்தக்க சரிவு காணப்படுகிறது. எனவே, 2018–2019 ஆம் ஆண்டில் வருவாய்ப் பற்றாக்குறை மற்றும் நிதிப் பற்றாக்குறை, முறையே 17,491 கோடி ரூபாய் மற்றும் 44,481 கோடி ரூபாயாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. 2018–2019ஆம் ஆண்டிற்கான வரவு–செலவுத்

திட்ட மதிப்பீடுகளில் நிதிப் பற்றாக்குறை விகிதம், மாநில மொத்த உற்பத்தி மதிப்பில் 2.79 சதவீதமாக இருக்கும். இது, தமிழ்நாடு நிதி நிலை நிருவாகப் பொறுப்புடைமைச் சட்டத்தில் வரையறுக்கப்பட்டுள்ள 3 சதவீதத்திற்கும் குறைவாகும். ஏழாவது ஊதியக் குழுவின் பரிந்துரைகளை செயல்படுத்தியதால், சம்பளங்கள் மற்றும் ஓய்வூதியச் செலவினங்களில் ஏற்பட்டுள்ள 14,719 கோடி ரூபாய் கூடுதல் செலவினம், மாநிலத்தின் நிதிச்சுமையை அதிகரித்துள்ளது. இவை அனைத்தையும் கருத்தில் கொண்டு, மாநில மொத்த உற்பத்தி மதிப்பில் நிதிப் பற்றாக்குறை விகிதம் 2019–2020 ஆம் ஆண்டில் 2.76 சதவீதமாகவும், 2020–2021 ஆம் ஆண்டில் 2.57 சதவீதமாகவும் இருக்கும்.

### V. கடன்கள்

பதினான்காவது நிதிக் குழு பரிந்துரைத்த கணக்கீட்டின்படி மத்திய அரசு நிர்ணயித்த ஒட்டுமொத்தக் கடன் வரம்பின் அடிப்படையில், கடன் வரவுகள் மற்றும் திரும்பச் செலுத்துதல் மதிப்பிடப்பட்டுள்ளன. 2018–2019ஆம் ஆண்டிற்கான, நிகரக் கடன் வரம்பு 47,888 கோடி ரூபாய் என்று கணிக்கப்பட்டிருந்தாலும், மாநில அரசு 43,962 கோடி ரூபாய் மட்டுமே நிகரக் கடன் வாங்க திட்டமிட்டுள்ளது. வருங்கால வைப்பு நிதி உள்ளிட்ட நிலுவையிலுள்ள கடன் 31.03.2019 அன்று, 3,55,845 கோடி ரூபாயாக இருக்கும். இது மாநில மொத்த உற்பத்தி மதிப்பில் 22.29 சதவீதம் மட்டுமே ஆகும்.

### VI. கடன் உத்திரவாதங்கள்

ஒவ்வொரு ஆண்டிலும் நிலுவையிலுள்ள அரசு உத்திரவாதங்கள் முந்தைய ஆண்டின் மொத்த வருவாய்க் கணக்கு வரவுகளில் 100 சதவீத அளவு அல்லது மாநில மொத்த உற்பத்தி மதிப்பீட்டில் 10 சதவீத அளவு, இவற்றில் எது குறைவானதோ அந்த அளவிற்குள் அமையப்பெற வேண்டும். 31.03.2017 அன்று உள்ளபடி நிலுவையிலுள்ள அரசு உத்தரவாதங்களின் அளவு முந்தைய ஆண்டின் மொத்த வருவாய் வரவுகளில் 22.59 சதவீதமாகவும் மாநிலத்தின் மொத்த உற்பத்தி மதிப்பீட்டில் 2.24 சதவீதமாகவும் உள்ளது. ஒவ்வொரு ஆண்டிலும் மீளப்பெறும் சாத்தியக் கூறுகளின் அடிப்படையில் (Risk weighted) கணக்கிடப்பட்ட நிலுவையிலுள்ள அரசு உத்திரவாதங்கள் முந்தைய ஆண்டின் மொத்த வருவாய்க் கணக்கு வரவுகளில் 75 சதவீதம் அல்லது மாநில மொத்த உற்பத்தி மதிப்பீட்டில் 7.50 சதவீதம் இவற்றில் எது குறைவானதோ அந்த அளவிற்குள் அமையப்பெற வேண்டும். 31.03.2017 அன்று உள்ளபடி மீளப்பெறும் சாத்தியக் கூறுகளின் அடிப்படையில் கணக்கிடப்பட்ட நிலுவையிலுள்ள அரசு உத்திரவாதங்களின் (Risk weighted guarantees) அளவு, முந்தைய ஆண்டின் மொத்த வருவாய் வரவுகளில் 4.37 சதவீதமாகவும் மாநிலத்தின் மொத்த உற்பத்தி மதிப்பீட்டில் 0.43 சதவீதமாகவும் உள்ளது.

### முடிவுரை

மாநிலத்தின் பொருளாதாரம் வளர்ச்சிப் பாதையில் மெல்ல முன்னேறிச் செல்வதை, இடையில் தற்காலிகமான பின்னடைவுகள் ஏற்பட்ட போதிலும், 2012–2013ஆம் ஆண்டில் 4.85 சதவீதமாக இருந்த மாநில மொத்த உற்பத்தி மதிப்பின் வளர்ச்சி விகிதமானது (நிலையான விலைகளின் அடிப்படையில்), 2017–2018ஆம் ஆண்டில் 8.03 சதவீதமாக அதிகரித்துள்ளது தெளிவாக்குகிறது.

வணிக வரிகள் மற்றும் மாநில ஆயத்தீர்வை ஆகியவற்றின் கீழ் பெறப்படும் வரவுகளில் குறைவு ஏற்பட்டதால், 2017–2018ஆம் ஆண்டில் மாநிலத்தின் சொந்த வரி வருவாயில் குறிப்பிடத்தக்க வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது. இது, வருவாய் வரவுகளில் எதிர்மறைத் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. மேலும், பதினான்காவது நிதிக் குழுவின் பரிந்துரைகளால் மத்திய அரசு மாநிலங்களுக்கு பகிர்ந்தளிக்கக்கூடிய நிகர வரி வருவாயில் தமிழகத்தின் பங்கு குறைந்தது மற்றும் மத்திய அரசு பொறுப்பேற்கும் திட்ட பணிகளில் மாநில அரசின் பங்கு உயர்ந்தது ஆகியவை மாநில அரசின் நிதிநிலையை பாதித்துள்ளது. ஏழாவது மத்திய ஊதியக்குழுவின் பரிந்துரைகளை செயல்படுத்தியதால் சம்பளங்கள் மற்றும் ஓய்வூதியங்கள் உயர்த்தப்பட்டதைத் தவிர, இதரச் செலவுகளின் பங்கு நிலையாக உள்ளது. இந்த சுணக்கமான சூழ்நிலையிலும், ஒட்டுமொத்த நிதிப் பற்றாக்குறை, நிகரக் கடன், மாநிலத்தின் மொத்த உற்பத்தி மதிப்பில் நிலுவையில் உள்ள மொத்தக் கடன் விகிதம் ஆகியவை அனுமதிக்கப்பட்ட அளவிற்குள்ளேயே கட்டுப்படுத்தப்படும். மாநிலத்தின் நிதி நிலைமையை மேம்படுத்துவதற்கு வழிவகை செய்யும் விரைவான பொருளாதார வளர்ச்சியை அடைய அரசு அனைத்து வகையான நடவடிக்கைகளையும் தொடர்ந்து எடுத்து நிதி மேலாண்மையை வலுப்படுத்தும்.

# காவேரி நதிநீர் பிரச்சினை, ஒட்டுமொத்த தமிழர்களின் உணர்வுகளோடு பின்னிப் பிணைந்து இருக்கிறது!



**மா**ண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

காவேரி நதிநீர்ப் பிரச்சினை, காவேரி டெல்டா விவசாயிகளின் வாழ்வாதார பிரச்சினையாக மட்டுமல்லாமல், ஒட்டுமொத்த தமிழ்நாட்டின் உணர்வுகளோடு பின்னிப் பிணைந்து இருக்கிறது.

காவேரி நடுவர் மன்றத்தின் இறுதி ஆணையின்படியும், உச்சநீதிமன்றத் தீர்ப்பின்படியும், காவேரி மேலாண்மை வாரியம் மற்றும் காவேரி நீர் முறைப்படுத்தும் குழு ஆகிய அமைப்புகளை மத்திய அரசு உடனடியாக அமைக்கவும், அவ்வமைப்புகள் அனைத்து அதிகாரங்களும் கொண்ட அமைப்புகளாக இருக்க வேண்டும் என்பதையும் வலியுறுத்தி பின்வரும் தீர்மானத்தை இம்மாமன்றத்தில் முன்மொழிகிறேன்.

**தீர்மானம்**

“காவேரி நடுவர் மன்ற இறுதி ஆணையின்படியும், உச்ச நீதிமன்றம் 16.02.2018 அன்று வழங்கிய தீர்ப்பின்படியும், காவேரி நடுவர் மன்ற இறுதி ஆணையை திறம்பட செயல்படுத்துவதற்கு, அனைத்து அதிகாரங்களும் கொண்ட காவேரி மேலாண்மை வாரியம் மற்றும் காவேரி நீர் முறைப்படுத்தும் குழு ஆகிய அமைப்புகளை உச்ச நீதிமன்றத் தீர்ப்பில் குறிப்பிட்டுள்ள ஆறு வார காலத்திற்குள் மத்திய அரசு அமைத்து அவற்றை நடைமுறைக்கு கொண்டுவர வேண்டும் என்று இந்த மாமன்றம் வலியுறுத்தி கேட்டுக் கொள்கிறது”.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள் 15.03.2018 அன்று காவேரி நடுவர் மன்ற இறுதி ஆணையின்படியும், உச்சநீதிமன்றம் 16.02.2018 அன்று வழங்கிய தீர்ப்பின்படியும், காவேரி நடுவர் மன்ற இறுதி ஆணையை திறம்பட செயல்படுத்துவதற்கு, அனைத்து அதிகாரங்களும் கொண்ட காவேரி மேலாண்மை வாரியம் மற்றும் காவேரி நீர் முறைப்படுத்தும் குழு ஆகிய அமைப்புகளை ஆறு வார காலத்திற்குள் மத்திய அரசு அமைத்து, அவற்றை நடைமுறைக்கு கொண்டுவர வேண்டும் என்று வலியுறுத்தி தமிழ்நாடு சட்டமன்ற பேரவையில் அரசினர் தனித் தீர்மானத்தினை முன்மொழிந்தார்கள்.

அரசால் கொண்டுவரப்பட்டுள்ள இந்தத் தீர்மானத்தினை ஒருமனதாக நிறைவேற்றித் தரும்படி மாண்புமிகு உறுப்பினர்களை பேரவைத் தலைவர் வாயிலாக கேட்டுக்கொள்கிறேன்.

## ரூ.66.61 கோடி மதிப்பீட்டில், ஏழு மாவட்டங்களில் வேளாண்மைத்துறை கட்டடங்கள் திறப்பு!

படமும் / செய்தியும்



மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள் 01.03.2018 அன்று தலைமைச் செயலகத்தில், வேளாண்மைத் துறை சார்பில் தஞ்சாவூர் மாவட்டம், ஒரத்தநாடு வட்டம், ஈச்சங்கோட்டையில் அமைந்துள்ள வேளாண்மைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்திற்கு கட்டப்பட்டுள்ள மாணவ மற்றும் மாணவியர் விடுதி, பண்ணை அலுவலகக் கட்டடம், அலுவலர் குடியிருப்புகள், கிடங்குகள், வளாகத்திற்கான உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் பொது உபயோக கட்டடங்களை காணொலிக் காட்சி மூலமாக திறந்து வைத்தார்கள். மேலும், புதுக்கோட்டை, திருவண்ணாமலை, கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளி, மதுரை, விழுப்புரம் ஆகிய மாவட்டங்களில் கட்டப்பட்டுள்ள வேளாண்மைத்துறை கட்டடங்களை திறந்து வைத்தார்கள்.



# உச்சநீதிமன்ற தீர்ப்பின்படி காவேரி மேலாண்மை வாரியம் மற்றும் காவேரி நீர் முறைப்படுத்தும் குழுவை மத்திய அரசு உடனடியாக அமைக்க வேண்டும்!

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் காவேரி நடுவர் மன்ற இறுதி ஆணையின்படியும், உச்சநீதிமன்றம் 16.02.2018 அன்று வழங்கிய தீர்ப்பின்படியும், காவேரி நடுவர் மன்ற இறுதி ஆணையை திறம்பட செயல்படுத்துவதற்கு, அனைத்து அதிகாரங்களும் கொண்ட காவேரி மேலாண்மை வாரியம் மற்றும் காவேரி நீர் முறைப்படுத்தும் குழு ஆகிய அமைப்புகளை ஆறு வார காலத்திற்குள் மத்திய அரசு அமைத்து, அவற்றை நடைமுறைக்கு கொண்டுவர வேண்டும் என்று வலியுறுத்தி 15.03.2018 அன்று தமிழ்நாடு சட்டமன்ற பேரவையில் அரசினர் தனித் தீர்மானத்தின் மீது ஆற்றிய உரை.**

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தமிழ்நாடு, கருநாடகா, கேரளா மற்றும் புதுச்சேரி மாநிலங்களுக்கிடையே பல காலமாக இருந்துவந்த இப்பிரச்சினையில் மாநிலங்களுக்கிடையே பலமுறை பேச்சுவார்த்தை நடைபெற்றும், மத்திய அரசு தலையிட்டும் தீர்வு காண முடியவில்லை.

மதராஸ் மாகாணத்திற்கும், மைசூர் சமஸ்தானத்திற்கும் இடையே 1892 மற்றும் 1924ஆம் ஆண்டுகளில் ஏற்படுத்தப்பட்ட ஒப்பந்தங்கள், காவேரி நதிநீரில் தமிழ்நாட்டிற்கு உள்ள உரிமைகளை தெளிவாக்குகின்றன. இருப்பினும், 1924ஆம் ஆண்டைய மதராஸ்–மைசூர் ஒப்பந்தத்தை மீறும் வகையில், கருநாடகம், 1960களின் பின்பகுதியிலும், 1970களின் தொடக்கத்திலும், காவேரி நதிநீரில் உரிமை உள்ள மாநிலங்களை கலந்து ஆலோசிக்காமலும், மத்திய அரசின் ஒப்புதல் இல்லாமலும், பல்வேறு அணைகளைக் கட்ட நடவடிக்கை எடுத்தது.

தமிழ்நாடு காவேரி நீர்ப் பாசன விளைபொருட்கள் விவசாயிகள் நல உரிமைப் பாதுகாப்புச் சங்கத்தினர் 1983இல் உச்சநீதிமன்றத்தில் ஒரு வழக்கு தொடர்ந்தனர். மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் 1986ஆம் ஆண்டு, காவேரி நடுவர் மன்றம் அமைக்கக் கோரி மத்திய அரசுக்கு கடிதம் எழுதினார்கள். அதனைத் தொடர்ந்து, தமிழ்நாடு அரசு 1986இல் அவ்வழக்கில் தன்னை இணைத்துக் கொண்டது. இவ்வழக்கில், உச்ச நீதிமன்றம் 04.05.1990 அன்று நடுவர் மன்றத்தை அமைக்க மத்திய அரசிற்கு உத்தரவிட்டது. இதனடிப்படையில், மத்திய அரசு 02.06.1990 அன்று காவேரி நடுவர் மன்றத்தை அமைத்து அதனை மத்திய அரசிதழில் வெளியிட்டது.

காவேரி நடுவர் மன்றம், 25.06.1991 அன்று ஓர் இடைக்கால ஆணையைப் பிறப்பித்தது. இதில், மேட்டூர் அணைக்கு ஆண்டொன்றுக்கு 205 டி.எம்.சி அடி நீர்

கிடைப்பதை உறுதி செய்யும் வகையில், கருநாடகா அதன் நீர்த் தேக்கங்களிலிருந்து தண்ணீரைத் திறந்து விட வேண்டும் என ஆணையிட்டது. இதில் புதுச்சேரிக்கு 6 டி.எம்.சி அடி போக தமிழ்நாட்டின் பங்கு 199 டி.எம்.சி அடி ஆகும். மேலும், மாதாந்திர மற்றும் வாராந்திர அடிப்படையில் நீர் விடுவிக்கப்பட வேண்டும் என்றும், இறுதித் தீர்ப்பு அளிக்கப்படும் வரையில், இந்த இடைக்கால ஆணை நடைமுறையில் இருக்கும் என்றும், அந்த இடைக்கால ஆணையில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

இந்த இடைக்கால ஆணைக்கு எதிராக அவசரச் சட்டம் ஒன்றை கருநாடக அரசு இயற்றியது. மேதகு குடியரசுத் தலைவர் அவர்கள், கருநாடகா அரசின் அவசரச் சட்டம் குறித்து உச்சநீதிமன்றத்தின் கருத்தை அளிக்கக் கோரினார். இதனை விசாரித்த உச்ச நீதிமன்றம், காவேரி நடுவர் மன்றம் பிறப்பித்த இடைக்கால ஆணை செல்லும் என்றும், அது மத்திய அரசிதழில் வெளியிடப்பட வேண்டும் என்றும், கருநாடக அரசு இயற்றிய சட்டம் செல்லாது என்றும் 22.11.1991 அன்று தனது கருத்துரையை வழங்கியது. இதன் அடிப்படையில், 10.12.1991 அன்று காவேரி நடுவர் மன்றத்தின் இடைக்கால ஆணை மத்திய அரசிதழில் வெளியிடப்பட்டது.

இதற்கு பிறகு, காவேரி நடுவர் மன்றம் 16 ஆண்டுகள் விசாரணையை மேற்கொண்டு, 05.02.2007 அன்று அதன் இறுதி ஆணையை பிறப்பித்தது. காவேரி நடுவர் மன்றத்தின் இறுதி ஆணையின்படி, கருநாடக அரசு, பில்லிகுண்டுலு நீரளவை நிலையத்தில் ஆண்டுக்கு 192 டி.எம்.சி அடி நீரை, மாதாந்திர அடிப்படையில் வழங்க வேண்டும். இந்த இறுதி ஆணையை, திறம்பட செயல்படுத்தி மாநிலங்களுக்குரிய பங்கு நீரினை உரிய காலத்தில் வழங்குவதற்கு ஏதுவாக காவேரி மேலாண்மை வாரியம் மற்றும் காவேரி நீர் முறைப்படுத்தும் குழு ஆகியவற்றை அமைக்கவும் காவேரி நடுவர் மன்றம் பரிந்துரை செய்தது.

காவேரி நடுவர் மன்ற இறுதி ஆணையை எதிர்த்து, கருநாடகா மற்றும் கேரளா மாநிலங்கள் உச்ச நீதிமன்றத்தில் சிவில் மேல்முறையீட்டு மனுக்களை தாக்கல் செய்தன. காவேரி நடுவர் மன்ற இறுதி ஆணையில் உள்ள சில பகுதிகளை மேல் ஆய்வு செய்யக் கோரி தமிழ்நாடு அரசும் ஒரு சிவில் மேல்முறையீட்டு மனுவை தாக்கல் செய்தது.

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் 2011இல் ஆட்சி பொறுப்பேற்றவுடன், மத்திய அரசிதழில் காவிரி நடுவர் மன்றத்தின் இறுதித் தீர்ப்பு வெளியிடப்பட வேண்டும் என பாரதப் பிரதமர் அவர்களுக்கு பல்வேறு கடிதங்கள் வாயிலாகவும், கோரிக்கை மனுக்கள் வாயிலாகவும் இடையறா முயற்சிகளை மேற்கொண்டு வந்தார்கள். மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் மேற்கொண்ட சீரிய முயற்சியாலும், உச்ச நீதிமன்றத்தின் தலையீட்டாலும், காவேரி நடுவர் மன்ற இறுதி ஆணை 19.02.2013 அன்று மத்திய அரசிதழில் வெளியிடப்பட்டு நடைமுறைக்கு வந்தது.

காவேரி நடுவர் மன்ற இறுதி ஆணை மத்திய அரசின் அரசிதழில் வெளியிடப்பட்ட போதிலும், காவேரி மேலாண்மை வாரியம் மற்றும் காவேரி நீர் முறைப்படுத்தும் குழு ஆகிய அமைப்புகளை மத்திய அரசு அமைக்கவில்லை. எனவே, புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆணையின்படி காவேரி மேலாண்மை வாரியம் மற்றும் காவேரி நீர் முறைப்படுத்தும் குழு ஆகியவற்றை உடனடியாக அமைக்க மத்திய அரசுக்கு ஆணையிடக் கோரி இடைக்கால மனு ஒன்றை 18.03.2013 அன்று தமிழ்நாடு அரசு, உச்சநீதிமன்றத்தில் தாக்கல் செய்தது. இந்த மனுவினை 10.05.2013 அன்று விசாரித்த உச்ச நீதிமன்றம், காவேரி மேலாண்மை வாரியம் அமைக்கப்படும் வரையில் ஒரு தற்காலிக ஏற்பாடாக காவேரி மேற்பார்வைக் குழு ஒன்றை அமைக்க மத்திய அரசுக்கு ஆணையிட்டது. இந்த ஆணையின்படி மேற்பார்வைக் குழுவினை மத்திய அரசு 22.05.2013 அன்று அமைத்தது.

மத்திய அரசு தற்காலிக ஏற்பாடாக மேற்பார்வைக் குழுவை அமைத்த போதிலும், காவேரி நடுவர் மன்ற இறுதித் தீர்ப்பினை முழுமையாக செயல்படுத்துவதற்கு, ஒரு நிரந்தர அமைப்பு வேண்டும் என்பதால், மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள், மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களுக்கு பல கோரிக்கை மனுக்கள் மற்றும் கடிதங்கள் வாயிலாக காவேரி மேலாண்மை வாரியம் மற்றும் காவேரி நீர் முறைப்படுத்தும் குழு ஆகியவற்றை அமைக்க தொடர்ந்து வலியுறுத்தி வந்தார்கள்.

இவை தவிர, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் வழியில் நடக்கும் இந்த அரசு, கோரிக்கை மனுக்கள் மற்றும் கடிதங்கள் வாயிலாக இவ்விரு அமைப்புகளையும் விரைவில் அமைக்க வேண்டி மத்திய அரசை தொடர்ந்து வலியுறுத்தி வருகிறது. மேலும், 05.12.2014, 27.03.2015 மற்றும் 02.09.2016 ஆகிய தேதிகளில், காவேரி மேலாண்மை வாரியம் மற்றும் காவேரி நீர் முறைப்படுத்தும் குழு ஆகியவற்றை மத்திய அரசு உடனடியாக அமைக்க வேண்டும் என்று இம்மாமன்றத்தில் ஒருமனதாக தீர்மானங்கள் இயற்றப்பட்டு, மத்திய அரசுக்கு அனுப்பி வைக்கப்பட்டன. மேலும், சட்ட ரீதியான நடவடிக்கையும் மேற்கொள்ளப்பட்டு வந்தது. எனினும், மத்திய அரசு தமிழ்நாட்டின் கோரிக்கைகளுக்கு செவி சாய்க்கவில்லை.

மாநில அரசுகள் தாக்கல் செய்த மேல்முறையீட்டு மனுக்கள் விசாரணைக்கு உகந்ததா என்பது பற்றி உச்சநீதிமன்றத்தில் எல்லா மாநிலங்களும் மத்திய அரசும் வாதிட்டன. உச்சநீதிமன்றம், இம்மனுக்கள் உச்சநீதிமன்றத்தில் விசாரணைக்கு உகந்தவை என தீர்ப்பளித்தது.

இந்த வழக்கு 20.09.2016 அன்று மீண்டும் விசாரணைக்கு வந்தபோது காவேரி மேலாண்மை வாரியத்தை 4 வார காலத்திற்குள் மத்திய அரசு அமைக்க வேண்டும் என உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டது. எனினும், மத்திய அரசு தாக்கல் செய்த மனுவினை விசாரித்த உச்ச நீதிமன்றம் 04.10.2016 அன்று இந்த உத்தரவை தள்ளி வைத்தது.

இதன் பின்னர், ஜூலை 2017 முதல் செப்டம்பர் 2017 வரை இறுதி கட்ட வாதங்கள் உச்ச நீதிமன்றத்தில் நடைபெற்றன. இதில், கருநாடக அரசு 9 நாட்களும், கேரள அரசு 2 நாட்களும், தமிழ்நாடு அரசு 13 நாட்களும், புதுச்சேரி அரசு மற்றும் மத்திய அரசு தலா ஒரு நாளும் தங்கள் வாதங்களை எடுத்துரைத்தன. அனைத்து தரப்பு வாதங்களையும் கேட்டறிந்த உச்ச நீதிமன்றம், 20.09.2017 அன்று தீர்ப்பினை ஒத்திவைப்பதாக அறிவித்தது.

உச்சநீதிமன்றம் 16.02.2018 அன்று வழங்கிய தீர்ப்பில், காவேரி நடுவர் மன்றத்தின் இறுதி ஆணையை செயல்படுத்துவதற்கு ஒரு திட்டத்தை மத்திய அரசு அமைக்க வேண்டும் என (பத்தி 403, பக்கங்கள் 456–457) குறிப்பிட்டுள்ளது. இதன் விவரம் வருமாறு:–

*"We have referred to the aforesaid passages as the award of the Tribunal has to be treated as decree of the Supreme Court. It is so stated in Section 6(2) to give teeth to the award passed by the Tribunal so that none of the States can raise objection to the same and be guided by the directions of the Tribunal. The purpose of framing the scheme is exclusively for implementation of the award. The authorities cited by Mr. Ranjit Kumar, (Solicitor General) we are afraid, are of no assistance in the present context. It needs no special emphasis to state that the purpose of Section 6A is to act in the manner in which the award determines the allocation and decides the dispute with regard to allocation or sharing of water. Keeping that in view, we direct that a scheme shall be framed by the Central Government* within a span of six weeks from today *so that the authorities under the scheme can see to it that the present decision which has modified the award passed by the Tribunal is smoothly made functional and the rights of the States as determined by us are appositely carried out. When we say so, we also categorically convey that the need based monthly release has to be respected. It is hereby made clear that no extension shall be granted for framing of the scheme on any ground".*

மேற்கண்ட இந்தத் தீர்ப்பின் மூலம், தமிழ்நாட்டிற்கு கிடைக்க வேண்டிய நீரின் அளவில் 14.75 டி.எம்.சி. அடி நீர் குறைக்கப்பட்டுள்ளது, தமிழ்நாட்டிற்கு வருத்தமளிப்பதாக உள்ளது. எனவே, இது குறித்தும், காவேரி நதிநீர் பங்கீடு தொடர்பாக, உச்சநீதிமன்றம் அளித்துள்ள இறுதி தீர்ப்பு குறித்தும் விவாதிப்பதற்காக எனது தலைமையில் 22.02.2018 அன்று நடைபெற்ற அனைத்துக் கட்சி தலைவர்கள் மற்றும் விவசாய சங்கத் தலைவர்கள் கூட்டத்தில் கீழ்க்கண்ட தீர்மானங்கள் ஒருமனதாக நிறைவேற்றப்பட்டன.

அ. தமிழ்நாட்டுக்குரிய பங்கு நீரினை உரிய காலத்தில் வழங்குவதற்கு ஏதுவாக, அனைத்து அதிகாரங்களும் கொண்ட காவேரி மேலாண்மை வாரியம் மற்றும் காவேரி நீர் முறைப்படுத்தும் குழு ஆகியவற்றை உச்ச நீதிமன்றத்தின் 16.02.2018ஆம் நாளிட்ட தீர்ப்பின்படி, ஆறு வார காலத்திற்குள் மத்திய அரசு அமைக்க வேண்டி வலியுறுத்தப்படும்.

ஆ. உச்சநீதிமன்றத் தீர்ப்பில், தமிழ்நாட்டிற்கு, காவேரி நடுவர் மன்றம் இறுதி ஆணையில் வழங்கிய நீரில், 14.75 டி.எம்.சி அடி நீரை குறைத்து கருநாடகத்திற்கு கூடுதலாக வழங்கி உத்தரவிட்டது குறித்து, அனைத்துக் கட்சித் தலைவர்கள் தெரிவித்த கருத்துக்களை முழுமையாக ஏற்றுக் கொண்டு, சட்ட வல்லுநர்களுடன் கலந்தாலோசித்து, உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

இ. மாண்புமிகு முதலமைச்சர் தலைமையில், அனைத்துக் கட்சித் தலைவர்கள், விவசாய சங்கத் தலைவர்கள் மற்றும் தமிழ்நாட்டைச் சேர்ந்த அனைத்து பாராளுமன்ற உறுப்பினர்கள் அடங்கிய குழுவுடன் மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களை நேரில் சந்தித்து, காவேரி மேலாண்மை வாரியம், காவேரி நீர் முறைப்படுத்தும் குழு ஆகியவற்றை உடனடியாக அமைக்கவும் மற்றும் உச்ச நீதிமன்றத் தீர்ப்பிலுள்ள தமிழ்நாட்டிற்கு சாதகமான அம்சங்களை உடனடியாக நிறைவேற்றித் தருமாறும் வலியுறுத்தப்படும்.

24.02.2018 அன்று மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் பிறந்த தினத்தில், மானிய விலையில் மகளிருக்கு அம்மா இருசக்கர வாகனம் வழங்கும் திட்ட துவக்க விழாவிற்கு வருகை தந்த மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களிடம், காவேரி மேலாண்மை வாரியம் மற்றும் காவேரி நீர் முறைப்படுத்தும் குழு ஆகியவற்றை உச்சநீதிமன்றத் தீர்ப்பின்படி, உரிய காலத்திற்குள் அமைத்துத் தருமாறு நான் நேரில் கேட்டுக் கொண்டேன். இதன் தொடர்ச்சியாக, 25.02.2018 அன்று மாண்புமிகு மத்திய சாலைப் போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் துறைமுகம், நீர்வள ஆதாரம், நதி மேம்பாடு மற்றும் கங்கை புனரமைப்பு அமைச்சர் அவர்கள் சென்னைக்கு வந்தபோது, அவரிடம் இதனை வலியுறுத்தி நேரில் கடிதம் அளித்தேன். மேலும், மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களுக்கு அனைத்துக் கட்சி தலைவர்கள், விவசாய சங்கங்களின் தலைவர்கள் மற்றும் தமிழ்நாட்டைச் சேர்ந்த அனைத்து நாடாளுமன்ற உறுப்பினர்கள் எனது தலைமையில் நேரில் சந்தித்து மேற்கண்ட கோரிக்கையினை வலியுறுத்த நேரம் கேட்டு கடிதமும் அனுப்பினேன்.

உச்சநீதிமன்றத் தீர்ப்பின்படி, காவேரி நடுவர் மன்ற இறுதி ஆணையினை செயல்படுத்துவது குறித்து 05.03.2018 நாளிட்ட கடிதம் வாயிலாக, மத்திய நீர்வள ஆதாரத் துறை செயலாளர் அவர்கள், 09.03.2018 அன்று புது டெல்லியில் தமிழ்நாடு, கருநாடகா, கேரளா மற்றும் புதுச்சேரி மாநில தலைமைச் செயலாளர்கள் மற்றும் நீர்வள ஆதாரத் துறை செயலாளர்கள் ஆகியோர் கலந்து கொண்டு தங்களது மாநிலங்களின் கருத்துக்களை தெரிவிக்குமாறு கேட்டுக் கொண்டார்.

இக்கூட்டத்தில், தமிழ்நாடு அரசு சார்பில் எடுத்துரைக்கப்பட வேண்டிய தமிழ்நாட்டின் நிலை குறித்து விவாதிக்க, நான், மாண்புமிகு அமைச்சர்கள் மற்றும் அரசு உயர் அதிகாரிகளுடன் 07.03.2018 அன்று கலந்து ஆலோசித்தேன். மத்திய அரசு கூட்டியுள்ள கூட்டத்தில், உச்சநீதிமன்றத் தீர்ப்பின்படியும், காவேரி நடுவர் மன்ற இறுதி ஆணையின்படியும், அனைத்து அதிகாரங்களும் கொண்ட காவேரி மேலாண்மை வாரியம் மற்றும் காவேரி நீர் முறைப்படுத்தும் குழுவை, உச்ச நீதிமன்றம் குறிப்பிட்டுள்ள ஆறு வார காலக் கெடுவுக்குள் மத்திய அரசு அமைப்பதற்கு தமிழ்நாட்டின் சார்பில் வலியுறுத்த வேண்டும் என அறிவுறுத்தினேன்.

காவேரி நடுவர் மன்ற தீர்ப்பு மற்றும் ஆணைகளை செயல்படுத்துவதற்கு ஒரு ''திட்டத்தை'' (scheme) ஆறு வார காலத்திற்குள் மத்திய அரசு அமைக்க வேண்டும் என்று உச்சநீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது. உச்ச நீதிமன்றம் குறிப்பிட்டுள்ள ''திட்டம்'' என்னவென்பதை 1956ஆம் ஆண்டைய பன்மாநில நதிநீர் தாவா சட்டம் பிரிவு 6(A)(2)இல் தெளிவாக வரையறுக்கப்பட்டுள்ளது. இதன்படி, ''திட்டம்'' என்பது, நடுவர் மன்ற இறுதி ஆணையையும், தற்போது உச்சநீதிமன்றம் வழங்கிய தீர்ப்பையும் செயல்படுத்த ஒரு அமைப்பை ஏற்படுத்த வேண்டும் என்றும், அந்த அமைப்பின் உறுப்பினர்கள், அதிகார வரம்புகள் மற்றும் செயல்பாடுகள் ஆகியன வரையறுக்கப்பட வேண்டும் என்றும் தெளிவாக குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த நிலையில், உச்சநீதிமன்றம், அதன் 16.02.2018 நாளிட்ட தீர்ப்பில், பத்தி 397இல், நீர்ப் பங்கீட்டில் மாற்றம் செய்யப்பட்டதைத் தவிர, காவேரி நடுவர் மன்ற இறுதி ஆணையில் குறிப்பிடப்பட்டுள்ள இதர இனங்களில் மாற்றம் ஏதும் தேவையில்லை என்று தெளிவாக குறிப்பிட்டுள்ளது. இது தவிர, பத்தி 399இல், காவேரி நடுவர் மன்றம், நீர் முறைப்படுத்தும் குழு, சம்பந்தப்பட்ட மாநிலங்கள் மற்றும் மத்திய நீர்வளக் குழுமம் ஆகியவற்றின் உதவியோடு நீர் விடுவிப்பதை மாதாந்திர வாரியாக கண்காணிக்க வேண்டும் என குறிப்பிட்டுள்ளதை உச்சநீதிமன்றம் சுட்டிக்காட்டியுள்ளது.

மேற்கண்ட தீர்ப்பின்படி, உச்சநீதிமன்றம் குறிப்பிட்ட ''திட்டம்'' என்பது, காவேரி நடுவர் மன்ற இறுதி ஆணையில் குறிப்பிட்டுள்ள காவேரி மேலாண்மை வாரியம் மற்றும் காவேரி நீர் முறைப்படுத்தும் குழு தான் என்றும், அது மட்டுமல்லாமல், இவ்வமைப்புகள் அனைத்து அதிகார வரம்புகளுடன் அமைக்கப்பட வேண்டும் என்றும் தெளிவாக உள்ளது. காவேரி மேலாண்மை வாரியத்தை, காவேரி நடுவர் மன்ற இறுதி ஆணையில் குறிப்பிட்டுள்ளவாறு அமைப்பதைத் தவிர, மத்திய அரசுக்கு வேறு மாற்று வழி இல்லை என தமிழ்நாடு அரசின் சார்பில் தெளிவுபடுத்தப்பட்டது. எனவே, உச்ச நீதிமன்றத் தீர்ப்பில் குறிப்பிடப்பட்டுள்ளபடி, ஆறு வார காலத்திற்குள் மத்திய அரசு காவேரி மேலாண்மை வாரியம் மற்றும் காவேரி நீர் முறைப்படுத்தும் குழு ஆகியவற்றை உடனடியாக அமைக்க வேண்டும் எனவும் தமிழ்நாடு அரசின் சார்பாக வலியுறுத்தப்பட்டது. மத்திய அரசின் சார்பில் 09.03.2018 அன்று கூட்டப்பட்ட கூட்டத்தில், மேற்கண்ட கருத்துக்கள் மிகத் தெளிவாக எடுத்துரைக்கப்பட்டன.

எனவே, காவேரி நடுவர் மன்றத்தின் இறுதி ஆணையின்படியும், உச்சநீதிமன்றத் தீர்ப்பின்படியும், காவேரி மேலாண்மை வாரியம் மற்றும் காவேரி நீர் முறைப்படுத்தும் குழு ஆகிய அமைப்புகளை மத்திய அரசு உடனடியாக அமைக்கவும், அவ்வமைப்புகள் அனைத்து அதிகாரங்களும் கொண்ட அமைப்புகளாக இருக்க வேண்டும் என்பதையும் வலியுறுத்துகின்றேன்.

# கைத்திறன் தொழிலில் ஈடுபட்டுள்ள கைவினைஞர்களின் வாழ்வில் முன்னேற்றம் கண்டு தமிழ்நாட்டின் கலாச்சார புகழை உலக அளவிற்கு கொண்டு சேர்க்கவேண்டும்!



கைவினைஞர்கள் தினத்தையொட்டி 08.03.2018 அன்று சென்னை, கலைவாணர் அரங்கத்தில் நடைபெற்ற விழாவில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள் ஆற்றிய உரை.

**மா**ண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா தெய்வத்தை வணங்கி, மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களே, மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் அவர்களே, மாண்புமிகு ஊரக தொழில்துறை அமைச்சர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் பெருமக்களே, வாரியத் தலைவர் அவர்களே, சட்டமன்ற உறுப்பினர்களே, முன்னாள் அமைச்சர் பெருமக்களே, முன்னாள் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களே, அரசு முதன்மைச் செயலாளர் அவர்களே, பூம்புகார் மேலாண்மை இயக்குநர் அவர்களே, வருகை தந்திருக்கும் கைவினைஞர்களே, பத்திரிகை மற்றும் ஊடகத் துறை நண்பர்களே, பொதுமக்களே, உங்கள் அனைவருக்கும் முதற்கண் எனது வணக்கத்தினை தெரிவித்துக் கொள்கின்றேன். வருகை தந்துள்ள அனைத்து மகளிருக்கும் எனது "மகளிர் தின நல்வாழ்த்துகள்".

கல்லிலே கலை வண்ணம் காண்பதும், தான் காணும் பொருட்கள் அனைத்திலும் பல கலை வண்ணங்களை உருவாக்கும் எண்ணங்களைக் கொண்டவர்களும் தான் கைவினைஞர்கள்.

அழகிய கைத்திறப் பொருட்களின் மேல் பொது மக்களிடையே ஆர்வத்தை ஏற்படுத்தி பெருமளவு சந்தை வாய்ப்பினை அதிகரிக்கவும், வருடந்தோறும் கைவினைஞர்களுக்கு வழங்கப்படும் விருதுகளை இந்நன்னாளில் வழங்கவும், கைவினைஞர்களுக்கு மிகுந்த தன்னம்பிக்கையும், உத்வேகத்தையும் அளிக்கும் வகையில், இந்தியாவிலேயே தமிழ்நாட்டில் மட்டும் தான் கைவினைஞர்களுக்கென வருடந்தோறும் தனியாக ஒரு தினம் கொண்டாடப்படும் என சட்டப் பேரவையில் அறிவிக்கப்பட்டுள்ளதைத் தொடர்ந்து நடைபெறும் இந்த விழாவில் கலந்து கொண்டு கைவினைஞர்களுக்கு பல்வேறு விருதுகளை வழங்குவதிலும், பல்வேறு சிறப்புத் திட்டங்களை துவக்கி வைப்பதில் நான் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன்.

கைவினைஞர்களின் திறமையை மேம்படுத்துதல், உரிய பயிற்சிகள் அளித்தல், கைவினைஞர்களின் உற்பத்தித் திறனை அதிகரித்தல், கைவினைப் பொருட்களின் தரத்தை மேம்படுத்துதல் மற்றும் கைவினைப் பொருட்கள் உற்பத்தியில் ஏற்படும் பணிப் பளுவை குறைத்தல், கைத்திறத் தொழிலில் நேரிடும் இடர்பாடுகளைக் களைதல், வடிவமைப்புகளில் புதுமையை ஊக்குவித்தல், கைவினைஞர்களுக்கு சமூக பொருளாதார பாதுகாப்பு அளித்தல், கைவினைஞர்களையும், அவர்கள் உற்பத்தி செய்யும் பொருட்களையும் ஆவணமாக்குதல் மற்றும் பதிவு செய்தல், கைவினைஞர்களுக்கு






சந்தை வாய்ப்பினை ஏற்படுத்துதல் போன்ற உயரிய நோக்கங்களுக்காக தமிழ்நாடு கைத்திறத் தொழில்கள் வளர்ச்சிக் கழகம் என்ற ஒரு பொதுத் துறை நிறுவனம் தொடங்கப்பட்டது.

பூம்புகார் என பிரபலமாக அறியப்படும் இந்நிறுவனம், 15 விற்பனை நிலையங்களையும், 7 உற்பத்தி நிலையங்களையும் கொண்டுள்ளது. மிக அழகான கைவினைப் பொருட்களை தயாரிக்கும் அரிய திறமை வாய்ந்த தமிழ்நாட்டு கைவினைஞர்களின் தயாரிப்புகளை உலக சந்தைக்கு எடுத்து செல்வதின் மூலம் இக்கைவினைஞர்களின் வருவாயை உயர்த்தி வளமடையச் செய்யும் நோக்கத்தில் அவர்களின் உற்பத்தித் திறனை விரிவாக்க, கடந்த ஆண்டுகளில் மாண்புமிகு அம்மா அவர்களாலும், மாண்புமிகு அம்மாவின் அரசாலும் தகவல் தொழில் நுட்ப உதவியுடன் பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன.

மேலும், துறையின் அனைத்து பணிகளையும் கணினிமயமாக்கியதன் விளைவாக பூம்புகார் நிறுவனம் வணிக ரீதியாக ஆண்டுதோறும் இலாபம் ஈட்ட துவங்கி பல்வேறு சாதனைகளை புரிந்துள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் குறிப்பிட விரும்புகிறேன். மேலும், திருப்பதி தங்கத்தேர், ஈச்சநாரி விநாயகர் கோவில் தங்கத்தேர், மயிலாப்பூர் கபாலீஸ்வரர் கோவில் தங்கத்தேர், மருதமலை தங்கத்தேர், இவைகள் அனைத்தும் தமிழ்நாடு கைவினைப்பொருட்கள் வளர்ச்சிக் கழகத்தின் சார்பில் செய்யப்பட்டது என்பதை மகிழ்ச்சியுடனும், பெருமையுடனும் நான் இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன்.

பூம்புகார் நிறுவனத்தின் அனைத்து நிருவாக அம்சங்களும் ஒருங்கிணைக்கப்பட்ட கணினிமயமாக்கியதின் காரணத்தினால் சராசரி 30 நாட்களில் எடுக்கப்பட்டு வந்த கோப்பு முடிவுகள் தற்போது 3 மணி நேரத்திற்குள் எடுக்கப்பட்டு வருகிறது. குறிப்பிட்டுச் சொன்னால் இது ஒரு காகிதமற்ற கோப்பு நடவடிக்கை நிறுவனம் ஆகும். மேலும் டேலி கணக்கியல், ஒருங்கிணைக்கப்பட்ட சிசிடிவி கண்காணிப்பு, இ–பில்லிங், பயோ மெட்ரிக் வருகை பதிவேடு, பார்கோடிங், மின்னணு வர்த்தகம், முப்பரிமாண வடிவமைப்பு (3D Designing & Printing), ஆன்லைன் ஆய்வு, கைவினைஞர்களுக்கான மின்னணு தகவல் களஞ்சியம், இத்தகைய தகவல் தொழில்நுட்பங்களை செயல்படுத்தியதின் விளைவாக இந்நிறுவனத்தின் 2013–2014ஆம் ஆண்டில் ரூ.31.07 கோடியாக இருந்த வணிகம், 2016–2017ஆம் ஆண்டில் ரூ.40.35 கோடியாக உயர்ந்துள்ளது மற்றும் ரூ.0.78 கோடியாக இருந்த இலாபம், ரூ.1.20 கோடியாக உயர்ந்தது மட்டுமின்றி, இந்நிறுவனத்தில் மின் ஆளுமையை நடைமுறைப்படுத்தியதற்காக 2016–2017ஆம் ஆண்டிற்கான மத்திய அரசின் “தேசிய வெள்ளி விருதும்”, தகவல் தொழில் நுட்பத்தை பயன்படுத்தி ‘தகவல் பரிமாற்றம் செய்தல்’ என்ற செயல்பாட்டிற்காக ‘ஸ்கோச் ஸ்மார்ட் கவர்னன்ஸ் Platinum’ விருதும் பூம்புகார் நிறுவனத்திற்கு வழங்கப்பட்டுள்ளது. இதிலிருந்து இந்த நிறுவனம் நவீன தகவல் தொழில் நுட்பத்தினை தனது செயல்பாடுகள் அனைத்திலும் பயன்படுத்தி, கைத்திறன் துறையில் ஒரு மின்னணு புரட்சியை செய்து வருகிறது என்பது நமக்கு நன்கு புலனாகிறது.

கடந்த 13 ஆண்டுகளாக தொடர்ந்து இந்நிறுவனம் இலாபத்தில் இயங்கி வருகிறது. இந்நிலை வரும்




ஆண்டுகளிலும் தொடரும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

பூம்புகார் நிறுவனம் தனது பொருட்களை நேரடியாக ஆன்லைன் மூலம் விற்பனை செய்வதற்கு சொந்த மின் வணிக இணைய தளத்தினை அமைத்துள்ளது. இதன் மூலம் வாடிக்கையாளர்கள் தங்களுக்குத் தேவையான பொருட்களை இணையதளம் மூலம் தேர்வு செய்து வாங்கிக்கொள்ள வழிவகை செய்யப்பட்டுள்ளது. அவ்வாறு தேர்வு செய்யப்பட்ட பொருட்கள் கைபேசி செயலியுடனும் இணைந்த வேன் / மோட்டார் சைக்கிள் மூலம் வாடிக்கையாளர்களுக்கு பொருட்கள் நேரடியாக வழங்கப்படுகிறது.

மின் வணிக ஜாம்பவான்களான ஸ்னாப் டீல், பிளிப்கார்ட், கிராப்ட் வில்லா, ஷாப் க்ளுஸ் மற்றும் இன்டியா மார்ட் போன்ற நிறுவனங்கள் மூலம் பூம்புகார் தயாரிப்புகளை மக்களுக்கு நேரடியாக விற்பனை செய்வதற்காக வர்த்தக ஒப்பந்தம் செய்து கொண்டுள்ளதன் விளைவாக இந்நிறுவனத்தின் விற்பனை உள்நாட்டில் மட்டுமின்றி வெளிநாட்டிலும் அதிகரித்துள்ளது.

சுமார் 10 சமூக வலைதளங்கள் மூலம் பூம்புகார், சந்தை வாய்ப்பை பெற, உலகளவில் பிரசித்திப்பெற்ற இணையதள சமூக ஊடகங்கள் வாயிலாக பிரச்சாரத்தை மேற்கொண்டு வருகிறது.

- ❖ சென்னை விமான நிலைய உள்நாட்டு மற்றும் பன்னாட்டு முனையத்தின் உள் தோற்றத்தை சிறந்த கைவினைப் பொருட்கள் மூலம் அலங்காரப்படுத்தி மெருகேற்றும் பணியினை பூம்புகார் செய்துள்ளது. இதே போன்று மதுரை, கோயம்புத்தூர், திருப்பதி, பாண்டிச்சேரி விமான நிலையம் மற்றும் சென்னையிலுள்ள டிசிஎஸ் ராமானுஜம் மென்பொருள் பூங்கா, தலைமைச்செயலகம், ரிப்பன் மாளிகை மேலும் சென்னை எண்ணூர் காமராஜ் துறைமுகத்தின் தோற்றத்தை அழகுப்படுத்தும் பணியினையும் இந்நிறுவனம் செய்துள்ளது. இதனைத் தொடர்ந்து திருச்சி, தூத்துக்குடி விமான நிலையங்கள் போன்ற பலதரப்பட்ட நிறுவன கட்டடங்களும் கைவினைப் பொருட்களைக் கொண்டு மெருகேற்றப்பட உள்ளது.
- ❖ சிங்கப்பூர், மலேசியா, இங்கிலாந்து, ஆஸ்திரேலியா மற்றும் அமெரிக்கா ஆகிய நாடுகளுக்கு பாரம்பரியமிக்க கைவினைப் பொருட்களான பஞ்சலோக சிலைகள், பித்தளை விளக்குகள், மரச்சிற்பங்கள் மற்றும் தஞ்சாவூர் ஓவியங்கள் பூம்புகார் விற்பனை நிலையம் மூலம் ஏற்றுமதி செய்யப்பட்டு வருகிறது.
- ❖ பூம்புகார் நிறுவனம் தொடர் வணிகமாக ஆஸ்திரேலிய நிறுவனமான Green Trends உடன் கைவினைப் பொருட்கள் ஏற்றுமதிக்காக புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்துகொண்டுள்ளது.

தமிழ்நாடு புதுமை முயற்சிகள் திட்டத்தின் கீழ், தமிழ்நாட்டிலுள்ள அனைத்து கைவினைஞர்கள் மற்றும் அவர்களது திறமைகள் தொடர்பான அனைத்து தகவல்களையும் சேகரித்து, அவர்களுக்கென ஒரு தனி வலைதளம் உருவாக்கப்பட்டுள்ளது. இந்த வலைதளம் 12.05.2017 அன்று என்னால் துவக்கி வைக்கப்பட்டுள்ளது. இதற்கென ஒரு கோடி ரூபாய் நிதியினை தமிழ்நாடு கைத்திறத் தொழில்கள் வளர்ச்சிக் கழகத்திற்கு தமிழ்நாடு அரசு வழங்கியுள்ளது. இந்த வலைதளத்தில்

தமிழ்நாட்டிலுள்ள கைவினைஞர்கள் ஒவ்வொருவருக்கும் தனித்தனி வலைப்பக்கங்கள் உருவாக்கப்பட்டுள்ளன.

கைவினைப் பொருட்களை பெருநகரங்கள் மற்றும் சுற்றுலாத் தலங்களில் ஆண்டுதோறும் விற்பனை செய்ய வழிவகை செய்யும் வகையில் நகர்ப்புற கண்காட்சித் திடல் என்ற ஒரு திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இதன் அடிப்படையில் கன்னியாகுமரியில் நகர்ப்புறக் கண்காட்சித் திடல் ஒன்று அமைக்கப்பட்டு 08.03.2017 அன்று நான் திறந்து வைத்துள்ளேன் என்பதை இங்கே குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன். இதே போன்று, மாமல்லபுரத்தில் ரூ.5 கோடி செலவில் அமைக்கப்பட்டுள்ள நகர்ப்புற கண்காட்சித் திடலை நான் தொடங்கி வைத்துள்ளேன் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஒருங்கிணைந்த கைவினைப் பொருட்கள் மேம்பாடு மற்றும் வளர்ச்சி என்ற ஒரு திட்டம் மத்திய மற்றும் மாநில அரசின் நிதி உதவியுடன் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இந்த திட்டத்தின் முக்கியக் குறிக்கோள் கைவினைஞர்களுக்கு சிறந்த பணிச் சூழல், திறன் மேம்பாடு, சந்தை வசதி, புதிய வடிவமைப்புகளை அறிமுகப்படுத்துதல் போன்றவற்றில் உதவிடுதல் ஆகிய பணிகளை மேற்கொள்வதாகும். இதற்காக இந்நிறுவனத்திற்கு ரூபாய் 20 கோடியே 38 இலட்சம் மத்திய, மாநில அரசின் சார்பில் நிதி உதவியாக வழங்கப்பட்டுள்ளது. இதற்காக நாச்சியார்கோவில், சுவாமிமலை, தஞ்சாவூர், மதுரை, கன்னியாகுமரி மற்றும் வாகைகுளம் ஆகிய இடங்களில் கைவினைஞர்களுக்கான பொது வசதி மையங்கள் கட்டி முடிக்கப்பட்டு நான் துவக்கி வைத்துள்ளேன். மேலும், தமிழ்நாட்டில் பல்வேறு இடங்களில் இந்த மையம் வரும் ஆண்டுகளில் அமைக்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதி நவீன தொழில்நுட்ப வசதியுடன், தமிழ்நாடு அரசின் நிதியுதவி 2 கோடியே 17 இலட்சம் ரூபாய் செலவில் சர்வதேச விமான நிலையங்கள், அருங்காட்சியகங்கள் போன்ற பல வெளிநாட்டவர் மற்றும் வாடிக்கையாளர்கள் வருகை தரும் முக்கிய இடங்களில் பூம்புகார் மெய் நிகர் தோற்றம் விற்பனை நிலையங்கள் (Poompuhar Virtual Reality Show Room) நிறுவப்பட உள்ளது என்பதனை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

கைவினைஞர்களை கௌரவிக்கும் வகையில், வாழும் கைவினைப் பொக்கிஷம் விருது, பூம்புகார் மாநில விருது, பூம்புகார் மாவட்ட கைத்திறன் விருது, குழு உற்பத்தி விருது, பயன்பாடு சார்ந்த கைவினைப் பொருட்கள் விருது, ஏற்றுமதி விருது, அடுத்த தலைமுறை கைத்திறன் விருது போன்ற 7 வகையான விருதுகளை 247 சிறந்த கைவினைஞர்களுக்கு வழங்குவதில் இந்தியாவிலேயே முதன்மை மாநிலம் தமிழ்நாடு தான் என்பதை பெருமையுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த ஆண்டு சென்னையை அடுத்துள்ள மாமல்லபுரம் ‘‘உலக கற்சிற்ப நகரமாக’’ உலக கைத்திற குழுமத்தால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது என்பதையும், இங்குள்ள கற்சிற்ப கலைகளுக்கு ‘‘புவிசார் குறியீடு’’ சான்றிதழ் வழங்கப்பட்டுள்ளது என்பதையும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். மேலும், இதுவரையில் தமிழகத்திலுள்ள சுவாமிமலை பஞ்சலோக சிலை, வடசேரி கோயில் நகை, தஞ்சாவூர் ஓவியம், தஞ்சாவூர் கலைத்தட்டு, தஞ்சாவூர் பொம்மை, நாச்சியார் கோவில் பித்தளை விளக்கு, பத்தமடை பாய் மற்றும் தோடா சித்திரத்தையல் ஆகிய 8 கைத்திறத் தொழில்களுக்கு ஏற்கெனவே புவிசார் குறியீடு வழங்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

ரூ.5 கோடி செலவில் அமைக்கப்பட்டுள்ள மாமல்லபுரம் நகர்ப்புறத் திடல், ரூ.0.35 கோடிசெலவில் மாமல்லபுரத்தில் அமைக்கப்பட்டுள்ள கலைப் பொருட்களுடன் கூடிய சிற்றுண்டி உணவகம் (craft cafe) ரூ.1.68 கோடி செலவில் சென்னையில் அமைக்கப்பட்டுள்ள வடிவமைப்பு ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிலையம், ரூ.3.60 கோடி செலவில் நாச்சியார்கோவில், சுவாமிமலை, தஞ்சாவூர், மதுரை, கன்னியாகுமரி மற்றும் வாகைகுளம் ஆகிய 6 இடங்களில் அமைக்கப்பட்டுள்ள கைவினைஞர்களுக்கான பொது வசதி மையங்களை நான் துவக்கி வைத்துள்ளேன் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

ரூ.5 கோடி செலவில் அமைக்கப்படவுள்ள உதகமண்டலம் நகர்ப்புறத் திடல், சென்னை பூம்புகார் விற்பனை நிலையத்தில் ரூ.0.50 கோடி செலவில் அமைக்கப்பட உள்ள இரண்டாம் தளம் ஆகியவற்றிற்கு துவக்கப் பணிகள் மேற்கொள்ளப்பட உள்ளது.

திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள பத்தமடை மற்றும் குனியூரில் நலிந்த கைத்திறத் தொழில்களான கோரைப்பாய் மற்றும் சுடுகளிமண் தொழில்களுக்கு ரூ.0.94 கோடி செலவில் இரண்டு பொது வசதி மையங்களுக்கு துவக்கப் பணிகள் மேற்கொள்ளப்பட உள்ளது. இத்துறையானது மேன்மேலும் வளர்ச்சி பெற்று கைத்திறன் தொழிலில் ஈடுபட்டுள்ள கைவினைஞர்களின் வாழ்வில் முன்னேற்றம் கண்டு, தமிழ்நாட்டின் கலாச்சாரப் புகழை உலக அளவிற்குக் கொண்டு சேர்க்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டு, இந்த விழாவினை சிறப்புற நடத்திய அனைவருக்கும் நன்றி கூறி விடைபெறுகிறேன்.

நன்றி, வணக்கம்!

# தமிழகத்தை பொறுத்தவரை எல்லா மதத்திற்கும் சம உரிமை உண்டு! ஜனநாயக நாட்டில் அனைவருக்கும் பாதுகாப்பு கொடுப்பது அரசின் கடமை!



மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள் 20.03.2018 அன்று சட்டப்பேரவையில், ராம ராஜ்ய ரத யாத்திரைக்கு இருந்துவரும் எதிர்ப்பு குறித்து அளித்த விளக்கம்.

**மா**ண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

“ஸ்ரீ ராமதாச மிஷன் சர்வதேச சங்கத்தின்'' சார்பில் “ராம ராஜ்ய ரத யாத்திரை'' ஒன்று கடந்த 13.02.2018 அன்று அயோத்தியாவில் துவங்கியது.

இந்த ரத யாத்திரை, அச்சங்கத்தின் தேசியச் செயலாளர் திரு. சக்தி சாந்த ஆனந்த மகரிஷி தலைமையில், உத்திரப் பிரதேச மாநிலம் அயோத்தியில் புறப்பட்டு, மத்திய பிரதேசம், மகாராஷ்டிரா, கருநாடகா, கேரளா ஆகிய மாநிலங்களை கடந்து தமிழ்நாட்டிற்கு வந்துள்ளது. 20.03.2018 அன்று கேரளா மாநிலம் புனலூரிலிருந்து திருநெல்வேலி மாவட்டம், செங்கோட்டை வழியாக நமது மாநிலத்திற்குள் நுழைந்து, இராஜபாளையம், மதுரையை வந்தடைந்து, மறுநாள் 21.03.2018 அன்று இராமேஸ்வரத்தை அடைகிறது.

பின்னர், இராமேஸ்வரத்தில் இருந்து 22.03.2018 அன்று தூத்துக்குடி, திருநெல்வேலி மாவட்டங்கள் வழியாக கன்னியாகுமரி அடைந்து, மறுநாள் 23.03.2018 அன்று திருவனந்தபுரத்திற்கு செல்கிறது.

ராம் ராஜ்ய ரத யாத்திரை நமது மாநிலத்தில் வருவதற்கு சில முஸ்லீம் அமைப்புகளும், தமிழ் ஆதரவு அமைப்புகளும் மற்றும் சில அரசியல் கட்சிகளும் தங்களது எதிர்ப்பைத் தெரிவித்து, அந்த ரத யாத்திரையை தமிழ்நாட்டில் அனுமதிக்கக் கூடாது என்று கோரி காவல் துறையினரிடம் மனுக்கள் அளித்தனர்.

ஸ்ரீ ராமதாச மிஷன் சர்வதேச சங்கம் என்ற அறக்கட்டளை சார்பாக இந்த ராம ராஜ்ய ரத யாத்திரை ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. மேற்கண்ட ஐந்து மாநிலங்களிலும் இந்த ரத யாத்திரைக்கு எந்தவிதமான எதிர்ப்பும் எழவில்லை. அம்மாநிலங்களில் எந்தவித பிரச்சினையும் இல்லாமல் இதுவரை இந்த யாத்திரை கடந்து வந்துள்ளது.

இந்த ரத யாத்திரை தமிழ்நாட்டிற்குள் வருவதை முன்னிட்டு சட்டம் ஒழுங்கைப் பராமரிக்க, யாத்திரை செல்லும் மாவட்டங்களில் காவல் துறையினர் தேவையான பாதுகாப்பு ஏற்பாடுகளைச் செய்துள்ளனர்.

இதனை தொடர்ந்து, சட்டம் ஒழுங்கை பராமரிக்கவும், அசம்பாவிதங்கள் ஏதும் ஏற்படாமல் தடுக்கவும், திருநெல்வேலி, காஞ்சிபுரம், நாகப்பட்டினம், மதுரை, விருதுநகர், கன்னியாகுமரி மாவட்டங்களில் 121 பேர் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக கைது செய்யப்பட்டுள்ளனர்.

மாண்புமிகு எதிர்க்கட்சி தலைவர் அவர்களுக்கு சொல்கிறேன். ஐந்து மாநிலத்திலே இந்த ரத யாத்திரை நடந்திருக்கிறது. இதில் அரசியல் சாயம் பூசுவது சரியல்ல.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவர்கள் பேசும்போது எங்களுடைய உறுப்பினர்கள் அமைதியாக இருந்தார்கள். நான் பேசும்போது, தொடர்ந்து குறுக்கிடுகிறார்கள். கடுஞ்சொற்களை எல்லாம் உபயோகப்படுத்தினார். அதை எல்லாம் நாங்கள்

பொறுத்துக்கொண்டு தான் இருக்கிறோம். இங்கே அரசியல் சாயம் பூசுவது சரியல்ல.

தமிழகத்தைப் பொறுத்தவரைக்கும் எல்லா மதத்திற்கும் சம உரிமை உண்டு. அதை யாரும் தடை செய்ய முடியாது. ஜனநாயக நாடு. இந்த மதம், அந்த மதம் என்று வேறுபடுத்திக் காட்ட முடியாது. ஜனநாயக நாட்டில் அனைவருக்கும் பாதுகாப்பு கொடுப்பது அரசின் கடமை. அந்த கடமையை கடைப்பிடித்து தான் இங்கே பாதுகாப்பு கொடுக்கப்பட்டிருக்கிறது. நான் ஏற்கெனவே கூறியது போல, இந்த ரதம் பல மாநிலங்கள்; மத்திய பிரதேசம், மகாராஷ்டிரா, கருநாடகா, கேரளா எல்லாவற்றையும் கடந்து தான் வந்திருக்கிறது. மீண்டும் இங்கே முடித்துவிட்டு கேரளா வழியாக தான் செல்கிறது. இதிலே எவ்வித பிரச்சினையும் எழுந்ததாக எனக்கு தெரியவில்லை. நீங்களும், சில அரசியல் கட்சித் தலைவர்களும் இதில் அரசியல் ஆதாயம் தேட முற்படுகிறீர்கள். அதுதான் தெளிவாக தெரிகிறது.

## மாண்புமிகு அம்மாவின் வழியில் செயல்படும் இந்த அரசு, சட்டத்தை மீறுபவர்கள் யாராக இருந்தாலும், அவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கும்!

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள்
21.03.2018 அன்று சட்டப்பேரவையில், புதுக்கோட்டை மாவட்டம், ஆலங்குடி மற்றும் வேலூர் மாவட்டம், திருப்பத்தூர் ஆகிய இடங்களில் பெரியார் சிலை சேதப்படுத்தப்பட்டது குறித்து அளித்த விளக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

புதுக்கோட்டை மாவட்டம், ஆலங்குடி காவல் நிலைய சரகம், புதுக்கோட்டை விடுதி என்ற கிராமத்தில் உள்ள ஊராட்சி ஒன்றியத் துவக்கப்பள்ளி அருகில் சிமெண்டினால் ஆன முழு உருவ பெரியார் சிலை ஒன்று திராவிடர் கழகத்தினரால் 25.04.2013 அன்று நிறுவப்பட்டது. கடந்த 19.03.2018 அன்று இரவு அடையாளம் தெரியாத நபர் ஒருவர் சிலையின் தலைப்பகுதியை சேதப்படுத்தியுள்ளார்.

இதுபற்றி தகவல் அறிந்த காவல் துறையினர் உடனடியாக கிராமத்திற்கு சென்று கிராம மக்கள் உதவியுடன் சேதம் அடைந்த சிலையின் தலைப்பகுதியை சீரமைத்தனர். இச்சம்பவம் தொடர்பாக திராவிடர் கழக மண்டலத் தலைவர் திரு.ராவணன் என்பவர் அளித்த புகாரின் பேரில், ஆலங்குடி காவல் நிலையத்தில் பிரிவுகள் 295, 153 (B) இந்திய தண்டனைச் சட்டம் மற்றும் உடன் இணைந்த பிரிவு 3 தமிழ்நாடு பொதுச் சொத்துக்கள் சேதப்படுத்துதல் சட்டப்படி வழக்கு பதிவு செய்யப்பட்டது. இவ்வழக்கில் எதிரியை அடையாளம் கண்டுபிடித்து உடனடியாக கைது செய்ய தனிப்படைகள் அமைத்து தீவிர விசாரணை மேற்கொள்ளப்பட்டது.

இச்சம்பவம் பற்றி அறிந்த திருச்சி சரக காவல்துறைத் துணைத்தலைவர், புதுக்கோட்டை மாவட்ட காவல் கண்காணிப்பாளர் ஆகியோர் உடனடியாக சம்பவ இடத்திற்கு சென்று, கிராமத்தில் தேவையான பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்து, அசம்பாவித சம்பவங்கள் எதுவும் நடைபெறாவண்ணம் பார்த்துக் கொண்டனர். விசாரணையின் போது, சத்தீஸ்கர் மாநிலத்தில் மத்திய ரிசர்வ் காவல் படையில் ஹவில்தாராக பணிபுரியும் புதுக்கோட்டை விடுதி கிராமத்தைச் சேர்ந்த செந்தில்குமார் என்பவர் 15.03.2018 முதல் விடுப்பில் கிராமத்திற்கு வந்துள்ளார். மேற்படி செந்தில்குமார் சம்பவத்தன்று இரவு குடிபோதையில் அப்பகுதியில் நடமாடியுள்ளதை அவ்விடத்தில் பொறுத்தப்பட்டிருந்த சி.சி.டி.வி. பதிவுகள் மூலமும், சாட்சிகளிடம் மேற்கொண்ட விசாரணையின் மூலமும் தெரியவந்துள்ளது. செந்தில்குமாரைப் பிடித்து விசாரணை மேற்கொண்டபோது, அவர் பெரியார் சிலையை சேதப்படுத்தியதை ஒப்புக்கொண்டுள்ளார். மேலும், கடந்த 2013ஆம் ஆண்டு பெரியார் சிலையை அவ்விடத்தில் நிறுவுவதற்கு இடம் தேர்வு செய்யப்பட்ட போது, தனது வீட்டின் அருகில் பெரியார் சிலையை நிறுவுவதற்கு எதிர்ப்பு தெரிவித்து, மீறி நிறுவினால் அச்சிலையை உடைத்து விடுவேன் என்று மிரட்டியதாகவும் விசாரணையில் தெரிய வந்துள்ளது. இதனையடுத்து செந்தில்குமார் கைது செய்யப்பட்டு நீதிமன்றக் காவலுக்கு உட்படுத்தப்பட்டார்.

காவல் துறையினர் விரைந்து செயல்பட்டு, தீவிர புலன் விசாரணை மேற்கொண்டு, எதிரியை சம்பவம் நடந்த 12 மணி நேரத்திற்குள் கைது செய்துள்ளனர். அதேபோல, 06.03.2018 அன்று இரவு, வேலூர் மாவட்டம், திருப்பத்தூர் வட்டாட்சியர் அலுவலக வளாகத்தில் இருக்கும் தந்தை பெரியார் சிலையை விஷமிகள் சேதப்படுத்தினர். இதுபற்றி தகவல் அறிந்த காவல் துறையினர், அப்பகுதியில் தக்க பாதுகாப்பு ஏற்பாடுகளை மேற்கொண்டு அசம்பாவித சம்பவங்கள் ஏதும் நடவாமல் பார்த்துக் கொண்டனர். மேலும், இது தொடர்பாக திராவிடர் கழக நகரச் செயலாளர் திரு. இளங்கோவன் அளித்த புகாரின் பேரில் காவல் துறையினர் வழக்கு பதிவு செய்து, விசாரணை மேற்கொண்டனர்.

விசாரணையில், பா.ஜ.க நகர செயலாளர் முத்துக்குமரன் மற்றும் பிரான்சிஸ் ஆகியோர் இச்சம்பவத்தில் ஈடுபட்டது தெரிய வந்ததையடுத்து அவர்கள் இருவரும் கைது செய்யப்பட்டனர். இச்சம்பவத்திற்கு பயன்படுத்தப்பட்ட இரு சக்கர வாகனம் ஒன்றும் கைப்பற்றப்பட்டது. மாண்புமிகு அம்மா வழியில் செயல்படும் அம்மாவின் அரசு, சட்டத்தை மீறுபவர்கள் யாராக இருந்தாலும், அவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன். இந்த இரண்டு நிகழ்வுகளும் கண்டிக்கத்தக்கது. அது யாராக இருந்தாலும் எவ்வளவு உயர்ந்தவர்களாக இருந்தாலும், இப்படி தலைவர்களுடைய சிலையை சேதப்படுத்தியது கண்டறியப்பட்டால், அவர்கள் மீது அரசு பாரபட்சமின்றி கடும் நடவடிக்கை எடுக்கும் என்பதை தங்கள் வாயிலாக மாண்புமிகு எதிர்க்கட்சி தலைவர் அவர்களுக்கு தெரிவித்துக் கொள்கிறேன்.

# தமிழக மக்களுடைய எண்ணங்களை பிரதிபலிக்கின்ற அரசாக அம்மாவினுடைய அரசு இருக்கும்!




மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள் 21.03.2018 அன்று, சட்டப்பேரவையில், தி.மு.க. சட்டமன்ற உறுப்பினர், திரு. கு. பிச்சாண்டி அவர்கள் எழுப்பிய கேள்விக்கு அளித்த விளக்கம்.

**மா**ண்புமிகு பேரவை துணைத் தலைவர் அவர்களே,

இந்த கதை உங்களுக்கு பொருந்துமா அல்லது எங்களுக்கு பொருந்துமா என்று எண்ணிப்பார்க்க வேண்டும். ஏனென்று சொன்னால், நீங்கள் ஐந்து ஆண்டுகாலம் மத்தியில் பாரதிய ஜனதா கட்சி ஆட்சியில் இருக்கின்ற போது, ஆட்சி அதிகாரத்தை அனுபவித்தீர்கள். அதனால்தான், அந்த கதையை நன்றாக தேர்ந்தெடுத்திருக்கிறீர்கள் என்று கருதுகிறேன். எங்களை பொறுத்தவரைக்கும், நாங்கள் எந்த கூட்டணியும் அமைக்கவில்லை. அவர்களுக்கு ஆதரவும் தரவில்லை. தமிழகத்தினுடைய நிலைப்பாட்டை தான் உரிய முறையிலே நாம் முன்னெடுத்து வைத்துக்கொண்டு இருக்கின்றோம். தமிழ்நாட்டு மக்களுக்காக வாதாடிக் கொண்டு இருக்கின்றோம். இதுவரை தமிழக வரலாறு காணாத வகையில், இந்த நாடாளுமன்ற கூட்டத்தொடர் ஆரம்பிக்கப்பட்டதிலிருந்து காவேரி மேலாண்மை வாரியம் அமைக்க வலியுறுத்தி இதுவரை முடக்கப்பட்டு இருக்கிறது.

தமிழகத்தினுடைய ஜீவாதார உரிமையை பாதுகாக்க வேண்டும் என்பதற்காகவும், காவேரி மேலாண்மை வாரியம், காவேரி நீர் முறைப்படுத்தும் குழு உச்சநீதிமன்ற தீர்ப்பின்படி ஆறுவார காலத்திற்குள் அமைக்க வேண்டும் என்றும் வலியுறுத்தி தொடர்ந்து நாடாளுமன்றத்திலே அழுத்தம் கொடுத்து, நாடாளுமன்றத்தை முடக்கிக் கொண்டு இருக்கின்றோம். எந்த அளவிற்கு நாங்கள் முயற்சி செய்து கொண்டிருக்கின்றோம் என்பதை நீங்கள்

எண்ணிப் பார்க்க வேண்டும். தமிழக மக்களுடைய எண்ணங்களைபிரதிபலிக்கின்ற அரசாக அம்மாவினுடைய அரசு இருக்கும் என்பதை இந்த நேரத்திலே பதிவு செய்ய விரும்புகிறேன்.

மொட்டை தலைக்கும் முழங்காலுக்கும் முடிச்சு போட வேண்டாம். எங்களுக்கு நன்றாகத் தெரியும். நீங்கள் அனுபவம் வாய்ந்தவர். வாழைப்பழத்தில் ஊசி ஏற்றுவது போல நீங்கள் ஏற்றுவீர்கள் என்று எங்களுக்கு நன்றாகத் தெரியும். இது அவர்களுடைய ஆந்திரா பிரச்சினைக்காக கொண்டு வருகிறார்கள். நேற்றைய தினமே மாண்புமிகு துணை முதலமைச்சர் விளக்கமாக சொல்லி இருக்கின்றார். அவர்கள் கூட்டணி வைத்து போட்டியிட்டார்கள். பாரதிய ஜனதாவோடு தெலுங்கு தேசம் கூட்டணி அமைத்து போட்டியிட்டு வெற்றி பெற்று, அமைச்சரவையிலே இடம் பெற்றிருந்தார்கள். அவர்களது கோரிக்கை நிறைவேற்றப்படவில்லை என்பதற்காக, அவர்கள் நம்பிக்கையில்லாத் தீர்மானத்தைக் கொண்டு வருகிறார்கள். நம்முடையது அப்படியல்ல. காவேரி மேலாண்மை வாரியம் அமைக்க வேண்டும் என்பதற்காக நாம் குரல் கொடுத்துக் கொண்டு இருக்கின்றோம். அதற்கு யாருமே குரல் கொடுக்கவில்லையே, யாருமே சப்போர்ட் செய்யவில்லையே. அவர்களுடைய பிரச்சினைக்காக தான் அவர்கள் குரல் கொடுக்கிறார்களே ஒழிய, நம்முடைய பிரச்சினையை சுட்டிக்காட்டவில்லை. ஆகவே, நம்முடைய பிரச்சினைக்கு, நம்முடைய நாடாளுமன்ற உறுப்பினர்கள் தொடர்ந்து நாடாளுமன்றத்திலே குரல் கொடுத்து, அழுத்தம் கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள், நாடாளுமன்றமும் தொடர்ந்து முடங்கக்கூடிய அளவிற்கு நாம் அழுத்தம் கொடுத்துக் கொண்டு இருக்கின்றோம் என்பதை தங்கள் வாயிலாக எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்களுக்கு தெரிவித்துக் கொள்கிறேன்.

❖ ❖ ❖



# வெள்ளையாற்றில் தவறி விழுந்து உயிரிழந்த செல்வன் சுஸ்மிதாசனின் குடும்பத்திற்கு ரூ.2 இலட்சம் நிவாரண நிதி!

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள் 21.03.2018 அன்று சட்டப்பேரவையில், நாகப்பட்டினம் மாவட்டம், வெள்ளையாற்றில் தவறி விழுந்து உயிரிழந்த கீழ்வேளூர் வட்டம், செருதூர் கிராமத்தைச் சேர்ந்த திரு. முருகேசன் என்பவரின் மகன் செல்வன் சுஸ்மிதாசன் என்பவரின் குடும்பத்திற்கு நிவாரணம் வழங்குவது குறித்து அளித்த விளக்கம்.

**மா**ண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

நாகப்பட்டினம் மாவட்டம், கீழ்வேளூர் வட்டம், செருதூர் கிராமத்தைச் சேர்ந்த திரு. முருகேசன் என்பவரின் மகன் செல்வன் சுஸ்மிதாசன் என்பவர் 05.12.2017 அன்று வேளாங்கண்ணி அருகே வெள்ளையாற்றில் தவறி விழுந்து உயிரிழந்துள்ள சம்பவம் தொடர்பாக நாகப்பட்டினம் மாவட்ட ஆட்சித் தலைவர் தனது விரிவான அறிக்கையை அரசுக்கு அளித்துள்ளார்.

மாண்புமிகு உறுப்பினர் சொல்வது போல, செல்வன் சுஸ்மிதாசன் என்பவர் 05.12.2017 அன்று ஒகி புயலால் வெள்ளையாற்றில் அடித்துச்செல்லப்பட்டு உயிரிழக்கவில்லை என்றும் இவர் சிறிய கட்டுமர படகில் தனது நண்பர் தாமோதரன் என்பவருடன் மீன் பிடிக்கச் சென்ற போது, ஆற்றின் குறுக்கே இருந்த மதகு சுவரில் படகு மோதி கவிழ்ந்ததில், பலத்த அடிபட்டு, ஆற்றில் விழுந்துள்ளார் என்றும், தலையில் அடிபட்டதன் காரணமாக நீச்சல் தெரிந்தும், அவரால் மீண்டு வரமுடியாமல் வெள்ளையாற்றில் மூழ்கி உயிரிழந்துள்ளார் என்று மாவட்ட ஆட்சித்தலைவர் தன்னுடைய அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

இருப்பினும், உயிரிழந்த செல்வன் சுஸ்மிதாசனின் குடும்ப சூழ்நிலையைக் கருத்தில் கொண்டு, அவரது குடும்பத்திற்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து இரண்டு இலட்சம் ரூபாய் வழங்கப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு தெரிவித்துக் கொள்கிறேன்.

# நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை சார்பில் ரூ.189.81 கோடி மதிப்பில் 12 திட்டப்பணிகள்!



**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே.பழனிசாமி அவர்கள் கட்டடங்களை திறந்து வைத்தார்கள் (13.03.2018).**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் 13.03.2018 அன்று தலைமைச் செயலகத்தில், நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை சார்பில் சென்னை, நொளம்பூரில் 28 கோடியே 35 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலான பாதாள சாக்கடைத் திட்டம் மற்றும் 18 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான குடிநீர் வழங்கும் திட்டம் ஆகியவற்றை காணொலிக் காட்சி (Video Conferencing) மூலமாகத் துவக்கி வைத்தார்கள். மேலும், 143 கோடியே 46 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலான குடிநீர் திட்டம், பாதாள சாக்கடைத் திட்டம், சமுதாய நலக்கூடம், வகுப்பறைக் கட்டடங்கள், நகர்ப்புர ஆரம்ப சுகாதார நிலையக் கட்டடம், பூங்காக்கள் ஆகியவற்றை திறந்து வைத்தார்கள்.

நகர்ப்புரங்களில் பெருகி வரும் மக்கட்தொகைக்கேற்ப குடிமைப் பணிகளை நிறைவேற்றிக் கொடுப்பது, அனைத்து மக்களுக்கும் பாதுகாப்பான குடிநீர் மற்றும் கழிவுநீர் அகற்றும் வசதிகளை வழங்குவது உள்ளாட்சி அமைப்புகளின் தலையாய கடமைகளாகும். இத்தகைய பணிகளை மேற்கொள்ளும் உள்ளாட்சி அமைப்புகளின் செயல்பாட்டை ஊக்குவிக்கும் வகையிலும், பொது சுகாதாரத்தை மேம்படுத்தும் வகையிலும், கழிவுநீரை அகற்றிடவும், பொதுமக்களின் குடிநீர் தேவையை பூர்த்தி செய்யவும், மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் வழியில் செயல்படும் தமிழ்நாடு அரசு பல்வேறு திட்டங்களை சீரிய முறையில் செயல்படுத்தி வருகிறது.

மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள் கடந்த 16.04.2013 அன்று சட்டமன்றப் பேரவை விதி எண்.110இன் கீழ் வெளியிட்ட அறிவிப்பில், சென்னை பெருநகர வளர்ச்சித் திட்டத்தின் கீழ், சென்னை நகருடன் இணைக்கப்பட்ட உள்ளாட்சி அமைப்பான நொளம்பூர் பகுதியில் கழிவு நீரகற்றும் கட்டமைப்புத் திட்டம் செயல்படுத்தப்படும் என்று அறிவித்தார்கள். அதன்படி, சென்னை பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியத்தின் சார்பில் நொளம்பூரில் 28 கோடியே 35 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலான பாதாள சாக்கடைத் திட்டம் மற்றும் 18 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான குடிநீர் வழங்கும் திட்டம் ஆகியவற்றை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் காணொலிக் காட்சி மூலமாகத் துவக்கி வைத்தார்கள். இத்திட்டத்தின் மூலம் சுமார் 28,000 மக்கள் பயன்பெறுவார்கள்.



மேலும், சென்னை பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியம் சார்பில், சென்னை, காரம்பாக்கம் பகுதிகளில் 20 கோடியே 56 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலான குடிநீர் திட்டம், மதுரவாயல் பகுதிகளில் 60 கோடியே 96 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலான பாதாள சாக்கடைத் திட்டம்;

தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் சார்பில், தேனி மாவட்டம், கடமலைக்குண்டு மற்றும் மயிலாடும்பாறை ஒன்றியங்களைச் சார்ந்த ஆத்தங்கரைப்பட்டி மற்றும் 14 இதர ஊரக குடியிருப்புகள் பயன்பெறும் வகையில் 2 கோடியே 65 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலான கூட்டுக் குடிநீர்த் திட்டம், பெரியகுளம் நகராட்சியில் 26 கோடியே 60 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலான பாதாள சாக்கடைத் திட்டம் மற்றும் கம்பம் நகராட்சியில் 18 கோடியே 80 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலான குடிநீர் அபிவிருத்தித் திட்டம்;

பெருநகர சென்னை மாநகராட்சியின் சார்பில் நுங்கம்பாக்கம், பள்ளிசாலையில் உள்ள சென்னை பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் 2 கோடியே 95 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள கூடுதல் வகுப்பறைக் கட்டடங்கள், திருவல்லிக்கேணி, வி.ஆர்.பிள்ளை தெருவில் 3 கோடியே 65 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள சமுதாய நலக்கூடம், ஆலந்தூர் – வி.ஜி.என் லஷ்மி நகர், கலைமகள் தெருவில் 98 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ள புதிய பூங்கா, ஆலந்தூர் – அப்பாவு தெருவில் 1 கோடியே 28 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள நகர்ப்புர ஆரம்ப சுகாதார நிலையக் கட்டடம், சோழிங்கநல்லூரில் உள்ள தமிழ்நாடு வீட்டுவசதி வாரிய குடியிருப்பு பகுதியில் 2 கோடியே 99 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ள புதிய பூங்கா மற்றும் டாக்டர் இராதாகிருஷ்ணன் நகர் சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட புதிய வண்ணாரப்பேட்டை, புஜ்ஜம்மாள் தெருவில் உள்ள சலவைக்கூடத்தில் சலவையாளர்களுக்கு 2 கோடியே 4 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள 46 ஓய்வறைகள்;

என மொத்தம் 189 கோடியே 81 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை சார்பில் 12 திட்டப்பணிகளை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் துவக்கி வைத்தார்கள்.

## பணிக்காலத்தில் காலமானவர்களின் வாரிசுதாரர்கள் 473 பேருக்கு பணி நியமன ஆணைகள்!

பெருநகர சென்னை மாநகராட்சியில் பணிபுரிந்து பணிக்காலத்தில் காலமான 198 பணியாளர்களின் வாரிசுதாரர்கள், நகராட்சி நிருவாக ஆணையரகத்தின் கீழ் நகராட்சிகளில் பணிபுரிந்து பணிக்காலத்தில் காலமான 214 பணியாளர்களின் வாரிசுதாரர்கள் மற்றும் சென்னை பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியத்தில் பணிபுரிந்து பணிக்காலத்தில் காலமான 61 பணியாளர்களின் வாரிசுதாரர்கள் என மொத்தம் 473 பணியாளர்களின் வாரிசுதாரர்களுக்கு கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளர், உதவி வரைவாளர், அலுவலக உதவியாளர், வார்டு உதவியாளர், பூங்கா பணியாளர், களப் பணியாளர் போன்ற பணியிடங்களுக்கான பணி நியமன ஆணைகளை வழங்கிடும் அடையாளமாக, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் 16 நபர்களுக்கு பணி நியமன ஆணைகளை வழங்கினார்கள்.

# மென்பொருள் உருவாக்கும் திட்டத்தின் கீழ், 5 தமிழ் மென்பொருட்கள் அடங்கிய "தமிழிணைய மென்பொருள் தொகுப்பு-III"




மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள் துவக்கி வைத்தார்கள் (13.03.2018).

**மா**ண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் 13.03.2018 அன்று தலைமைச் செயலகத்தில், தகவல் தொழில்நுட்பவியல் துறை சார்பில் தமிழ் இணையக் கல்விக் கழகத்தினால், தமிழ் மென்பொருள் உருவாக்கும் திட்டத்தின் கீழ், உருவாக்கப்பட்டுள்ள, ஐந்து தமிழ் மென்பொருட்கள் அடங்கிய "தமிழிணைய மென்பொருள் தொகுப்பு – III" (Tamil Inayam Software Suite-III) துவக்கி வைத்தார்கள்.

உலகெங்கும் உள்ள தமிழ் ஆர்வலர்கள் மற்றும் தமிழ்க் கணினி ஆராய்ச்சியாளர்களுக்கு உதவிடும் வகையில் தமிழ் இணையக் கல்விக்கழகத்தின் மூலம் "தமிழ் மென்பொருள் உருவாக்கும் திட்டம்" தமிழ்நாடு புதுமை முயற்சிகள் (Tamil Nadu Innovative Initiatives Scheme) திட்டத்தின் கீழ், 2015ஆம் ஆண்டில் 1 கோடியே 50 இலட்சம் ரூபாய் செலவில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இத்திட்டத்தின் முதற்கட்டமாக 15 தமிழ் மென்பொருட்களை உருவாக்கத் திட்டமிடப்பட்டு, அவற்றுள் "தமிழிணையம் ஒருங்குறி மாற்றி" (Tamil Unicode Converter) மற்றும் "தமிழிணையம் ஒருங்குறி எழுத்துக்கள்" (Tamil Unicode Fonts) ஆகிய 2 தமிழ் மென்பொருட்களைக் கொண்ட "தமிழிணைய மென்பொருள் தொகுப்பு–I" (Tamil Inayam Software Suite-I) மற்றும் தமிழிணையம்–சொல்பேசி (Tamil Text-to-Speech), தமிழிணையம்–விவசாயத் தகவி (Agriculture Enquiry System), தமிழிணையம்–தொல்காப்பியத் தகவல் பெறுவி (Tholkappiam Information Retrieval System), தமிழிணையம்–தமிழ்ப் பயிற்றுவி (Tamil Teaching and Learning Tool) மற்றும் தமிழிணையம்–நிகழாய்வி (Event Analysis Tool) எனும் 5 தமிழ் மென்பொருட்கள் அடங்கிய "தமிழிணைய மென்பொருள் தொகுப்பு – II" (Tamil Inayam Software Suite-II) ஆகிய மென்பொருள் தொகுப்புகள் முறையே 23.05.2017 மற்றும் 11.10.2017 ஆகிய தேதிகளில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் துவக்கி வைக்கப்பட்டது. இந்த தமிழ் மென்பொருள் தொகுப்புகளை தமிழ் இணைய

கல்விக் கழகத்தின் இணையதளத்திலிருந்து பொதுமக்கள், மாணவர்கள் மற்றும் தமிழ் ஆர்வலர்கள் இலவசமாகப் பதிவிறக்கம் செய்து பயன்படுத்தி வருகின்றனர்.

இதனைத் தொடர்ந்து, தமிழ் மென்பொருள் உருவாக்கும் திட்டத்தின்கீழ், தமிழ் இணையக் கல்விக் கழகத்தினால், தமிழிணையம்–பிழை திருத்தி (Tamil Spell Checker), தமிழிணையம்–அகராதி தொகுப்பி (Tamil Dictionary Compilation), தமிழிணையம்–கருத்துக்களவு ஆய்வி (Tamil Plagiarism Detection Software), தமிழிணையம்–சொற்றொடர் தொகுப்பி (Sentence Aggregator), தமிழிணையம்–தரவு பகுப்பாய்வி (Corpus Analysis Tools) ஆகிய 5 தமிழ் மென்பொருட்கள் அடங்கிய "தமிழிணைய மென்பொருள் தொகுப்பு–III" (Tamil Inayam Software Suite-III) உருவாக்கப்பட்டுள்ளது. இந்த மென்பொருள் தொகுப்பினை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் துவக்கி வைத்தார்கள்.

தமிழ் இணைய கல்விக் கழகத்தால் உருவாக்கப்பட்டுள்ள இந்த "தமிழிணைய மென்பொருள் தொகுப்பு–III", தட்டச்சர்கள், தமிழ் நூல்களை வடிவமைப்போர், தமிழ் நூல் வெளியீட்டாளர்கள், மாணவர்கள், ஆசிரியர்கள், ஆராய்ச்சியாளர்கள் ஆகியோருக்கு பேருதவியாக இருக்கும். இந்த மென்பொருள் தொகுப்பினை, கணினியில் தமிழ் எழுத்துக்களை தட்டச்சு செய்கையில் ஏற்படும் எழுத்துப் பிழைகளை கண்டறிந்து அவற்றை பிழைதிருத்தம் செய்தல், தமிழ் சொல்லுக்கு தமிழ் அகரமுதலி, தமிழ் லெக்சிகன், கதிர்வேலு பிள்ளை அகராதி போன்ற அகராதிகளில் உள்ள பொருள் அறிதல், கருத்துக்களவினை கண்டறிதல், தமிழ் தளங்களில் உள்ள சொற்றொடர்களைத் தொகுத்தல், தமிழ் சொற்களை அவற்றின் சொல் எண்ணிக்கை, வகைப்படுத்தல் மற்றும் முன்பின் சொற்களை கண்டறிந்து பகுப்பாய்வு செய்தல் போன்றவற்றிற்கு பயன்படுத்தலாம். இம்மென்பொருள் தொகுப்பினை தமிழ் இணையக் கல்விக் கழகத்தின் இணையதளத்தில் தேவையான தரவுகளை உள்ளீடு செய்வதன் மூலம் இலவசமாகப் பயன்படுத்தலாம்.

## படமும்/செய்தியும்

## கட்டணமில்லா "24 மணிநேர கல்வி வழிகாட்டி உதவி மைய சேவை" துவக்கம்!






மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள் 01.03.2018 அன்று தலைமைச் செயலகத்தில், பள்ளிக் கல்வித் துறை சார்பில் இந்தியாவிலேயே முதன்முறையாக மாணவர்களுக்கும், பெற்றோர்களுக்கும் தேவையான கல்வி, வேலைவாய்ப்பு மற்றும் இதர கல்வி சார்ந்த துறைகளின் தகவல்கள், தெளிவுரைகள் மற்றும் ஆலோசனைகள் பெறுவதற்காக கட்டணமில்லா தொலைபேசி எண். 14417 வழியாக தொடர்புகொள்ளும் 24 மணிநேர கல்வி வழிகாட்டி உதவி மைய சேவையை துவக்கி வைத்தார்கள்.

# ரூ.48.08 கோடி மதிப்பீட்டில் கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன்வளத்துறை கட்டடங்கள்!




**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே.பழனிசாமி அவர்கள் திறந்து வைத்தார்கள் (13.03.2018).**

**மா**ண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே.பழனிசாமி அவர்கள் 13.03.2018 அன்று தலைமைச் செயலகத்தில், கால்நடை பராமரிப்பு, பால்வளம் மற்றும் மீன்வளத் துறை சார்பில் சென்னை, சைதாப்பேட்டையில் அமைந்துள்ள கால்நடை பன்முக மருத்துவமனை வளாகத்தில் 38 கோடியே 92 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள கால்நடை பராமரிப்பு மற்றும் மீன்வளத் துறைக்கான ஒருங்கிணைந்த அலுவலக வளாகத்தை காணொலிக் காட்சி (Video Conferencing) மூலமாகத் திறந்து வைத்தார்கள். மேலும், 9 கோடியே 16 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள பால்வள துணைப்பதிவாளர் அலுவலகக் கட்டடம், அதிநவீன ஆவின் பாலகங்கள், மீன்வளத்துறை கட்டடங்கள் ஆகியவற்றை திறந்து வைத்து, 1 கோடியே 51 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்படவுள்ள கால்நடை பராமரிப்புத் துறை ஒருங்கிணைந்த கட்டடத்திற்கு அடிக்கல் நாட்டினார்கள்.

கிராமப்புற பொருளாதாரத்தை மேம்படுத்துவதிலும், கிராமப்புற மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதிலும் முக்கிய பங்குவகிக்கும் கால்நடைகளை நன்கு பராமரித்திட அவற்றிற்கு தரமான மருத்துவ சிகிச்சை அளித்தல், பசுந்தீவன உற்பத்தி ஊக்குவிப்புத் திட்டம் போன்ற திட்டங்களையும், மீன்வளத்தில் முழுமையான ஒருங்கிணைந்த வளர்ச்சியை அடைந்திடும் வகையில் மீன் உற்பத்தியை அதிகரித்தல், மீன்வளத்தைப் பாதுகாத்தல், நீடித்த வளங்குன்றா மீன்பிடிப்பினை உறுதிசெய்தல் போன்ற திட்டங்களையும் மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் வழியில் செயல்படும் தமிழ்நாடு அரசு சீரிய முறையில் செயல்படுத்தி வருகிறது.

அந்த வகையில், சென்னை, சைதாப்பேட்டையில் அமைந்துள்ள கால்நடை பன்முக மருத்துவமனை வளாகத்தில் 38 கோடியே 92 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள கால்நடை பராமரிப்பு மற்றும் மீன்வளத் துறைக்கான ஒருங்கிணைந்த அலுவலக வளாகத்தை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் காணொலிக் காட்சி மூலமாகத் திறந்து வைத்தார்கள்.

இந்த ஒருங்கிணைந்த அலுவலக வளாகத்தில், கால்நடை பராமரிப்புத் துறை, மீன்வளத் துறை, தமிழ்நாடு கால்நடை மேம்பாட்டு முகமை, தமிழ்நாடு மீன்வளர்ச்சிக் கழகம், தமிழ்நாடு மீனவர் கூட்டுறவு இணையம் மற்றும் கடலோர நீர்வாழ் உயிரின வளர்ப்பு ஆணையம் ஆகிய அலுவலகங்கள் செயல்படும். இதன்மூலம், விவசாயிகள், மீனவர்கள் மற்றும் பொதுமக்கள் தங்கள் குறைகள்/ கோரிக்கைகளை ஒரே இடத்தில் நிவர்த்தி செய்துகொள்ள வழிவகை ஏற்படும்.

மேலும், பால்வளத்துறை சார்பில் மதுரை பால்பண்ணை வளாகத்தில் 70 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள துணைப் பதிவாளர் (பால்வளம்) அலுவலகக் கட்டடம்; சிவகங்கை மாவட்டம் – மானாமதுரையில் 1 கோடியே 25 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலும், ஈரோடு மாவட்டம் – சூரம்பட்டி நான்கு சாலை அருகில் 75 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலும், கோயம்புத்தூர் மாவட்டம் – பச்சாபாளையம் புதியபால் பண்ணை வளாகத்தில் 70 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலும் பொதுமக்கள் அமர்ந்து சாப்பிடும் வகையில் குளிர்சாதன வசதி, சிறுவர் பூங்கா, விளையாட்டுத்திடல், நீரூற்று மற்றும் வாகனங்கள் நிறுத்துமிடம் ஆகிய வசதிகளுடன் அமைக்கப்பட்டுள்ள அதிநவீன ஆவின் பாலகங்கள்;

மீன்வளத் துறை சார்பில் தஞ்சாவூர் மாவட்டம் – அகரப்பேட்டை கிராமத்தில் 1 கோடியே 10 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள மீன்குஞ்சு வளர்ப்பு மையம் மற்றும் ஆச்சாம்பட்டி கிராமத்தில் 1 கோடியே 35 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள மீன் தீவனஆலை; திருவாரூர் மாவட்டம் – ஜாம்பவானோடை மீனவ கிராமத்தில் 1 கோடியே 13 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ள மீன் இறங்குதளம் மற்றும் நல்லிக்கோட்டை கிராமத்தில் 2 கோடியே 18 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள மீன்குஞ்சு உற்பத்தி மையம்;

எனமொத்தம் 48 கோடியே 8 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலான கால்நடை பராமரிப்பு, பால்வளம் மற்றும் மீன்வளத் துறை கட்டடங்களை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் திறந்து வைத்தார்கள்.

காஞ்சிபுரத்தில் கால்நடை பராமரிப்புத் துறை மண்டல இணை இயக்குநர் மற்றும் உதவி இயக்குநர் அலுவலகங்களுக்கு 1 கோடியே 51 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்படவுள்ள ஒருங்கிணைந்த கட்டடத்திற்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் அடிக்கல் நாட்டினார்.

# ரூ.7.92 கோடி மதிப்பீட்டில், சிட்கோ தொழிற்பேட்டைகளில் உலகத்தரம் வாய்ந்த நேர்த்திமிகு மையக் கட்டடங்கள்!

படமும்/செய்தியும்



மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள் 13.03.2018 அன்று தலைமைச் செயலகத்தில், குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறையின் சார்பில் தமிழ்நாடு சிறுதொழில் வளர்ச்சி நிறுவனம் மூலமாக திருவள்ளூர் மாவட்டம், திருமுல்லைவாயில் சிட்கோ தொழிற்பேட்டையில் கட்டப்பட்டுள்ள உலகத்தரம் வாய்ந்த நேர்த்திமிகு மையக் கட்டடத்தை காணொலிக் காட்சி (Video Conferencing) மூலமாகத் திறந்து வைத்தார்கள். மேலும், திருமுடிவாக்கம், கருப்பூர், வாழவந்தான் கோட்டை மற்றும் கப்பலூர் ஆகிய இடங்களில் உள்ள சிட்கோ தொழிற்பேட்டைகளில் கட்டப்பட்டுள்ள 4 உலகத்தரம் வாய்ந்த நேர்த்திமிகு மையக் கட்டடங்களைத் (Centre of Excellence) திறந்து வைத்தார்கள்.

## ரூ.24.79 கோடி மதிப்பீட்டில் 5 மாவட்டங்களில் 9 பல்நோக்கு பாதுகாப்பு மையக் கட்டடங்கள்!

## இ-சேவை மையம் மூலம் 15 வகையான சான்றிதழ் வழங்கும் திட்டம் மற்றும் அம்மா கைபேசிச் செயலி துவக்கம்!

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் திறந்து வைத்தார்கள் (01.03.2018)**



**மா**ண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் 01.03.2018 அன்று தலைமைச் செயலகத்தில், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை சார்பில், இராமநாதபுரம் மாவட்டம், கல்பாரில் 2 கோடியே 75 இலட்சத்து 80 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள பல்நோக்கு பாதுகாப்பு மையக் கட்டடத்தை காணொலிக் காட்சி (Video Conferencing) மூலமாகத் திறந்து வைத்தார்கள். மேலும், 21 கோடியே 92 இலட்சத்து 74 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள 8 பல்நோக்கு பாதுகாப்பு மையக் கட்டடங்களை திறந்து வைத்து, மின்னாளுமை திட்டத்தின் கீழ், இ–சேவை மையம் வழியாக பொதுமக்களுக்கு 15 வகையான சான்றிதழ்களை வழங்கிடும் திட்டம் மற்றும் அம்மா கைப்பேசிச் செயலி சேவை ஆகியவற்றை துவக்கி வைத்தார்கள்.

அரசின் நலத் திட்டங்களை மக்களிடையே முறையாக கொண்டு சென்று அரசுக்கும் மக்களுக்கும் பாலமாக விளங்கும் வருவாய்த் துறையின் மேம்பாட்டிற்காக, புதிய வருவாய் வட்டங்களை உருவாக்குதல், வருவாய்த் துறைக்கு அனைத்து வசதிகளுடன் கூடிய சொந்தக் கட்டடங்கள் கட்டுதல், பேரிடர் காலங்களில் பாதிக்கப்படும் கடலோர மாவட்ட மக்கள் தங்கிட ஏதுவாக பல்நோக்கு பாதுகாப்பு மையங்கள் கட்டுதல் போன்ற பல்வேறு ஆக்கபூர்வமான திட்டங்களை

மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் வழியில் செயல்படும் தமிழ்நாடு அரசு செயல்படுத்தி வருகிறது.

அந்த வகையில், பேரிடர் காலங்களில் பாதிக்கப்படும் மக்கள் தங்கிட ஏதுவாக உலக வங்கி நிதியுதவியுடன் கடலோர பேரிடர் அபாய குறைப்பு திட்டத்தின் கீழ், பொதுப்பணித் துறை வாயிலாக இராமநாதபுரம் மாவட்டம், கல்பாரில் 2 கோடியே 75 இலட்சத்து 80 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள பல்நோக்கு பாதுகாப்பு மையக் கட்டடத்தை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் காணொலிக் காட்சி மூலமாகத் திறந்து வைத்தார்கள்.

மேலும், இராமநாதபுரம் மாவட்டம் – திருப்பாலைக்குடி, திருவள்ளூர் மாவட்டம் – எளாவூர், காஞ்சிபுரம் மாவட்டம் – கானாத்தூர், திருவாரூர் மாவட்டம் – தில்லைவிளாக்கம், தஞ்சாவூர் மாவட்டம் – குப்பதேவன், செந்தலைவயல், கள்ளிவயல் மற்றும் ராஜமடம் ஆகிய இடங்களில் 21 கோடியே 92 இலட்சத்து 74 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள 8 பல்நோக்கு பாதுகாப்பு மையக் கட்டடங்களையும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் திறந்து வைத்தார்கள்.

வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை சார்பில் மின்னாளுமை திட்டத்தின் கீழ், இ–சேவை மையம் வழியாக பொதுமக்களுக்கு சாதிச் சான்றிதழ், வருமானச் சான்றிதழ், இருப்பிடச் சான்றிதழ், முதல் பட்டதாரி சான்றிதழ் மற்றும் கணவனால் கைவிடப்பட்ட பெண் என்பதற்கான சான்றிதழ் ஆகிய 5 சான்றிதழ்கள் தற்போது வழங்கப்பட்டு வருகிறது. அத்துடன், மேலும், கீழ்க்கண்ட 15 வகை சான்றிதழ்களை இணையதள மின் சேவை மூலம் வழங்கிடும் திட்டத்தினை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் துவக்கி வைத்தார்கள்.

1. விவசாய வருமானச் சான்றிதழ்
2. சிறு, குறு விவசாயி சான்றிதழ்
3. கலப்புத் திருமணச் சான்றிதழ்
4. விதவைச் சான்றிதழ்
5. வேலையின்மைச் சான்றிதழ்
6. குடும்ப குடிப்பெயர்வு சான்றிதழ்
7. கல்வி ஆவணங்கள் பேரிடரால் தொலைந்தமைக்கானச் சான்றிதழ்
8. ஆண் குழந்தை இன்மைச் சான்றிதழ்
9. திருமணமாகவில்லை என்பதற்கான சான்றிதழ்
10. வாரிசு சான்றிதழ்
11. இருப்பிடச் சான்றிதழ்
12. செல்வ நிலைச் சான்றிதழ்
13. அடகு வணிகர் உரிமம் (Pawn Brokers Licence)
14. வட்டிக்கு பணம் கொடுப்போர் உரிமம் (Money Lenders Licence)
15. இதர பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கான சான்றிதழ்

மேற்படி 15 சேவைகளை பெறுவதற்கு பொதுமக்கள் தங்கள் அருகாமையில் உள்ள பொதுசேவை மையங்களுக்குச் சென்று விண்ணப்பிக்கும் போது, விண்ணப்ப எண்ணுடன் ஒப்புகைச் சீட்டு வழங்கப்படும். இவ்விவரம், அவர்களின் கைபேசிக்கு குறுஞ்செய்தியாக அனுப்பப்படும். விண்ணப்பங்களின் நிலவரத்தை அறிய பொதுமக்கள் 155250 என்ற எண்ணிற்கு தங்களது விண்ணப்ப எண்ணை குறுஞ்செய்தி வாயிலாக அனுப்பியோ அல்லது இணையதளத்தில் விண்ணப்ப எண்ணை உள்ளீடு செய்தோ அறிந்து கொள்ளலாம். விண்ணப்பம் ஏற்கப்பட்டு சான்றிதழ் தயாரானதும், விண்ணப்பதாரருக்கு இணையதள முகவரியுடன் குறுஞ்செய்தி அனுப்பப்படும். இக்குறுஞ்செய்தி பெறப்பட்டவுடன் விண்ணப்பதாரர் வீட்டில் இருந்தவாறே இணையதளம் மூலமாக சான்றிதழை பதிவிறக்கம் செய்து கொள்ளலாம் அல்லது அருகாமையிலுள்ள அரசு பொது சேவை மையம் மூலமாக சான்றிதழை பெற்றுக் கொள்ளலாம்.

பொதுமக்கள் நில ஆவணங்களை கைப்பேசி வாயிலாக எளிதாக இணைய வழியில் பெற்றுக் கொள்ளும் வகையில் ‘அம்மா கைப்பேசிச் செயலி’ (Access & Manage through Mobile from Anywhere e-Service of Land Records) சேவையினை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் துவக்கி வைத்தார்கள்.

இந்த அம்மா கைப்பேசிச் செயலியை பொதுமக்கள் தங்களது ஆண்ட்ராய்டு கைப்பேசியில் இலவசமாக பதிவிறக்கம் செய்து நிறுவுவதன் மூலம், அ–பதிவேடு, சிட்டா, பட்டா மாறுதல் விண்ணப்பத்தின் மீதான நடவடிக்கை நிலை அறிதல், சம்பந்தப்பட்ட நிலமானது அரசு நிலமா அல்லது தனியார் நிலமா போன்ற விவரங்களை அறிந்து கொள்ளலாம். இச்செயலியானது, ஆண்ட்ராய்டு இயங்குதளம் (Operating System) பதிப்புகள் 4.1–க்கு மேற்பட்டவற்றில் செயல்படும்.



# மாண்புமிகு அம்மா அவர்கள் வழங்கிய திட்டங்கள் பெண்களுக்கு வரப்பிரசாதமான திட்டங்கள்!

'மங்கையராய் பிறப்பதற்கே நல்ல மாதவம் செய்திட வேண்டுமம்மா' என்ற கவிமணி தேசிக விநாயகம் பிள்ளையின் பாடல் வரிகளுக்கேற்ப, மாதவம் செய்து பிறந்த மகளிரின் முன்னேற்றத்தில் அதிக அக்கறை கொண்ட மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள் மகளிரின் வளர்ச்சியில் அதிக ஈடுபாடு கொண்டு, பல்வேறு தொலைநோக்குத் திட்டங்களை செயல்படுத்தி வந்தார்கள். இன்றைய காலகட்டத்தில் தமிழ்நாட்டில் மங்கையராய் பிறக்க வேண்டும் என்று எல்லோரும் ஆசைப்படும் அளவிற்கு மகளிருக்கு எண்ணிலடங்கா திட்டங்களை தமிழக அரசு வழங்கி வருகின்றது என்றால் அது மிகையாகாது.

மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியோடு 16.02.2017 அன்று தமிழ்நாட்டின் முதலமைச்சராக பொறுப்பேற்ற மாண்புமிகு தமிழக முதலமைச்சர் திரு. எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் அன்றைய தினமே மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களால் தேர்தல் வாக்குறுதிகளில் அறிவிக்கப்பட்ட ஐந்து திட்டங்களுக்கான கோப்புகளில் முதலில் கையெழுத்திட்டார்கள். மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் முதன்முதலில் கையெழுத்திடப்பட்ட அந்த ஐந்து திட்டங்களில் முதல் திட்டமான "அம்மா இரு சக்கர வாகனத் திட்டம்", தமிழ்நாட்டின் தலைமகளாகவும், தமிழ்த்தாயின் தவப்புதல்வியாகவும் திகழ்ந்த மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள் பிறந்த நாளில் மேதகு தமிழக ஆளுநர், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர், மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர், மத்திய, மாநில அமைச்சர் பெருமக்கள் ஆகியோர் முன்னிலையில் மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களின் திருக்கரங்களால் தொடங்கி வைக்கப்பட்டது. இந்தத் திட்டத்தின் மூலம் வருடத்திற்கு ஒரு இலட்சம் உழைக்கும் மகளிருக்கு இரு சக்கர வாகனம் வாங்குவதற்கு தலா 50 சதவீதம் மானியம் அல்லது ரூ.25,000/– வரை வழங்கப்படும். இத்திட்டத்தினால் உழைக்கும் மகளிர் சுதந்திரமாகவும்,



விரைவாகவும் தங்கள் பணியிடங்களுக்கு சென்று வரவும், தங்கள் குழந்தைகளை பள்ளிக் கூடத்திற்கு அழைத்துச் செல்லவும், யாரையும் சார்ந்து இருக்காமல் தங்களது அனைத்துப் பணிகளையும் குறித்த நேரத்தில் செய்ய இயலும்.

பெரம்பலூர் மாவட்டத்தில் 01.02.2018 அன்று இத்திட்டம் மிகச்சிறப்பான முறையில் தொடங்கி வைக்கப்பட்டது.

இந்நிகழ்ச்சியில் 100 நபர்களுக்கு தலா ரூ.25,000/– வீதம் ரூ.25 இலட்சம் மதிப்பிலான மானிய உதவியுடன் இருசக்கர வாகனம் வழங்கப்பட்டது. பெண்களின் முன்னேற்றத்தை மையப்படுத்தியே தமிழக அரசின் திட்டங்கள் இருக்கின்றது. இத்திட்டத்தால் பயனடைந்தவர்கள் கூறிய கருத்துக்கள் பின்வருமாறு:

**பிம்மலூர் கிராமத்தைச் சேர்ந்த திருமதி ரோஜா என்பவர் கூறியதாவது:**




“நான் பிம்மலூர் கிராமத்தில் எனது குடும்பத்துடன் வசித்து வருகிறேன். நான் எனது குடும்ப சூழ்நிலை காரணமாக பெரம்பலூரில் உள்ள ஒரு தனியார் பள்ளியில் ஆசிரியராக வேலை பார்த்து சம்பாதித்து வருகிறேன். எனது கிராமத்திலிருந்து 15 கி.மீ. தூரம் வரை உள்ள எனது பள்ளிக்கு பேருந்தின் மூலம் பயணம் செய்து குறிப்பிட்ட நேரத்திற்குள் பள்ளிக்கு செல்ல இயலவில்லை. இதன்மூலம் எனது வேலையிலும், முழுமையாக கவனத்தை செலுத்தி மாணவ, மாணவிகளுக்கு பாடங்களை கற்பிப்பதிலும் சற்று தொய்வு ஏற்பட்டது. மேலும், எனது பள்ளிக்கு குறிப்பிட்ட நேரத்தில் சென்று வர இருசக்கர வாகனம் வேண்டுமென்று எனது கணவரிடம் கேட்டிருந்தேன். குடும்பச் சூழ்நிலையின் காரணமாக எங்களால் அதிக விலை கொடுத்து இரு சக்கர வாகனத்தை வாங்க இயலவில்லை. அப்போதுதான், தமிழக அரசின் அம்மா இருசக்கர வாகனம் மானியத்தொகையில் வாங்குவதற்கு விண்ணப்பிக்கலாம் என செய்தித்தாள் அறிவிப்பு பார்த்து விண்ணப்பித்திருந்தேன். எனக்கு மேற்படி இரு சக்கர வாகனம் வழங்க என்னை தேர்ந்தெடுத்து, எனக்கு ரூ.25,000/– வழங்கப்பட்டது. இனிமேல் என்னால் சரியான நேரத்திற்கு குறித்த இடங்களுக்கும், வேலைக்கும் செல்ல வசதியாக இருக்கும். என் சிரமத்தை குறைக்க அம்மா இரு சக்கர வாகனம் வழங்கிய தமிழக அரசிற்கு என் மனமார்ந்த நன்றியை தெரிவித்துக்கொள்கிறேன்'' என்று தெரிவித்தார்.

**ஆதனூரைச் சேர்ந்த திருமதி அலமேலு என்பவர் தெரிவித்ததாவது :**




“நான் எனது கணவருடன் ஆதனூர் கிராமத்தில் வசித்து வருகிறேன். மேலும், என் கணவர் ஒரு மாற்றுத் திறனாளி ஆவார். அவரால் ஓரிடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கு செல்வதற்கு மிகவும் சிரமப்பட்டு வருவதால் எங்களின் பொருளாதார நிலையை மேம்படுத்துவதற்காக எங்கள் பகுதியிலேயே கடை நடத்தி வருகின்றோம். மேலும், இக்கடைக்கு தேவையான ஜாமான்கள் அனைத்தும், பேருந்து மூலமாகவே எடுத்து வருவது மிகவும் சிரமத்திற்குண்டான ஒரு காரியமாகும். மேலும், எங்கள் கடைக்கு பொருட்களை வாங்குவதற்கு, வெளியூர் செல்வதற்கு ஓர் இருசக்கர வாகனம் இருந்தால் மிகவும் பயனுள்ளதாக இருக்கும். மேலும், எங்களது பொருளாதார சூழ்நிலை புதிதாக இரு சக்கர வாகனம் வாங்குவதற்கு ஒத்துழைப்பு அளிக்காது. இந்நிலையில் மாண்புமிகு தமிழக முன்னாள் முதலமைச்சர் அவர்களால் மானிய விலையில் இருசக்கர வாகனம் வழங்கப்படும் என்று அறிவித்தார்கள். அதன்படி, இத்திட்டத்தின் கீழ் பயன்பெற விண்ணப்பம் செய்திருந்தேன். இவ்வாகனத்தின் மூலமாக பெரம்பலூர், அரியலூர் உள்ளிட்ட பெருநகரங்களிலிருந்து எங்கள் மளிகைக் கடைக்கு தேவையான அனைத்துப் பொருட்களையும் இரு சக்கர வாகனத்தின் மூலமாக எளிதாகக் கொண்டு வர முடியும். இதன்மூலம் எங்களது பொருளாதாரம் மேம்படுவதுடன் மாற்றுத்திறனாளியான எனது கணவர் பிறர் உதவியை எதிர்பாராமல் நாங்களே எங்களது பணிகளை செய்துகொள்வதற்கு வாய்ப்பு வழங்கிய தமிழக அரசிற்கு எந்நாளும் நன்றியுள்ளவர்களாக இருப்போம்'' என்று தெரிவித்தார்.

*– க. பாவேந்தன்,*
செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,
பெரம்பலூர் மாவட்டம்.

இராமநாதபுரம் மாவட்டம்

# ஆதிதிராவிடர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தும் அரசு!



**த**மிழக மக்களின் நலன்காத்திட மாண்புமிகு அம்மா அவர்கள் தமிழகத்தில் வாழும் அனைத்து தரப்பு மக்களுக்கும் அவரவர்களின் தேவைகளை அறிந்து திட்டங்களைத் தீட்டி செயல்படுத்தினார்கள்;. சமுதாயத்தில் அடித்தட்டில் வாழும் மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்திட ஏழை, எளிய கிராமப்புற இளைஞர்கள் தன்னம்பிக்கையோடு வாழ்க்கையில் வெற்றி பெற்றிட முக்கியமான சிறப்புத் திட்டங்களை எல்லாம் ஏற்படுத்தியதன் மூலம் தமிழகத்தில் அனைத்து தரப்பு மக்களின் வாழ்க்கைத் தரமும் தற்போது வேகமாக முன்னேறி வருகின்றன. மாண்புமிகு அம்மாவின் வழிகாட்டுதலின்படி மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் தமிழகத்தை முன்னேற்றப் பாதைக்கு கொண்டு செல்கிறார்கள்.

தாட்கோ மூலம் பெண்களுக்கான மகளிர் வேளாண் நிலம் வாங்கும் திட்டம், இருபாலருக்கும் நிலம் மேம்படுத்துதல் திட்டம், துரித மின் இணைப்பு திட்டம், தொழில் முனைவோர் திட்டம், இளைஞர்களுக்கான சுய வேலைவாய்ப்புத் திட்டம், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் மக்களை ஊக்குவிக்கும் வகையில் இந்திய குடிமைப்பணி முதன்மைத் தேர்வு எழுதுவோர், சட்டப் பட்டதாரிகள் மற்றும் தமிழ்நாடு தேர்வாணைய தொகுதி 1 முதல்நிலை தேர்வில் வெற்றி பெற்றவர்களுக்கு நிதியுதவித் திட்டம் உள்ளிட்ட பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

தாட்கோ மூலம் செயல்படுத்தப்பட்டு வரும் பல்வேறு திட்டங்களின் கீழ், பயன்பெற விரும்பும் பயனாளிகள் http://application.tahdco.com என்ற இணையதள முகவரிக்குச் சென்று விண்ணப்பத்தினை பதிவு செய்திடலாம். பதிவு செய்யும்போது குடும்ப அட்டை/ இருப்பிட சான்று, சாதிச் சான்று, வருமானச் சான்று, ஓட்டுநர் உரிமம் எண், விலைப்புள்ளி எண், கல்வித் தகுதி மற்றும் வயதிற்கான ஆதார சான்றிற்கு (பள்ளி மாற்றுச் சான்று/ வாக்காளர் அட்டை/ பான் கார்டு/ ஆதார் அட்டை/ மதிப்பெண் சான்று) இவற்றில் ஏதாவது ஒன்றையும் மற்றும் TIN நம்பர் உள்ள நிறுவனத்திடமிருந்து பெற்ற விலைப்புள்ளி, திட்ட அறிக்கை பெறப்பட்ட தேதியையும் அதற்கான இடத்தில் குறிப்பிட்டு திட்ட அறிக்கை மற்றும் புகைப்படத்தையும் ஸ்கேன் செய்து பதிவேற்றம் செய்ய வேண்டும்.

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் மக்கள் தங்களின் வாழ்வாதாரத்தை உயர்த்துவதோடு பொருளாதார முன்னேற்றத்திற்காகவும், அவர்களின் கடன் சுமையினை குறைப்பதற்காகவும், கடனை திருப்பிச் செலுத்த ஊக்குவிப்பதற்காகவும், சிறப்பு உதவியாக திட்டத் தொகையில் கடன் தொகையை குறைக்க மானியமாக தனிநபர் திட்டத்தொகையில் 30% அல்லது அதிகபட்சமாக ரூ.2.25 இலட்சமும், சுழல் நிதிக்கு ரூ.25 ஆயிரமும், குழு பொருளாதார நிதியுதவித் திட்டத்திற்கு 50% அல்லது ரூ.2.50 இலட்சமும், மாவட்ட ஆட்சியரின் விருப்புரிமை நிதிக்கு ரூ.20 ஆயிரமும், குடிமைப்பணி முதன்மைத் தேர்வு, தமிழ்நாடு தேர்வாணைய தொகுதி–1 முதன்மைத் தேர்வு, சட்டப் பட்டதாரிகளுக்கு நிதியுதவித் திட்டத்தின் கீழ், ரூ.50 ஆயிரமும் மானியமாக வழங்கப்படும்.

திட்டத்தொகையில் மானியத் தொகை தவிர மீதமுள்ள தொகை வங்கிக் கடனாகும். தாட்கோ விடுவிக்கும் மானியத் தொகைக்கு மட்டும் திட்டத் தொகையின் உச்சவரம்பு ரூ.7.50 இலட்சம் ஆகும். வங்கியின் வழிமுறைகளுக்கு ஏற்ப பயனாளிகளின் திறனைப் பொறுத்து அலகுத்தொகையை வங்கிகள் அதிகரித்துக் கொள்ளலாம்.

நிலம் வாங்குதல் / நிலமேம்பாட்டுத் திட்டத்தின் கீழ், பயன்பெற விரும்பும் பயனாளிகள் நிலத்தின் மூல பத்திரம், விற்பனை உடன்படிக்கை பத்திரம், வில்லங்க சான்று, சர்வே எண், சிட்டா, அடங்கல், நில பத்திரம் மற்றும் நிலம் விற்பவரது சாதிச் சான்று விபரங்களை பதிவு செய்து ஆவணங்களை ஸ்கேன் செய்து பதிவேற்றம் செய்ய வேண்டும் ஆன்லைன் மூலம் விண்ணப்பிக்க உதவி தேவைப்படுபவர்களின் வசதிக்காக தாட்கோ,

மாவட்ட மேலாளர் அலுவலகத்தில் ரூ.20/– செலுத்தி விண்ணப்பிக்கும் வசதியும் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

இராமநாதபுரம் மாவட்டத்தில் தாட்கோ மூலம், 2017–2018ஆம் நிதியாண்டில், வங்கியில் மகளிர் நில மேம்படுத்தும் திட்டத்தின் கீழ், 7 மகளிருக்கு ரூ.6.67 இலட்சம் மானியத்தில் ரூ.15.45 இலட்சம் கடனுதவியும், தொழில்முனைவோர் திட்டத்தின் கீழ், 76 பயனாளிகளுக்கு ரூ.116.24 இலட்சம் மானியத்தில் ரூ.305.56 இலட்சம் கடனுதவியும், இளைஞர்களுக்கான சுய வேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ், 57 நபருக்கு ரூ.110.36 இலட்சம் மானியத்தில் ரூ.294.70 இலட்சம் கடனுதவியும், மருத்துவ மையம், முடநீக்கு மையம், இரத்தப் பரிசோதனை நிலையம் அமைத்தல் திட்டத்தின் கீழ், 2 பயனாளிகளுக்கு ரூ.4.43 இலட்சம் மானியத்தில் ரூ.9.59 இலட்சம் கடனுதவியும், மாவட்ட ஆட்சியர் விருப்புரிமை நிதி திட்டத்தின் கீழ், 8 பயனாளிகளுக்கு ரூ.1.60 இலட்சம் மானியமாகவும், 17 மகளிர் சுய உதவிக் குழுக்களைச் சேர்ந்த 210 உறுப்பினர்களுக்கு பொருளாதாரக் கடனாக ரூ.26 இலட்சம் மானியத்தில் ரூ.52 இலட்சமும், துரித மின் இணைப்பு திட்டத்தின் கீழ், 47 பயனாளிகளுக்கு ரூ.30.55 இலட்சம் மதிப்பில் மின் இணைப்புகளும், தாட்கோ தலைவர் அவர்களின் விருப்புரிமை நிதியில் 3 பயனாளிகளுக்கு ரூ.3 இலட்சம் மானியமாக நலத்திட்ட உதவிகள் என மொத்தம் ரூ.268.30 இலட்சம் மதிப்பிலான அரசு மானியத்தில் ரூ.707.85 இலட்சம் மதிப்பில் கடனுதவிகள் பெற்று பயனாளிகள் பயனடைந்துள்ளனர்.

**தாட்கோ மூலம் பயன்பெற்ற பயனாளிகளின் மகிழ்ச்சிப் பேட்டி :**




**பரமக்குடி வட்டம், தாளையடிக் கோட்டையை சேர்ந்த கண்ணன் அவர்கள் தனக்கு கிடைத்த டூரிஸ்டர் வேன் பற்றி தெரிவிக்கையில்,**

நான் தனியார் நிறுவனத்தில் ஒட்டுநராக 8 ஆண்டுகளுக்கு மேல் பணிபுரிந்து வந்தேன். அங்கு கிடைக்கும் சம்பளம் என் குடும்ப செலவிற்கு போதுமானதாக இல்லை. சொந்தமாக வேன் வாங்கி நானே ஒட்டினால் கூடுதல் வருமானம் கிடைக்கும் என்று எண்ணி தனியார் பலரிடம் கடன் கேட்டும், கடன் கொடுக்க யாரும் தயாராக இல்லை. இந்நிலையில் தாட்கோ அலுவலகம் மூலம் தொழில்முனைவோர் திட்டத்தின் கீழ், அரசு மானியத்தில் கடன் வழங்குவதாக அறிந்து மனு செய்தேன். நான் கொடுத்த மனுவின் மீது உரிய நடவடிக்கை மேற்கொண்டு இப்பெருந்தொகை எனக்கு அனுமதிக்கப்பட்டுள்ளது. தற்போது எனக்கு ரூ.11.30 இலட்சம் மதிப்பிலான டூரிஸ்டர் வேன் மானியத்துடனான கடன் வழங்கியிருப்பது மகிழ்ச்சியளிக்கிறது. தாட்கோ மூலம் கடன் பெற்றதால் மொத்த தொகையில் மானியமாக கிடைத்த ரூ.2.25 இலட்சம் போக மீதமுள்ள தொகைக்கு வட்டி கட்டினால் போதும். ஏழ்மையில் வாழ்கின்ற எங்களைப் போன்ற ஆதிதிராவிடர் மக்ககளின் வாழ்வு உயர இது போன்ற பல்வேறு நலத்திட்டங்களை வழங்கிய மறைந்த புரட்சித்தலைவி அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கும் எனது நெஞ்சார்ந்த நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.




**முடநீக்கு மையம் வைத்துள்ள இராமநாதபுரம் வட்டம், பெரியார் நகரைச் சேர்ந்த A. பாலஜெயபெருமாள் தெரிவிக்கையில்,**

நான் தனியார் மருத்துவரிடம் முடநீக்கு மருத்துவராக 3 ஆண்டுகளுக்கு மேல் பணிபுரிந்து வந்தேன். அங்கு கிடைக்கும் சம்பளம் என் குடும்ப செலவிற்கு போதுமானதாக இல்லை. சொந்தமாக முடநீக்கு மையம் அமைத்தால் கூடுதல் வருமானம் கிடைக்கும் என்று எண்ணி தனியார் பலரிடம் கடன் கேட்டும், கடன் கொடுக்க யாரும் தயாராக இல்லை. இந்நிலையில், தாட்கோ அலுவலகம் மூலம் மருத்துவம் மற்றும் முடநீக்கு மையம் திட்டத்தின் கீழ், அரசு மானியத்தில் கடன் வழங்குவதாக அறிந்து மனு செய்தேன். நான் கொடுத்த மனுவின் மீது ஆய்வு செய்து எனக்கு ரூ.2.25 இலட்சம் மானியத்துடனான கடன் வழங்கியிருப்பது மகிழ்ச்சியளிக்கிறது. தற்போது எனக்கு ரூ.7.50 இலட்சம் மதிப்பிலான முடநீக்கு மையம் அமைப்பதற்கு மானியத்துடனான கடன் வழங்கியிருப்பது மகிழ்ச்சியளிக்கிறது. ஏழ்மையில் வாழ்கின்ற எங்களைப் போன்ற ஆதிதிராவிடர் மக்களின் வாழ்வு உயர இத்தகைய பல்வேறு நலத்திட்டங்களை வழங்கிய மறைந்த புரட்சித்தலைவி அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கும் எனது நெஞ்சார்ந்த நன்றியினை தெரிவித்துக்கொள்கிறேன்.

*– கோ. அண்ணாதுரை,*
செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,
இராமநாதபுரம் மாவட்டம்.